# குணவாகடம்

சுவடியியல் பட்டமேற்படிப்புப் பட்டயச் சான்றிதழுக்காக
அளிக்கப் பெற்ற பதிப்பாய்வேடு

வே. நெடுஞ்செழியன், எம். ஏ., எம். ஃபில்.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.
ஏப்ரல்-1991

# குணவாகடம்

சுவடியியல் பட்டமேற்படிப்புப் பட்டயச் சான்றிதழுக்காக
அளிக்கப் பெற்ற பதிப்பாய்வேடு

**வே. நெடுஞ்செழியன்,** எம். ஏ., எம். ஃபில்.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.
ஏப்ரல்-1991

முனைவர் பூ. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.,
சுவடியியல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

## சான்றிதழ்

'குணவாகடம்' என்னும் இச்சுவடிப் பதிப்பாய்வேடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 1990-91ஆம் ஆண்டிற்கான சுவடியியல் பட்டயச் சான்றிதழ்த் தேர்வுக்காக, வே. நெடுஞ்செழியன் அவர்களால் உருவாக்கப் பெற்றது என்றும், இதற்கு முன் இவ்வாய்வின்மீது இவருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப் பெறவில்லை என்றும் சான்று வழங்குகின்றேன்.

சென்னை - 600 113
நாள்: 15.5.1991

(பூ. சுப்பிரமணியம்)
நெறியாளர்

வே. நெடுஞ்செழியன்
சுவடியியல் மாணவர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

---

## உறுதிமொழி

'குணவாகடம்' என்னும் பெயரிய இவ்வாய்வேடு சுவடியியல் பட்டய மேற்படிப்புச் சான்றிதழுக்காகப் பதிப்பிக்கப் பெற்றது. இப்பதிப்பாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்றும், இதற்கு முன் வேறு எந்த பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி கூறுகின்றேன்.

சென்னை - 600 113

நாள்: 15.5.1991

வே. நெடுஞ்செழியன்
(வே. நெடுஞ்செழியன்)

# ந ன் றி யு ரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டுதோறும் நடத்திவரும் சுவடியியல் பட்டய மேற்படிப்புச் சான்றிதழ் வகுப்பில் சேர்வதற்கு எனக்கு அன்பு கூர்ந்து அனுமதியளித்த, நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு நன்றியுடையேன். இவ்வகுப்பில் சேர, ஆக்கமும் ஊக்கமும் அளித்த என் முனைவர் பட்ட நெறியாளரும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் முனைவர் வெ.தெ. மாணிக்கம் அவர்கட்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

பட்டய மேற்படிப்புச் சான்றிதழ் வகுப்பின் ஆசிரியராக விளங்கி, சுவடியியலை அறிமுகப்படுத்தி, ஆய்வு நெறிமுறைகளை வழங்கி, இப்பதிப்பாய்வின் தொடக்கம் முதல் இறுதி வரை பல்லாற்றானும் உறுதுணையாய்த் திகழ்ந்த முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரித்து. இவ்வகுப்பில் நான் மாணவனாவதற்குத் தூண்டுகோலாய் விளங்கியவரும், இவ்-வகுப்பாசிரியருள் ஒருவருமாகிய முனைவர் டி. மகாலட்சுமி அவர்கட்கு என் உளமார்ந்த நன்றி. மேலும், இச்சுவடியியலின் பல்துறைகளையும் பயிற்றுவித்த முனைவர் அன்னி தாமசு, முனைவர் சி. சசிவல்லி, முனைவர் ச. சிவகாமி ஆகியோர்க்கு என் நன்றி.

இப்பட்டயப் படிப்பிற்கும் பதிப்பாய்வுக்கும் தேவையான அனைத்து நூல்களையும் இன்முகத்தோடு எடுத்துத் தந்துதவிய நிறுவன நூலகர்கள் திருமதி அ. யோகம், திருமதி இரா. பார்வதி மற்றும் செல்வி சீ. கீதா ஆகியோர்க்கு நன்றி கூறும் பெற்றியேன்.

பதிப்பாய்வின்கண் அவ்வப்போது எழுந்த சித்தமருத்துவத்துறை சார்ந்த ஐயங்களைத் தெளிவுறுத்திய மருத்துவர்களும் பகுதி நேர சுவடியியல் மாணவர்களு-மான,

1. திரு. கு. செல்வரங்கம்

2. செல்வி அ. வாசுகிதேவி

3. திருமதி மோ. மல்லிகா

ஆகியோர்க்கு நன்றியேன்.

இச்சுவடியாய்விற்கு உறுதுணையாய் நின்று உரிய கருத்துகளை அவ்வப்போது வழங்கிய கெழுதகை நண்பர்கள் திரு. மு.அ. மாணிக்கவேலு, திரு. முகவூர் கா. முத்துமணி, திரு. மொ. மருதமுத்து, திரு. திருவிக்கிரமன் மற்றும் அறுவர் குழு மாணவ நண்பர்கள் அனைவரையும் என்றும் நன்றியோடு உன்னும் நெஞ்சினேன்.

இவ்வாய்வின் படிநிலை வளர்ச்சிக்கு ஒல்லும் வகையெல்லாம் உடனின்று உதவிய நிறுவன ஆசிரியர்கள், அலுவலர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் மொழிபெயர்ப்புத் துறை மாணவர்கள் அனைவர்க்கும் என் அன்பார்ந்த நன்றி.

ஆய்வேட்டைச் செப்பமுறத் தட்டச்சு செய்து தந்த தகையாளர் திரு. வி. வாசுதேவன் அவர்கட்கு என் நன்றி. ஆய்வேட்டின் புறவமைப்புப் பணிகளுக்கு வழிகாட்டி உதவிய திரு. தி.மு. கந்தசாமி அவர்களுக்கு என் நட்பார்ந்த நன்றி.

இன்னும் இவ்வாய்விற்கு உதவியோர் பலரும், இடச்சுருக்கம் கருதி, இவ்வுரையில் இடம்பெறவில்லையெனினும், அன்னவரனைவரும் என் இதயத்தில் என்றென்றும் நிறைந்திருப்பர்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

## பொருளடக்கம்


சான்றிதழ்

உறுதிமொழி

நன்றியுரை

| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | .. 1 - 20 |
| 2. | நூலாய்வு | |
| | I. சித்தமருத்துவம் | .. 21 - 29 |
| | II. நூலாசிரியர் | .. 30 - 32 |
| | III. நூல் | .. 33 - 39 |
| | IV. நூற்பொருள் | .. 40 - 120 |
| | V. நூல் - நடையும் நயமும் | .. 121 - 134 |
| 3. | மூல நூல் | .. 135 - 232 |
| | குறிப்புகள் | .. 233 - 235 |
| | துணைநூற்பட்டியல் | .. 236 - 239 |
| | பின்னிணைப்புகள் | |
| | பாடல் முதற்குறிப்பு அகராதி | .. 1 - 10 |
| | அளவைப் பெயர்கள் | .. 11 - 12 |
| | சொல்லடைவு | .. 13 - 51 |
| | மூலிகைப் படங்கள் | .. 52 - 61 |

# பதிப்புரை

# பதிப்புரை

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய் விளங்குவது நம் தமிழ்மொழி. இலக்கியம், இலக்கணம், இசை, நாடகம், மருத்துவம், சோதிடம் முதலான துறைகள் தோறும் எண்ணற்ற நூல்களைத் தமிழ்மொழி காலந்தோறும் பெற்று வளர்ந்து விளங்கிற்று. தமிழரின் இத்தகு அரிய நூற்செல்வங்கள் யாவும் பண்டை நாளில் ஏட்டுச் சுவடிகளிலேயே எழுதிவைக்கப்பெற்றன. இன்று நமக்கு அச்சில் கிடைக்கும் பழந்தமிழ் நூல்கள் யாவும் இவ்வேட்டுச் சுவடிகளினின்று பதிப்பிக்கப் பெற்றவையே. எனினும், இதுவரை பதிப்பிக்கப்பெற்ற சுவடிகள் உலகிலுள்ள தமிழ்ச்சுவடிகளின் மொத்த எண்ணிக்கையில் இருபத்தைந்து விழுக்காடே.

## சுவடிகள் - நிலையும் செயலும்

பண்டை நாளில் எழுதப்படு பொருள்களாக, பாறை, பனையோலை, மரப்பட்டை, செப்பேடு, பானையோடு முதலான பலவும் விளங்கின. இவற்றுள் பனை, நம் நாட்டில் மிகுதி என்பதாலும், ஏடு தயாரித்தலும், எழுதலும், எடுத்துச் செல்லுதலும், பாதுகாத்தலும் எளிது என்பதாலும் நம் முன்னோர் பனையோலைகளிலேயே மிகுதியும் எழுதினர்.

இவ்வேடுகள் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளே நிலைபேறுடையன. மேலும், தட்பவெப்ப நிலை மாறுபாடுகள், வெய்யில், மழை முதலான இயற்கைக் காரணிகளாலும்; கரையான், இராமபாணம் முதலான பூச்சிகளாகிய செயற்கைக்

காரணிகளாலும் இவை விரைந்தழியும் இயல்பின. அன்றியும், முன்னாளில் சிதைந்தோ ஒடிந்தோ போன சுவடிகளைப் படியெடுத்துக்கொண்டு பின்னர் அவற்றை ஆற்றிலோ, தீயிலோ இடும் வழக்கம் இருந்தது. பின்னாளில், காலப்போக்கில் இச்செயல், காரணகாரியம் மறக்கப்பட்டு வெறும் மரபுவழிச் சடங்காக மாற்றம் பெற்ற நிலையில் நம் முன்னோரின் மூடத்தனத்தால் ஆடிப்பெருக்கிலும், வேள்வி நெருப்பிலும், படியெடுக்காமலேயே நாம் இழந்துவிட்ட ஏட்டுச்சுவடிகள் மிகப்பல. இவ்வாறு நமது பழந்தமிழ்ச் சுவடிகள் பல காலப்போக்கில் அழிவுற்றன. இன்றும் அழிந்துகொண்டிருக்கின்றன. இத்தகு சூழலில், இன்று எஞ்சியிருக்கும் சுவடிகளில் பொதிந்து கிடக்கும் நம் இலக்கியச் செல்வங்களை அச்சில் வெளிக்கொணர்ந்தாலன்றி நம் இலக்கியப் பரப்பு முழுமை பெறாது. எனவே, அவற்றைப் பதிப்பித்தல் நம் கடன்.

## நோக்கம்

மேலைநாட்டினரின் வரவால் அச்சுக்கலை ஏறத்தாழ கி.பி. பதினாறாம் நூற்றாண்டளவில் நம் நாட்டிற்கு வந்தது. இவ்வச்சுக் கலையின் வரவால் ஏட்டுச்சுவடிகள் பல பதிப்பிக்கப் பெற்று நூல்களாக உருப்பெற்றன. டாக்டர் உ.வே. சாமிநாதையர், திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை, திரு. சி.வை. தாமோதரம்பிள்ளை முதலானோர் இச்சுவடிப் பதிப்புக் கலையைத் தொடங்கி வைத்தனர். அவர்களைத் தொடர்ந்து இன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், கீழ்த்திசைச் சுவடி நூலகம் முதலான நிறுவனங்களும் இச்சுவடிகளைப் போற்றிப் பேணிப் பதிப்பிக்கும் பணியைச் செய்து வருகின்றன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 'சுவடியியல்' என்ற பட்டய வகுப்பை நடத்தி வருகின்றது. அப்பட்டய வகுப்பின் ஒரு பிரிவாக, அதில் பயிலும் மாணவர்களைக் கொண்டு, ஆண்டுதோறும் பழம்பெரும் ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பித்து வருகின்றது. அவ்வகையிலேயே இந்நிறுவனச் சார்பில் 'குணவாகடம்' எனும் பெயரிய இச்சுவடியும் பதிக்கப் பெறுகிறது.

களம்

இன்று நம்மிடமுள்ள தமிழ்ச்சுவடிகளுள் பெரும்பாலானவை மருத்துவச் சுவடிகளே. அம்மருத்துவச் சுவடிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மருத்துவ முறையானது, நந்தமிழரின் பாரம்பரியச் சிறப்புமிக்க முறை. சிந்துவெளி நாகரிகத்திலேயே தோற்றங் கொண்டு, தமிழகத்தில் பொதுவான மருத்துவ முறையாக விளங்கிப் பின் சித்தர்களால் போற்றி வளர்க்கப்பெற்ற நிலையில் சித்த மருத்துவமாக மிளிர்ந்தது. பின்னாளில் ஆரியச் செல்வாக்கினாலும், தொடர்ந்து நுழைந்த ஆங்கில மருத்துவச் செல்வாக்கினாலும் மெல்ல மெல்ல, மக்களிடையே வழக்கொழிந்து ஏடுகளிலும், நாட்டுப்புற மக்களின் மனங்களிலுமே வாழ்ந்துவர நேரிட்டது. எனினும், தற்போது, பிற மருத்துவ முறைகளால் கைவிடப்பெற்ற நோய்களைப் போக்கும் ஆற்றல், பின்விளைவுகளின்மை, வாழ்நாளை நீட்டிக்கும் வளமை முதலான இதன் தனிச்சிறப்புகளாலும்; இம்மருத்துவ முறையை மீண்டும் தழைக்கச் செய்தால் உலகில் நோய்த் துன்பத்தை முழுமையாக ஒழித்து நோயற்ற வாழ்வை உலகிற்கு வழங்கலாம் என்ற சீரிய சிந்தனையாலும்; தமிழரின் தொன்மை வாய்ந்த கலைச்செல்வங்களைப் பேணிக்காக்கும் கடமையினாலும், இச் சித்த மருத்துவத் துறை மீண்டும் தழைக்கத் தொடங்கிற்று. இச் சித்த மருத்துவத் துறையின் மறுமலர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பன மருத்துவச் சுவடிப் பதிப்புகளே. இவ்வாறு ஏட்டுச் சுவடிகளில் தூங்கும் மருத்துவ

முறைகளை அச்சின் வழியே தமிழுலகுக்குத் தருவதன் மூலம் மருத்துவத்தின் முழுத்தன்மையையும் உலகுக்கு வெளிக்கொணர்ந்து நன்கு பயன் பெறலாம்.

காரணம்

மருத்துவத் துறையில் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்படுவதன் மூலம், நோயை வேரொடு களைய வழி காண்பது நம் மருத்துவ முறை. அவ்வகையில் நோய்களை நன்கு ஆய்ந்து, அந்நோய்களின் குறி குணங்கள், அவற்றின் வன்மை மென்மைகளைத் தெளிய உணர்த்தி, அவற்றைத் தீர்க்கும் வழி வகைகளைக் கூறுவது 'வாகடம்' ஆகும். இவ்வாறு நோய்களின் குறி குணங்களை ஆய்ந்து கூறி அவற்றைத் தீர்க்கும் மருந்து முறைகளையும் கூறுவதாக, 'குணவாகடம்' எனும் பெயரிய சுவடி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடி நூலகத்தில் உள்ளது. இது இதுவரை யாராலும் பதிப்பிக்கப் பெறவில்லை. குணவாகடம் என்ற பெயரில் ஒன்றிரண்டு நூல்கள் முன்னரே வெளிவந்துள்ளன. எனினும் அவை இச்சுவடியினின்று முற்றிலும் வேறானவை. எனவே, மருத்துவத்திற்கு முதனிலையாகிய நோயாராய்ச்சியையும், முடிவு நிலையாகிய மருந்து செய்முறைகளையும் ஒருசேரக் கூறும் நூல் என்பதாலும், இதுவரையில் பதிப்பிக்கப்பெறாதது என்ற காரணத்தாலும், 'குணவாகடம்' எனும் இச்சுவடி, ஆய்வாளரால் பதிப்புக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

இடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடித்துறை நூலகத்தில் 73ஆம் எண்ணுள்ள சுவடியில் இந்நூல் இடம்பெற்றுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட ஓலைகளைக் கொண்ட இச்சுவடியில் முதல் 62 ஏடுகளில் இந்நூல் அமைந்து விளங்குகின்றது.

அமைப்பு



## புற அமைப்பு

சுவடியின் இருபுறமும் மூங்கில் பட்டையாலாகிய சட்டம் உள்ளது. ஏடுகள் சாதாரணப் பனை வகையைச் சேர்ந்தவை. இச்சுவடியின் நீளம் 37.5 செ.மீ., அகலம் 3 செ.மீ. சுவடியைச் செம்மையாகக் கட்டி வைத்தற்கேற்ப ஓலையின் நடுவே இரு பொத்தல்கள் உள்ளன. மிகுதியான பயன்பாட்டின் காரணமாக ஏடுகளின் ஓரங்கள் தேய்ந்துள்ளன. மேலும், அவ்வோரங்கள் இடையிடையே செல்லரிக்கப் பெற்றும், ஒடிந்தும் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. ஏடுகளின் மையப் பகுதிகள் இராமபாணப் பூச்சிகளால் அரிக்கப் பெற்று ஆங்காங்கே சிதைந்துள்ளன. சில ஏடுகளில் இடது ஓரப் பகுதிகள் சிதைவுற்று ஒடிந்துவிடும் நிலையில் உள்ளன. 25ஆம் எண்ணுள்ள ஏட்டில் வலப்புறம் ஒரு குறிப்பிட்ட அளவு வரையிலான ஏடு ஒடிந்துள்ளது. இத்தகு குறைபாடுகளினால் சுவடியின்கண் சிற்சில பாடலடிகளும், தொடர்களும், சொற்களும், எழுத்துகளும் சிதைந்துள்ளன. மேலும், ஏட்டின் நடுவே ஆங்காங்கே வெடிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

## அக அமைப்பு

சுவடியில் நூல் தொடங்கும் ஏட்டிற்கு முன்னேட்டில் 'குணவாகடம்' என்று நூலின் பெயர் எழுதப்பெற்றுள்ளது.

## தொடக்கம்

சுவடியின் தொடக்கமாக, முதல் ஏட்டின் இடது ஓரத்தில் 'உறரி ஓம் நன்றாக, குருவாழ' என்ற தொடர்கள் அமைந்துள்ளன. தொடர்ந்து நூலின் பெயர் இடம்பெற்றுள்ளது. சுவடியின் இடது ஓரங்களில் வருணவாதம், பித்த

பாண்டு குணம்; பிராவைக்கு உள்ளுக்குக் கொள்ள, சத்தி குன்மத்துக்குக் குளிகை, குதிரைவலிக்கு அஞ்சனம் என்றவாறு உட்தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, சுவடியின் இடது ஓரப்பகுதி தலைப்புகள் மற்றும் நூற்பெயர் முதலான குறிப்புகளை எழுதப் பயன்பட்டுள்ளமை பெறப்படுகிறது. வலப்புற ஓரத்தில் இடம் விடாது, நூல் இறுதிவரை எழுதப்பட்டுள்ளது.

## நூல்

நூலின்கண் நானூற்று அறுபத்தைந்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடல்களின் அடிகள் யாவும் உரைநடை போன்றே இடையீடின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. அடிகளும், சீர்களும் பிரிக்கப்படவில்லை. ஒரு பக்கத்திற்கு எட்டு வரிகள் இடம்பெற்றுள்ளன. பாடலின் முடிவைக் குறிக்கும் வகையில் அவ்வப்பாடலின் இறுதியில் அதற்குரிய தமிழ் எண் கொடுக்கப்பட்டுள்ளது. எண்ணின் இருபுறமும் ൳ என்ற குறியீடு காணப்படுகிறது. எனினும் பாடல் எண்கள் இடையிடையே விடுபட்டும், ஓரிரு எண்கள் இருமுறை இடம்பெற்றும், ஒருசில பாடல்களுக்கு எண்களே குறிக்கப் பெறாமலும், ஒழுங்குமுறையின்றி அமைந்துள்ளன. சான்றாக 20ஆம் எண்ணுள்ள பாடலுக்கு அடுத்த பாடல் எண் குறிக்கப் பெறவில்லை. மாறாக, அதற்கு அடுத்த பாடல் 21 என எண் குறிக்கப்படுகிறது. மேலும், 72ஆம் எண்ணுள்ள பாடலுக்கு அடுத்து 73 இடம்பெறாமல் 74 என்று எண் குறிக்கப்பட்டுள்ளது. 127 என்ற எண் இருமுறை உள்ளது.

## பாவமைப்பு

குணவாகடம் எனும் இச்சுவடி செய்யுள் வடிவினது. பெரும்பாலான பாக்கள் அறுசீர் விருத்தங்களாகவே உள்ளன. சில எழுசீர், எண்சீர் விருத்தங்களாகவும் அமைந்துள்ளன. பத்துக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்ட

பாடல்களும் இதில் இதில் இடம்பெற்றுள்ளன. நூலின் இடையிடையே வெண்பாக்கள் உள்ளன. கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் ஆகியனவும் ஒன்றிரண்டு ஆங்காங்கே அமைந்துள்ளன.

வெண்பாக்கள் இடம்பெறும் நிலையில், அவ்வப் பாக்களுக்கு மேலே வெண்பா என்று சுட்டப்படுகிறது. வெண்பா முடிந்து, விருத்தப்பா தொடருமிடத்து, 'விருத்தம்' என்ற குறிப்பு இடம்பெறுகின்றது. எண்சீர், அவற்றுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்ட பாக்கள் மட்டும் சிற்சில இடங்களில் ஆசிரிய விருத்தம் என்று பாவினம் தோன்றச் சுட்டப்படுகின்றன. மேலும், பாக்கள் ஓசையால் வேறுபடுமிடத்து, 'வேறு' என்ற சொல்லால் சுட்டப்படுகிறது.

விருத்தப்பாக்களும் வெண்பாக்களும் கலிவிருத்தங்களும் கட்டளைக் கலித்துறைகளும் தத்தமக்குரிய சீர்களின் எண்ணிக்கையால் அவ்வவ் வினத்திற்கு உரியனவாக உள்ளனவேயன்றி, இலக்கண முறையான் முழுதும் பொருந்துவன-வல்ல. மேலும், விருத்தங்களின் அடிவரையறைகளும் நான்கின் மிக்கு, ஆறடி எட்டடிகளில் அமைந்துள்ளன.

உரைக்குறிப்பு

பாடல்களுக்குக் கீழே ஒருசில இடங்களில் குறிப்புகள் உரைநடையாக இடம்பெற்றுள்ளன. சான்று:

பிளவை குணம் முற்றும் (114)
உளமாந்தை முற்றும் (126)
சுவாசகாசத்துக்கு இருத்துவாதி உண்டை - பத்து நாள் கொள்ளவும் (148)

## எழுத்தமைப்பு

எழுத்துகள் ஓரளவு படிக்கக் கூடியனவாக உள்ளன. ஏடெழுதி-யோர்க்குப் போதிய மொழியறிவு இன்மையால் எழுத்துப்பிழை மிகுதியாக உள்ளது. ஒற்றெழுத்துகள் புள்ளியிடப்பெறவில்லை. எகர, ஒகர, உயிர்-மெய், உயிரெழுத்துகளில் குறில் நெடில் வேறுபாடு இல்லை. ஏனைய உயிர், உயிர்மெய்களில் குறில் நெடில் வேறுபாடு பேணப்பட்டுள்ளது.

அ. 1. 'ஆ' எனும் நெட்டுயிர் ஓரிடத்தில் 'ஔ' என்று எழுதப்பட்டுள்ளது.

ஆநெய் - ஔநெய் (402:3)

2. 'ஈ' என்ற உயிர்நெடில், 'இ' என்று குறில் வடிவாகவே எழுதப்-பட்டுள்ளது. ஆனால் உயிர்மெய் வடிவம் நெடில் குறியுடனேயே உள்ளது.

ஈரலும் - இரலும் (38:1)

3. 'ஊ' என்ற நெடில், 'உள' என ஈரெழுத்தாகப் பிரித்து எழுதப்-பட்டுப் படிப்போர்க்கு மயக்கம் தரும் வகையில் காணப்படுகிறது.

ஊறிப் பிளந்து - உளறிப் பிளந்து (201:1)

ஊதே வெற்றிலையில் - உளதே வெற்றிலையில் (275:1)

ஊறிக் காஞ்சு - உளறிக் காஞ்சு (339:1)

4. ஐகார உயிரின் வடிவம் 'அய்' என்றே எழுதப்பட்டுள்ளது. அதன், மொழி முதல் உயிர்மெய் வடிவம் இடம்பெறும் நிலையில் ஐகாரத்தோடு யகர ஒற்றும் இணைந்து காணப்படுகிறது.

ஐயம் – அய்யம் (7:2)

ஐயுமோகித்தபோது – அய்யுமோகித்தபோது (25:1)

கைகால் – கைய்கால் (185:3)

மையார் – மைய்யார் (185:4)

நைந்திராதே – நைய்ந்திராதே (435:2)

ஆ.1. ஒற்று மிகக் கூடாத இடங்களிலெல்லாம் ஒற்றுகள் மிகுந்துள்ளன.

சான்று:

காய்ச்சல்க் குளிரும் (10:3)

கடலில்த் தரங்கம் (37:3)

தலையிற்ப் புருவத்தில் (49:1)

மீறாமல்க் கொடி (137:3)

பால்க் கஞ்சி (160:1)

தேம்பல்ப் பொடி (256:4)

சற்றும்ஞ் சுரவாதம் (284:4)

மஞ்சள்க் குலவுசெறி (298:1)

மடல்ச் சருகு (360:2)

தேற்றான்ங் கொட்டை (456:8)

2. ஒரொற்று மிகவேண்டிய இடத்தில் பிறிதோரொற்று வந்து மயங்கும் நிலை காணப்படுகிறது.

சித்திரக் கண்டம் – சித்திரங் கண்டம் (7:2)

மூச்சு – மூட்சு (9:1)

வரட்சி – வரச்சி (21:1)

எரிகுன்மம் – எரிகும்மம் (15:தலைப்பு)

குன்மம் – குல்மம் (131:4)

வேட்கை – வேக்கை (271:3)

திரட்சி – திரச்சி (230:1)

நிச்சயமாய் – நிட்சயமாய் (316:4)

3. சில ஒற்றுகள் வரவேண்டிய இடங்களில் விடுபட்டுள்ளன.

சான்று:

உலர்ந்து – உலந்து (8:1)

காய்ச்சல் – காச்சல் (23:1)

புணர்ச்சி – புணச்சி (61:3)

பார்க்கும் – பாக்கும் (65:1)

காய்ச்சுகிலோ – காச்சுகிலோ (168:2)

திமிர்த்து – திமித்து (185:3)

தூய்மையுள்ள – தூமையுள்ள (187:8)

நீர்ப்பாய்ச்சல் – நீர்ப்பாச்சல் (193:6)

படர்ந்த – படந்த (221:4)

சர்க்கரை – சக்கரை (244:4)

முதிர்ந்த – முதிந்த (250:1)

வார்த்தரைத்து - வாத்தரைத்து (316:2)

பதார்த்தம் - பதாத்தம் (387:4)

தீர்ந்து - தீந்து (453:10)

இ.1. ரகர உயிர்மெய்க்கும் 'ா' என்ற துணையெழுத்திற்கும் இடையே வரிவடிவில் வேறுபாடு பேணப்படவில்லை. எனினும் பிற சுவடிகளில் பெரும்பாலும் ரகரமானது, 'ா' என்ற துணையெழுத்து வடிவிலேயே எழுதப்பெறும். ஆனால் இச்சுவடியிலோ அத்துணையெழுத்தும், ரகர உயிர்மெய்யும், 'ர' என்றவாறு வலப்பக்கக் கோடு கீழ்நோக்கி நீட்டப்பெற்று ரகர வடிவில் உள்ளன. ஆனால் ரகர ஒற்று, துணையெழுத்தினின்று வேறுபட்டு விளங்கும் வண்ணம் இருபக்கக் கோடுகளும் சமமாக இருக்க வலப்பக்கக் கோட்டின் முடிவில் பக்கவாட்டில் கோடொன்று இணைக்கப்பட்டு 'ட' என்ற வடிவில் உள்ளது. எனினும், இவ்வேறுபாட்டு நிலை சிற்சில இடங்களிலேயே பின்பற்றப்பட்டுள்ளது.

சான்று:

வண்டு சேர் குழலினாளே (14:4)

தூயதோர் நாசி (27:1)

கங்குல் சேர் (29:3)

பிறந்தோர் (20:3)

தக்கதோர் (23:3)

பூர்வனாசம் (25:1)

நீர் வத்தித் தண்ணீர் தேடும் (30:3)

இவ்வாறு ரகரத்தைப் போன்றே துணையெழுத்தை எழுதல், ரகர ஒற்றை வேறுபடுத்திக் காட்டுதல் ஆகியவற்றை நோக்க, ர, 'ா', ர்

ஆகியவற்றுக்கிடையே இச்சுவடி எழுதுங்காலத்தில் தெளிவான வேறுபாடு இருந்திருக்க வேண்டும். ஏடெழுதுவோரின் தெளிவின்மையால் அவ்வேறு-பாட்டைப் பின்பற்றுவதில் குழப்பம் ஏற்பட்டு இச்சுவடியில் அவ்வேறுபாட்டின் தெளிவற்ற நிலை காணப்படுகிறது. அல்லது மூலச்சுவடியில் இவ்வேறுபாடு-கள் தெளிவுறப் பேணப்பட்டிருக்க வேண்டும்; படியெடுத்தோரின் கவன-மின்மையால் இச்சுவடியில் இவ்வேறுபாட்டில் தெளிவின்மை ஏற்பட்டிருத்தல் கூடும்.

ஈ.1. ர, ற; ழ, ள, ந, ண, ன ஆகிய இன எழுத்துகளுக்கு இடையே வேறுபாடுகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை. ஒரெழுத்து வரவேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து மயங்கி நிற்கின்றது.

சான்று:

1:1:1 ர - ற

| | | |
|---|---|---|
| இருத்துவியாதி | - இறுத்துவாதி | (150:4) |
| தீர்க்கும் | - தீற்கும் | (155:3) |
| கருப்பஞ்சாறு | - கறுப்பஞ்சாறு | (179:1) |
| திரிகடுகு | - திறிகடுகு | (203:1) |
| பருப்பு | - பறுப்பு | (321:1) |

1:1:2 ற - ர

| | | |
|---|---|---|
| மறுபடி | - மருபடி | (2:3) |
| அறிந்து | - அரிந்து | (2:4) |
| ஏறியுங் | - ஏரியுங் | (3:1) |

| | | | |
|---|---|---|---|
| குறைந்து | – | குரைந்து | (165:1) |
| செம்மறி | – | செம்மரி | (189:1) |

1:2:1 ழ – ள

| | | | |
|---|---|---|---|
| விழி | – | விளி | (4:2) |
| கழுத்து | – | களுத்து | (9:2) |
| கழஞ்சு | – | களஞ்சு | (131:3) |
| கிழங்கு | – | கிளங்கு | (169:1) |
| மெழுகுண்ணும் | – | மெளுகுண்ணும் | (251:2) |

1:2:2 ள – ழ

| | | | |
|---|---|---|---|
| வெளுத்து | – | வெழுத்து | (171:1) |
| தூதுவளை | – | தூதுவழை | (196:3) |
| உளையும் | – | உழையும் | (202:1) |
| குளிப்பாட்ட | – | குழிப்பாட்ட | (215:3) |
| நேர்வாளம் | – | நேர்வாழம் | (226:1) |

1:3:1 ந – ன

| | | | |
|---|---|---|---|
| நோவின் | – | னோவின் | (166:2) |
| நாளொன்று | – | னாளொன்று | (176:1) |
| வெந்நீர் | – | வென்னீர் | (227:3) |
| நன்னாரி | – | னன்னாரி | (229:1) |
| நெல்லி | – | னெல்லி | (316:3) |

1:4.1. ண - ன

| | | | |
|---|---|---|---|
| எண்பது | - | என்பது | (6:1) |
| தண்ணீர் | - | தன்னீர் | (195:3) |
| எண்ணையுடன் | - | என்னையுடன் | (253:4) |
| பணத்தொடை | - | பனத்திடை | (286:1) |
| உட்டிணம் | - | உட்டனம் | (399:3) |

1:4:2 ன - ண

| | | | |
|---|---|---|---|
| திருமுனி | - | திருமுணி | (9:3) |
| கனத்து | - | கணத்து | (171:2) |
| தின்னும் | - | திணணும் | (213:3) |
| நன்னாரி | - | நண்ணாரி | (219:4) |
| குன்மம் | - | குண்மம் | (278:1) |

உ. வல்லின உயிர்மெய்கள் தம்மொற்றுகளுடன் கூடி வருங்கால் அவ்விரண்டையும் இணைத்துக் கூட்டெழுத்தாக எழுதுதல் சுவடி மரபு. அவ்வாறே இச்சுவடியில், 'க்கு' என்ற இரண்டெழுத்துகளும் ஒன்றிணைக்கப்பெற்று, கூட்டெழுத்தாக ஓரிரு இடங்களில் எழுதப்பட்டுள்ளன. எனினும் இக்கூட்டெழுத்துப் பயன்பாடு உட்தலைப்புகளில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

க்கு - 

பித்தத்துக்கு - பித்தத்து

ஊ. சுவடியில் காணப்பெறும் பிழைகளும் திருத்தங்களும்.

பிழைகள்: எழுத்துப் பிழைகளேயன்றி வேறுசில பிழைகளும் ஏடெழுதுவோரால் நிகழ்ந்துள்ளன.

1:1 உற்றதோர் கீழ்வயிற்றில் (34) என்ற பாடலின் தொடக்கமாக, 'குடலில் வலிக்கும் காலுளையும் குமுறியிரையும் மந்திக்கும்' (37) என்ற பிறிதோர் பாடல்வரி தவறாக எழுதப்பட்டுள்ளது.

1:2 'வந்ததோர் பிரமேகந்தான்' எனத் தொடங்கும் 438ஆம் எண்ணுள்ள பாடலே, இடைவரிகள் விடுபட்டு, முதல் இறுதி வரிகள் மட்டுமே கொண்டு அதற்கு முந்திய எண்ணுள்ள பாடலாகச் சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது.

1:3 'உத்திடும் வெண்ணெயது' என்ற வரி இருமுறை எழுதப்பட்டுள்ளது (140).

1:4 'வாயுக் கிராணி' (88) என்ற உட்தலைப்பு 'வரக் கிராணி' என்று எழுதப்பட்டுள்ளது.

1.4 அய்ங் கழஞ்சு என்று குறிப்பிடுமிடத்து, அயரு என்று எழுத்து வடிவில் தொடங்கி எண் வடிவில் குறிப்பிட்டுள்ள நிலை காணப்படுகிறது (285).
[ரு என்பது '5'இன் தமிழ் வடிவம்].

2. <u>மிகை</u>

பாடலில் ஆங்காங்கே மிகைச்சீர்கள் அமைந்து விளங்குகின்றன.

2:1 வட்ட (13:1)

2:2 வானே (112:3)

2:3 மோரே (444:2)

3. <u>விடுகை</u>

பாடல்களில் சிலவற்றில் சீர்கள் விடுபட்டுள்ளன.

3:1 கொடி வேலி பருத்தி - கொடிவேலி <u>வேலிப்</u>பருத்தி (120:1)

3:2 மொன்று - மொ<u>வ்வொ</u>ன்று (170:2)

3:3 கட்டுங் கடுகு ரோகணியுங்... எனத் தொடங்கும் 372ஆம் எண்ணுள்ள பாடலின் இரண்டாவது அடி முழுமையாக விடப்பட்டுள்ளது. சுவடியின்கண், இப்பாடலின் இறுதியடியின் ஈற்று முச்சீர்கள் 'கொதி.....க்க காஞ்சு குடிப்பீரே' என்று இடம் விட்டு எழுதப்பட்டுள்ளதால் மூல ஏட்டிலேயே இப்பாடல் தெளிவின்றி இருந்திருக்க வேண்டும்.

மேலும் பல பாடல்களில் அசைகளும் சீர்களும் விடுபட்டுள்ளன. அவை குறைப் பாடல்களாகச் சுட்டப்பட்டுள்ளன.

ஊ.2. <u>பிழை திருத்தம்</u>

சுவடியின்கண் ஏடெழுதியோரே சில பிழை திருத்தங்கள் செய்துள்ளனர். அவர்தம் பிழைதிருத்த முறைகள் இருவகையின.

2:1 பிழையாக எழுதப்பட்ட எழுத்துகளும், தொடர்களும் அடிக்கப்படுதல்.

சான்று:

| | | | |
|---|---|---|---|
| ஈரலும் | - | இற்ரலும் | (38:1) |
| வரட்சி | - | வரதட்சி | (66:1) |
| புண்ணடுக்கு | - | புண்ணடுழீழுக்கு | (66:4) |
| வன்குறுவை | - | வஞ்னகுறுவை | (113:1) |
| மிகவே | - | மிந்த்துகவே | (133:3) |
| மொந்தம் | - | மொந்துதம் | (178:4) |
| கனத்து | - | கனத்து கனத்து | (185:3) |

உறுதியாந் தபனந் தீரும் - உறுதியாந் தீரும் தபனந்தீரும் (284:2)

2:2 விடுபட்ட எழுத்துகளை அவ்வவ்விடங்கட்கு நேர்கீழே எழுதுதல்.

வயித்தை - வயித்த (50:1)
ண

மரியவாய் - மரிவாய் (89:2)
ய

தன்னொடொக்க - தன்னொ க்க (153:2)
டொ

மாஞ்சிசதருப்பை - மாஞ்சிதருப்பை (270:1)
ச

மொய்த்திருக்கும் - மொத்திருக்கும் (415:2)
யி

முடிவு

சுவடியின் கண் முடிவில், "குரோதன ஆண்டு மார்கழி மாதம் ௫-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை செஞ்சாலை மங்கா கவுண்டர் குமாரன் தாய்வீமூர்த்தி வாத்தியார் குணவாகடம் எழுதி முடிந்தது" என்ற குறிப்புக் காணப்படுகிறது. தொடர்ந்து, 'சம்பூரணம் ; குருபாதந் துணை; வேலும் மயிலும் முன்னடக்க; தாண்டவ யீசுரன் துணை செய்யவும்; காமாட்சி அம்மன் முன்னிற்க; சுபமஸ்து; தவழ மலை ஆண்டவன் துணை; வெற்றி வே லுற்ற துணை; சொக்கர் துணை; மீனாட்சி அம்மன் பாதமே துணை" என்ற தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

பதிப்பு முறை

1. பாடல்

செய்யுட்கள் அவ்வப் பாக்களின் இயல்புக்கேற்ப அடிகளும் சீர்களும் பிரிக்கப்பெற்று உரிய வடிவில் தரப்பட்டுள்ளன. இப்பிரிப்பு முறைக்கு முழுமையாக உட்படாத ஒழுங்கமைப்பற்று விளங்கும் பாடல்களும் உள. அவை '**' என்று இரு உடுக்குறிகளிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

2. பாடற்கண் மிகைச்சீர்களாக அறியப்பட்டவை பகர வடிவ அடைப்புக் குறியில் தரப்பட்டுள்ளன.

3. அடிகளும் சீர்களும் விடுபட்ட இடங்கள் புள்ளியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு குறையுடையனவாக விளங்கும் அப்பாடல்கள் ஒற்றை உடுக்குறியிட்டுச் சுட்டப்பட்டுள்ளன.

4. சுவடியின்கண் விடுபட்டனவும் சிதைவுற்றனவுமாகிய எழுத்துகளும் சொற்களும் ஆய்வாளரின் உய்த்துணர்வால் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட நிலையில் அவை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

5. உட்தலைப்பு

உட்தலைப்புகள் இடப்பெறாத பாடல்கள் சிலவற்றுக்கு உட்தலைப்புகள் இடப்பெற்றுள்ளன. அவை அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

6. பாடல் எண்கள்

சுவடியின்கண் பாடல் எண்கள் ஒழுங்காகக் கொடுக்கப்படாது தெளிவின்றி இருந்தமையால் அவை திருத்தி முறைப்படுத்தப் பெற்று வழங்கப் பட்டுள்ளன.

7. எழுத்து

பாடலின் முதல் எழுத்தாக அகர, இகர உகரங்கள் இடம்பெறும் நிலையில் அவை முறையே ய, யி, யு என்றவாறு யகர ஒற்றோடு கூடிய உயிர்மெய்களாகப் பயின்று வந்துள்ளன. அவை திருத்தப்பெற்று உரிய உயிர்கள் இடம்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| யிருமலே | - | இருமலே | (28:1) |
| யுத்திடு | - | உத்திடு | (140:4) |
| யிரத்த | - | இரத்த | (143:1) |
| யெண்ணெய் | - | எண்ணெய் | (289:1) |
| யொன்றதிலே | - | ஒன்றதிலே | (330:1) |
| யசனிய | - | அசனிய | (426:1) |

8. எகர ஒகரக் குறில் நெடில்கள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

9. சுவடியின்கண் 'அய்' என்று எழுதப்பட்டுள்ள ஐகார வடிவம் 'ஐ' என்று திருத்தப்பட்டுள்ளது.

10. ஓரடியின் ஈற்றுமெய் அடுத்த அடியின் முதல் எழுத்தான உயிரோடு இணைந்து வழங்கும் நிலையில் அவை பிரிக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| தன்னி//லொக்க | - | தன்னில்//ஒக்க | (74:1-2) |
| நின்றெரியு//மிருமும் | - | நின்றெரியும்//இருமும் | (88:1-2) |

11. மெய்யெழுத்துகள் புள்ளியிடப் பெற்றுள்ளன.

12. மிகக் கூடாத இடங்களில் மிகுந்திருந்த தேவையற்ற ஒற்றுகள் நீக்கப்பட்டுள்ளன.

13. ஒற்றுகள் இடம்பெறாதிருந்த, தேவையான இடங்களில் ஒற்றுகள் இடப்பட்டுள்ளன.

14. ர,ற; ண,ந,ன; ல,ழ,ள முதலிய எழுத்துகள் தம்முள் மயங்கி வந்துள்ள இடங்கள் உரிய முறையில் திருத்தப்பெற்றுள்ளன.

15. ண,ற,ன ஆகியவற்றின் ஆகார வடிவம், ல,ள,ண,ன ஆகியவற்றின் ஐகார வடிவம் ஆகியன தற்காலச் சீர்திருத்த எழுத்து முறையில் திருத்தப்பட்டுள்ளன.

16. <u>வழக்கு மாற்றம்</u>

சுவடியில் பயின்று வந்துள்ள பேச்சு வழக்குச் சொற்கள் பதிப்பு முறை நோக்கி இலக்கிய வழக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பிறங்காலும் | - | புறங்காலும் (8:2) |
| துடர்திடும் | - | தொடர்ந்திடும் (24:2) |
| சியல் | - | செயல் (43:1) |
| சூரை | - | சூலை (74:3) |
| நாளி | - | நாழி (269:3) |
| பிளிநடலை | - | புளிநடலை (344:2) |
| சிலுப்பேறில் | - | சிலிர்ப்பேறில் (386:2) |

# நூ லா ய் வு

## I. சித்த மருத்துவம்

நூலாய்வு

## I. சித்த மருத்துவம்

மனித இனத் தோற்றத்தோடு உடன் தோன்றியது மருத்துவக்கலை. ஆதி மனிதன் காடுகளில் வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் அவனுக்கு ஏற்பட்ட காயங்களும் நோய்களும் அவனுக்கு மருத்துவத்தின் தேவையை உணர்த்தின. அந்நிலையில், தன் இயல்பாலும், முயற்சியாலும், விலங்குகள் தமக்குத் தாமே செய்துகொள்ளும் சில சிகிச்சை முறைகளைக் கண்ணுற்ற அறிவாலும் அவன் தன்னுடைய மருத்துவ அறிவை வளர்த்துக் கொண்டான். எனினும் அன்றைய சூழலில் இயற்கையின்பால் அவன் கொண்ட அச்சம், 'தீய சக்திகள் இவ்வுலகை ஆட்டுவிக்கின்றன' என்ற கொள்கையைத் தோற்றுவித்தது. அதன் காரணமாக மருந்துகளைப் பயன்படுத்துவதைக் காட்டிலும், சடங்குகள், மாந்திரீகம் ஆகியவற்றைக் கொண்டு நோய் தீர்க்கும் முயற்சியே தொடக்க காலத்தில் மிக்கு விளங்கிற்று.[1] பின்னர், நாகரிக வளர்ச்சியில் சடங்குகளின் பின்னே மறைந்து கிடந்த மருத்துவம் நாளுக்குநாள் வளர்ந்து தனிப்பெருங் கலையாக மலர்ச்சியுற்றது.

உலகில் வழங்கும் ஒவ்வொரு நாகரிகமும் தனக்கென ஓர் மருத்துவ முறையைப் பெற்று விளங்குகின்றன. இவ்வாறு உலக நாகரிகங்களில் காணப்பெறும் மருத்துவ முறைகளுள் குறிப்பிடத்தக்கன அலோபதி, ஓமியோபதி, சீன மருத்துவம், யூனானி, ஆயுர்வேதம், சித்த மருத்துவம் என்பன.

### சித்த மருத்துவம்

தமிழகத்தின் தொன்மையான மருத்துவ முறை சித்த மருத்துவம் எனப்படும். சித்தர்கள் எனப்பெறும் சான்றோரால் போற்றி வளர்க்கப்பெற்ற

மருத்துவம் என்ற அடிப்படையில் இப்பெயர் பெற்றது. அன்றியும் சித்தி-யடைவதற்கு வழிவகைகளைக் கூறும் மருத்துவம் என்ற வகையானும் இப்பெயர் பொருத்தமுற விளங்குகின்றது.

## சித்த மருத்துவத்தின் தோற்றம்

சித்த மருத்துவம் தமிழரின் முன்னோடிகளின் நாகரிகமான சிந்துவெளி நாகரிகத்திலேயே தோற்றங் கொண்டது. சிந்துவெளி மக்கள் வேப்பிலை, மான்கொம்பு, சிலாசத்து ஆகியவற்றை மருத்துவத்தில் பயன்படுத்தியதாகக் குறிப்புகள் கிடைக்கின்றன.[2] ஆரியர்களால் தஸ்யூக்கள் என்று அழைக்கப்-பெற்ற அத்திராவிட இனத்தவர் நோய்களை உண்டாக்கக்கூடிய தீய சக்திகளை மாந்திரிக முறைகளைக் கையாண்டு விரட்ட முற்பட்டதை அதர்வண வேதம் குறிப்பிடுகிறது.[3]

சிந்துவெளியில் தோற்றங்கொண்ட இத்திராவிட மருத்துவ முறை தொடர்ந்து சங்க காலத்தில் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிற்று.

"பையுளும் சிறுமையும் நோயின் பொருள"[4]

என்று நோயையும்,

"ஊரும், வயலும், சேரியோரும் நோய்மருங்கறிநரும்"[5]

என்று அந்நோயை நாடி அறியும் மருத்துவரையும்,

"வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குத லின்று வழிநனி பயக்கு மென்று"[6]

என்று நோய் நீக்கும் மருந்தையும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

சங்க காலத்தில் உடல்நோய் பிணி என்றும், உளநோய் 'நோய்' என்றும் சுட்டப் பெற்றன.[7]

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்"[8]

என்று மருத்துவர் சுட்டப்படுகின்றார்.

"திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல்"[9]

என்று அம்மருத்துவர் மருந்து வழங்குந் தன்மையும் கூறப்படுகிறது. அத்தி மரத்தின் பால், பட்டை முதலியன கொண்டு, வாள், வேல், அம்பு முதலியவற்றால் ஏற்பட்ட புண்களை ஆற்றுவதோடு வடுவையும் மாற்றும் பாங்கும்[10]; மார்பில் ஏற்பட்ட புண்ணை ஊசி கொண்டு தைக்கும் அறுவை மருத்துவ முறை பற்றிய செய்தியும்[11]; சாதல் நீக்கும் கற்ப மருந்தாக நெல்லி போற்றப்பட்ட பான்மையும்[12] நம் பழம்பெரும் மருத்துவம் அக்காலத்திலேயே பெற்றிருந்த வளர்ச்சியை உணர்த்துகின்றன.

சங்கம் மருவிய கால நூலான திருக்குறள் இம்மருத்துவ வளர்ச்சியின் பண்பட்ட நிலையை 'மருந்து' என்றோர் தனித்த தலைப்பில் எடுத்துக்காட்டுகிறது.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழை செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து"[13]

என்று மருத்துவத்தின் கூறுகள் தெளிவாக வரையறுக்கப்படுகின்றன. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய இலக்கியப் பெயர்கள் மருத்துவக் கலை

அக்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கைத் தெற்றெனப் புலனாக்குகின்றன.

இவ்வாறு தொன்மைக் காலந்தொட்டு தொடர்ந்து வளர்ச்சியுற்று வந்த நம் மருத்துவ முறை இக்காலகட்டம் வரையிலும் தனக்கெனத் தனியே ஓர் பெயர் பெற்றிருக்கவில்லை. இக்காரணம் பற்றியே வடநாட்டில் மருத்துவத்தை ஆயுள்வேதம் என்று குறிப்பிடும் நிலையைக் கண்ணுற்ற இளங்கோ-வடிகள் ஆயுளை வளர்க்கும் பண்பின் பொதுமை நோக்கித் தமிழகத்தில் நிலவிய நம் தனிப்பெரும் மருத்துவ முறையையும் ஆயுள்வேதம் என்று ஏற்று, தமிழகத்தில் விளங்கிய மருத்துவரையும் 'ஆயுள் வேதியர்' என்றே சுட்டுகிறார்.[14]

இக்காலகட்டத்தில் வேற்றுச் சமயங்களும் வேற்றினத்தாரும் புகுந்து, தமிழகத்தையே தமது ஆளுகைக்குள் கொணர்ந்தனர். இதனால் தமிழ்க்கலைகளும் சமயங்களுமே நலிவுறும் நிலை ஏற்பட்டது. இத்தகையதொரு சூழலில், ஏறக்-குறைய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் சித்தர் எனப்பெறும் சான்றோர், தமிழகத்தின் தொன்மையான இம்மருத்துவக் கலையைப் பேணி வளர்க்கத் தலைப்-பட்டனர். இக்கால முதற்கொண்டே அதுவரை பொதுவான ஓர் முறையாக விளங்கிய நம் மருத்துவம் 'சித்த மருத்துவம்' என்று பெயர் பெற்றது.[15] அது முதற்கொண்டு சித்த மருத்துவம் சித்தர் பெருமக்களின் ஆதரவில் நன்கு வளர்ச்சி-யடையலாயிற்று.

இவ்வாறு சித்தர்களால் வளர்க்கப்பெற்ற நம் சித்த மருத்துவம் தமிழகத்தில் தோன்றி தமிழர்க்கே உரிமையுடையதாக விளங்குவதோடு சித்தர்-களும் தமிழுக்கே ஏற்றம் தந்து தமிழிலேயே இதனை வளர்த்தமையாலும் இதற்குத் 'தமிழ் மருத்துவம்' என்ற பெயரும் உண்டு.

## சித்தர்

உலகில் தமக்கென, தவயோக நெறியை வகுத்துக்கொண்டு, அந்நன்னெறியில் ஒழுகிய மேலோர் பல பிரிவினராவர். அவருள் சித்தர் என்ற கூட்டத்தாரும் அடங்குவர். சித்தர் என்ற சொல் 'சித்' என்ற அடிச்சொல்லினின்று பிறந்தது. 'சித்' என்றால் அறிவு என்று பொருள். இறைவனை அறிவு நிலையில் நின்று கண்டுணர்ந்தவர்கள் என்று சித்தரைப் பற்றிக் கூறப்படுகிறது.[16] மேலும், சித்தி பெற்றவர், சித்து உடையவர் என்றவாறும் விளக்கம் தருவர்.

சித்தர்கள் இவ்வுடலை இறைவன் குடியிருக்கின்ற கோயிலாகப் போற்றினர். ஆன்மாவை இறைவனோடு ஒன்றச் செய்தலாகிய பேறு ஆறாம் அறிவைப் பெற்று விளங்கும் மனிதப் பிறவியிலேயே வாய்க்கும் என்பது அவர்தம் கொள்கை. அப்பேற்றினை அடைய அவர்கள் அறிவின்வழி நின்று யோகப் பயிற்சி மேற்கொண்டனர். இப்பயிற்சியின் மூலம் உடலில் மூலாதாரத்தில் விளங்குகின்ற 'குண்டலி' எனும் தெய்வீக சக்தியை ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலெழுப்பினர். இதன் மூலம் மதியமுதம் எனும் ஒருவகை அமுதச் சுரப்பை உண்ணாக்கில் சுரக்கச் செய்து சுவைத்து மகிழ்ந்தனர்; மரணமிலாப் பெருவாழ்வு எய்தினர்; இயற்கையையே ஆளும் ஆற்றல் கைவரப் பெற்றனர். இவையே பண்பு நோக்கில் சித்தாடும் செயலாகக் கருதப்பெற்று சித்து என்றும்; பயன் நோக்கில் சித்தியாகிய பேறு என்றும் வழங்கப் பெறுகின்றன.

சித்தர், வானோர் முதலான பதினெண் கணத்தவருள் ஒரு பிரிவாகச் சுட்டப்படுகின்றனர். இச்சித்தர்கள் நவநாத சித்தர், பதினெண் சித்தர், நவகோடி சித்தர், நவசித்தர் என்று பலவாறாகக் குறிப்பிடப்படுகின்றனர்.[17] இவற்றுள் சித்தர்கள் பதினெண்மராகச் சுட்டப்பெறுதலே பெருவழக்கு. இருப்பினும் இப்பதினெண்மர்தம் பெயர்ப்பட்டியல் நூலுக்கு நூல் வேறுபடுகின்றது.

"பார்த்திடவே நந்தீசர் மூலத் தீசர்
பண்பான அகத்தீசர் சட்டை நாதர்
போர்த்திடவே பதஞ்சலியும் ஊனர் கன்னர்
கோரக்கர் கமலமுனி சண்டி கேசர்
கர்த்திடவே இடைக்காடர் சிவாய சித்தர்
கொங்கணவர் தந்தை போக நாதர்
காத்திடவே மச்சமுனி பிண்ணாக் கீசர்
காலாங்கி சுந்தரரும் காப்பு தானே"[18]

என்பது கருவூரார் பலதிரட்டில் காணப்பெறும் பட்டியலாகும். இன்று கிடைக்கும் பட்டியல்களில் காணப்பெறும் பெயர்களை நோக்கச் சித்தர்கள் நூற்றுக்கு மேற்பட்டவராக விளங்குகின்றனர். சித்தர்கள் காலம், இடம், மதம், மொழிகளைக் கடந்தவராகக் காணப் பெறுகின்றனர்.

## சித்தரும் மருத்துவமும்

இறைவனால் படைக்கப்பெற்ற இச்சரீரத்தைக் கெடாமல் காக்கவும், குறை உண்டானவிடத்து, நிவர்த்திக்கவும் சித்தரால் படைக்கப்பெற்ற முறையே சித்த மருத்துவம் என்று கூறப்படுகிறது.[19] மேலும் இம்மருத்துவ முறையை இறைவன் உமாதேவிக்கும், உமாதேவி முருகனுக்கும், முருகன் நந்திக்கும் முறையே உபதேசிக்க, நந்தி மூலம் சித்தர்களுக்கு உரைக்கப்பெற்றது என்றும் கூறுவர்.[20] இவற்றை நோக்க, சித்தர்கள் சித்தியடைதற்கு மூலமாக விளங்கும் இவ்வுடலை அழியாமற் காத்தற்கு மருத்துவம் தேவைப்பட்ட நிலையில் தமக்கு முன்னரே இங்கு வழக்கிலிருந்த நம் தொன்மையான மருத்துவ முறையைக் கைகொண்டனர். அதன்மூலம் யோகம் முதலியன மேற்கொண்டு சித்தியடைந்த நிலையில் தமது அனுபவத்தாலும் ஞானத்தாலும் மேலும் அக்கலையைப் போற்றி வளர்த்தனர் என்பது பெறப்படுகிறது. இந்நிலையிலேயே நமது தொன்மையான மருத்துவ முறை சித்த மருத்துவமாக ஏற்றம் பெற்றது.

## சித்த மருத்துவக் கோட்பாடு

சித்தர்தம் மருத்துவ முறை வாதம், வைத்தியம், யோகம், ஞானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. உலகப் பொருட்கள் அனைத்துமே ஐம்பூதங்களால் ஆகியன என்பதும், அண்டத்தில் காணும் இவ்வைம்பூதங்களே நம் உடலாகிய பிண்டத்திலும் உள்ளன என்பதும் சித்தர் கொள்கை. இவ்வைந்தனுள் இயங்கும் ஆற்றல் கொண்ட காற்று தீ நீர் ஆகிய மூன்றும் உடற்கண் தொழிற்படும் நிலையில் வளி, அழல், ஐயம் எனும் முக்குற்றங்களாக வளர்ச்சியடைகின்றன என்பர். வளி, அழல், ஐயம் என்ற இம்மூன்று தத்துவங்களும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களை ஆற்றுகின்றன.

"வாதமாய்ப் படைத்துப் பித்த வன்னியாய்க் காத்துச்
சீத சேட்பமாய்த் துடைத்து"[21]

என்பார் தேரையர்.

மனித உடலை மூலமாக நின்று ஆளும் இம்முக்குற்றங்களும் தம்மளவில் பிறழும் நிலையிலேயே அவற்றின் மிகுதி - குறைவுகட்கேற்ப நோய்கள் உண்டாகின்றன. மனிதனுக்கு உண்டாகின்ற நோய்கள் 4448 என்பர்.

மனிதனுக்கு வந்துற்ற நோய்களைப் போக்கி அவன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் இம்மருத்துவ நெறி நான்கு கூறுகளைத் தம்மகத்தே கொண்டது. அவை, முறையே 1. வருமுன் காத்தல்; 2. வந்தபின் போக்கல்; 3. மீண்டும் வாராமல் காத்தல்; 4. சாகா நிலை தரும் காய கற்ப நெறி என்பன. இதனையே திருமூலர்,

"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனிநோய் வாரா திருப்ப
மறுப்பது சாவை மருந்தென லாகும்"[22]

என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு மனித உடலுக்கு மேற்கொள்ளப்பெறும் இம்மருத்துவ முறை தேவுறை, மக்களுரை, சூருறை என மூவகைப்படும்.[23] மூலிகைகளைக் கொண்டு இயற்றப்பெறும் முறை மக்களுறை; இரசம், பாடாணம் முதலிய தாது வர்க்கப் பொருட்களால் இயற்றப்பெறுவது தேவுறை; இவ்விரு நிலையினின்றும் வேறுபட்டு கருவி முதலியவற்றைக் கொண்டு இயற்றப்பெறும் அறுவை மருத்துவம் சூருறை. இதனையே 1. மூலிகை முறை 2. உலோகவர்க்க முறை 3. பாடாண முறை 4. உயிர்ச்சத்து முறை 5. அறுவை முறை என்று ஐவகையாக விரித்துக் கூறுதலும் உண்டு.[24]

சித்த மருத்துவத்தில் மருந்து செய்தற்குரிய அடிப்படைப் பொருட்களான மூலிகை, பாடாணம், உப்பு, உலோகம், உபரசம், காரசாரம் ஆகியன—வற்றோடு உயிரினங்களும் மருந்துப் பொருள்களாக விளங்குகின்றன. இவற்றைக் கொண்டு மருந்தியற்றும் நிலையில் மனித உடலில் அவற்றின் பயன்பாட்டு நிலை—யைக் கருதி அகமருந்து, புறமருந்து என இருவகைப்படுத்துவர். மேலும், மருந்துண்ணும்போது அதற்குத் துணையாகச் சேர்க்கப்படும் துணை மருந்தும்; அவ்வாறு மருந்துண்ணும் காலை, மருந்தின் தன்மையும், உடலின் வன்மையும் கெடாதிருக்கும் பொருட்டு உணவாதி ஒழுக்க நிலைகளில் மேற்கொள்ளப்பெறும் பத்தியமும் சித்த மருத்துவத்தில் இன்றியமையாதன.

<u>சிறப்பியல்புகள்</u>

சித்தர்தம் மருத்துவமுறை,

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"[25]

என்று திருமூலர் குறிப்பிடும் வகையில் உயிருக்கும் மருத்துவம் கூறும் சிறப்பினது; பின்விளைவுகளற்றது.

சித்தர்தம் மருத்துவ முறை அறிவியல் பூர்வமான அடிப்படையைக் கொண்டது என்பதை இன்றைய ஆராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. சான்றாக சித்தர்தம் மருந்து செய்முறையில் பின்பற்றப்படும் புடமிடும் முறை வெப்பநிலை, அழுத்தம், கிரியாஊக்கி என்ற மூன்றும் ஒருங்கே இணைந்து அமைந்த வேதி முறை என்று இன்றைய அறிவியல் உலகம் அறிந்து வியக்கின்றது.[26] மேலும், இம்மருத்துவத்தில், நோய் நாடலில் நாடி பார்க்கும் முறையும்; வாதத்தில் முப்பூவும்; மருத்துவத்தில் காயகற்பமும் சித்த மருத்துவத்திற்கு மட்டுமே உரிய சிறப்புக் கூறுகளாக விளங்குகின்றன.

சித்த மருத்துவத்தினால் தீராத நோயில்லை. பிற மருத்துவ முறைகளால் தீர்க்கப்படாத கொடிய நோய்களையும் எளிய முறையில் போக்கும் ஆற்றல் இம்மருத்துவத்திற்கு உண்டு. இவ்வாறு பல்வேறு சிறப்பியல்புகளைத் தனக்கே உரிமையாகப் பெற்று, தமிழர்தம் வரலாற்றிலேயே தோன்றி, வளர்ந்து அவ்வரலாற்றுடனேயே வாழ்ந்துவரும் தனிப்பெரும் மருத்துவ முறை சித்த மருத்துவம் ஆகும்.

# II. நூலாசிரியர்


அகத்தியர்
VKS

## II. நூலாசிரியர்

அகத்தியர் பெயரால் வாகடம், வாகடசூத்திரம், வாகடத்திரட்டு, குணவாகடம் என்றவாறு பல நூல்கள் காணப்படுகின்றன. அவ்வகையில் இக்குணவாகடம் என்ற நூலும் அகத்தியர் இயற்றியதாகவே கருதப்படுகிறது. மருத்துவச் சுவடிகளின் பட்டியலைக் கூறும் 'Siddha Medical Manuscripts in Tamil' என்ற நூல் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட இக்குறிப்பிட்ட நூலை அகத்தியர் இயற்றிய நூலாகவே குறிப்பிடுகின்றது.[21]

நூலின்கண் காணும் அகச் சான்றுகள்,

| | |
|---|---|
| திருமுனி யருளிச் செய்தார் | (9:3) |
| பொருந்தவே முனிவர் சொன்னார் | (24:4) |
| தோன்றுமென் றிருசி சொன்னார் | (25:4) |
| வையமா முனிவர் சொன்ன | (27:4) |
| அந்தமா முனிவர் சொன்ன | (57:4) |
| திருமுனி யருளிச் செய்த | (82:3) |
| வேதமா முனிவர் சொன்னார் | (99:4) |
| கூறினார் முனிவர் முன்னோர் | (107:2) |
| நிகழ்த்தினார் நம்முனியே | (257:4) |
| தெய்வமா முனிவர் | (276:4) |

என்று பொதுநிலையில் முனிவர் என்றே சுட்டுகின்றன. அகத்தியர் என்ற பெயரோ அல்லது அவருக்கே உரிய சிறப்புப் பெயர்களான 'குறுமுனி', 'பொதிகை முனி', தமிழ்முனி' என்ற அடைகளோ நூலினுள் இடம்பெறவில்லை.

எனினும் தெய்வமாமுனி, திருமுனி என்ற அடைகளும் அகத்தியருக்குப் பொருந்துவனவே. மேலும் இந்நூலுக்குக் கிடைத்துள்ள ஒருசார் ஒப்பீட்டு நூலாக அகத்தியர் இரண்டாயிரம் விளங்குகிறது.

> செப்பினர் முனிவர்தாமே[28]
>
> திருமுனி யருளிச் செய்த[29]

என்றினைய பாடல் வரிகள் அந்நூலில் இடம்பெற்று அகத்தியர்க்கு உரிய பெயர்களுள் இவையும் உரியவையாக விளங்குகின்றன. எனவே, இந்நூலின்கண் அகச்சான்றாக நூலாசிரியரின் பெயர் பற்றிய குறிப்பேதும் கிடைக்கவில்லையாயினும், புறச்சான்றுகள் மற்றும் ஒப்பீட்டு நூல் முதலியவற்றின் வழியே இந்நூலை இயற்றியவர் அகத்தியர் என்பது பெறப்படுகிறது.

## அகத்தியர்

தமிழர்தம் மரபில், எத்துறையை நோக்கினும் அத்துறையின் முன்னவராக அகத்தியரையே குறிப்பிடுதல் பெருவழக்கு. அகத்தியர் என்ற பெயர் ஒன்றே எனினும், அப்பெயரைக் கொண்டு வாழ்ந்த சான்றோர் பலர். சங்க காலத்திலேயே இரு அகத்தியர் இடம்பெறுகின்றனர். தொடர்ந்து தேவாரத் திரட்டை அருளியவர், புராணங்களில் சுட்டப்படுபவர் என்று பல அகத்தியர்கள் காணப்படுகின்றனர். வடநாட்டிலும் தென்னாட்டிலுமாக ஏறக்குறைய 37 அகத்தியர்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன.[30]

சித்த மருத்துவம், யோகம், ஞானம், தீட்சை, ரசவாதம், ஆருடம், பஞ்சபட்சி சாஸ்திரம் ஆகிய துறைகளில் நூல்கள் பல இயற்றியதாகக்

குறிப்பிடப்பெறும் அகத்தியர் பிற்காலத்தவராகக் கருதப்படுகிறார். இவ்வகத்தியர் சித்தர் பரம்பரையில் வைத்துப் போற்றப்படுகிறார். மு. அருணாசலம் இவரை கி.பி. பதினாறாம் நூற்றாண்டினராகவே கருதுகின்றார். எனினும், சித்தர்கள் காலம், இடம் கடந்தவர்கள்; சித்தர்தம் பாடல்கள் செவிவழியாகவே வாழ்ந்தவை; பின்னாளிலேயே ஏட்டு வடிவம் பெற்றவை; அன்றியும் சுவடிகளும் பழுதடையுந்தோறும் படியெடுக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பெற்று வருதல் பண்டை வழக்கென்பதால், நமக்குக் கிடைக்கும் சுவடி நூல்களின் காலத்தை அவை கிடைக்கும் காலத்தைக்கொண்டு மட்டும் முடிவு செய்தல் கூடாது. எனவே, அவரது காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதோர் காலம் என்று பொதுவாகச் சுட்டலாம். இவரைப் புராணக் கதைகள் வடநாட்டவ-ராகக் கூறினாலும், வாழிடத்தைப் பொதிகை மலையென்றே குறிப்-பிடுகின்றன. அகத்தியர் தமிழரே - தமிழ்நாட்டவரே என்று கலைக்-களஞ்சியம் சுட்டுகின்றது.[31]

# III. நூல்

## III. நூல்

### நூற்பெயர்

சுவடியின் முதல் ஏட்டிலேயே நூலின் பெயர் 'குணவாகடம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. குணம் என்பது பண்பைக் குறிக்கும்; வாகடம் என்பதற்கு, மருத்துவம் செய்யும் முறையைக் கூறும் நூல் என்று பொருள் கூறப்படுகிறது.[32] எனவே நோயின் குறிகுணங்கள், வன்மை மென்மை முதலான பண்புகளைக் கூறி அவற்றைப் போக்குதற்குரிய மருத்துவ முறைகளை விளக்குதல் இதன் இயல்பு எனலாம். நூலின் பெயர் குணவாகடம் என்பதற்கு, நூலின்கண்,

வாகடத் தியல்பு தானே (6:4)
வாகட நூல் பேசும் (67:3)
மிகுந்தோர் பேசும் வாகடத்தை (80:4)
கூறிடும் குணபா டத்தால் (5:3)

என்றவாறு அகச்சான்றுகள் உள்ளன.

### நூல் வகை

குணவாகடம் எனும் இப்பெயரிய நூலை ஆயுர்வேத நூலின் வழி வந்ததாகவே, நூற்சான்றுகள் குறிப்பிடுகின்றன. அச்சான்றுகளாவன:

பதமுறு வேத நூலின் படியெனப் பகர்ந்தார் தாமே (9:4)
அண்டர்முன் வேதம் பேசும் (39:4)
அந்தமா முனிவர் சொன்ன அவாவுறு வேதமாமே (57:4)

அண்டர் வேதம் (231:3)

அரியதோர் ஆயுர் வேதம் (432:4)

ஆயுர் வேதம் (441:3)

இவ்வாறு ஆயுர்வேதத்து நூலின் வழியே இந்நூல் உருவானதாக நூலினுள் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்நூலைச் சிவபெருமான் உரைத்ததாகக் கூறும் செய்திகளும் நூலின்கண் உள்ளன.

நாதனா ரருளிச் செய்தார் (7:3)

சொல்லுவா ருத்திரர் நாமே (32:4)

"கோட்டிளமா முலைபங்க னெங்கோ னந்தக்
கொன்றைமுடி வேதியனார் கூறி னாரே" (463:4)

மேலும் வாகடம் என்ற சொல்லே வடமொழி ஆயுர்வேத முன்னோரான வாக்படர் என்பவரின் பெயரினின்று உருவானதே என்பர்.[33] இவ்வாறு இந்நூல் பெயராலும் நூற்குறிப்பாலும் ஆயுர்வேத வகையாகவே சுட்டப்படுகிறது. ஆனால் அதே நேரம்,

"பகர்ந்தனர்முனி வருந்தமிழி னப்படியைக் கண்டாய்" (128:4)

"கலையால் வல்ல தமிழ்வாணர் கண்டே பெருகப்
பேசுவரே" (16:4)

என்ற அடிகள் இதனைத் தமிழ் நூலாகவும், தமிழறிஞர் உரைத்த முறையாகவும் சுட்டுகின்றன.

மேலும் பல பாடலடிகள் இந்நூலில் காணும் மருத்துவ முறையை,

நோிதின் னுரைத்தார் மேலோர் (1:4)
பேணிச் சொல்வார் பெரியோரே (35:4)
பீனிச மென்பார் பெரியோரே (45:4)

மூலமாம் வாயுவென முன்னோ ருரைத்தபடி
சீலமாய்க் கண்டோர் தெளிந்து (60:3)

உரைக்குமா முன்னோர் மொழி (67:4)
முன்னோர் நயந்தே உரைத்த படியாமே (215:3,4)

என்றவாறு பொதுப்பட முன்னோராகிய பெரியோர் உரைத்ததாகக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு ஆயுர்வேத முறையாகவும், தமிழர்தம் முறையாகவும் கூறும் இருவேறு நிலைகளையும் ஆராயுமிடத்து,

1. தமிழர்தம் மருத்துவ முறை தொடக்க காலத்தில் தனக்கென ஒரு பெயரின்றி விளங்கியது. இந்நிலையில், உடலுக்குற்ற நோயைப் போக்கி வாழ்வளிக்கும் மருத்துவத்தை வட இந்தியாவில் வேதமாகப் போற்றி ஆயுள் வேதம் என்று வழங்கத் தலைப்பட்டனர். மருத்துவத்திற்கு வழங்கிய இப்பெயரின் பொருத்தம் நோக்கிப் பொதுநிலையில் தமிழ் மருத்துவ முறையும் ஆயுள் வேதம் என்றே சுட்டப்பட்டது. இவ்வடிப்படையிலேயே சிலப்பதிகாரம் தமிழகத்து மருத்துவ முறையை ஆயுள் வேதம் என்றே குறிப்பிடுகிறது என்பதும் முன்னர்க் கூறப்பட்டது.

2. தமிழர்தம் மருத்துவக் கலையாகிய சித்த மருத்துவம் சிவபெருமானால் கூறப்பெற்றது என்பது மரபுவழிச் செய்தி. அவ்வகையில் இந்நூலும் சிவபெருமானால் உரைக்கப்பெற்றதாக நூற்சான்றுகள்வழி அறியப்படுகிறது.

3. வடமொழியில் வாக்படர் இயற்றிய 'அஷ்டாங்க ஹிருதய சம்ஹிதை' என்ற நூல் அவருடைய பெயரின் அடிப்படையில் 'வாகடம்' எனப்பட்டதென்பர். இப்பெயர் நாளடைவில் செல்வாக்குப் பெற்று ஆயுள் வேதத்தைக் குறிக்கும் பெயராக உயர்ந்தது.[34] இச்செல்வாக்கினால் தமிழ் மருத்துவ நூல்களும் வாகடம் என்று அழைக்கப்படலாயின. அவ்வகையிலேயே அகத்தியர் இயற்றிய மருத்துவ நூலும் 'வாகடம்' எனப் பெயர் பெற்றது.

> "இன்றுள்ள தமிழ் மருத்துவ நூல்களுள் ஆதியானது தமிழ் வாகடமேயாகும் எனக் கருத இடமுண்டு. ஆயினும் தமிழ் வாகடத்தை வடமொழி வாகடத்தின் (அஷ்டாங்க ஹிருதய சம்ஹிதை) நேர் மொழிபெயர்ப்பு எனக் கொள்வது தவறாகும்"[35]

என்பார் கூற்று தமிழர்தம் வாகட நூல் வடமொழி ஆயுர்வேதத்தினின்று மாறுபட்டது; சித்த மருத்துவத்திற்கே உரியது என்பதை உறுதி செய்கின்றது.

எனவே, ஆயுர்வேதம் என்ற பெயரும், வாகடம் என்ற பெயரும் முறையே பெயர்ப் பொதுமை நோக்கியும், தமிழகத்தில் வடமொழிச் செல்வாக்கினாலும் சித்த மருத்துவத்தில் இடம்பெற்றன. எனவே, இப்பெயர்கள் இடம்பெற்றதனால் இந்நூலை ஆயுர்வேத நூலாகக் கொள்ளுதல் ஏற்புடைத்தன்று. மேலும், சிவபெருமான் இந்நூலை அருளினார் என்ற செய்தியும், தமிழர்தம் முறையாகச் சுட்டும் பாடலடிகளும் இக்குணவாகடம் சித்த மருத்துவ நூல் என்பதற்குச் சான்று பகர்கின்றன.

மேலும், இந்நூலுக்கு ஒப்பீட்டு நூலாகக் கிடைக்கும் அகத்தியர் இரண்டாயிரத்தில் ஏறக்குறைய நூற்றைம்பது பாடல்கள் ஒருசில முழுதும்

ஒப்புமையுடையனவாகவும், பல, பாடவேறுபாடுகளைப் பெற்றனவாகவும் உள்ளன. மேலும், குறிப்பிட்ட சில பாடல்கள் இருநூல்களிலும் ஒன்று-போலவே குறைப்பாடல்களாகக் காணப்படுகின்றன.[36] இவ்வாறு இந்-நூலோடு ஒப்புமையுடைய அவ்வகத்தியர் இரண்டாயிரத்தின் அவையடக்கப் பாடல்,

"சொல்லு மாந்தர் வினைவழித் தொல்பிணி
புல்லும் வாறும் பொறுப்பவு மீளவுங்
கொல்லு நோயுங் குணமு மருந்துடன்
வல்லி கேட்க வருத்தனர் நம்பனே.

நம்ப ரம்மைக் குரைத்தனன் நந்திகொண்
டிம்ப வாகட நூலை யியம்பிடக்
கும்ப மாமுனி தான்செய்த செந்தமிழ்ச்
செம்பொ னொன்றில் பணிபல செய்வர்போல்"[37]

என்று இவ்வாகட நூலைச் சித்த மருத்துவ நூலாகவே செப்புகின்றது.

அன்றியும் நாடித் தேர்வு முறை சித்த மருத்துவத்திற்கே உரிய சிறப்பான முறை. வடமொழி வாகடத்தில் இம்முறை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், நாடி முதலான மருத்துவ நுட்பங்கள் வடமொழி வாகடத்தில் இல்லாதனவாகத் தமிழ் வாகடத்தில் இடம்பெற்-றுள்ளன என்று அகத்தியர் இரண்டாயிரத்திற்குக் கூறப்படும் கருத்து அதனோடு ஒப்புமையுள்ள இச்சுவடி நூலுக்கும் பொருந்தும்.

இவ்வாறு அகப்புறச் சான்றுகளைக் கொண்டு, நூல் பற்றி ஆராயு-மிடத்து இந்நூல் தமிழ் மருத்துவ முறையாகிய சித்த மருத்துவத்தின் பாற்-பட்டதே என்பது அங்கை நெல்லி.

அகத்தியர் இயற்றிய தமிழ் வாகடம் பெரும்பரப்பை உடைய நூல். இந்நூலின் பெரும்பாலான பகுதிகள் கால வெள்ளத்தில் கரைந்தும் குலைந்தும் போயின. இடைக்காலத்தில் தமிழர் கலைகளை ஆரிய மயமாக்கும் முயற்சி காணப்பட்டது.[38] தமிழர்தம் சித்த மருத்துவத்தையும் ஆயுர்வேதமாக மாற்ற முயற்சிகள் நிகழ்ந்தன. சித்த மருத்துவ நூல்கள் பலவற்றில் அவை வடநூல்களின் மொழிபெயர்ப்பாகக் குறிக்கப் பெற்றுள்ளமையும் ஆயுர்வேத நூல்களாகக் குறிக்கப் பெற்றுள்ளமையும் இவண் குறிப்பிடத்தக்கது. இத்தகைய சூழலில் பல பழந்தமிழ் மருத்துவ நூல்கள் அழிந்தும் உருமாறியும் போயின. பின்னாளில் இவற்றில் அழியாது எஞ்சியவற்றைத் தேடித் தொகுத்தனர். அவ்வாறு தொகுத்த நிலையில் அவரவர்க்குக் கிடைத்த பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அகத்தியர் 500, அகத்தியர் 300, அகத்தியர் 2000, அகத்தியர் 12,000 என்றவாறு தொகுத்துப் பெயரிட்டுள்ளனர்.[39] அவ்வகையில் இந்நூலும் அவ்வாகடத்தின் திரட்டு போன்றே குணவாகடம் என்ற பெயரில் தொகுக்கப்பெற்றுள்ள ஓர் தொகுப்பு நூலே. நாடி பற்றிய செய்திகள் முழுமையின்றி இருத்தலும், நோய்களும் மருந்து முறைகளும் அங்குமிங்குமாக இடம் மாறி இருத்தலும் இக்கருத்தை அரண் செய்கின்றன.

## நூல் - காலம்

அகத்தியர் இயற்றியதாகக் கூறப்பெறும் 'வாகடம்' என்ற பெருநூல் எக்காலத்தில் தோன்றியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதன் காலத்தைக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கூறுவாருளர்.[40] இவ்வாகடத்தில் காலப்போக்கில் அழிந்தவை போக எஞ்சியவற்றைப் பின்னாளிலேயே திரட்டித் தொகுத்துத் தனித்தனி நூல்களாக எழுதலாயினர். அவ்வகையில் இத்தகைய

நூல்களின் தோற்றம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்கு மேற்பட்டதாக விளங்கும். எனவே, குணவாகடம் எனும் பெயரிய இந்நூலும் ஏறக்குறைய இக்கால கட்டத்தில் தோன்றியதாகவே இருக்க வேண்டும்.

## சுவடி - காலம்

சுவடியில் இந்நூலைப் படியெடுத்த காலத்தை, இச்சுவடியின் இறுதிக் குறிப்பு,

> "குரோதன வருடம் மார்கழி மாதம் 5-ந்தேதி
> ஞாயிற்றுக் கிழமை"

என்று குறிப்பிடுகின்றது. இதன் மூலம் இச்சுவடி 1925-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 20-ந்தேதி எழுதி முடிக்கப்பெற்றது என்பது பெறப்படுகிறது.

## படியெடுத்தவர்

இந்நூலைப் படியெடுத்த ஆசிரியர், சென்சாலை என்ற ஊரைச் சார்ந்த மங்கா கவுண்டரின் மகன் தாண்டவமூர்த்தி வாத்தியார் என்பது நூல் தரும் குறிப்பு.

# IV. நூற்பொருள்

## IV. நூற்பொருள்

### நோய் - தோற்றம்

மனிதன் பிறந்த அன்றே நோயும் பிறந்துவிட்டது எனலாம். அவ்வாறே ஆயுள் முடிவில்தான் நோயும் முடிவு பெறுகிறது. மூக்குள்ளவரைச் சளி போகாது என்பது முதுமொழி.

'நொ' என்ற அடிச்சொல்லினின்றே 'நோய்' எனும் சொல் தோன்றிற்று. 'நொ' என்பதற்கு வலி, துன்பம் என்பது பொருள். 'பையுளும் சிறுமையும் நோயின் பொருள' என்பது தொல்காப்பியம்.[41] உடலில் தோன்றி, உடலின் சீரான இயக்கத்தைத் தடைப்படுத்தி, உடலை வருத்துவதே நோயாகும். இதனையே 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்று குறிப்பிடுவர். உடலின்கண் உள்ள வளி, அழல், ஐயம் என்ற வாத பித்த சிலேத்துமங்கள் மிகுதலும் குறைதலும் ஆகிய மாறுபாட்டு நிலைகளே நோய்களைத் தோற்றுவிக்கின்றன என்பார் வள்ளுவர்.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"[42]

எனும் இக்கொள்கையே நோய் தோற்றக் காரணிகளுள் அடிப்படையானது.

நோயின் தோற்றத்திற்கு மேலும் பல காரணங்களைச் சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன. அவை, பெரும்பசி, உணவு மாறுபாடு, தாகம், மிக்க சினம், மிக்க சோம்பல், உறக்கமின்மை, தட்பவெப்பச் சூழல், வெய்யிலில் நடத்தல், மழையில் நனைதல், மிகுந்த சுமை, முறையற்ற புணர்ச்சி,

மலம், சிறுநீர் - இவற்றை அடக்குதல் மற்றும் வில் வித்தை, குதிரை-யேற்றம் முதலான பயிற்சிகள் என்றற் றொடக்கத்தன. இவ்வுணவு - ஒழுக்க நிலைகளேயன்றி பெற்றோரும், முன்வினைப் பயன்களும், இம்மை-யிலேயே அறஞ் செய்யாமையும், பிறர்க்கிழைத்த தீமைகளும் இக்காரணப் பட்டியலுள் அடங்குவன.

நோயின் தோற்றம் பற்றி இந்நூல் கூறுகின்ற காரணங்களாவன (பா. 350).

1. தன்னைத் தானே சரிவரப் பேணாமை
2. உடலுக்கு உற்ற தண்டனைகள்
3. உணவை வெறுத்தொதுக்கல்
4. சரிவரக் குளிக்காதிருத்தல்
5. வளி, அழல், ஐயம் என்ற முக்குற்றங்களின் மாறுபாடுகள்
6. மலம் சிறுநீர் ஆகியன தடைபடுதல்
7. தருமத்தை இகழ்தல்

என்பன. இவ்வாறு சித்த மருத்துவம் மனிதனின் உணவு முதலான ஒழுக்க நிலைகளேயன்றி, அவனுடைய, 'உலகத்தோடு ஒழுகுந் தன்மை', 'முன்வினைப் பயன்' முதலானவற்றையும் நோய் உண்டாக்கும் காரணிகளாகக் குறிப்பிடுகின்றது.

## நோய் - நாடல்

நோய் நாடலும் மருத்துவம் செய்தலும் மருத்துவத்தின் இரு கூறுகள். பொதுவாக நோய் இன்னதென்று அறிந்த நிலையிலேயே அதற்குரிய மருந்தைத் தருதல் மருத்துவத்தின் இயல்பு. சித்த மருத்துவமோ, நோய் இன்னதென அறிவதோடு, அந்நோயின் தோற்றத்திற்குரிய மூலகாரணத்தையும் ஆய்ந்து

மருத்துவம் செய்யும் இயல்பினது. இதனால் நோயை வேரோடு களையலாம் என்பது இம்மருத்துவக் கொள்கை.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"[44]

என்பார் வள்ளுவர்.

எண்வகைத் தேர்வுகள்

சித்த மருத்துவ முறைப்படி நோய் நாடும் முறைகள் எண்வகைப்படும். நூல்கள் பல, இவ்வெட்டு என்ற எண்ணிக்கையில் ஒன்றுபடினும், முறைகளில் மாறுபடுதலின் இம்முறைகளின் எண்ணிக்கை எட்டுக்கு மேலும் விரிகின்றன. அவை, நா, நிறம், மொழி, விழி, தொடுவுணர்வு, மலம், சிறுநீர், நாடி என்பன.

இத்தேர்வு முறைகள் சிலவற்றையும் அவற்றால் நோயைத் தேரும் முறைகள் சிலவற்றையும் இந்நூல் குறிப்பிடுகின்றது. இக்குணவாகடம், நாடி தரும் தெளிவு, உடற்கண் தோன்றும் குறிகுணங்கள், விழி, முகத்தோற்றம் ஆகியவற்றை நோய்த் தேர்வு முறைகளாகக் குறிப்பிட்டாலும் இவற்றை மட்டுமே கருத்தில் கொண்டு நோயைக் கணிப்பது குருடன் கையில் சித்திரம் இருத்தல்போல் பயனற்றதாகும் என்று குறிப்பிடுகிறது (பா. 4); அவ்வாறு நாடி முதலிய-வற்றால் அறிந்தவற்றைக் குணவாகடத்தின் துணைகொண்டு ஆய்ந்து நோயைக் கணிக்கும் நிலையிலேயே அது விதி முறைப்படியான ஆய்வாக விளங்கும் என்பதை வலியுறுத்துகின்றது (பா. 5).

நாடி

எண்வகைத் தேர்வு முறைகளில் முதலாவதாகவும், முதன்மையானதாகவும் போற்றப்படுவது நாடித்தேர்வு முறை. இது சித்த மருத்துவத்திற்கே உரிய சிறப்பு முறையாகும். உலக மருத்துவ முறைகளுள் நாடி பார்த்தல் ஒரு முறையாக விளங்கினாலும், முதன்மையாகவோ நுட்பமாகவோ விளங்கவில்லை. சித்த மருத்துவத்திலோ இம்முறை உயர்வும் சிறப்பும் தெளிவும் நுட்பமும் மிக்க தொன்மையான முறையாக மட்டுமன்றி தலைமையான முறையாகவும் விளங்குகிறது. இம்மருத்துவத்தில் பிற தேர்வு முறைகளால் பெற்ற முடிவுகளையும் நாடியாய்வுடன் ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே முடிவு செய்வர். நாடியாய்வின் மூலம் நோயின் வகை - நிலைகளை மட்டுமன்றி அதன் தோற்றத்துக்குக் காரணமான முக்குற்ற மாறுபாட்டையும், அதை ஈடுசெய்தற்குரிய வழிவகைகளையும் கூறமுடியும். மேலும் நோயின் வன்மை-மென்மை, இறப்பு நிகழும் நேரம் ஆகியவற்றைக்கூட நாடி முறையால் அறுதியிட்டுக் கூறவியலும்.

நாடி என்பது விளக்குதற்கியலா, நுட்பமான ஒன்று.

"நாடியென்றால் நாடியல்ல நரம்பில் தானே
நலமாகத் துடிக்கின்ற துடிதானு மல்ல
நாடியென்றால் எழுபத்தீ ராயிரமு மல்ல
நாடியென்றால் வாதபித்த சிலேற்பனமு மல்ல
நாடியென்றால் அண்டபகி ரண்ட மெல்லாம்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடு வாரே"[45]

என்ற பாடல் இதனை உணர்த்தும். பொதுவாகக் கூறுமிடத்து, இவ்வண்டம் முழுதும் பரந்தும் அணுவுக்குள் அணுவாகக் கரந்தும் உறைகின்ற பேரறிவுப்

பொருளான - இவ்வுடலுக்குள் உயிராக இயங்கும் ஆன்மாவின் இயக்கமே 'நாடி' ஆகும். உயிரின் இயக்கமாகிய இந்நாடி உடல் முழுதும் செயல்படுகிறது.

நம் உடலில் உள்ள நாடிகளின் எண்ணிக்கை எழுபத்திரண்டாயிரம் என்பர். எனினும், இவற்றுள் குறிப்பிடத்தக்கன பத்து நாடிகளே. உடலில் பத்து இடங்களில் இரத்தக் குழாய்களின் இரத்த அழுத்தத்தில் இவை வெளிப்படுகின்றன. இப்பத்து இடங்களுள்ளும், எளிதாகப் பார்ப்பதற்கு ஏற்ற இடமாக விளங்குவது கை. உள்ளங்கையின் சற்றுக் கீழே மணிக்கட்டினின் சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் தொட்டும் அழுத்தியும் விட்டும் மாறிமாறிப் பார்க்குமிடத்து அம்மூவிரல்களின் வழியே வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றின் நிலைகளையும் அறியலாம். இவ்வாறு ஆராய்தற்கு ஆண்களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடது கையும் ஏற்றது.

"கரிமுக னடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கப்
பெருவிர லங்கு லத்தில் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாதம் உயர்நடு விரலில் பித்தம்
திருவிரல் மூன்றி லோடில் சேத்தும நாடி யாமே"[46]

என்று நாடி யாராயும் முறையை கூறப்படுகிறது.

நாடி பற்றி இந்நூல்கள் சில செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை:

1. நோய் நாடும் தேர்வு முறைகளில் நாடியே முதலிடம் வைத்துக் கூறப்படுகின்றது (பா. 4, 5).

2. நமது உடலில் உள்ள முக்குற்றங்களை நாடி மூலம் அறியுமிடத்து, அவ்வக் குற்றங்கள் இயல்பாகவே மிகுகின்ற காலத்தை அறிந்திருத்தல்

இன்றியமையாதது. அவ்வகையில், ஒரு நாளை, பகல் இரவு என இருகூறாகப் பிரித்து, ஒவ்வொரு கூறினையும் முறையே மூன்றாகப் பகுக்க, பப்பத்து நாழிகைகளாய் அப்பிரிவு அமையும். அவற்றுள் பகற்பொழுதில், முறையே காலையில் பத்து நாழிகை அழல், மிக்கு நடக்கும்; நண்பகல் காலமான பத்து நாழிகை ஐயம் மிக்கு நடக்கும்; மாலையில் பத்து நாழிகை வளி மிக்கு நடக்கும். அவ்வாறே இரவுப் பொழுதிலும் முதல் பத்து நாழிகை பித்தத்திற்குரியது; இடைப்பத்து நாழிகை ஐயத்திற்குரியது; கடைப்பத்து நாழிகை வளிக்குரியது (பா.297).

3. வளி, அழல், ஐய நாடிகளில் ஏற்றத் தாழ்வுகளினால் நோயின் குணங்களை ஆராய்ந்தவிடத்து, அம்முடிவை, நோயாளியின் குணம், வயது, உடல்நலம், வரட்சிநிலை, சுக்கிலத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆராய்ந்து கூறவேண்டும் (பா. 3).

நா
--

நோயுற்றவரின் நாக்கில் தோன்றும், நிறம் மற்றும் சுவை மாறுபாடுகளைக் கொண்டு நோயறியும் முறை நா வழி நோய்நாடல் முறையாகும். இத்தேர்வு நிலையில், இயல்பாகவே நாக்கில் ஏற்படும், நிற மாறுபாடுகளும் சுவை மாறுபாடுகளும் நோயறியும் காரணிகளாக விளங்குகின்றன. சான்றாக நாக்குக் கறுத்து காணப்படில் வளி; சிவந்து காணின் அழல்; வெண்மை படிந்து காணின் ஐயம். அவ்வாறே, நாக்கில் புளிப்புத் தோன்றின் வளி; கசந்து காணின் அழல்; இனிப்புற்றதெனில் ஐயம். இவ்வாறு இயல்பாகவன்றி மருந்து முதலியவற்றால் நாக்கில் நேரும் மாறுபாட்டை ஆய்ந்தறிதலும் உண்டு.

மருந்துகளை அருந்தச்செய்து அவற்றின் வழி நாக்கில் நேரும் நிறம் மற்றும் சுவை மாறுபாடுகளைக் கொண்டு நோயறியும் முறை இந்நூற்கள் இடம்பெற்றுள்ளது. அவையாவன:

1. ஒருவர் சூனிய நோய்க்கு உட்பட்டுள்ளாரா என அறிய, பிராய்மரத்தின் வடக்கு வேரை, வெட்டி எடுத்து, அரிசியுடன் பொரித்துத் தவிடாகப் பொடித்து அருந்தச் செய்ய வேண்டும். இம்-மருந்து இனித்ததெனில் சூனியம் உள்ளது என்று அறியலாம். அன்றேல் கைப்புச் சுவையே நாக்கில் தோன்றும் (பா. 90).

2. இராக்கிடந்ததை உரைத்து நாக்கில் தடவ கருத்துத் தோன்றில் சந்நி நோய்; அன்றேல் அந்நோயல்ல (314).

நீர்க்குறி

நோயாளரின் சிறுநீரின் நிறம், அளவு, நுரை, சிறுநீர் கழிக்கும்-போது உண்டாகும் உணர்வுகள் ஆகியவைவற்றோடு, சிறுநீரில் எண்ணெயை விட்டு அவ்வெண்ணெய் காட்டும் வடிவைக் கொண்டும் நோயறிவர். இவ்வாறு சிறுநீரில் எண்ணெய் விட்டு, ஆராயும் முறை நெய்க்குறி என்றும் கூறப்படும். எனினும் இவ்வாய்வு சிறுநீரையே அடிப்படையாகக் கொள்ளுதலின் இதனை நீர்க்குறியிலேயே கூறுதல் பிழையன்று.

பிரமேக நோய் எனப்படும் நீரிழிவு நோய் பற்றிக் கூறுமிடத்து இச்சிறுநீர்க்குறி ஆய்வு முறையை இந்நூல் குறிப்பிடுகின்றது.

சான்றாக,

சிறுநீரை ஒரு பாத்திரத்தில் இட்டு, அதில் எண்ணெய் சிறிது விட, அவ்வெண்ணெயின் வடிவம் வட்டமாகத் தோன்றில் ஐயம் பற்றிய நீரிழிவாகும்; வட்டமல்லாத வடிவமெனில் அழல் பற்றிய நீரிழிவாகும். முனை, இறைச்சி, சுக்கிலம், நீண்ட இலை இவை போன்ற தெளிவில்லா வடிவங்களைக் காட்டுமாயின் வளி சார்ந்த நீரிழிவாகும் (பா.418-419).

## மரணக்குறி

மருத்துவர் நோயை ஆராயும் நிலையில் அவற்றின் வன்மை மென்மைகளையும் ஆராய்ந்து அறிவர். அவற்றின்மூலம் ஒருவற்கு வந்துற்ற நோயைத் தீர்க்க இயலும் நிலையும், தீர்க்கவியலா நிலையும், மரணம் நேரிடும் நிலையும் புலப்படும். அவ்வகையில் நோய் நாடும் நிலையில் அறியப்படும் மரணக்குறிகளாக இந்நூற்கண் சில கூறப்பட்டுள்ளன.

1. நெஞ்சும் உடம்பும் வற்றி நரம்புகள் புடைத்துக் காணும்; கண்கள், நாக்கு, உடல் ஆகியன பஞ்சுபோல் வெளுத்திருக்கும்; அண்டம் வீங்கி, மலச்சிக்கல் ஏற்படும். இவ்வாறு காணின் மரணம் நேரும் (32).

2. நாடி முதலான நோயறியும் முறைகளின் வழியே பெறப்படும் குறிகுணங்களில் நோயின் குறிகுணங்கள் மிகுந்து தோன்றும். ஆனால் முக்குற்றங்கள் சற்று மாறுபடுமேயன்றி மிகுதியாகத் தம்மளவில் மிகாது. இவ்வாறிருப்பின் மருந்து முதலியவற்றால் நோய் தீர்க்கவியலும். ஆனால், இதற்கு மாறாக, முக்குற்றங்களும் தம் நிலையினின்று மிகு, நிலைபிறழ்ந்து, குறிகள் குறைந்து கண்டால் மரணம் வருவது உறுதி (33).

3. இடை, தொடைகள், மார்பின் கீழ்ப்பகுதி ஆகிய இடங்களில் வீக்கம் உண்டாதல்; வளி முதலா முக்குற்றங்களில் இரண்டு அடங்கி ஒன்று மட்டுமே காணுதல்; நீர்போல் வயிறு கழிதல்; கண்கள் பஞ்சடைதல் ஆகிய இக்குறிகள் அனைத்தும் காணின் மரணம் விளையும் (93).

4. மலசலங்கள் இறங்காமல் வற்றிப்போதல்; கண்கள், மூக்கு, செவி, நாக்கு ஆகிய உறுப்புகள் தம் செயல் குன்றுதல் எனும் இவை தோன்றின் மரணம் உண்டாகும்.

5. பிறவை நோயின்கண் அழற்சி, துன்பம், சுரங்கள், நாவரட்சி ஆகியன உண்டாகி அத்துடன் தூக்கமும் மிகும்; அம்மாவாசையானால் துன்பம் மிகும். இவ்வாறு குறிகள் காணப்பட்டால் மரணம் நிகழும். (108)

6. மேலும், வளி, அழல், ஐயம் ஆகியன மந்தப்பட்டு உடலோடு பகைத்தவழி உடல் நாள்தோறும் அழியும், கொடிய வெப்பு வியாதிகள் உண்டாகும் (82).

மேலும், வருணவாதம் (9,10), பித்தக் கொதிப்பு (322,323), குதிரைவலிவாதம் (133), நடுக்குவாத சன்னி (68), விப்புருதி நோய் (116,117), வாதவகை நீரிழிவு நோய்கள் (424-427), சலப்பிரமியம் (266,267), சூசி கா வாயு (146) ஆகிய நோய்களும் மரணத்தை விளைவிக்கும் நோய்கள் ஆம்.

## நோய்கள்

நோய்கள் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு என்பது முன்னர்க் கூறப்பட்டது. இந்நோய்கள் பல வகையின. ஒவ்வொரு வகையும் தன்னுள்

பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. நோய்களின் குணங்களை விளக்கும் வகையில் சில நோய்கள் இந்நூற்கண் கூறப்பட்டுள்ளன.

இந்நூற்கண் கூறப்பட்டுள்ள நோய்களாவன:

வாத நோய்கள், பித்த நோய்கள், சிலேத்தும நோய்கள், புறவீச்சு, இரத்த ரோகம், தண்ணீருழலை, தலைநோய்கள், இருமல் நோய்கள், காச நோய்கள், காமாலை, சுரம், சன்னி நோய்கள், சூலை நோய்கள், குன்ம நோய்கள், வயிற்று நோய்கள், கிராணி நோய்கள், விப்புருதி நோய், பாண்டு, மூலம், நீரிழிவு, பிரமியம், அபத்திய தோடம், மகளிர் நோய்கள், குழந்தை நோய்கள், கரப்பான், புண், பிளவை என்பன.

## வாத நோய்கள்

### வாத குணம் (62)

வாயுவானது உடல், தலை, நெஞ்சு, கைகால் சந்துகள் ஆகிய இடங்களில் ஓடி உளைச்சலுடன் குத்தும், கால் கைகளில் பலமிராது. மேனி வாடும். நாவும் பல்லும் வரண்டுவிடும். இவை வாதம் செய்யும் குணங்களாகும்.

### வாத நோய் வகை (6)

வாத நோய்கள் எண்பது வகையின. அவற்றுள் நாற்பது வகை இடுப்புக்குக் கீழும், நாற்பது நோய்கள் இடுப்புக்கு மேலும் தோன்றுவன.

## உள்குத்து வாதம் (35)

வியர்வை பெருகி, உடல் விரைத்திடும். பல் கிட்டி, உடல் வெதும்பும். நாக்குத் தடுமாறும். வயிற்றில் பசி மிக்கு உணவைத் தேடும், ஆனால் உண்ணவொட்டாது. வாயு கீழ்நோக்கிப் பாயும். மூலத்தில் குத்தும். இத்தகு குறிகள் காணின் உள்குத்து வாதமாம்.

## குடல் வாதம் (36, 37)

வாயுவானது உடல் முழுதும் ஓடி, கால் கைச் சந்துகள் மற்றும் மூட்டுகளில் சென்று பின் குடலிடையே சத்தமுடன் குமுறும். பின்னர் கடலில் அலை போன்று, குடலில் வாயுவானது கலக்கி நிற்கும். குடலில் வலி தோன்றும். கால்களில் உளைச்சல் உண்டாகும். வயிற்றில் வலி-யுடன் மந்திக்கும். குடலில் தங்கி நின்று ஆங்காங்கே ஓடிச்சென்று கலக்கி வேதனை செய்யும்.

## குண்டல வாயு (77)

வயிற்றில் நின்று துடிக்கும்; இரையும். உணவு உட்கொண்டால் வயிற்றில் கல்போல உருண்டு துன்புறுத்தும். பின்னர் அவ்வாயு சிதறி உடலில் பரந்து அடங்கும்.

## சருவாங்கி வாதம் (78)

உடல் கடுப்புடன் உளைவதோடு, கனத்து வேதனை செய்யும். வாயுவானது உடல் முழுதும் பரந்து நின்று துன்புறுத்தும். இதுவே சருவாங்கி வாதமாகும்.

## புண்டுக்கு வாதம் (66)

உடலை நடுங்கச் செய்யும். தலைச்சுற்றல் உண்டாக்கும். நா-வறட்சியும், அழற்சியும் ஏற்படும். உடம்பு கிடுகிடுவென ஆடி கீழே தள்ளும்.

## மூல வாயு (60)

மலம் இறுகிக் கருகும். வயிறு மந்திக்கும். மேனி வெளுக்கும். வயிற்றில் இரைச்சல் உண்டாகும். இவை மூல வாயுவின் குறிகுணங்கள்.

## துடிப்பு வாதம் (65)

உடல் முழுதும் ஓடி, துடிப்புறச் செய்யும், வாயு மேல் நோக்கும். பின்னர் தானே ஓரிடத்தில் நிலைபெற்று பின் உடல்நிலையைச் சமப்படுத்தும்.

## வருண வாதம் (9, 10)

வயிறு வீங்குதல், மயக்கம் உண்டாதல், வாந்தி ஏற்படுதல், உள்-மூச்சு வாங்குதல், உதடு கருத்தல், கழுத்து வலித்தல் ஆகியன கண்டால் வருண வாதம் ஆகும். இவ்வருண வாதம் உண்டானால் மேல்மூச்சு மிகுந்து நாக்கு வறளும். முகமும் வாயும் கோணும்; பேச்சுத் திணறி வியர்வை பெருகும். உடலில் எரிச்சல், அழற்சி முதலியன உண்டாகும். சுரம் தோன்றி, புறந்தாள் வீங்கும். இத்தகைய மாறுபாடுகள் மரணத்தை விளைவிக்கும்.

வாத கோபம் (24)

வளியாகிய குற்றம் விரைந்து நடத்தலினால் வாயுவானது மேலெழும்பிப் பின் மீளும். இவ்வாயுவே இருமலாகித் தொடர்ந்து சன்னி வாதத்தைத் தோற்றுவிக்கும்; உடலை மாறுபடுத்துகின்ற கிராணி, பெருவயிறு, உதரகோபம் முதலான நோய்கள் இவ்வாத கோபத்தால் உண்டாகும்.

விண்டலத்தறாமை வாயு (41)

வயிற்றினிடத்தே மண்டி நின்று மூலாக்கினியை மறைக்கும். உணவைக் குழப்பித் தள்ளும். உண்டபின் புளித்தேப்பம் உண்டாகும். உடனுக்குடன் மலத்தை இளக்கித் தள்ளும். இதுவே விண்டலத்தறாமை வாயு ஆம்.

பீலிகை வாயு (42)

வாயுவானது மலத்தை இறுகச் செய்து மந்தத்தை உண்டாக்கும். வயிற்றில் வலிமையாகப் புரளும். உடல் பலத்தைக் குறைத்து ஈரல் முதலியவற்றை வீங்கச் செய்து மிகுதியாகத் திரளும். உடல் வறளும். உணவு கொள்ளவொட்டாது. எக்காளமிட்டு ஏப்பமுண்டாக்கும். இதுவே பீலிகை வாயுவாம்.

அந்தர வாயுக் குணம் (40)

பத்தியமாக உணவு கொள்ளும்போது அது சீரணிக்காமல் கழிச்சல் ஏற்பட்டு, தினமும் புளித்தேப்பம் உண்டாகும். வாயில் நீர் சுரக்கும். வாந்தி உண்டாகும்.

பித்த நோய்கள்

## பித்த நோய்க்குணம் (185)

உடலில் நடுக்கமேற்படும். தலை வலிக்கும். மேனி வெளுக்கும். தூக்கம் உண்டாகும். துன்பமுடன் கிறுகிறுப்பு ஏற்பட்டு, கண்கள் மஞ்சள் நிறமடையும். கை கால்களில் திமிர்ப்பு உண்டாகி, கண்ணும் முகமும் வீங்கிக் காணும். உடலில் அனல் ஏறும். இவ்வாறாகக் காணில் பித்த நோய் ஆகும்.

## வறட்சிப் பித்தம் (235)

தலை வலித்தல், உடம்பு உலர்தல், தாது கெடுதல், துயிப மிகுதி, மலங்கழிதல், மனமும் கண்ணும் சோர்ந்து காணல், மந்தம் உண்டாதல், மனம் உறுதி கெட்டு, மறதியுடன் கலக்கம் ஏற்படல், உடல் கனத்தல் ஆகியன காணின் வறட்சிப் பித்தமாம்.

## பித்தக் கொதிப்பு (21, 322, 323)

பித்தத்தாலும் வறட்சியாலும் உடலின் மேற்புறம் வீங்கித் தோன்றும். மூலத்தில் சூலை தோன்றினாற் போன்று உதிர குன்மம் தோன்றி, அதனால் குடல் வாதம், வெப்பு, நடுக்கம் ஆகியன இடைவிடாது உண்டாகும். பித்தத்தில் வெப்பம் கடி, தலை அழற்சியுடன் வாந்தியும், வயிறு வீக்கமும் கழிச்சலும் உண்டாகும். அகத்தே எரித்து, சுரமும் ஏற்படும். வாய் கசந்து உடலில் பித்த எரிச்சல் உண்டாகும். நெஞ்சில் மிகுதியாக எரிச்சல் உண்டாகும். கண், நா, உடல் ஆகியன வெளுக்கும். மலம் தீயும். உயிரையும் குடிக்கும்.

சிலேத்தும நோய்கள் (25)

ஐயம் மிகுகின்றபோது அனைத்துமே அழிவுறும். மாந்தம், ஈளை, நடுக்கல், குளிர், வாந்தி, விக்கல், மூச்சடைப்பு, காசநோய், இளைப்பு முதலானவை தோன்றும்.

அபிகா சிலேத்துமம் (28)

இருமலும் இளைப்பும் உண்டாகி, ஈளை மிக்கு, வயிறு மந்தித்து உடம்பு வற்றி, உடலின் வலிமை கெடுமானால் அபிகா சிலேத்துமமாகும்.

பீனிசக் குணம் (45)

தலை வலிக்கும். மூக்கில் சளி விழும். நாள் சென்றபின் சளி வறண்டு இறுகித் திரண்டு விழும். உள்ளேயே உளைந்து நாற்றம் மிகும். பலம் குறைந்து மூச்சடைக்கும். இதுவே பீனிசம் ஆகும்.

பீனிசம் – கபால வறட்சி (46)

தலை கனத்து, சளி இறுகித் திரண்டு மூக்கில் விழும். தாகம் மிகும்.

மூக்கு நீர்ப் பாய்ச்சல் (174, 190)

கழுத்து, முகம், தாடை, ஆகிய பகுதிகளில் கரகரப்புடன் ஊர்வது போல் அரிப்பும், தினவும் ஏற்படும். தும்மும்போது மூக்கில் நீர் விழுந்து, தலை கனத்து வலிக்கும். வாதம் மிக்கு எழும். இக்குறிகள் கண்டால் மூக்கு நீர்ப் பாய்ச்சல் ஆகும்.

கழுத்தின் மேற்பகுதியிலும், முழந்தாள், காது ஆகிய பகுதிகளிலும் கரகரத்து ஊர்வது போல், தினவுண்டாகி, வலி மிகுமாயின் மூக்கு நீர்ப்-பாய்ச்சல் ஆகும்.

புறவீச்சு (47, 48, 242)

பிடரியில் அடிக்கடி குத்தும். உடல் விரைத்து வியர்வை மிகும். நாத் தடுமாறும். பல் கட்டும். நெஞ்சில் கட்டு உண்டாகி உடல் வீழும். பத்தியமாக உண்டாலும் உணவை விரைந்து வெளியே தள்ளும். மலச்சிக்கல் உண்டாகும். உடல் மயங்கும். தலை கனக்கும். உடலில் திமிர்ப்பேறும். விடம் உண்டாற் போன்று ஈரல் நாளும் எரியும். இதனையே புறவீச்சு எனலாம்.

இரத்த ரோகம் (143)

இரத்தம் அதிகமாகக் கட்டிக் கொள்ளும். உடல் உறுதி கெடும். துயரம் மிகும். தலை கனக்கும். இரத்தம் சிக்கி நிற்கும். இதனை இரத்த ரோகம் என்பர்.

தண்ணீர் உழலை (383)

உழலை, எரிச்சல், பரிதாபம் இவற்றால் உள்ளத் துணிவு நீங்கி, அழல் மிகும். நாக்கு வறளும், சுரம் தோன்றும், உடல், தலை, கால் பகுதிகள் வீங்கி உளைச்சல் உண்டாக்கும். நினைவு தப்பும். இவை தண்ணீர் உழலையின் குணங்கள் ஆகும்.

தலை நோய்கள்

கபால வியாதி (51)

கழுத்திற்கு மேற்புறம் மண்டை வறட்சியடையும். புருவங்கள் கடு-மிடத்தில் குத்துவலி ஏற்படும். வேதனை மிகும். கண்கள் வலையினால் மறைக்கப்பட்டாற் போன்று பார்வை தடைபடும். தலை முழுதும் பரபர-வென்று குத்தும்.

## கபால வலி (61)

தலையில் வாயு ஓடி ஓடிக் குத்தும். இக்குத்துவலி இடைவிடாது நிகழும். உடல் வாடி உலரும். குத்துவலியால் உடல் பதறும். புணர்ச்சியை விரும்பாது. சிறுநீர் கருகிக் காணும். கபாலத்தில் கனத்து வலிக்கும்.

## கபாலக் குத்து (86)

புருவம் கூடுமிடத்தில் குத்துவலி ஏற்பட்டு, உச்சியில் ஓடி, தலை முழுதும் வேதனை செய்யும்.

## சத்திக் கபாலம் (87)

உலகம் விரைந்து சுழல்வது போலக் கிறுகிறுத்து மயக்கமுண்டாகும். தலையில் குத்துவலி மிகும். வாந்தி உண்டாகி மயக்கம் தோன்றும். பின் வலி அடங்கும்.

## இருமல் நோய்கள்

## வறட்சியிருமல் (80)

உடலில் வறட்சி மிக்கு, இருமல் புகைந்து வெளிப்படும். தாதுவில் கிரந்தி பற்றிச் செருமல் உண்டாகும். மூச்சு இரைக்கும். மேனி வறட்சி, இளைப்பு முதலியவற்றால் இவ்விருமல் தோன்றும்.

## மருந்திட்டிருமல் (81)

பெண்டிரிடத்து மயக்கங் கொள்ளுதற் பொருட்டு வைக்கப்பெற்ற மருந்திட்டினால் உண்டாகும் இருமலானது புலால் நாற்றத்தோடு காணும்.

உடலில் அழிவை ஏற்படுத்தும். பைத்தியம் உண்டாக்கும். உணவு செரியாது. ஏப்பம் பெருகும். நச்சுக்கடி போன்ற வலி மிகும். ஈளையும் இருமலும் மயங்கிக் காணும்.

## காச நோய்கள்

### காச நோய் குணம் (43, 171)

இருமல் மிகுதியாகத் தோன்றும். இடையிடையே சுரம் உண்டாகும். தொண்டைக் கட்டு ஏற்படும். வாந்தி வரும். உணவை ஒறுக்கும். உடல் இளைக்கும். விண்ணில் ஆழ்வது போலத் தலை சுழற்றும். துயரம் மிகும். மேனி வெளுத்து வற்றும். உடம்பெங்கும் திமிர் உண்டாகும். கண்கள் மஞ்சளாகி முகம் வெளுக்கும். வேலை செய்தால் மூச்சு வாங்கும்; துன்பமுண்டாகும். தாது கெட்டுப்போகும். இவை காச நோயின் குறிகளாகும்.

### பக்க மந்தார காசம் (194)

நீர்ப் பாய்ச்சலுடன் இருமலும் இளைப்பும் கூடி, நெஞ்சிடத்தே கட்டிக்கொண்டு சீறுதல், வயிறு பெருத்துப் பொருமுதல் ஆகியன பக்க மந்தார காசத்தின் குணங்கள் ஆம்.

### மந்தார காசம் (27, 173)

தும்மல் மிக்கு, மூக்கில் நீர் மிகும். நெஞ்சு வலித்து ஈளை உண்டாகும். கழுத்து, முகம், காது, உடல் ஆகிய பகுதிகளில் பொருமல் ஏற்படுதல், மூக்கிலும் காலிலும் ஊர்வது போன்ற அரிப்புத் தன்மையும், இருமல் மிகுதியும் உண்டாதல் ஆகியன இதன் குறிகளாம்.

## காமாலை (12)

முகம் வீங்கி, கண் வெளுக்கும். நடந்தால் மூச்சு வாங்கும். இதயம் மிருதியாகத் துடித்து, நாவறளும். தாது கெட்டிருக்கும். உணவை வெறுக்கும். மேனியும் வறண்டு வெளுக்கும். இவை காமாலை செய்யும் குணங்கள் ஆகும்.

## சுர நோய்கள்

### உட்சுரம் (258)

உடல் வற்றி வெதுப்பேறும். பித்த மயக்கும் வீக்கமும் உண்டாகும். தலை வலிக்கும். இரவு பகலில்லாமல் உடல் காயும். ஒல்லியான தென்னை மரம் போன்று உடல் மெலியும். இதுவே உட்சுரம் ஆம்.

### வாத சுரம் (386-387)

உடல் குளிரும். பயம் தோன்றும். குளிர்ச்சி மிகுந்து திடுக்கிடும், மயிர்க்கால்கள் சிலிர்ப்பேறும். தலைவலி, தொப்பூழ் கடுக்கும். பாதங்கள் உளையும். நீர் குடிக்காதிருக்கும். வெப்பம் பல நாட்கள் தொடரும். கால், கை, கீழ்முதுகு, விலாக்கள் ஆகிய பகுதிகளில் தொட்டாலும் புண் போல வலிக்கும். கண்களில் மருட்சி தோன்றும். தூக்கம் மிகும். உணவைக் கொள்ளவொட்டாது. இது வாத சுரமாகும்.

### விடாச்சுரம் (346)

தலை, பிடரி, முதுகு, கைகால், விலாக்கள், நெஞ்சு ஆகிய பகுதி-களில் புண்போல வலிக்கும், குத்திருமல் உண்டாகும். கழிச்சலோடு, நாக்கு, உடம்பு ஆகிய பகுதிகள் புண்ணாகிக் காணும். இது விடாச்சுரம் ஆம்.

விடச்சுரம் (367, 368)

உடலில் ஓரிடத்தில் குளிரும். மற்றோரிடத்தில் காயும். உணவை மிகுதியாக உண்ணத் தோன்றும். ஆனால் உண்ண விடாது. காய்ச்சல் அதிகமாக விரைந்து உடலில் ஏறும். உடம்பில் காய்ச்சல் ஒருசில இடங்களில் விடம்போல ஏறும். கால் குளிர்ந்து காணும். உடல் நடுங்கும்.

சன்னிவாத நோய்கள்

கபால சன்னி (52)

நரம்பு புடைக்கும். வலி மிகும். தலையிலும் காலிலும் குத்துவலி-யுண்டாகும்; நடக்கவியலாது. அறிவை மயக்கும். உடல் திமிர்த்து நிற்கும். இவை கபால சன்னியின் குணங்களாகும்.

குதிரைவலி வாதம் (133)

சன்னி வாதத்துள் ஒன்று. கண்கள் தலை ஆகிய பகுதிகளில் வலி மிகுதல், கை கால்கள் ஒருபக்கமாக இழுத்தல், வாயில் நுரை தள்ளுதல், அதிகமாக வலித்தல், கண் விழிகள் மேல் நோக்கி நிற்றல். இவை இந்-நோயின் குறிகள். இக்குறிகள் கண்டால் மரணம் உறுதி.

மகா சன்னி (63, 67)

உடலின் ஒருபக்கத்தில் கையும், காலும் மதமதப்புடன் மரண வேதனை செய்யும். உடல் முற்றிலுமாக மெலிந்து வெதும்பி வாடும். நாத் தடுமாறும். மயக்கத்தை உண்டாக்கி அறிவையழிக்கும். உடலில் நீர் மிகுந்தாற்போல் வீங்கும். விரைப்பேறும். இவை மகா சன்னியில் காணும் குறிகள் ஆம்.

முகவாத சன்னி (49)

கண், தலை, புருவம், காது, செவுள் ஆகிய பகுதிகளில் குத்துவலி ஏற்படும். உடல் பதைக்கும். முகம் கோணும்.

நடுக்குவாத சன்னி (68)

உடலில் நடுக்கத்தை ஏற்படுத்தும். தலைச்சுற்றலை உண்டாக்கும். நாக்குத் தடுமாறும். கடுப்புடன் உளைச்சலும் நேரும். இது நடுக்குவாத சன்னியாகும். இது நாள்தோறும் தொடரும். இந்நோய் தோன்றின் உயிர் மீளாது என்பர்.

வாத சன்னி (347)

உணவை வெறுப்பிக்கும். உள்ளத்தில் வருத்தம் தரும். பைத்தியம் போன்று பலவாறு பிதற்றச் செய்யும். தொண்டையைச் சுழற்றும். அறிவு தடுமாறும். இவை வாத சன்னியின் குணங்களாகும்.

சூலை நோய்கள்

கற்சூலை (34)

கீழ்வயிற்றுப் பகுதியில் வளையம் போலத் திரண்டு வலி ஏற்பட்டு வயிறு முழுதும் பரந்து பொருமும். தொப்பூழின் கீழ்ப்பகுதியில் அவ்வளையத் திரட்சியால் வலி உண்டாகும். முதுகில் வலியுடன் வருத்தம் மிகும். இது வாதம் பற்றிய கற்சூலை குணமாகும்.

குன்ம சூலை (75)

வயிற்றின் மேற்புறத்தில் வலி மிகுந்து எரிச்சல் ஏற்படும். வாயில் நீரூறும். இடைவிடாது ஏப்பம் உண்டாகும். குளிருடன் உட்காய்ச்சல் தோன்றும். இதுவே குன்மசூலை எனப்படும்.

சுரச் சூலை (74, 230, 231)

பக்கச்சூலை தோன்றிடில், வயிற்றில் பல வேதனைகளைச் செய்யும். சுரம் தோன்றும். உளைச்சல் உண்டாகும். சுரத்துடன் கூடி, அடிவயிறு திரண்டு கனத்துப் புரட்டும். வாயில் நீரூறும். நெஞ்சு எரிந்து வாந்தி உண்டாகும். உணவை வெறுக்கும். வயிறு புரட்டிப் பின் வெப்பம் தணியும். இதுவே சுரச்சூலை ஆகும்.

பக்கச் சூலை (165, 166)

குடலில் வாயு தங்கி, அதனால் குடலானது விரையில் இறங்கித் தொங்கும். அதன் காரணமாக, மற்றொரு விரை மேலேறி உள்-வாங்கும். இதனை அண்டவாதம் பற்றிய அழற்சி என்பர்.

ஒரு மண்டலத்திற்குள் விரையில் வீக்கம் ஏற்படும். வலி மிகுதியால் சுரம் தோன்றும். வலியிடத்தில் புண் போன்று உளைச்சல் ஏற்பட்டு அதனுடன் தலைவலியும் உண்டாகும். இவை பக்கச்சூலையைத் தொடர்ந்து தோன்றும் குணங்களாம்.

லிங்கச் சூலை (396-398)

பிரமியம் தோன்றி நெடுநாளான நிலையில் நீர்த்தடை மிக்கு லிங்கச்-சூலை தோன்றும். குறியில் கடுக்கும். அதனுள்ளே புண்போலக் குத்தும்.

குறியின் மேற்புறம் தளர்ச்சியுடன் பிறவிப் பிணிபோல நடுங்கும். குறியினின்று நீரானது மலம்போலக் கெட்டியாக ஒழுகும். அவ்வாறு ஒழுகும்போது வேதனை குறைவது போலத் தோன்றும். பின்னர் மிகும். குறி எழும், விழும். இவ்வாறு இன்னும் பல வேதனைகள் செய்யும்.

வாய்ச்சூலை (22)

உடல் வற்றி, கடுப்பு உண்டாகும். கைகால்கள் உளையும்; களைத்து உருண்டு காணும். நோய் மிகுந்து உடம்பு நொந்திருக்கும். பார்வையும் தாதுவும் கெட்டிருக்கும். சேய் அன்ன சிறந்த நடை நீங்கிக் கிழ நடை போலாகும். இதனையே வாய்ச்சூலை என்பர்.

அத்திச் சூலை (23)

எலும்பில் காய்ச்சல் பற்றி, காதிரைச்சல், மந்தம், உடல் குளிர்தல், பித்த சோகை, பாண்டுவுடன் கடிய கபால குன்மம் ஆகியன உண்டாகும். வாயிடத்தே கசப்பைத் தோற்றுவிக்கும். இதனைப் பித்தவாதம் என்றும் கூறுவர்.

குன்ம நோய்கள்

வாத குன்மம் (38, 57, 141, 292)

ஈரல், நெஞ்சு, வயிறு ஆகிய உறுப்புகளில் எரிச்சல் உண்டாகும். துடைச்சந்து, கால், உந்தி ஆகிய இடங்கள் வறளும். உடலுறுப்புகள் யாவும் உளைவுற்று வருந்தும். தலை கனக்கும். குடல் வலிக்கும். மேல்வயிற்றில் தளரும். கீழ்வயிறு கனக்கும். வெப்பமிகும். உடலில் திமிர்ப்பேறும்.

வாந்தி உண்டாகும். கண்கள், ஆலவிடம் அருந்தினாற்போல் வெளுப்பேறி, துயரம் மிகும். தலை கிறுகிறுக்கும்.

பித்த குன்மம் (13, 16)

நெஞ்சு புரட்டி எரிச்சல் மிகும். வாந்தி உண்டாகி வயிறு வலிக்கும். நாட்பட்ட மலச்சிக்கல்களில் பித்தமும் கடி நிற்கும். உணவு உண்ணவியலாது. தலை கனக்கும். ஓங்காரத்துடன் வாய் குமட்டும். வாயில்நீரூறும். நிலை-கெட்டு மயங்கும்படியாகத் தலை கிறுகிறுக்கும். உடல் வியர்க்கும்.

எரிகுன்மம் (15)

வயிற்றை எரியச் செய்யும். குடல் புரட்டி வாயில் நீர் மிகும். உயிர்ப்புச் சக்தி அழியும் வகையில் தலை கிறுகிறுத்துக் கனத்துத் தோன்றும். ஓங்காரத்துடன் குமட்டல் எழும். ஏப்பம் மிகும். வியர்வை மிகுந்து வயிறு பொருமி எரியும். இதனை எரிகுன்ம மென்பர்.

கபால குன்மம் (50, 95)

வாயுவானது வயிற்றை அழுத்தி மேல்நோக்கி எழும். வாயில் நீர் சுரக்கும். தலை கனத்து வலிக்கும். மூச்சுத் தடுமாறும். அயர்ச்சி உண்டாகும். கால் வீங்கும். உடலில் திமிர்ப்பு உண்டாகும். மலைப்புடன் நடுக்கம் சேர்ந்து தலை கிறுகிறுக்கும். உச்சந்தலை, கண் ஆகிய இடங்களில் உளைச்சலுடன் குத்துவலி உண்டாகும். பிடரி நரம்பில் உளைச்சல் தோன்றும். தூக்கமும் மிகும். வாயுவானது உடல் முழுதும் ஓடிப் பின்னர் குடலில் அடங்கித் துடிக்கும்.

சத்தி குன்மம் (56, 127, 130)

பித்தத்தில் வெதுப்புத் தோன்றுமானால் சத்தி குன்மம் உண்டாகும். மயக்கம் ஏற்படும். வாந்தி உண்டாகும். உணவு செரியாது. நெஞ்சு எரியும். உள்ளே வலியுடன் அழற்சி தோன்றி, கழிச்சல் ஏற்படும். ஈரலிலும் எரிச்சலும் வலியும் காணும்: நாக்குக் கசக்கும். பித்தம் மிகும். புளித்தேப்பம் மிகும். வயிறு பொருமும், வாந்தியும் ஏப்பமும் மிகும். பித்த வாயு அதிகரித்து வேதனை தரும். இவை சத்தி குன்மத்தின் குணங்களாம்.

வலி குன்மம் (14, 59, 92)

வயிற்றை இழுத்துப்பற்றி வலி மிகும். பசித்தாலும் உணவு கொள்ள-வொட்டாது. உண்டாலும், உண்ட ஆகாரத்தைக் குமட்டி வாந்தி செய்விக்கும். வயிற்றில் வலியுடன் கழிச்சல் உண்டாகும். மேனி வலித்து வறண்டு போகும். தலைவலி உண்டாகும். மயக்கம் தோன்றும். மருந்திற்கு அடங்காது. மரணம் வரை உடலை விட்டு நீங்காது.

வயிற்று நோய்கள்

பெருவயிறு (79)

வயிறு மந்தப்பட்டு உடல் வற்றும். வயிறு பெருத்துப் பொருமி விம்மும். உணவை வெறுத்து மலம் தடைபடும். இதுவே உதரதோடம் அல்லது பெருவயிறு எனப்படும்.

## வயிற்று நீராம்பல் (30, 31)

மார்பின்கீழ் வயிற்றுப்பகுதியும், தாளும் வீங்கும். வீக்கத்தோடு வலியும் தோன்றும். உடல் வற்றும். நா வறளும். தாகம் மிகும். கண் வெளுக்கும். மூச்சு வாங்கும். தூக்கம் மிகும். நினைவு கெட்டுப் பலவற்றையும் கேட்கும். இக்குணங்கள் வயிற்று நீராம்பலுக்குரியன.

## மகோதரம் (29)

அங்கங்கள் வீங்கும். மார்புக்கூடு வற்றும். வயிற்றினில் வாயுவும் நீரும் கோத்து, இரவு நேரங்களில் வலி மிகுந்து வாந்தி உண்டாகும். இவை மகோதரத்தின் குணங்களாகும்.

## வயிற்றுக்கடுப்பு (247, 249)

இடுப்பு கடுத்து, வயிறு உளையும். சீதம் மிகுந்து முடுகித் துயர் அதிகரிக்கும். மலம் கழிந்தவுடன் அடங்கும். உணவு வேண்டாது. உடல் அறவே மெலியும். இதனையே வயிற்றுக் கடுப்பு என்பர். இதில் சீதத்துடன் இரத்தம் கூடி விழும். வயிறு மந்திக்கும். அபானம் மிக்குக் கீழ்வயிற்றில் நீர் கடுக்கும். தலை சுழற்றும். கண்கள் மஞ்சள் நிறமாகிக் காணும். உணவு கொள்ளாது. வயிறு எரியும்.

## கிராணி நோய்கள்

### வாயுக் கிராணி (58, 77, 88, 320)

வயிறு இரைச்சலுடன் பொருமும். வயிற்றில் புளிப்புத் தோன்றும். மலம் கருகிக் கழியும். உணவு செரியாமல் புளியேப்பம் மிகும். இருமல்

உண்டாகும். நெஞ்சு எரியும். வயிற்றில் எரிச்சல் மிக்குப் பின் தொப்புழில் அடங்கும். அபான வாயு பெருகும். வயிற்றிடத்தே வலி மிகுந்து புண் தோன்றும். உடல் வறண்டு வற்றும். வலிமை குறையும். புறந்தாளில் வீக்கம் காணும். உணவு செல்லாது. உறக்கம் மிகுந்து கனவு உண்டாகும்.

மூலக்கிராணி (345)

கீழ்வயிற்றில் இரையும். இடுப்புக் கடுத்து உளையும். மலத்தில் குருதி விழும். இடுப்புக்குக் கீழே பாதம் வரை மிகவும் சலித்துக் கெடும். மலம் கழியும்போது வலிக்கும். நாளும் உடம்பு வற்றி வெளுக்கும். நா வறளும். வீக்கத்துடன் துன்பம் உண்டாகும். இதனையே மூலக்கிராணி என்பர்.

விப்புருதி நோய்

குவளை விப்புருதி (116, 117)

இடுப்பு, முள்ளந்தண்டு, இருவிலாப் புறங்கள், நெஞ்சு ஆகிய பகுதிகளில் கொதிப்புடன் குத்தல் ஏற்படும். நடுக்கத்துடன் குளிரச் செய்யும். வெப்பும் உண்டாக்கும். தொடர்ந்து வயிற்று நோயுடன் மயக்கமும் இருமலும் தோன்றும். சீழ் உண்டாகும். இந்நோய் தோன்றிய நாளில் இருமலுண்டாகி, மேனி வற்றும். ஐயமும் பித்தமும் கூடி, குளிர்ச்சியும் வெப்பமும் சேர்ந்து சீழும் வற்றும் நிலை உண்டாயின் மரணம் விளையும்.

பாண்டு நோய்கள்

பித்த பாண்டு (11)

இருமல் மிகுந்து உடல் இளைக்கும். நெஞ்சில் இடிப்பது போன்ற வேதனை உண்டாகும். நடக்கும்போதும் பேசும்போதும் மூச்சு வாங்கும்.

வியர்க்கும். தலை கிறுகிறுக்கும். மேனி வெளுக்கும். இக்குணங்கள் கண்டால், பித்த பாண்டு எனலாம்.

விடாு பாண்டு (64)

உடலின் ஒருபுறம் வீங்கும்; பின் வற்றும். மேனி வறண்டு வெளுப்பேறும். ஊக்கம் மிகும். தலை கனத்திருக்கும். துன்பம் மிகுந்திருக்கும். உணவு கொள்ள வொட்டாது. வாயு உடலில் மிகுந்து விடாும் போல வீங்கும்.

மூல நோய்கள்

இரத்த மூலம் (115)

தொப்பூழில் வலித்து வேதனை மிகும். மூலத்தில் இரத்தம் விழும். மூலம் வெளியில் தள்ளும். மேனி வற்றும்.

உள்மூலம் (55)

மலச்சிக்கல் உண்டாகி வயிறு மந்திக்கும். உடல் வறளும். மலத்தில் இரத்தமும் வெளிப்படும். வயிறு உளையும். மல வாயிடத்தே துளைப்பது போல வலியுண்டாகும். உடலின் வலிமையைக் குறைக்கும்.

நீரிழிவு நோய்கள்

நீரிழிவு தோன்றும் காரணங்கள் (406-408, 400)

மகளிரொடு கூடும் நாளில் மீன் இறைச்சி உண்ணுதல், எருமைப்பால், எருமை நெய் விரும்பியுண்டல் முதலிய காரணங்களினால் சோகை, பாண்டு,

சுக்கிலப் பிரமேகங்கள் நீரிழிவு ஆகியவை உண்டாகும். உலகில் மனிதராய்ப் பிறந்து பெண்ணோடு வாழ்கிறவர்களுக்குப் பிரமேகம் தோன்றுமுன் பல நோய்கள் உண்டாகி, கைகால்கள் அனல்போல் எரிந்து சுடும். குடித்த நீர் வற்றும். சிறுநீர் பெருகும் பழைய பிரமியத்தால் கடுப்போடு வாதம் முடுகி எழும். அதுவே பின் பவுத்திரமாகவும், சூலையாகவும், தோன்றும். சதை வறட்சியுடன் நீரிழிவையும் உண்டாக்கும். மேலும் தினந்தோறும் மகளிரைக் கூடுதல், நற்பலன் கேளாமை, பல தோடங்கள், சேர்தல், குருக்கள், தந்தை, தாய் ஆகியோர்க்குக் கொடுமையிழைத்தல், கன்னிப்பெண் கற்பிழந்து வரம்பு கடந்து செல்லுமாறு செய்தல், கேளாதவற்றைக் கேட்டாற்போலக் கூறுதல், காணாதவற்றைக் கண்டது போலப் பேசுதல், முதலிய பிழைகளைச் செய்தவர்க்கு உடலானது உள்ளீடிழந்த உளுத்த மரம் போல் ஆகி நீரிழிவு உண்டாகும்.

நீரிழிவுக் குணம் (409, 410)

முகம் எரிச்சலுற்று உலர்ந்து போகும். உடல் நடுநடுங்கும். நகம் கீழிறங்கி அழகிழந்து போகும். நஞ்சுண்டவர்போல் சோர்ந்து போகும். இரவு பகலெல்லாம் உறக்கத்தினால் உடல் பருத்துப் பின் மெலியும். உடல் உழலும். கொதிப்பு மிகும். உணவு செல்லாது. உடல் வியர்த்து நாறும். விழி மூடி மூடித் திறக்கும். கைகால் எரிச்சலுடன் நா உலரும். செந்தாமரை போன்ற முகம் வெளிரும். உடல் வலியால் நொந்து போகும். கனவு மிகும். கொதிப்பு மிகும்.

நீரிழிவு வகை (416)

வெப்ப நோய்கள், மிக்க பசி, மகளிர் புணர்ச்சி இவற்றால் உண்டாகும் வாத, பித்த, சிலேத்தும நீரிழிவு நோய்கள் இருபது வகையின. இவற்றுள்

வாத நீரிழிவு நான்கு வகைப்படும். பித்த நீரிழிவு ஆறு வகையின. சிலேத்தும நீரிழிவு வகை பத்தாகும்.

பித்த நீரிழிவு (420)

உதிரங் கடுத்து, வாத பித்த சிலேத்துமத்துடன் சேர்ந்து புளிப்புண்டாகி உடல் நிலையழிந்து நொந்து போகும். தலைச் சுற்றி கிறுகிறுக்கும். மூவிதமாகப் பித்தமானது பொதுமகளின் அன்புபோலப் போய்ப்போய் மீளும்.

மூவகை நீரிழிவு நோய்களின் குறிகள் (421-423)

நீரிழிவு உடையோர்தம் நீர் கோமூத்திரம், புலால் நாற்றம், இறைச்சி கழுவிய நீர் ஆகிய தன்மைகளை உடையது வாத நீரிழிவு நான்கின் குறிகளாம்.

நீல நிறம், மஞ்சள் நிறம், நீர்த்த புளியின் நிறம், சாம்பல் கரைத்த நிறம், மாட்டிறைச்சிக் கழிவு நிறம் ஆகிய இத்தனை நிறங்களிலும் காணப்படுவது பித்த நீரிழிவுகளின் குறிகளாம்.

அருவி நீர், கருப்பஞ்சாறு, தயிர், பால் வகைகள், பாகு, தேன்பாகு முதலிய தன்மைகளைப் பெற்றது சிலேத்தும நீரிழிவுகளாம்.

வாத நீரிழிவு நான்கன் குணம் (424-427)

இப்பிரமேக முடையோரின் சிறுநீரைக் காய்ச்சினால் அப்பிரமேகம் நெய் நாற்றம், ஈச்சம், வெப்புறு காய்ச்சல் ஆகிய தன்மைகள் காணப்பெறும்.

இந்நான்கனுள் ஒன்றான மதுமைப் பிரமேகத்தில் சிறுநீர் புலால் போல நாறும்; வெம்மையாகக் காயச்சல் உண்டாகும். மற்றோர் வகையான அசனிய பிரமேகம் கழிவுநீர் போல நாறும்.

விடத்தன்மையுள்ள இந்நான்கும் உடையவர் இறப்பது திண்ணம். மகளிரோ இதனைப் பொறுக்கவே மாட்டார்கள். முன்வினைப் பாவத்தால் உண்டாகும் இந்நால்கும் பனை நுங்கு போல நீர்ப்பிடிக்கும். மீள்வதரிது. மருந்தை ஏற்காது. கவலையுடன் உடல் அழியும். இருமலுடன் கழிறு வரும். இதற்கு மருந்தைத் தேடிப் பணத்தை அழிக்க வேண்டா.

<u>பித்த நீரிழிவு ஆறன் குணம்</u> (428-433)

சிறுநீர் புளித்து நாறும். மலமும் அப்படியே நாறும். இது மலப்-பிரமேகமாகும். இதற்குப் பரிகாரம் செய்யத் தீரும். சுண்ணாம்பு கரைத்த நாற்றம், சுடலைச் சாம்பல் நாற்றம் இவற்றை நீரிலே கரைத்தாற் போன்ற நாற்றம் ஆகியன கொண்டது சாயப்பிரமேகம். மந்திட்டானப் பிரமேகம் இரசம் போன்ற நாற்றத் தன்மையது. ஆம்பல் பிரமேகம் செவ்வள்ளிக்கொடி காய்ச்சிய நீர்போல நாறும். சுரோணிதப் பிரமேகம் சுரோணிதக் காலத்தில் வழுவழுத்துப் புலால் நாற்றத்தோடு விழும். நீலப்பிரமேகம் என்ற வகையும் இவ்வாறனுள் ஒன்று.

<u>சிலேத்தும நீரிழிவு பத்தின் குணம்</u> (434-443)

உத்தாசுரப் பிரமேகம் பச்சிலை, வெள்ளைச் சுரைநீர், மீனின் நாற்றம் இவற்றைப் போன்றது. நீர் நுரையுடன் கழியும். நாளைப் பிரமேகம் சற்றுச் சற்றாக விழும். ஆண் குறியில் கடுக்கும். சியக்காயப் பிரமேகம், சிறுநீரைக்

காய்ச்ச வெந்த சீயக்காய் போல் நாறும். ஊனப்பிரமேகம் பாகது கரைத்த நீர் போன்றது. மந்தரப் பிரமேகத்தில் நீர் வெளுத்துப் போகும். சாயப்பிரமேகம் கட்டுண்ட சுனைநீர், கரும்புச்சாறு, கூறை நீர் – ஆகியன போன்ற தன்மைகளை உடையது. விடாப்பிரமேகம் சிறுநீர், பன்னீர், தயிர் இவற்றின் நிறம் போலக் காணும். பரிகாரம் செய்யத் தீரும்.

வெண்பிரமேகமானது நீர் மெழுகுபோல இறங்கிப் பின் சலம்போல் விழும். உடல் உள்வாங்கும். சுக்கிலப்பிரமேகமானது சுக்கிலநீர் போன்றும், குறியின் மூக்குப் போன்றும், மூளை போன்றும் நாறும். நலியாமல் பிற்பட்டுப் போகும்.

## பிரமிய நோய்கள் (262-263)

மகளிர்மீது கொண்ட மையலுக்கு உரிய மிகுதியான தண்டனையாக, உடலை அழிவுறச் செய்யும் வகையில் பிரமிய நோய்கள் உண்டாகும். பிரமிய நோயின் வளர்ச்சியாக வாதம், அண்டச்சூலை, பவுத்திரம் முதலியன உண்டாகும்.

## பிரமியக் குணம் (264, 265)

நீரைக் குடிக்க ஒட்டாது. சிறுநீரைத் தடைப்படுத்தும். கனத்திருக்கும்படியான தோடத்தைத் தோற்றுவிக்கும். இந்நிலையில் புணர்ச்சியை விலக்க வேண்டும். அன்றேல் தாது கெட்டு வாதப் பிரமியம் உண்டாகும். உடலில் சுரந் தோன்றிக் குளிரும். தலை கனத்து வலிக்கும். உள்ளே எரிச்சலை உண்டாக்கும். மேனி வறண்டு சதை வற்றும். பிரமியம் உண்டாகும்.

சலப்பிரமியம் (266, 267)

சலப்பிரமியம் மாதத்தில் ஒருநாள் கல்லடைப்பு ஏற்படும். நினைவை அழித்து மறதி உண்டாக்கும். வாதத்துடன் பவுத்திரமும் பக்கச் சூலையும் உண்டாகும். நீர்க்கடுத்தல், சிறுநீர்ப் பெருகுதல், எரிச்சலோடு சிறுநீர் விழுதல், சிறுநீரில் இரத்தமும் கலந்து விழுதல், உடல் நாள்தோறும் வற்றி இறுகுதல் முதலியன உண்டாகும். ஓரிரு நாட்களில் மரணம் நேரும்.

கல்லெரிப்பு (399)

உப்பு நிலத்தில் நீரை நாள்தோறும் இறைத்திட, உப்புத் திரண்டு விளைவது போல, நீர்த்தலத்தில் வெப்பம் மிகுந்து நீர் வற்றி உப்பு விளையும். இதுவே நாளடைவில் கல்லாக உருப்பெறும். இதுவே கல்லெரிப்பு நோயாகும்.

அபத்திய தோடம் (385)

தாகம் மிகும். உடல் வறளும். வலியுடன் நோய்கள் மிகும். வாய் கசக்கும். உணவு கைக்கும். வாயு கோபித்து அனேக நோய்கள் உண்டாகும்.

மகளிர் நோய்கள்

கர்ப்ப நோய் (54)

கர்ப்ப ரோகம் என்று கூறப்படுகிறது. இந்நோயின் குறிகளாவன, கீழ்வயிற்றில் வாயு திரண்டு பொருமும். புண் உண்டாகி அழுந்தும், மசக்கைப் போன்ற உணர்வு ஏற்படும். உடலை முறுக்கிப் பிழிவது போல் உடல் வறண்டு வருந்தும்.

கர்ப்ப விப்புருதி (73, 318)

மலமானது திரண்டு ஆட்டுப் புழுக்கைப் போல விழும். உடல் வறண்டு வற்றும். மனமும் தாதும் கெட்டியிருக்கும். உள்மூலத்தில் உளைச்சலை உண்டாக்கும். வயிறு பொருமி இரத்தம் சிக்கி வலி மிகும். குருதி கழிந்த-பின்தான் வலி நிற்கும். கர்ப்பத்தை அழிக்கும். இடையில் உளைச்சலை உண்டாக்கும். சில வேளைகளில் மலம் கழியும்.

கர்ப்ப சூலை (144, 224)

வஞ்சனைகள், மருந்தீடு ஆகியவற்றாலும், உடல் வேட்கையுற்று இளைப்பதாலும், அடிக்கடி பிள்ளை பெறுவதாலும், கர்ப்ப சூலை உண்டாகும். கீழ்வயிறு கட்டியாகத் திரளும். வயிறு முழுவதும் பிள்ளை புரள்வது போல உணர்ச்சி தோன்றும். மேலும் பேறுகால வலி இருப்பது போன்ற உணர்வும் உண்டாகும்.

சூசிகா வாயு (146)

பிள்ளைப் பெற்ற பெண்ணுக்குச் சுரம், தலைவலி, உழலை, உடல்வலி முதலியன உண்டாகும். கழிச்சலும் பொருமலும் ஏற்பட்டு உள்மூச்சு வாங்கும். விழியில் தெளிவு இராது; சுவாச காசம் உண்டாகி உயிரையே பறித்துவிடும்.

நிதம்ப சூலை (254, 255)

குறி வழியே வயிற்றினுள் வாயுச் சென்று நீரும் வாயுவும் கோத்து முலைத் தேங்காய் போலச் சவ்வு முற்றி முன்வயிறு இறங்கும். மாத விலக்கு நாளில் குறியிலிருந்து நீர் விழும். குறியில் வாயு அதிகரித்து உள்ளே அடங்கி,

அதன் காரணமாகக் குருதி கெட்டுத் தங்கி விழும். இதனால் நீர் தடைபடும். இவ்வாறு மெல்ல மெல்ல வயிறு கனத்து மேலேறும். இதுவே நிதம்பச் சூலை எனப்படும்.

## இரத்த சூலை (53)

வயிற்றிடத்தே வாயு திரண்டு, புரளும். மாதவிலக்கின்போது குருதி மிகுதியாக வெளியேறும். இடுப்பும், தொடையும் உளையும். சிலநாள் குருதி திரண்டு சிக்கி நிற்கும். கருவையும் அழியச் செய்யும். இதுவே இரத்த சூலையாகும்.

## குழந்தை நோய்கள்

### உளமாந்தம் (44, 89, 119)

நெஞ்சு கனத்திருக்கும். இருமலால் வலி மிகும்; சுரம் தோன்றி மேனி பஞ்சு போலாகும். உள்ளுக்கும் பருத்துச் சீழும் உண்டாகும். கபமும் பித்தமும் கூடி உணவைக்கொள்ள வொட்டாது. தலை வலிக்கும். [illegible]. உடல் முழுதும் குத்தலுடன் குடைச்சல் தோன்றி உளையும். வாய் பிதற்றி அச்சத்தோடு, செயலும் கெட்டுவிடும். உறக்கமின்றியே படுத்திருக்கச் செய்யும்.

இந்நோய் தோன்றிய நாளில் உடலில் காச ரோகம் தோன்றும். கபமும் பித்தமும் முடுகிச் செயல்படும். குளிர்ச்சியும் வெப்பும் கூடி, குணங்கள் மாறிமாறித் தோன்றி, மயக்கம் ஏற்படும்.

போர்மாந்தம் (96)

வயிறு பொருமலுடன் கழியும், புரண்டு வலிக்கும். குழந்தை பால் குடிக்காது. மயக்கத்துடன் அச்சமடைந்து காணும். வாந்தி உண்டாகும். கண்கள் குழிந்திருக்கும். இவை போர்மாந்தக் குறிகளாம்.

அக்கினி மாந்தம் (39, 70, 71, 76)

இது மந்தாக்கினி எனவும் அழைக்கப்பெறும். உணவு உட்கொண்டால் உடனே வயிற்றில் பொருமல் உண்டாகும்; வயிறு கழியும். தாகம் அடிக்கடி ஏற்படும். உடல் வற்றி மயங்கும்; உலரும். பசி மிகுந்து தோன்றும். வயிறு வலியுடன் குத்தும். மலம் கழிவதோடு சிலபோது குருதியும் சேர்ந்து விழும். உடல் வலிமை குன்றிக் கண்ணும் முகமும் மாறுபட்டு வெளுத்துக் காணும்.

கரப்பான் நோய்கள்

வாத கரப்பான் (17, 18, 19, 20, 26, 217, 218)

உடம்பு முழுவதும் வெதுப்புற்று உளைச்சலுடன் வலிக்கும். கைகால் மூட்டுகள் வீங்கி அவ்விடங்கள் முடங்கி வறளும். பின் அவ்வறட்சியே புண்ணாகி முற்றி வெடிக்கும். தலைகனத்து, குரல் கம்மும். உடம்பில் திமிர் உண்டாகும். நோயுடன் வெப்பு மிகும். கண்களில் தூக்கம் மிகும். உந்திப் பகுதி கனத்து வீங்கும். உடம்பு கிறுகிறுக்கும். உட்கார்ந்திருந்து எழுந்தால் கைகால் இற்றுப்-போனாற் போன்று வலிக்கும். புண்ணில் நீர் வடிந்து, தினவுடன் சொறியச் செய்யுமானால் நெடுநாள் நீடிக்கும்.

வலி மிகுந்து கன்றிப்போயி, துன்பம் செய்கின்ற புண்கள்மீது ஆயுதங்கள் பாய்ந்து விடுமானால் கைகால் சந்துகள் மூட்டுகள் ஆகியவற்றிலும் வலி மிகுந்து காணும். இந்நிலை வாத கரப்பானுக்குரியது.

கண்டக் கரப்பான் (228)

சுரம் தோன்றி மேனி வறளும். உமிழ்நீர் வற்றும். அரிப்புண்டாகும். இருமினால் மூக்கில் நீர் வடியும். பித்தம் மிக்குச் சிலேத்துமம் கூடும். காதில் தினவுடன் அரிப்பேற்படும். இதனைக் கண்டக் கரப்பான் எனலாம்.

கபால கரப்பான் (251)

காது, கண், கழுத்துப் பகுதிகளில் தினவு உண்டாகும். கண்களில் பீழை சாரும். மூக்கில் நீர் பாயும். வறட்சி மிக்குத், தலையை நனைத்தால் மண்டைக் குத்தல் உண்டாகும். இது கபால கரப்பான் எனப்படும்.

வறட்சிக் கரப்பான் (199, 204)

உடலில் தினவுண்டாகி, அரிப்புத் தோன்றும். உடல் பரபரவென்றிருக்கும். உடல் முழுதும் பரந்து காணும். சாம்பல் நிறமாய், கரப்பான் சொறியில் பொருக்குக் காணும். மேனி புலால் நாற்றம் வீசும். கால், தலை, உடம்பு ஆகியவை கனத்து, உடல் முழுதும் சிறு சிரங்குகள் தோன்றும். மேனி வற்றும். காது, நாசி, கழுத்து ஆகிய பகுதிகளிலும் அவ்வாறே வறண்டு சிரங்குகள் காணும். இவை வறட்சிக் கரப்பானின் குணங்களாம்.

புண் (216)

புண் வெளுத்து, நீர் கோத்து மிருதியாகக் குத்தி வலிக்கும். பின்னர் இரணமாகி வலிமை பெறும். இரத்தம் வடியும் நிலையிலேயே அது இருப்பின் எளிதில் தீராது. அதனோடு சீழ் சேர்ந்து செம்-புண்ணாகிக் காணும்.

பிளவை நோய்கள்

பக்கப் பிளவை (98, 99, 100, 102)

பெரிய பிளவைக் கட்டியானது நடு முதுகில் முள்ளெலும்பின்கண் பருத்துக் காணும். இது பல கண்களை உடையதாகத் தோன்றும். எரிச்சலுடன் உளைச்சலும் உண்டாகும். மூச்சுக்குத்தும் உழலையும் சேர்ந்து வீக்கம் இருக்கும். நாவறண்டு வேட்கை மிகும். சிவபெருமானின் கண் போன்று அக்கட்டி விளங்கும். கண்கள் இருளடையும். குளிர்சுரம் உண்டாகும். உடல் வேதனையுற்று அழற்சியடையும். கழிச்சல் உண்டாகும். இதனால் மரணமில்லை.

## மருந்து

மருந்து, அகமருந்து, புறமருந்து என இருவகைப்படும். இவற்றுள் அகமருந்தாவது உள்ளே அருந்துதற்கு உரியது. புறமருந்து என்பது வெளிப்பயன்பாட்டைக் கருதியது. இவ்விருவகை மருந்துகளும் முறையே முப்பத்திரண்டு வகையின. அகமருந்து, புறமருந்து என இருவகை மருந்துகளிலும் சிற்சில இந்நூற்கண் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் அகமருந்துகளாவன: சாறு, கற்கம், சூரணம், மாத்திரை, குடிநீர், குழம்பு, எண்ணெய், நெய், களி, பிட்டு, கற்பம், பற்பம், செந்தூரம் ஆகியன. புறமருந்துகளாவன, பூச்சு மருந்து, சீலை, புகை, கலிக்கம், நசியம், வேது, ஒற்றடம், குளியல் ஆகியன. இவையேயன்றி, துணைமருந்துகளும் பத்திய முறைகளும் இதன்கண் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரே மருந்திற்கு வழங்கப்பெறும் பல்வேறு துணைமருந்து நிலைகளே துணைமருந்தாகத் தனித்துச் சுட்டப்பட்டுள்ளன. அவ்வாறே பொதுவான பத்திய விதிகளும், குறிப்பிட்ட நோய்கட்குக் கூறப்படும் பத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன.

### மருந்துவகைச் சிறப்பு

(291) மருந்து வகையுள் எண்ணெய் பூசுதல், வேது பிடித்தல் ஆகியன வாதத்திற்கேற்றன. குடிநீர் பித்தத்திற்கு ஏற்ற வகையாகும்.

### நோய் நீக்கும் மருந்துச் சரக்குகள்

(145) இஞ்சி, மலவங்கம், கடுகு, கிராம்பு, சதகுப்பை, சாதிக்காய், சீதாரி, நேர்வாளம், பெருங்காயம், மரமஞ்சள், மிளகு, வசுவாசி, வெள்ச்சிப்பட்டை முதலிய சரக்குகள் கர்ப்ப சூரை போக்குவன.

கழற்சியிலை, கடலாஞ்சியிலை, குறிஞ்சாவிலை, தான்றி-யிலை, தென்னவோலை, பாவட்டையிலை, புங்கிலை, புளியிலை, பூனைக்-காஞ்சொறியிலை, விராலியிலை, வேலிப்பருத்தியிலை ஆகியன வாதகரப்-பானுக்கு ஏற்றன.

அகமருந்து

சாறு

(91) பெருமருந்து, பிச்சியின் வேர் ஆகியவற்றை நன்கு இடித்துச் சாறு பிழிந்து நெய்யில் குழைத்து அருந்த, வஞ்சனை முதலிய வருத்தம் செய்யும் நோய்கள் தீரும்.

(325) வயிறுளைச்சல் ஏற்பட்டால், தேங்காயைத் துருவிச் சர்க்கரையுடன் பருக வேண்டும். இதில் தீராதபோது, தேங்காய்ப்பாலைச் சர்க்கரையுடன் கூட்டிப் பருக வேண்டும். இதிலும் தீராத நிலையில் நெல்லிப் பழத்தின் சாற்றில் சர்க்கரை கூட்டிப் பருக வேண்டும்.

கற்கம்

(98) பொன்னாவரை, அல்லி ஆகிய மூலிகைகளை அரைத்துப் புன்னைக் காயளவு எடுத்து, பழைய மோரில் குடிக்க வேண்டும். இதனால் பிளவையில் காணும் எரிச்சலுடன் கூடிய வலி நீங்கும்.

(124) உப்பிலாங்கொடி, விடத்தேரிலை, முசுமுசுக்கை, முட்குமிழ் ஆகியவற்றைக் கூட்டி (யரைத்து) ஆவின் பாலில் குடிக்க உளமாந்தை போகும்.

சந்தனாதியுண்டை

(147,148) சந்தனம், முத்தக்காசு, கோட்டம், நெல்லி, அதி-மதுரம், இலாமிச்சம், வெட்டிவேர், தக்கோலம், ஆகியவற்றை அரைத்து உருண்டையாக்கி இளநீரில் உட்கொள்ள வேண்டும். இதனைச் சந்தனாதியுண்டை என்பர்.

சந்தனம், கோட்டம், அதிமதுரம், சாத்திரவேதி, தக்கோலம், கோரோசனை, முல்லை, முத்தக்காசு, இலாமிச்சம், வெட்டி-வேர் ஆகியவற்றை அரைத்து இலந்தைக் கொட்டையளவு எடுத்து இளநீரில் உட்கொள்ள வேண்டும். இதுவும் சந்தனாதியுண்டை ஆம். இவ்விரண்டும் சுவாச காசத்தைப் போக்குவன. தேக அழற்சி நீக்குவன.

இருத்துவாதியுண்டை

(149) முத்தக்காசு, திப்பிலி, மிளகு, கடுகரோகணி, கொள், சீரகம், ஏலம், வெட்டிவேர், இலாமிச்சம், தக்கோலம், இலவங்கம், கொத்தமல்லி, கோரோசனை, கோட்டம் ஆகியவற்றை இளநீரில் அரைத்து உட்கொள்ள வேண்டும். இதனால் பரிதாப சுரம், வெப்பம் முதலியன நீங்கும்.

சுவாசகாசத்துக்கு உண்டை

(150) கொத்தமல்லி, அதிமதுரம், ஏலம், இலவங்கம், கோட்டம், செண்பகப்பூ, கோரோசனை, முத்தக்காசு, மிளகு, வெட்டிவேர் ஆகியவற்றைக் கருப்பஞ்சாறு, இளநீர், திராட்சைப் பழச்சாறு மற்றும் பேரிச்சம்பழக்-கியாழம் ஆகியவற்றால் தனித்தனியே அரைத்து உட்கொள்ள பரிதாப சுரம், வெப்பம், இதய நோய் ஆகியன தீரும்.

(158) சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கடுகரோகணி ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்துச் சம அளவு நேர்வாளம் கூட்டி எலுமிச்சம்பழச்சாறு விட்டு, அரைத்து உட்கொள்ள விரேசனம் ஆகும்.

(159,160) இந்துப்பு, கடுக்காய், மிளகு, சுக்கு, கடுகரோகணி, வகைக்கு ஒரு கழஞ்சளவு கொண்டு, நேர்வாளம் ஆறு கழஞ்சு சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து சுண்டைக்காயளவு உட்கொள்ள வேண்டும்.

மருந்து அதிகமானால் அதற்குப் பரிகாரமாக வெந்நீரை உட்கொள்ள வேண்டும். பால் கஞ்சி உட்கொள்ள வேண்டும். இதனால் சுரமும் குளிரும் பலமின்மையும் தீரும்.

(195) சுக்கு, மிளகு, திப்பிலி, தூதுவளை, கறிமுள்ளி, சீந்தில் இவை வகைக்குச் சமனாகச் சாறெடுத்துக்கொண்டு முந்நாழி நீர்கூட்டி அரைத்துக் காய்ச்சி, நெய், தேன் ஆகியவற்றில் உட்கொள்ள காசம் போம்.

(207) கீழ்க்காய் நெல்லியின் வேர் ஒரு கழஞ்சு, களாவேர், கடுக்காய் இரண்டும் வகைக்கு இரு கழஞ்சு. இவற்றைப் புளித்த மோருடன் ஏழுநாள் உட்கொண்டு வர, சோபை நீங்கும்.

(208) தேங்காய்ப்பாலில் அத்தியின் சிறுபிஞ்சு, குந்திருக்கம்பொடி ஆகியவற்றைப் பொடித்துச் சம அளவு அதில் போட்டுக் கலந்து அருந்த பிரமியம் நீங்கும்.

(226) மிளகு, நேர்வாளம், இரண்டையும் சமனாகக் கூட்டி மூன்று எலுமிச்சம்பழச் சாறு விட்டு, அரைத்து உருண்டை செய்து சூரைக்-காயளவு எலுமிச்சைச் சாற்றில் உட்கொள்ள பித்தக் கிறுகிறுப்பு நீங்கும்.

(316) பனிச்சைப் பருப்பு, துத்திவேர் இரண்டையும் எருமைத் தயிர் கூட்டி அரைத்து உட்கொள்ளக் கழிச்சல், வயிற்றுவலி, வயிற்றுக் கடுப்பு முதலியன தீரும்.

(317) சுத்த நேர்வாளம், இந்துப்பு, சுக்கு, மிளகு ஆகிய-வற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உருண்டையாக்கி உட்கொள்ள வாயுவை நீக்கி மலசலத் தடையைப் போக்கி வயிற்று வலியைத் தீர்க்கும்.

(344) நாயுருவியின் வடக்குவேலை அரைத்து இளநீரில் உட்கொள்ள குருதி பெருகும். கர்ப்ப நோய், கிருமி நோய் முதலியன தீரும்.

(381) மணலை வறுத்து அதில் இளநீர் ஊற்றி எலுமிச்சம்பழச் சாறு விட்டு, சீனி, திராட்சை, தேன், பேரீஞ்சு, அதிமதுரம், கோட்டம், சீரகம், மரு, செண்பகம், சாத்திரவேதி, வெட்டிவேர், தக்கோலம், நெற்பொரி, சுக்கு, மாதுளம்பழச் சாறு ஆகியவற்றைக் கூட்டிக் கலந்து உட்கொள்ளப் பரிதாப சுரம் நீங்கும்.

(445) ஆவிரைத் துளிர், கல்மதம், கொன்றைவேர் இவற்றைப் புளித்த மோரில் கூட்டிக் குடிக்க நீரிழிவு நீங்கும்.

(449) தாமரை – அரைக்கால், எள் – அரைக்கால், கருவேல் பிசின் – இரு அரைக்கால், மரமஞ்சள் – இருபதரைக்கால், ஆவிரை விதை –

அரைக்கால், கடுகு - அரைக்கால் ஆகியவற்றைக் கூட்டி யரைத்துத் தேனில் விழுங்கிட நீரிழிவு நீங்கும்.

(456) ஆவிரை, கடலழிஞ்சில், பொன்முசுட்டை, கொன்றை, அல்லி ஆகியவற்றை (அரைத்துத்) தேனில் அருந்த நீரிழிவு நீங்கும்.

சூரணம்

(139) கடுக்காயைக் கருகச் சுட்டுத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். இதனோடு இந்துப்பு, மிளகு, திப்பிலி ஆகியவற்றைப் பொடித்துச் சாத்திரவேதிக் கிழங்கு சேர்த்து, நீரில் கலந்து அருந்த வேண்டும். இதனால் வெடிசன்னி, சிலேத்தும நோய்கள் நீங்கும். மலம் கழியும்.

அண்டவாதத்துக்குச் சூரணம்

(167) கழற்சிப் பருப்பு, வெள்ளுள்ளி, முருங்கைக்கொட்டை, சுக்கு, கொள்ளு ஆகியவற்றைப் பத்துப் பங்கெடுத்துப் பொடித்து உட்கொள்ள குடல்வாத நோய்களும், சூலை, குன்மம் ஆகியனவும் தீரும்.

(175,176) எருக்கம்பால், கிராம்பு, திரிகடுகு, இந்துப்பு, கருஞ்சீரகப்பொடி, வெள்ளுள்ளி ஆகியவற்றை வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து, கையாந்தகரை, பிரமியிலை ஆகியவற்றின் சாற்றில் அரைத்து, உலர்த்திப் பொடித்துக்கொள்ள வேண்டும். இதனை நாள்தோறும் வெருகடியளவு உட்கொள்ள பித்த பாண்டு, வெப்புநோய், காசம் ஆகியன நீங்கும்.

(191) சாரணைக் கிழங்கு, இந்துப்பு, மிளகு, சீனி ஆகியவற்றை நெய்யில் கூட்டி உட்கொள்ள மூக்கடைப்பு, மூக்கு நீர்ப்பாய்ச்சல் ஆகியன போம்.

(241) மஞ்சளைப் புடமிட்டுப் பொடியாக்கி அருந்த கற்சூரை அகலும்.

(315) இலவம் பிசின், அதிவிடையம், காசுக்கட்டி, கிராம்பு, சாதிக்காய், குந்திருக்கம், குடசப்பாலை, குரோசாணி ஓமம், பிசின், சேவுகன்வித்து ஆகியவற்றோடு, வசுவாசி சம அளவு கூட்டிச் சுக்குச் சுட்ட பொடியையும் சேர்த்து உண்ண கழிச்சல் நோய் தீரும்.

(316,325) நெல்லி, வெந்தயம் இரண்டையும் வறுத்துப் பொடித்துத் தயிரில் உண்ண வயிற்றுக்கடுப்பு, வெக்கை நோய் ஆகியன தீரும்.

(326) திருகுகள்ளி வேர்ப்பட்டையை ஆவின் பாலில் அவித்து உலர்த்தி, கால் கழஞ்சு அளவு பாக்குக் கூட்டித் தின்ன கழியும். கழிச்சலை நிறுத்த, பால் சோற்றை உண்ண வேண்டும். மேலுக்கு வெண்கெந்தகத்தை அரைத்துப் பூச வேண்டும்.

(378) மாத்தழை, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி முதலியவற்றைக் கூட்டித் தேனில் உண்ண, சத்தி எனும் வாந்தி ஓடி ஒழியும்.

(446) ஆவிரை, கொன்றை, நாவல், பாக்கு, அத்தி, மருதம்பட்டை ஆகியவற்றைச் சமமாகக் கூட்டித் தேனில் அருந்த நீரிழிவு நீங்கும்.

(448) தகரம், கோட்டம், சிறுதேக்கு, சாதிக்காய், பொன்னாவிரைவேர் ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்து ஒரு மண்டலம் முறைப்படி உட்கொள்ள நீரிழிவு தீரும்.

(450) பின்னாக்குப்பொடி, ஆவிரைக் கொழுந்து, நெருஞ்சில் வேர் ஆகியவற்றை வெய்யிலில் உலர்த்தித் தேனில் கூட்டி உள்நாக்கில் படுமாறு நக்கிவர நீரிழிவு அகலும்.

(457) ஒரிலைத் தாமரை, குழித்தாமரை வித்து, நல்ல பின்னாக்கு, நத்தையிறைச்சி, துவரை விதை – இவ்வைந்தையும் உலர்த்திப் பொடித்துத் தேனில் உட்கொள்ள நீரிழிவு நீங்கும்.

(454) எருக்கு, சூதம், இரும்பொடு கலந்த காந்தம் இவற்றைப் பொடித்துத் தேனில் அருந்த நீரிழிவு நீங்கும்.

(456) ஆவிரையின் பொடி – நூறு கழஞ்சு, சாதிக்காய் – ஐம்பது கழஞ்சு, இலந்தையின் பழம் – இருபது கழஞ்சு, சந்தனம் – பத்துக் கழஞ்சு, சூடன் – மூன்று கழஞ்சு, கத்தூரி – இரு கழஞ்சு, ஆகிய – வற்றைப் பொடித்து பரம்பு ஒரு பிடி சேர்த்து விடியற்காலையில் அருந்த வேண்டும். அதன்பின்னர் மோருடன் தேற்றாங் கொட்டையைக் கூட்டியருந்த நீரிழிவு நீங்கும்.

(462,463) தென்னம்பூ, அவரையின் பஞ்சகம், சாதிலிங்கம், கெருடப்பச்சை, காந்தம், கல்நார், சாத்திரவேதி, கல்மதம் ஆகியவற்றை வகைக்கு நான்கு கழஞ்சு எடுத்து, எருமை மோரில் வேகவைத்து, புன்னைக் காயளவு உரைத்துக் கூட்டிய கலவையை நிழலுலர்த்திக் கொள்ள வேண்டும். இதனை மோருடன் குடிக்க நாவறட்சி, சலக்கழிச்சல், தவனம், உடல் சோர்வு முதலியன அகலும்.

(464-465) சாதிலிங்கம், குரோசாணி ஓமம், காந்தம், சாதிக்காய், வசுவாசி, காசுக்கட்டி, அக்கராகாரம் - வகைக்கு நான்கு கழஞ்சு; ஊமத்தன் விதை, வங்கபற்பம், சூதபற்பம் - வகைக்கு ஒரு கழஞ்சு; அப்பிரகச் செந்தூரம் - இரு கழஞ்சு இவற்றை ஒக்கக் கட்டிப் பொடித்து நீரில் மஞ்சாடியளவு அருந்த வேண்டும். இதனால் பிரமேகம் இருபத்தொன்றும் தீரும்.

<u>மாத்திரை</u>

<u>சத்தி குன்மத்துக்குக் குளிகை</u>

(132) உள்ளிப் பூண்டு, இந்துப்பு, சூதம், வெண்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கற்காந்தம், கள்ளிப்பால், ஆகியவற்றைக் கூட்டி அரைத்து நொச்சியிலைச் சாற்றில் உருண்டையளவு உட்கொள்ள குன்மவாயு நீங்கும்.

(321) ஓமம், கடுகு, நெல்லி, தான்றி, மிளகு, சுக்கு, திப்பிலி ஆகியன வகைக்கு மூன்று கழஞ்சு, கழற்சிப்பருப்பு ஒரு கழஞ்சு எடுத்து, கையாந்தகரைச் சாறு ஒரு நாழி விட்டு ஊறவைத்துப் பின் நேர்வாளம் கட்டி, இக்கலவையைக் கையாந்தகரைச் சாற்றால் அரைத்து உருண்டைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக்கொள்ள வேண்டும். இக்குளிகையை அருந்த வாயுக்கிராணி நீங்கும்.

(356-357) வெண்காரம், இரசம், திரிகடுகு, இந்துப்பு, கெந்தகம் ஆகியன வகைக்கு ஒரு கழஞ்சு, நேர்வாளம் இரு கழஞ்சு, கடுகரோகணி நான்கு கழஞ்சு எடுத்து இவற்றைத் தாய்ப்பால் வார்த்து நான்கு சாமம் அரைத்து வழித்து உலர்த்தி உருண்டைகளாக்கிக் கொள்ள வேண்டும். இதனை இஞ்சிச் சாற்றில் உட்கொண்டு பத்தியம் இருந்தால் சன்னிபாத சுரம் நீங்கும்.

(358-359) புளிய மரம் ஒரு கழஞ்சு, பூசணிப்பூ, இரசம், முசறுமுட்டை ஆகியவை வகைக்கு ஒரு கழஞ்சு, இரசம் கால் பங்கு கட்டி அரைத்து வெற்றிலைச் சாற்றில் வைத்து உலர்த்தி உளுந்தளவு மாத்திரை-களாக உருட்டிக்கொள்ள வேண்டும். இதனை தாய்ப்பாலில் உட்கொள்ள சன்னி சுரம் போகும்.

(365-366) வெண்பாடாணம் ஒரு கழஞ்சு, துத்தம், இரசம் இரு கழஞ்சு, தாரிசு அரைக்கழஞ்சு ஆகியவற்றைச் சேர்த்து குழிக்கல்லில் போட்டு ஒருபடி வெற்றிலைச் சாற்றால் ஆட்டி வழித்து மிளகளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும். இவ்வுருண்டையை உதயகாலம் முதல் உச்சிக்-காலம் வரை அரைத்து உருட்டி நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். இதனைக் குளிர் தோன்றும்போது இரண்டு நாழிகை முன்னதாக, இருட்டு விடிந்து வருமளவு ஒரு உருண்டையைப் பசும்பாலில் அருந்த வேண்டும்.

(373) கெந்தகம், பச்சைநாபி, மிளகு, சூதம், தூய நேர்-வாளம், ஆகியவற்றுடன் பூசணிப் பழமும் கட்டி அரைத்து உளுந்தளவு உருட்டிக் கொண்டு இஞ்சிச் சாற்றில் உட்கொள்ள விடச்சுரம் அகலும்.

(447) காந்தம் ஒரு வீசத்துடன் மூன்று பலம் அளவு, முத்தக்-காசு, மஞ்சிட்டி, கிட்டம், திமிளை, சுக்கு, மிளகு, திரிபலை ஆகிய-வற்றைக் கையாந்தகரைச் சாற்றில் அரைத்து உருண்டை செய்து பசுந்தேனில் அருந்த நீரிழிவு அகலும்.

(451) காரீயம் பத்து கழஞ்சு எடுத்து உருக்கி, அது கருகி வரும் பொழுதில் இரசம் நான்கு படி வார்த்து இறுத்துக்கொண்டு மோரில் அரைத்து இருபத்தோரு உருண்டைகளாக உருட்டி, பழமோரில் குடிக்க நீரிழிவு போம்.

(452) காரியம் பத்து பலம், இரசம், காந்தம், இங்-குலிகம் வகைக்கு இரண்டு பலம் கூட்டி நீர்விட்டரைத்து உருண்டையாக்கி உட்கொள்ள நீரிழிவு நீங்கும்.

(453) தேற்றான் விதை, கல்மதம், வெள்வேல், கருவேல், விளம்பிசின் ஆகியன வகைக்குப் பன்னிரண்டு பலம், நீர்முள்ளி விதை, குரோண்டி, கிடைச்சான், ஆலின் விதை வகைக்குப் பத்து பலம், அரி-தாரம் அரைத்தபொடி பத்து பலம், கிட்டம், மணிக்காந்தம் எட்டு கழஞ்சு எடுத்து இவற்றை ஆவிரைச் சாற்றால் அரைத்து உருண்டைகளாக்கித் தேனில் உட்கொள்ள நீரிழிவு நீங்கும்.

குடிநீர்

(128) நெற்பொரி, பச்சைப்பயறு, வில்வம், முல்லை, ஏலம், சுக்கு, நெல்லி ஆகியவற்றை இளநீர் கூட்டிக் காய்ச்சி வடித்து உட்கொள்ள வேண்டும். இதனால் சத்தி குன்மம், வாந்தியுடன் கூடிய சுரம், துன்பம் செய்யும் சிறுகிறுப்பு, உழலை, மூச்சு வாங்கல் முதலியன தீரும்.

(152) காய்ச்சிய நீர், முலைப்பால், சுக்கு, சந்தனம், கோட்டம், திப்பிலி, காந்தம் ஆகியவற்றுடன் நீர் கூட்டி உட்கொள்ள புறவிச்சுக்குத்து நீங்கும்.

(177-181) நிலப்பனைக்கிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கின் சாறு, நெருஞ்சில் வேர், நாவல், கு துவளையின் பூ, முருங்கை வேர், முத்தக்காசு, வெள்-ளரிக்காய், தண்ணீர், சித்தாமுட்டி, கீழாநெல்லி, சிறுகீரை, பாலைவேர்ச்-சாறு, காட்டுமல்லிகையின் பூ, பூனைக்காலி விதை - முதலியவற்றை வகைக்கு நான்கு பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றை இடித்துக்கொண்டு

பால் கூட்டி தண்ணீர் பதக்களவு, மொந்தம் வாழைக் கிழங்கு நீர் இருநாழி, கருப்பஞ்சாறு நாலு படி, இஞ்சி, முந்திரிகை, பேரீச்சம் பழம், விலாமிச்சு, வெட்டிவேர், தாமரை, முல்லை, முத்தக்காசு, நன்னாரி, சீதேவி செங்கழுநீர், ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம், கற்கடகசிங்கி, இந்துப்பு, ஓமம், சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம், கிராம்பு, சாதிக்காய், வசுவாசி, சாத்திரவேதிக் கிழங்கு, திரிகடுகு, நெல்லி, காந்தள், செண்பகப்பூ, தக்கோலம், சடாமாஞ்சில்லை, மஞ்சிட்டி, பச்சிலை, கச்சோலம் ஆகியன வகைக்கு இருகழஞ்சு எடுத்துக்கொண்டு ஆவின் பால் விட்டு ஆட்டி அரைத்துக் கலக்கி வடித்துக்கொள்ள வேண்டும். இதை மேலுக்குப் பூசி, உள்ளுக்கும் கொள்ள பித்தம் மிகுந்த காமாலை, பாண்டு முதலியன தீரும்.

(203) வெங்காயம் - ஆறு பலம்; திரிகடுகு - ஒரு பலம், இந்துப்பு - ஒரு பலம், கொடுவேலி, நிலவாகை, மண்புழு, வரிக்கற்றாழை ஆகியவற்றைக் கூட்டிக் குடிநீரிட்டு நெய் கூட்டி அருந்த வேண்டும். தீர்க்கும் நோய் கூறப்படவில்லை.

(225) இளநீரில் சிறுபயறு, சீரகம், பசுப்பால், நெற்பொரி ஆகியவற்றைக் கூட்டிக் காய்ச்சி உட்கொள்ள பித்தக் கிறுகிறுப்பும் நடுக்கமும் நீங்கும்.

(232) பங்கம்பாளை, சுக்கு, முத்தக்காசு, பூனைக்காஞ்சொறி வேர் ஆகியவற்றைக் காய்ச்சிப் பருகச் சுர ஐுரை தீரும்.

(238) வில்வம், ஆயில், சித்திரமூலம், கடுக்காய், சுக்கு, திப்பிலி, நன்மஞ்சள் ஆகியவற்றைப் பலமுள்ளவர்க்கு வகைக்கு ஒரு கழஞ்சளவும்,

பலம் குறைந்தவர்க்கு வகைக்கு அரைக்கழஞ்சளவும் கூட்டிக் கியாழமிட்டுக் கொடுக்க வேண்டும்.

(259) ஆவின் பால், சீனி, சாத்திரவேதி, நாபி ஆகியவற்றைக் கலந்து நாற்பது நாட்கள் குடிக்க உட்சுரம் நீங்கும்.

(293) இளநீர், இஞ்சிச்சாறு, உள்ளி, திரிகடுகு, இந்துப்பு இவற்றை அளவாகக் கூட்டி அரைத்துக் காய்ச்சி இரண்டொன்றாய்க் குறுக்கி ஏழு நாட்கள் கொள்ள வாதகுன்மம் நீங்கும்.

(351) கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தாமரைத் தண்டு, தேவதாரம், முத்தக்காசு, இலாமிச்சு, சந்தனம், கடுகுரோகணி, பேய்ப்புடோல் தண்டு, துவரம்பருப்பு, வேப்பலகு, பங்கம்பாளை வேர், வெட்பாலரிசி, கள்ளுச்சேறு ஆகியவற்றைக் கொண்டு நறுக்கி இருநாழி நீர் ஊற்றி உழக்காகச் சுருக்கி, அருந்த உழலை, கழிச்சல், தாபம் ஆகியன நீங்கும்.

(353) பாலைவேர், சந்தனம், மிளகு, சுக்கு, கொத்தமல்லி, நெல்லி, வேப்பலகு ஆகியன வகைக்கு ஒரு கழஞ்சு, இருநாழி நீர் விட்டு நன்கு காய்ச்சி, ஒரு கழஞ்சளவு சர்க்கரை, தனியா, நெய், தேன் ஆகியன கூட்டி உட்கொள்ள வேண்டும். இதனால் சன்னி வாதம் நீங்கும்.

(354) ஆடாதோடை வேரும் இலையும் பன்னிரு கழஞ்சு, பூசணித்-தண்டு பன்னிரு கழஞ்சு, பதினாறு நாழி நீர் காய்ச்சி ஒரு பங்காகக் குறுக்கி, மிளகுப்பொடி கூட்டி, கழஞ்சளவு கொள்ள வேண்டும்.

(355) நன்னாரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தேவதாரம், சந்தனம், பேய்ப்புடோல் தண்டு, சுக்கு, பேரீஞ்சு, வெட்டிவேர் ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு கொண்டு சமனாக இரு- நாழி நீர் கட்டி உழக்காகக் காய்ச்சி உட்கொள்ள வேண்டும்.

(360) கருவேலிலை மூன்று பிடி, கற்றாழை மடல் சருகு மூன்று பிடி, களிப்பாக்கு ஏழு கழஞ்சு, சுக்குத் தண்ணீர், கடுக்காய் ஆகியவற்றை நறுக்கி இருநாழி உரியை உழக்களவாக்கிக் காய்ச்சிக்கொள்ள வேண்டும்.

(361-363) துளசி, கஞ்சாங்கோரை, பேராமட்டி, பேய்ப்புடோல், சாரணைவேர், முருங்கையிலைக் காம்பு, பெருமருந்து ஆகியன வகைக்கு இருபடி; கடுக்காய் பத்து கழஞ்சு, களிப்பாக்கு பத்து கழஞ்சு, இந்துப்பு ஒரு பாக்களவு, மிளகு, சீரகம் ஆகியன இரு எலுமிச்சங்காயளவு எடுத்துக்- கொள்ள வேண்டும். இவற்றுள் மிளகையும் சீரகத்தையும் பொட்டணமாகக் கட்டி, மற்றவற்றை நறுக்கி அறுபடி நீர் கட்டி கழஞ்சும் நாழியும் உரியும் கூடிய அளவாகக் காய்ச்சி வடித்து மூன்று நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

(364) பொன்னாங்காணி, பேய்ப்புடோல், முத்தக்காசு, பற்- படகம், சீந்தில் ஆகியவற்றை வகைக்கு ஒரு படியளவு கொண்டு, சுக்கு கால்படியளவு நறுக்கிக் கருக்கிக்கொண்டு நாழி நீர் விட்டு உரியளவாகக் காய்ச்சி இருகழஞ்சு தேன் கட்டி அருந்த வேண்டும்.

(369) சுக்கு, கடுக்காய், நிலவேம்பு, வேப்பந்தோல், சீந்தில், பேய்ப்புடலங்கொடி ஆகியன வகைக்கு இரு கழஞ்சு எடுத்து இருநாழியுழக்களவு நீர் கட்டிக் காய்ச்சிக் குடிக்க விடச் சுரம் நீங்கும்.

(370) ஆடாதோடையிலை, சீந்தில், வேம்பு, பேய்ப்புடோல், வேப்பலகு, வெட்பாலரிசி ஆகியன வகைக்கு இரு கழஞ்சளவு எடுத்து, இடித்து இருபடி நீர் காய்ச்சி உழக்களவாக்கிக் கொள்ள வேண்டும். இதில் கழஞ்சளவு குடிநீர் (குழம்பு) உட்கொள்ள வேண்டும்.

(374) நெற்பொரியை வறுத்து, பயறு, பற்படாகம், பூசணிப்பூ, கவிளைசேர் முதலியனவற்றை வகைக்கு இரு கழஞ்சு எடுத்துத் தட்டி, இள- நீரில் காய்ச்சிக் கொடுக்க சத்தி சுரத்திற்கு நன்று. மேலும் வெப்பம் மிகுந்தால், அதிமதுரத்தை ஒக்கக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

(375) நெற்பொரி, ஆவின்பால், வில்வ வேர், சீரகம், ஏலம், சுக்கு, நெல்லி, இளநீர் காய்ச்சி இரண்டொன்றாக்கி, முற்றிய பின், எடுத்து வற்றிக்கொள்ள சத்தி சுரம், நீர்வேட்கை முதலியன தீரும்.

(376-377) நாவல்பட்டை, மாந்தளிர், பூலாவேர், ஆலவிழுது - இவை வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து, தண்ணீர் இருநாழி கூட்டி, உழக்குடன் உரியன- வாகக் காய்ச்சி இரு கழஞ்சு தேன் கூட்டி அருந்த சத்தி சுரம், வயிற்றுக் கழிச்சல், தாகம், மூர்ச்சை ஆகியன தீரும். வெதுப்புப் பிரதாபம் நீங்கும்.

(379) முத்தக்காசு, மாவிரிக்கு, வெட்டிவேர், இலாமிச்சம், பற்படாகம், சந்தனம், ஏலம், நெற்பொரி, சிறுபயறு, சீரகம், கொத்த- மல்லி ஆகியவற்றுடன் ஒருநாழி நீர் கூட்டி அதை உரியளவாகக் காய்ச்சிக்கொள்ள வேண்டும். சந்தனம் (முதிய புறம் - முதியோர் கூந்தல்), ராக்கிடூம் ஆகியவற்றை உரைத்துக் கூட்டி, குடிநீரிட்டுப் பருக உழலை தீரும்.

(384) கோட்டம், நெல்லி, அதிமதுரம், இலாமிச்சம், வெட்டிவேர், முத்தக்காசு, சந்தனம், இளநீர், நெற்பொரி இவற்றைப் பாதியாகக் காய்ச்சி அருந்த அனல் மிக்குக் கழிச்சல் நிற்கும்.

(388-389) சுரத்திற்குக் குடிநீர் இடும்போது, பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு அக்குடிநீரின் அளவை மாற்றி, சுரம் ஏறிய நாட்களை விடுத்து, இறங்கிய நாட்களை ஆராய்ந்து அதனை முற்றிலும் போக்கும் வழிமுறையை ஆராய வேண்டும்.

அவ்வாறு சுரத்திற்கு இடும் குடிநீராக, கறிமுள்ளி, கண்டங்கத்தரி வேர், பேராமல்லி, சிற்றாமல்லி ஆகியவற்றை வகைக்கு மூன்று கழஞ்சளவு எடுத்துச் சிதைத்து, சுக்கு மூன்று கழஞ்சளவு வெட்டிச் சீலைக் கட்டி, நாழி நீர் விட்டுக் காய்ச்சி நாலொன்றாகக் குறுக்கி வடித்துக்கொள்ள வேண்டும். இதில் உழக்களவு பருவரிசியை மணல்போல் பொடித்துப் போட்டுக் காய்ச்சி அருந்த வாத சுரம் நீங்கும். மயக்கம் போகும்.

(391) கண்டங்காரி, சிறுவழுதலை, பங்கம்பாளை வேர், அதிமதுரம், வெட்பாலரிசி ஆகியவற்றை வகைக்கு இரு கழஞ்சு கட்டி நறுக்கி, நான்கு நாழியளவு நீர் கட்டி நாழியளவாகக் குறுகக் காய்ச்சி உழக்களவு பருவரிசியைப் பொரித்துப் பொட்டணம் கட்டி அதில் போட்டுக் காய்ச்சி அருந்த வேண்டும். இதனால் தாகம், மலச்சிக்கல், சுரம், தவனம் ஆகியன தீரும்.

(393-394) சுக்கு, கொத்தமல்லி, தூதுளங்காய், சேவுகன் வேர் - இவற்றை வகைக்கு இரு கழஞ்சு எடுத்து, இருநாழி நீர் விட்டு, நாலொன்றாகக் காய்ச்சி வாத சுரத்திற்கு ஏற்ற நீராக அருந்தலாம்.

ஏழு நாட்கள் வரை, பட்டினியாக இருக்க வைத்து, பின் மேற்படி குடிநீரை அருந்தச்செய்து அதன்பின் ஏழு நாட்கள் கஞ்சி கொடுத்துப் பிறகு உணவைச் சேர்க்கலாம்.

(395) சீந்தில், சிறுகாஞ்சொறி, முத்தக்காசு, சுக்கு ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, இருநாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சி அருந்த வாதசுரம் நீங்கும்.

<u>அதிசாரத்திற்குக் கியாழம்</u>

(404) சுக்கு, முத்தக்காசு, பேராமுட்டி, பங்கம்பாளை, வறட்-ஸுண்டி, புளியம்பட்டை, இலந்தைப் பட்டை, காட்டாத்திப்பூ, பெருமரப்பட்டை, குடசப்பாலை, ஆகியவற்றுடன் ஆறு நாழி நீர் விட்டுக் காய்ச்சி உழக்களவாகக் குறுக்கி இவற்றோடு அதிவிடையம், காசுக்கட்டி ஆகியவற்றைக் கூட்டி, அருந்த அதிசாரம் நீங்கும்.

(458-460) கொன்றை, சீந்தில், கருங்காலி, அத்தி, மருது, விளா, தென்னம்பூ, கட்டுக்கொடி, பூலா, முத்தக்காசு, செங்கிழுவை, கடலழிஞ்சில், திரிபலை, தேற்றான்கொட்டை, பூவரசு, ஈச்சங்குருத்து ஆகியன வகைக்கு மூன்று பலம்; ஆவிரை வேர் வகைக்கு முப்பது பலம்; கல்நார் முப்பது படி - இவற்றை ஒன்றாகக் கூட்டிக் காய்ச்சி இருபது படியாக்கி மூன்று நாள் குடித்திட வேண்டும். இதனால் தவனம், அழற்சி, நீரிழிவு, இளைப்பு, சோர்வு, உடல் முறிப்புடன் மயங்குதல், வியர்வை கடுத்து வீழ்தல், மிகுந்த தூக்கம், கொடிய கனவுகள் ஆகியன நீங்கும்.

(461) சாதிக்காய், காந்தம், சாதிபத்திரி, அபின், சாதி-லிங்கம், குரோசானி ஓமம், காசுக்கட்டி, கிராம்பு ஆகியவற்றைச் சம எடை கட்டிக் குடிநீரிட்டுக் கொடுக்க நீரிழிவு நீங்கும்.

குழம்பு

கொம்மட்டிக் குழம்பு

(297-298) பேய்க்கொம்மட்டிக்காயின் சாறு நாழி, தம்பலத்தின் சாறு நாழி, நொச்சியிலைச் சாறு நாழி, வெள்ளுள்ளிச்சாறு, இஞ்சிச்சாறு, ஆகியவற்றைக் காய்ச்சி நாழியளவாகக் குறுக்கி இதனோடு சாதிலிங்கம், சூதம், பெருங்காயம், வெண்காரம், இந்துப்பு, கடுகு, ஓமம், வெந்தயம், மிளகு, மஞ்சள், நேர்வாளம், காந்தம் ஆகியன வகைக்கு மூன்று கழஞ்சு ஆகிய அனைத்தையும் ஒன்றாக்கிக் காய்ச்சி, பழம்புளிப் பதத்தில் எடுத்து, சூ துளங் காயளவு உருட்டி உட்கொள்ள எண்வகைக் குன்மம், வாயு வர்க்கம், வயிற்றுநோய் முதலியன தீரும்.

(329-330) முள்ளிலவம் வேர், நாவல், முட்பூலா, முத்தக்காசு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை, சிற்றாமுட்டி, சீதேவி செங்கழு நீர், சிறுகீரை, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், பொன்னாங்காணி, இலா-மிச்சம், குழியாம்பல் ஆகியவற்றோடு இளநீர், பால் ஆகியன சேர்த்துக் காய்ச்சி வேகவைக்க வேண்டும். வெந்தபின், அதில் நெய் நாழியளவு கட்டி, சீனி, பேரீஞ்சு, திராட்சை, வெண்கோட்டம், ஏலம், தக்கோலம், சடா-மாஞ்சில், நாகப்பூ, பச்சிலை, கச்சோலம், சந்தனம், வெண்மருவு, கிளியூரல் பட்டை, வங்கம், செண்பக மொட்டு, அதிமதுரம், நெல்லி விதை, சதகுப்பை, சென்னகரம்பழம், நற்சீரகம் ஆகியவற்றை வேகவைத்து இடித்துக் கட்டி உட்கொள்ள பிரமியம் நீங்கும்.

(344) புளிநடலைக் கிழங்குமாவை மோர்கட்டி, கழாக்கி உட்கொள்ள குருதி பெருகும் கர்ப்ப நோய், கிறுமி நோய் நீங்கும்.

(370) ஆடாதோடை இலை, சீந்தில், வேம்பு, பேய்ப்புடோல், வேப்பலகு, வெட்பாலரிசி ஆகியவற்றை வகைக்கு இரு கழஞ்சு எடுத்தரைத்து இரண்டு படி நீர் கட்டி உழக்களவு காய்ச்சிக் குழம்பாக்கிக்கொள்ள விடச் சுரம் தீரும்.

எண்ணெய்

தைல பதம் அறியும் முறை

(83-85) எண்ணெய் தயாரிக்கும் நிலையில் வழுவழுப்பாக இளகிக் காண்பது மந்தமான பதமாகும். இடைநிலையான பதம் மெழுகுபோலக் காணும்; முடிவான பதம் இறுகித் தூளாகும் நிலையினது ஆகும். நோய்கட்கு எண்ணெய் இட இம்மூன்று பதங்களும் உரியன.

மந்தமான பதம் வாத நோய்களுக்கேற்றது. இடை-நிலையான மெழுகு பதம் பித்த நோய்கட்கேற்றது. இறுதிப்பதம் புண்களைப் போக்கும் தன்மையது.

எண்ணெயானது மேனியைத் திருமகளைப் போலப் பொலிவுறச் செய்யும். புண்களை ஆற்றும். வாத, பித்த, சிலேத்துமங்களைப் போக்கும். வீக்கம் முதலியவற்றை ஒழியச் செய்யும்.

பிரவைக்கு எண்ணெய்

(105) ஆவிரை வேர் நாழியளவு, துடரி, பூலா ஆகியன வகைக்கு இருநாழியளவு எடுத்து நான்கு பதக்களவு கசப்பு வேம்பாடல் கட்டி, எண்ணெய் காய்ச்ச வேண்டும்.

உளமாந்தத்திற்கு எண்ணெய்

(121) நிலக்குமிழ், துடரி, பூலா, நிலவேம்பு, நாவல் ஆகிய ஐந்தனோடு கோட்டம், வெள்ளுள்ளி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய், நெல்லி வற்றல், அதிமதுரம், வேம்பாடல் ஆகியவற்றைக் கட்டி எண்ணெய் காய்ச்சி இறக்கிக்கொள்ள வேண்டும். இதனை உட்கொண்டுவர வேண்டும்.

உளமாந்தைக்குக் குண்டலாதி ஏரண்டத் தைலம்

(125) சீந்தில், சிவனார் வேம்பு, நிலக்குமிழ் வேர், கொத்தான், கோட்டம், வேம்பாடல், கருஞ்சீரகம், அதிமதுரம், மிளகு, சீரகம் ஆகிய-வற்றைக் கட்டி எண்ணெய் எரித்து இறக்க வேண்டும். இவ்வெண்ணெய்யை உட்-கொள்ள, பதினெட்டே நாட்களில் உளமாந்தை பறந்தோடும்.

அதி குண்டலாதி ஏரண்டத் தைலம்

(126) சங்கம் வேர், இம்பூரல், சாரணை, ஆடாதோடை, ஞாழவளை, கையாந்தகரை, குமிழ்வேர், கருங்கோரைக்கிழங்கு, சிறீநாமுட்டி, மாகாளிக் கிழங்கு, புலியுடை வேர், முக்காவேளை, சீதேவி செங்கழுநீர், செவ்வள்ளி, கொத்தமல்லி, சீரகம், கற்கடகசிங்கி, அதிமதுரம், நெல்லி, திப்பிலி, கருஞ்சீரகம், சதகுப்பை, வேம்பாடல் ஆகியவற்றைப் பொடித்து எண்ணெய் காய்ச்சி அருந்த, காசநோய், உளமாந்தை, விப்புருதி முதலியன நீங்கும்.

(129) கருங்கோரைக்கிழங்கு, வெற்றிலை, குருவேல், இலாமிச்சம், கோட்டம் ஆகியவற்றைக் கூட்டி எண்ணெய் காய்ச்சி உட்கொள்ள தோட சுரங்கள், பித்தம் முதலியன தீரும்.

(131) தேங்காயிப் பாலில் ஒருபலம் இந்துப்பு கூட்டி, வெங்காயம், பூண்டு ஆகியன இரண்டு பலம் கொண்டு, சத்திச் சாரம் இருகழஞ்சு கூட்டி அவ்வகையில் கள்ளிப்பால் சேர்த்து எரித்து எண்ணெய் காய்ச்சி உட்கொள்ள குன்மம் அகலும்.

(136-137) வெங்காயம், நேர்வாளம், மிளகு, சுக்கு, திப்பிலி, கடுகு, நற்சீரகம், வெந்தயம், கெந்தகம், வசம்பு, வெதுத்தைப் பிசின், வெங்காரம், ஓமம், தாரிசு ஆகியவற்றைச் சம எடை எடுத்துக்கொண்டு, முதியோர் கூந்தல், நாயுருவி, குருந்து, ஆடாதோடை, கறிமுள்ளி, முருங்கை, தூதுவளை, வெள்வேல், சாரணை, சித்திரமூலம் ஆகியவற்றை நன்றாக அரைத்து வேப்பெண்ணெய் கலக்கி உட்கொள்ள குதிரைவலி நீங்கும்.

வெடிசன்னிக்கு எண்ணெய்

(140) திப்பிலி, அதிமதுரம், வெள்ளுள்ளி, செவ்வல்லி, வெதுத்தைப் பிசின், ஊமத்தை, சீதேவி செங்கழுநீர், தூதுவளை, நிலக்குமிழ் மிளகு, முத்தக்காசு, நன்னாரிப்பால், ஆவிரை, நாயுருவி, நிலவேம்பு, ஆகியவற்றைச் சேர்த்து எண்ணெய் காய்ச்சி இருபது நாள் உட்கொள்ள வெடிசன்னி மாறும்.

பெருவயிற்றுக்கு எண்ணெய்

(157) சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, வெள்ளுள்ளி, கடுக்காய், சாத்திரவேதிக் கிழங்கு நீர் ஆகியவற்றை வேப்பெண்ணெய் கூட்டி யருந்த, துன்பம் நீங்கி, மலம் கழிந்து, உதர தோடம் நீங்கும்:

(169) சாரணைக் கிழங்கு, இந்துப்பு, சுக்கு, வெள்ளுள்ளி, சித்திர மூலம், வெங்காரம், நேர்வாளம், ஆகியவற்றை ஆமணக்கெண்ணெய், கள்ளிப்பால் ஆகியவற்றில் கலந்து காய்ச்சிய எண்ணெயைப் பருக, பேதி-யாகும். பக்கசூலை, சர்வாங்க வாதம் ஆகியன தீரும்.

(170) சாரணை வேர், சித்திரமூலி, நறுவிலி வேர், இந்துப்பு ஆகியன வகைக்கு நாற்பலம் எடுத்துக்கொண்டு, ஒரு பலம் வெள்ளுள்ளி கூட்டி, வெங்காரம் எட்டு கழஞ்சு, நேர்வாளம் ஐம்பது கழஞ்சு சேர்த்து இவற்-றோடு கள்ளிப்பால், ஆமணக்கம் பால் ஆகியவற்றை வகைக்கு இருநாழி கூட்டிக் காய்ச்சி எண்ணெயாக்கி அருந்தலாம்.

வாத ரோகத்துக்கு எண்ணெய்

(182) எருக்கு, குருந்து, பெருமருந்து, சூரை, சிறுகுரும்பை, கரந்தை, நிலவேம்பு, கரிமுள்ளி, தூதுவளை, பருத்தி, கொடுவேலி, ஆதண்டை, முதிரைவேர், இவற்றை வகைக்கு இருபலம் எடுத்து நீர் சேர்த்துக் காய்ச்சி, சுக்கு, திப்பிலி, மிளகு, பெருங்காயம், வெள்ளுள்ளி, வெதுத்தைப் பிசின், வெந்தயம், இந்துப்பு, நற்சீரகம், ஓமம், நேர்வாளம், கருஞ்சீரகம், ஆகியவற்றைச் சம அளவு கூட்டி, நாழியளவு தண்ணீர் சேர்த்து, நாலொன்றாகக் காய்ச்சி, நல்லெண்ணெய், நறுநெய் இரண்டு படி கூட்டி, எண்ணெய் காய்ச்சிக் கொள்ள வேண்டும். இதை உட்கொண்டும் பூசியும் வர, வாத ரோகங்கள் நீங்கும்.

வறட்சிக் கரப்பானுக்கு மருந்து

(200-201) தண்ணீர் மீட்டான் கிழங்குச்சாறு ஒரு நாழியளவு, வரிக்கற்றாழைச் சோறு ஒரு நாழியளவு, தூதுவளை நான்கு பலம் ஆகியவற்றைக் கியாழத்தில் ஊறப்போட்டு, பிழிந்து வடித்துக்கொண்டு காயவைத்துப் பின்னர் அதில் எண்ணெய் ஒருநாழி விட்டு ஊறவைத்து அதனுடன் சிவந்தகொடுவேல், கருஞ்சீரகம் கூட்டி எட்டு கழஞ்சாக்கி இதனை உட்கொள்ள வேண்டும்.

(206) தூதுவளை, ஓரிதழ்த்தாமரை, நீலியிலை, எருக்குவேர், சித்திரமூலவேர் ஆகியவற்றைச் சமமாக எடுத்து, கார்போகரிசி, கருஞ்-சீரகம், கெந்தகம் கூட்டி நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி உட்கொள்ள வறட்சிக் கரப்பான் தீரும்.

(214) நிலவேம்பு, நிலக்குமிழ், துடரி, கச்சோலம், குமிழ்த்-தோல், சீதேவி செங்கழுநீர், பனை, கம்பிப் பிசின், அதிமதுரம், வேம்-பாடல், வெடியுண்டை ஆகியவற்றை எண்ணெய் காய்ச்ச வேண்டும்.

கண்டகரப்பான் எண்ணெய்

(229) தூதுவளை, ஓரிதழ்த்தாமரை, முத்தக்காசு, நன்னாரி, சாரணை, திரிகடுகு, கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, கையாந்தகரை, வேப்பந்தோல், தண்ணீர் ஆகியவற்றை ஒன்றுகூட்டி, எண்ணெய் சேர்த்துக் காய்ச்சியருந்த வேண்டும்.

(234) கொடுவேல், முல்லை, சாரணை, வீழி, முத்தம், ஆதண்டை, சிற்றமணக்கெண்ணெய், ஆகிய இவற்றை எரித்துக் காய்ச்சி உட்-கொள்ள வேண்டும்.

## கற்சூரைக்கு எண்ணெய்

(239-240) கொன்றை, கொடுவேல், ஆயில், வில்வம், சாரணை, கடுக்காய், குன்றி, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுகரோகணி, நேர்வாளம், வள்ளி, இந்துப்பு ஆகியவற்றில் கொன்றை முதலாக, குன்றியீறாக வகைக்கு முப்பலமும் ஏனையவற்றை இரு கழஞ்சும் கூட்டி அரைத்து, சிற்றாமணக்கெண்ணெய் நாழியுடன் உரியளவு சேர்த்துக் காய்ச்சியருந்த கற்சூரை போம்.

## நிதம்ப சூரைக்கு எண்ணெய்

(257) முடக்கொற்றான் சாறு - ஒரு உரி; நல்லெண்ணெய் - ஒரு உரி, சுக்கு, வசம்பு, உள்ளி, வெங்காயம், கடுகு, இந்துப்பு, சீனசாலை, சீதாரி வேர், தேவதாரம், சதகுப்பை ஆகியவற்றை வகைக்கு அரைக்கழஞ்சு எடுத்து அரைத்து ஒன்றாகக் கலக்கி, வேகவைத்து இறக்கி உட்கொள்ள நிதம்ப சூரை நீங்கும்.

## வாதகுன்மத்துக்கு எண்ணெய்

(294) உள்ளி ஆறு பலம், கொடுவேல், மிளகு, நிலவாகை, வீழி, சாரணை - இவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்து, திரிகடுகு, இந்துப்பு ஆகியவற்றைக் கள்ளிப் பாலில் கலந்து எண்ணெய் காய்ச்சி அருந்த வேண்டும்.

(301-302) உள்ளி, இஞ்சி, இந்துப்பு, சிவந்தி, சிவதை, கொள்ளு, நலவாகை வேர், மிளகு, திப்பிலி, ஆதண்டை, எண்ணெய், முடக்கொற்றானிலை, சம அளவு கழற்கொடி, சாரணை வேர், சித்திரமூலம், காட்டு நொச்சி, நிலவாகை, கொன்றை, கழற்சிக்காய், ஆதண்டை, காட்டு முருங்கை, சிவதை,

செம்முள்ளி, காட்டாமணக்கெண்ணெய், இந்துப்பு, கள்ளிப்பால் கூட்டிக்கொள்ள குன்மம் போம்.

(319) கடுக்காய், மஞ்சள், இந்துப்பு, கடுகு, உள்ளி, வெண்காரம், வீழி, ஆமணக்கு, நிலவாகை வேர், வகைக்கு மூன்று பலம் கூட்டி எரித்து ஆமணக்கெண்ணெயில் கொடுக்க கர்ப்ப விப்புருதி நீங்கும். இதில் கள்ளிப்பால் கழஞ்சளவு கூட்டிக் கொள்ள வேண்டும்.

(327) கடுக்காய், கருஞ்சீரகம், தூதுவளை, முத்தக்காசு, நன்னாரி இவற்றை எரித்து எண்ணெய் காய்ச்சி அருந்த கிரந்திக் கட்டி நீங்கும்.

(338-341) சீந்தில், கறிமுள்ளி, தூதுளை, சிவனார் வேம்பு, நிலவேம்பு, பன்றிக்குறும்பனை, பொன்னாங்காணி, நிலக்குமிழ்வேர், தாமரை, சிற்றாமல்லி, பேராமல்லி, முத்தக்காசு ஆகியவற்றுடன் சம அளவு பால் விட்டு ஊறவைத்துக் காய்ச்சி ஐந்து பங்குக்கு இரண்டு பங்கு ஊறவைத்துப் பிழிந்து வடித்து, ஆறிப்போகுமுன் நெய் - ஒரு நாழி கூட்டி, நல்லெண்ணெய் ஒரு நாழியுரி கூட்டி, நல்லெண்ணெய், சம அளவு இடித்த வேப்பந்தோலை பதினாறு உரியளவு கூட்டுக. சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், ஏலம், அதிமதுரம், வசம்பு, வெள்ளுள்ளி, கர்கடகசிங்கி, மலைவெட்டிவேர், கிராம்பு, வசுவாசி, கிளியூரல், கண்டிவெண்ணெய், தக்கோலம், ஓமம், பச்சிலை, கச்சோலம், கருஞ்சீரகம், நற்சீரகம், கொத்தமல்லி, குக்கில், சடாமாஞ்சில், அரத்தை, கடுகரோகணி ஆகியவற்றைக் கூட்டிக் காய்ச்சி அருந்த பீனிசம் போகும்.

நெய்

(248) பனிச்சைப்பயிறு, துத்தி, மலைத்தாங்கி, வறட்பூலா, முத்தக்காசு, சுக்கு, அதிவிடையம், நற்சீரகம், ஓமம், குந்திருக்கம் ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து நெய் கூட்டி வேகவைத்து, அருந்த வயிற்றுக்கடுப்பு தீரும்.

குடல்சேர் வறட்சிக் கடுப்புக்கு நெய்

(250) முத்தக்காசு, மலைத்தாங்கி, துத்தி, நிலப்பனை வேர், காசுக்கட்டி, நெல்லி, குந்திருக்கம், சீரகம், சாதிக்காய், இலவம்பிசின், அதிவிடையம் ஆகியவற்றை எரித்து நெய் காய்ச்சி உட்கொள்ள, பித்தக்-கொதிப்பு நீங்கும்.

பித்தத்துக்கு நெய்

(260) பொன்னாங்காணி, முசுமுசுக்கை, நறுந்தாளி, பழம்பாசி, பூலாவிலைச்சாறு, சித்தாமுட்டி, சீதேவிச் செங்கழுநீர், தாழைவிழுதச் சாறு, ஆவின்பால், இளநீர், கோட்டம், அதிமதுரம், நற்சீரகம், கொத்தமல்லி, செண்கப்பூ, நாகப்பூ, சடாமாஞ்சில், தேற்றான்கொட்டை, சந்தனம், நன்னாரி, முத்தக்காசு, இலாமிச்சம், வெட்டிவேர், இவற்றை வகைக்கு மூன்று கழஞ்சு கூட்டி, நெய், பனஞ்சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி உட்கொள்ள வேண்டும்.

(268-270) பொன்னாங்காணி, சீதேவி செங்கழுநீர், நிலவேம்பு, சிறுகீரை, ஓரிதழ்த்தாமரை, கீழ்க்காய் நெல்லி, வரித்தக்காளி, தொய்யல், நெருஞ்சி, நெய்தல், நீர்ப்பூலா, முசுமுசுக்கை, கோரைக்கிழங்கு, சித்தா-முட்டி, சிற்றாமல்லி, பேராமல்லி, நிலக்குமிழ், முல்லை, அபின், நன்னாரி,

இலாமிச்சம், முத்தக்காசு, வேலிப்பருத்தி, நரிப்பயறு, பேராமுட்டி, தண்ணீர்மீட்டான் சாறு கட்டி, ஆவின்பால் ஒரு நாழி, இளநீர் ஒரு நாழி தண்ணீர் ஒரு நாழி, சந்தனம், கோட்டம், இலவங்கம், சீரகம், நெல்லி, தக்கோலம், சாத்திரவேலி, கிளியூரல், சடாமாஞ்சில், சதகுப்பை, ஏலம், கச்சோலம், சாதிக்காய், கிராம்பு, வெட்டிவேர், சந்தனம், வசுவாசி ஆகியவற்றை வகைக்கு இரு கழஞ்சு சேர்த்து, எல்லாம் சேர்த்து இடித்து வடித்து, நெய் காய்ச்சி அருந்த வாதப்பிரமிய நோய் நீங்கும்.

(303–305) உள்ளி, இஞ்சி, நெல்லி ஆகியவற்றின் சாற்றில் இளநீர், பால் ஆகியன வகைக்கு ஒரு நாழி கட்டி, வேகவைத்து, ஒரு நாழியாகக் குறுக்கி அதில் ஒரு நாழி நெய் கட்ட வேண்டும். கோட்டம், ஏலம், வெண்காரம், இந்துப்பு, நற்சீரகம், திப்பிலி, கொத்தமல்லி, கிராம்பு, வசுவாசி, சேங்கொட்டை முதலியனவற்றைக் கட்டி வேகவைத்த அந்நெய்யை உட்கொள்ள குன்மம், மாந்தம், பித்தகுன்மம், எரிகுன்மம், சத்தி குன்மம், வருணவாதம், வலிகுன்மம் முதலியன விரைவில் தீரும்.

(306–308) சிவனார் வேம்பின் சாறு, கள்ளிச்சாறு, சாரணைச்சாறு, முருக்கஞ்சாறு, ஆகியவற்றைச் சமமாக எடுத்து, நீர் சேர்த்துக் காய்ச்சி நாழியுடன் உரியளவு ஆகிய அளவாகக் குறுக்கி ஆமணக்கு நெய் கட்ட வேண்டும். எண்ணெய், நெய் வகைக்கு இருநாழி, கடுக்காய், உள்ளி, இந்துப்பு, இஞ்சி, நேர்வாளம், வெண்காரம், சாதிலிங்கம், கடுகரோகணி, வசம்பு, பெருங்-காயம், திப்பிலி, காந்தம், கெந்தகம், விழிவேர் முதலியவற்றைக் கட்டி வேகவைத்து வடித்து நக்க வாத குன்மம் போகும்.

(309–312) கடுக்காய் கால் பலம், இந்துப்பு ஒரு பலம், வெள்ளுள்ளி கால் பலம், இஞ்சி மூன்று பலம், நேர்வாளம் முப்பது பலம், விழிவேர் ஒரு பலம், சிவதை ஒரு பலம், மேலும், சாரணை, கொடுவேலி, விழி,

எலுமிச்சை, உகாய், மாவிலங்கை, கொன்றை, பாலை, முருங்கை, வாகை, ஆகியவற்றைச் சம அளவு வடித்து, நெய் ஒரு நாழி கலந்து உள்ளி, சுக்கு, திப்பிலி, வெண்காரம், மிளகு, இந்துப்பு, சிவதை, காயம் ஆகியன கூட்டி நெய் காய்ச்ச வேண்டும். அதில் கள்ளிப்பால் சம அளவு கூட்டி, உள்ளி இரண்டு பலம், இந்துப்பு இரண்டு பலம், சிவதை வேர் ஒரு பலம், கள்ளிப்பால் மூன்று பலம் கூட்டிக்கொண்டு அருந்த குன்மம் நீங்கும்.

(324) நற்சீரகத்தை ஓட்டில் வைத்து வறுத்து இடித்துத் தூள் செய்துகொண்டு, அதில் ஏழு பங்கு சர்க்கரை கூட்டி ஆமணக்கு நெய்யில் கலந்து வேகவைத்து உட்கொள்ள வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

(402-403) ஏலம், அதிமதுரம், நற்சீரகம், பூநீறு, கல்நார், நெல்லி, கனப்பழுத்திப்பருப்பு, விளா, திராட்சை, ஆநெய் கூட்டி கால் பங்கு சர்க்கரை சேர்த்து, ஒரு மண்டலம் உட்கொள்ள முக்குற்றங்களும், வெப்பமும், சூலைகளும் தீரும்.

## களி

(122) குறிஞ்சாவிலையை இடித்துக் குறுவை நெல் மாவுடன் கூட்டிக் களி செய்து எண்ணெயுடன் உண்டுவர உளமாந்தை முச்சிருமல் தீரும்.

## பிட்டு

(123) வேங்கைமரப் பட்டையைக் குறுவைநெல் மாவுடன் கூட்டி, பிட்டாக அவித்து எண்ணெயில் தோய்த்து அருந்த உளமாந்தையோடு, சீயொடு கூடிய புண், இருமல் தீரும்.

## கற்பம்

### பெருமான் சிறுமான் கற்பம்

(274) வேம்பு, நொச்சி, இரண்டன் வேரையும் குத்திக் குழித்தைலம் எடுத்து அதில் பெருமான், சிறுமான் இரண்டன் பித்தாகிய கத்தூரியைக் குழப்பி, காசெடை அளவு உட்கொள்ள, இடுப்பில் சேர்ந்த வாதமும் வாயுவும் நீங்கும். குட்டம், பறங்கி நோய்கள் தீரும்.

## பற்பம்

### இரசபற்பம்

(280-284) இரசம் பத்து கழஞ்சு எடுத்து, ஆவின் பாலால் அரைத்துக்கொள்ள வேண்டும். சுக்கையும் சர்க்கரையையும் கட்டி அரைத்துப் பானு செய்து அதனுள் இவ்விரசத்தை வைத்து மூடி வெயிலில் உலர்த்திப் பின் அகல் செய்துகொள்ள வேண்டும். நல்லதொரு பானையில் பாதியளவு மணல் போட்டு, அதனுள்ளே பாணி வைத்து மேலே மணல் போட்டு மூடி, பானையைச் சீலைமண் செய்து அடுப்பில் வைத்துச் சிறு-தீயாக மூன்று சாமம் எரித்து வெந்தபின் அவிழ்த்துப் பொடித்துக்கொள்ள வேண்டும்.

பின்னர், இப்பற்பத்தால் கொண்டு வாத, பித்தங்களால் நேரும் தவணங்கள் தீரும். மேலும் வாத சுவாசம், பித்த சுவாசம், சுவாச காசம், தோடம், சுரவாதம் முதலானவற்றைப் போக்கும் மருந்து-களை இப்பற்பம் கொண்டு செய்யலாம்.

## இரசபற்பத்தின் குணம்

(275) இரசபற்பத்தை வெற்றிலையில் தின்ன உளைவு, கடுப்பு, தீரும். உடம்பில் பூச வீக்கம், சூலை, வாத பித்த சிலேத்துமங்களின் அழிவைச் செய்யும். எண்குணங்கள், வாயு, நீர்க்கழிச்சல், பாதத்தைப் பற்றும் பெருவாதம், வீக்கம், பறங்கியிடைச் சீதம் ஆகியவற்றைப் போக்கும்.

## தாம்பிர பற்பத்தின் குணம்

(276) தம்பிர பற்பத்தைத் தடையிலாது அருந்த, நீராம்பல், வாயுச்சூலை, திரண்ட வாயு, சத்தி, விக்கல் முதலியன தீரும்.

## காந்த பற்பத்தின் குணம்

(279) காந்த பற்பம் வீக்கம், நீர்க்கழிச்சல், வயிறு கழிச்சல், ஈளை, காமாலை, வாயு, வாதம், பித்த பாண்டு, கிரிகை, பெருவயிறு, மூலவாயு ஆகியவற்றைப் போக்கும்.

## குமரி பற்பம்

(285-287) அரப்பொடி ஐந்து கழஞ்சு, காந்தம் சம எடை, கந்தகம் ஐந்து கழஞ்சு, சூதம் இரண்டு கழஞ்சு ஆகியவற்றைக் குமரிச்-சாற்றால் அரைத்துச் சட்டியிலிட்டு நான்கு சாமம் எரித்து வேகவைக்க வேண்டும். வெந்தபின், அம்மருந்தில் எட்டுப் பணவெடை எடுத்து, மிளகு, இந்துப்பு, திப்பிலி, சுக்கு, ஓமம், நற்சீரகம், அமிர்தக்கடுக்காய் ஆகியவற்றைச் சமன் எடுத்து அவ்வெடைக்குக் கூட்டிக்கொள்ள வேண்டும். இதுவே குமரி பற்பம் ஆகும். இக்குமரி பற்பத்தை வெருகடியளவு உட்-கொள்ள வயிற்றுவலி, எரிகுன்மம், பிள்ளைப்பிணிகை, பெருவயிறு, பேராம்-பல், பித்த பாண்டு, அம்மை, கிராணி ஆகியன தீரும்.

செந்தூரம்

(271) பிரமியம் உள்ளவர்க்கு, சர்க்கரையும் நெய்யும் கூட்டி அவற்றோடு வங்கச் செந்தூரமும் கூட்டி, அரைமண்டலம் உட்கொள்ள நீர்த்தடை நீங்கி நோயும் தீரும்.

(401) காரியம், இரசம் - இரண்டையும் கூட்டி ஒன்றாக்கிச் செந்தூரம் செய்து உட்கொள்ளல், மேலும் சங்கச் செந்தூரம் உட்-கொள்ளல், கற்பூரம், புனுகு ஆகியவற்றைச் சலாகையிற் செலுத்தி நல்லெண்ணெய் கூட்டிப் பின் குளிரச் செய்து நுகர்தல் ஆகியன பிரமியத்தைப் போக்கும்.

புறமருந்து

பூச்சுமருந்து

சாறு

(106) ஆவிரையிலையை நசுக்கி ஓட்டில் வைத்துக்கொண்டு புண்ணில் வைத்துக் கட்ட பிளவைப்புண் பட்டுப்போகும்.

தயிர் சோறு

(101-103; 161-162; 299) காரச்சீலையிட்ட பிளவை மற்றும் புண்களுக்கு அக்காரச்-சீலையை எடுத்தபின் தயிர்சோறு வைத்துக்கட்ட, அவ்-வெம்மை நீங்கிப் புண் நன்கு ஆறும்.

குடிநீர்

(233) உள்ளிப்பூண்டுச் சாறு ஒரு நாழி, இஞ்சிச்சாறு ஒரு நாழி, தண்ணீர்விட்டான் சாறு ஒரு நாழி, கற்றாழைச்சாறு ஒரு நாழி, நெல்லிச்சாறு ஒரு நாழி, ஆவின்பால் ஒரு நாழி ஆகியவற்றைக் கூட்டிக் குடிநீரிட்டு மேலே பூசி ஊறவிட வேண்டும். இதனால் சுரச்சூரை நீங்கும்.

எண்ணெய்

(142) முத்தக்காசு, வெள்ளறுகு, வேம்பு, கொன்றை, எருக்கு, இலைக்கள்ளி, குறிஞ்சி, சாரணை, நொச்சி, ஆடாதோடை, ஈசுரமூலி, வீழி, ஆதண்டை, ஆயில், முள்ளி, தூதுவளை, முருங்கைவேர், கந்தகம், குங்கிலியம், கறிமஞ்சள், இஞ்சி, வெங்காரம், உள்ளி, ஓமம் ஆகியவற்றை வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றில் வேகவைத்து வடித்துப் பூச வாதநோய் நீங்கும்.

புறவீச்சுக் காண்டத் தைலம்

(153-154) இரசம், கெந்தகம், வெள்ளுள்ளி, மிளகு, சேங்-கொட்டை, பசுவெண்ணெய் ஆகியவற்றை அளவாக எடுத்து, அரைத்து எண்ணெய்க் காய்ச்சி, உட்கொள்வதோடு மேலுக்கும் நோயுள்ள இடங்களில் பூசப் புறவீச்சு நீங்கும்.

(213) குத்துக் காயத்திற்கு, ஒற்றடமிட்ட மூன்றாம் நாள் புள்ளடி, சிறிய தம்பல வேர், ஆமணக்கு, முத்தக்காசு, நன்னாரி, ஏலம், இலவங்கம், வேம்பாடல், அதிமதுரம் ஆகியவற்றைக் கொண்டு எண்ணெய் செய்து இடவேண்டும்.

(219-220) கொன்றை, தூதுவளை, நிலவேம்பு, குமிழ்வேர், கடுக்காய், ஆவிரை வேர், நத்தைச்சூரி, சிவனார் வேம்பு, மிளகு, முத்தக்காசு, மாகாளிக்கிழங்கு, கறிமுள்ளி, நாயுருவி, முட்சூரை, நன்னாரி ஆகியவற்றை ஒன்றுகட்டி வெள்ளுள்ளி, மிளகு, மஞ்சள், அதி-மதுரம், வேம்பாடல், வெண்கோட்டம், செவ்வகரப் பழம், சாதிக்-காய், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் முதலியவற்றைக் கட்டி எண்ணெய் காய்ச்சி இடவேண்டும். வாத கரப்பான் நீங்கும்.

(243-244) நத்தைச்சூரி, நாயுருவி, சாரணை, சித்தி, மூலம், வீழி, ஆதண்டை, வெள்வேல், எருக்கு, முத்தக்காசு, தூதுவளை, புங்கங்கொட்டை, முல்லை, வில்வம், ஈச்சுரமூலி, சேவுகன் கிழங்கு, நன்னாரி, ஓரிதழ்த்தாமரை, மஞ்சள், உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, கோட்டம், வெண்காரம், கெந்தகம், நேர்வாளம், வெண்கோட்டம், அதிமதுரம், பூமிச்சருக்கரை, நெல்லிக்காய், வெதுத்தைப்-பிசின் வகைக்கு ஒரு கழஞ்சு கொண்டு, நறுநெய், வேப்பெண்ணெய், ஆமணக்-கெண்ணெய் இவற்றை வடித்துப் பூசவேண்டும்.

கபால கரப்பானுக்கு எண்ணெய்

(252) முத்தக்காசு, தூதுவளை, சீதேவி செங்கழுநீர், ஓரிதழ்த்-தாமரை, சிவனார் வேம்பு, மலைத்தாங்கி, கறிமுள்ளி, கொன்றைவேர் ஆகியவற்றைக் கழஞ்சளவு கட்டி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, செவ்வகரம்பழம், கடுகரோகணி, வெதுத்தைப்பிசின், அதிமதுரம் ஆகியவற்றைக் கட்டி, எண்ணெய் காய்ச்சியிட கபால கரப்பான் நீங்கும்.

(288-290) அரிதாரம், கொன்றை, மருந்து, கொடுவேலி, வெள்ளுள்ளி, வசம்பு, சென்னகரம், ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, இலைக்கள்ளியை வாட்டிப் பிழிந்த சாற்றில் அரைத்துக்கொள்ள வேண்டும். இதனோடு நெய், நல்லெண்ணெய் ஆகியவற்றில் இரு மஞ்சளை-யும் பொடித்துத் தூவிக் காய்ச்சி மேலே கொள்ள வேண்டும். இவ்-வெண்ணெயைப் பூசிப் பிடித்து, வீக்கத்திலிட்டு இரவில் பன்னிரண்டு எருக்-கிலையை வாட்டிப் பதத்துடன் கட்டிவர வாத கரப்பான் வீக்கம் நீங்கும்.

(295) அரத்தம்பூ, இலை, வேம்பாடல், அதிமதுரம், செஞ்-சந்தனம், புளியங்கொட்டைத் தோல், வெண்கோட்டம், சாத்திரவேதி ஆகியவற்றைச் சம அளவு எடுத்து எண்ணெய் காய்ச்சிவிட, தீப் பித்தத்தால் எழுந்த ஒடு புண் உலர்ந்து போகும்.

(300) பஞ்சமூலம், வேம்பாடல் ஆகியவற்றை வகைக்கு இரு கழஞ்சு கூட்டி ஒடு வெண்ணெய் காய்ச்சி இட ஒடு புண் நீங்கும்.

(331-334) வாதமடக்கி, காற்றோட்டி, மரவாதன்டை, மா-விளங்கு, சாரணை, முருங்கை, உகாய், நொச்சி, சிந்தி, மூலம், புங்கு, வேம்பு, பொற்கொன்றை - வகைக்கு மூன்று பலம் கியாழமிட்டு, வெந்த-பின் பத்துப் பங்கு ஆமணக்கெண்ணெய், நறுநெய், நல்லெண்ணெய், வேப்-பெண்ணெய்; புங்கம்பழம் நாறு கட்டி அரைத்து, காய்ச்சி சாதிலிங்கம், துரிசு, கெந்தகம், அரிதாரம், பெரிய குரும்பை, தாமரை, பெருங்-காயம், வெருத்தைப் பிசின், காரம், உள்ளி, சுக்கு, வெந்தயம், ஓமம், கடுகு, திப்பிலி, வசம்பு, வாலுகுவை, பிசின், அரத்தை, கடுக்காய், கார்போகரிசி, கரியமிளகு, சேங்கொட்டை இவற்றை எரித்துக் கூட்டி எண்ணெய் இட வாதம் இறங்கும்.

(335-337) எருக்கு, குருந்து, வீழி, சங்கு, தூதுவளை, நெற்று, சிவனார் வேம்பு, சித்திரமூலம், கறிமுள்ளி, வெள்ளறுகு, அமுக்கிரா, கருஞ்சூரை, இஞ்சி, கொன்றை, கழற்சி, குறிஞ்சி, சிறுகளா, கள்ளி, விளாத்தி, எருமை முல்லை, அகப்பை, முத்து, ஆவிரை, நன்னாரி, சென்-கைரம், சாதிக்காய், செவ்வள்ளி, பூலா, எருக்கு, திப்பிலி, கெந்தகம், மிளகு, அரிதாரம், சீனக்காரம், அடுக்கு மஞ்சள், சீதாரி, தான்றிக்காய், வசுவாசி, குரும்பை, அகில், வங்கம், பெருங்காயம், நேர்வாளம், கார்-போகரிசி ஆகியவற்றை சம எடை அரைத்து ஆமணக்கெண்ணெய், வேப்-பெண்ணெய் சேர்த்து வேகவைத்து வடித்துப்பூச வாத வீக்கங்கள் பறந்தோடும்.

வெண்ணெய்

(110) நெல்லி, நிலப்பனங்கிழங்கு, நெற்பொரி, ஆவாரை வேர் ஆகியவற்றைப் பசுவெண்ணெய் கூட்டி அரைத்துப் பிளவை வீக்கத்தில் பூச, பிளவையில் தோன்றும் காய்ச்சல், காயம், கண்ணில் நீர் வழிதல், மூக்குநீர்ப் பாய்ச்சல் முதலியன நீங்கும். இதனுடன் தாய்ப்பால் கூட்டிக்கொள்ள வலி நீங்கும்.

(111) ஆவிரை, அல்லி, நெல்லி ஆகியவற்றுடன் பூலாவின் வேரும் கூட்டிப் பசுவெண்ணெயில் குழைத்துப்பூசப் பிளவையின் வெம்மையான வீக்கம் தீரும். மேற்படி வெண்ணெயில் தயிரையும் உடன் கூட்டிக்கொண்டு பூசலாம்.

(112) தாய்ப்பால், கோரைக்கிழங்கு, பசுவெண்ணெய் மூன்றையும் கூட்டி அரைத்து வழித்து அகலில் வைத்துப் பிளவையின் முகத்தில் பூச, சுரத்தைத் தோற்றுவிக்கக்கூடிய அவ்வீக்கம் தீரும்.

நெய்

வறட்சிப் பித்தத்திற்கு நெய்

(236) சீதேவி செங்கழுநீர்ச் சாறு ஒரு குறுணி, ஆவின்பால் ஒரு நாழி, நெய் இருநாழி, சதகுப்பை, கொத்தமல்லி, அதிமதுரம், கோட்டம், செண்பகப்பூ, சந்தனம், ஏலம், சீரகம், கற்கண்டு ஆகியன வகைக்கு ஐந்து கழஞ்சு எடுத்து அரைத்துக் காய்ச்சி நெய் பதத்தில் வடித்துக்கொள்ள வேண்டும். இந்நெய்யைக் கொண்டு வாரத்திலொருநாள் தலை முழுகிவர, காது மந்தம், வறட்சிப் பித்தம் நீங்கும்.

சீலை

(101-103) பக்கப் பிளவை நோய்க்குக் கருவி கொண்டு கீறி, காரம் வைத்துக் கட்ட நீங்கும்.

வெண்காரம், துரிசு, பாடாணம் ஆகியவற்றைச் சம அளவு எடுத்துப் பொடித்து, வெண்ணெய் சேர்த்து அரைக்க வேண்டும். இவ்வாறு அரைத்த காரத்தைச் சீலையில் தடவிக்கொண்டு, இச்சீலையைப் புண்ணில் உள்தள்ளியிட பிளவை கரைந்து உருகி வலி நீங்கும். பின் மூன்றாம் நாள் தயிர்சோறு வைத்துக் கட்ட வேண்டும்.

(161-162) துரிசு, வெள்ளைப் பாடாணம், கல் சுட்ட பொடி ஆகியவற்றை முட்பூலாவிலைச் சாற்றால் அரைத்துக் காய்ச்சிப் பொடியாக்கி நெய்யில் போட்டு புண்களின்மீது சீலையிட வேண்டும். இக்காரச் சீலையால் புண்கள் கரைந்தால் மூன்று நாட்கள் தயிர்சோறு வைத்துக் கட்டிப் பின் வெந்நீரால் கழுவி புகை காட்ட வேண்டும்.

(299) காட்டுக் கள்ளிப்பாலைச் சீலையில் ஊட்டி, தசையில் சீழ் அழியும் புண்ணில் உள்செலுத்தி மூன்று நாள் காரம் ஊட்ட வேண்டும். புண் கரைந்தருகும். பின் தயிர்சோறு வைத்துக் கட்ட வேண்டும்.

புகை
---

(163) இரசம், ஈயம், சேங்கொட்டை, சங்குச் சுட்ட பொடி, மஞ்சள் ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு கட்டிப் புகைக் காட்ட வாதப்பிரமியப் புண் தீரும்.

(164) வங்கம், வெள்ளுள்ளி, மரமஞ்சள், கடுக்காய், சேங்கொட்டை, சுக்கு, இரசம், கார்போகரிசி, அரிதாரம், வெண்-கடுகு, பாடாணம், துரிசு, துத்தம், வேம்பு, நிமிளை, வெண்காரம், வசம்பு ஆகியவற்றைப் பால் கட்டிப் புகை காட்ட வேண்டும். இதனால், மேற்படி வாதப் பிரமியப் புண் நீங்கும்.

(256) பாம்புக் கண்டம், குங்கிலியம் இரண்டையும் மையமாகப் பொடித்துக்கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் தணலெடுத்து அதில் மேற்படித் தூளை இடப் புகை எழும்பும். அதன்மீது, தூம்பவுரலைக் கவிழ்த்து அவ்வுரல்மீது நோயாளரை அமரச்செய்து, அவர்தம் குறியில் அப்புகை படுமாறு செய்தல் வேண்டும். இதனால் நிதம்ப சூலை தீரும்.

கலிக்கம் (கண்ணிலிடும் மருந்து)
-----

குதிரைவலி வாதத்திற்கு அஞ்சனம்
---------------------

(134) சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, உள்ளிப்பூண்டு, கொத்தமல்லி பருப்பு, வசம்பு ஆகியவற்றைக் கட்டி எலுமிச்சம்பழச் சாறு

விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். குதிரைவலி ஏற்படும்போது இதனை எலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்து, இரு கண்களிலும் தீட்ட, குதிரைவலி வாதம் நீங்கும்.

நசியம் (மூக்கிலிடும் மருந்து)

(135) பூவம்பழம், பழவரப்பு, புதிய மிளகு, இந்துப்பு ஆகியவற்றைப் பொடி செய்து, காட்டெருமைப் பாலிற் சேர்த்து, தாய்ப்பாலில் கலக்கி இரு நாசிகளிலும் விட, கபால வலியும் பைசாசமும் நீங்கும்.

(191) சாரணைக் கிழங்கு, இந்துப்பு, மிளகு, சீனி ஆகியவற்றை நெய்யில் கூட்டி உட்கொள்வதோடு, அவற்றைத் தாய்ப்பாலில் தட்டிப் பிழிந்து மூக்கிலிட நிலவுடன் கூடிய மூக்கடைப்பும், நீர்ப்பாய்ச்சலும் தீரும்.

(342) இரசம், கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், சங்கு, குந்திருக்கம், பாடாணம், ஆகியவற்றை, படியும் நாழியும் கூடிய அளவு நீர் சேர்த்து அரைத்துத் திரியிலூட்டி, நறுநெய் ஊற்றிக் கொளுத்தி, அதன் துளியை நாசியில் விட பீனிசம் தீரும்.

வேது

(245) எண்ணெய், நறுநெய், வேப்பெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய் ஆகியவற்றை வடித்துப் பூசி அரைச்சாமப் பொழுது ஊறவைத்து வேது பிடிக்க வேண்டும்.

(246) குந்து, உள்ளி ஆகியவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்து முள் எண்ணெயில் போட்டுப் பூசியும் வேது பிடிக்கலாம்.

ஒற்றடம்

(212) குத்துக் காயத்திற்கு உடனே உள்சீலையிட்டு, இரத்தக் கன்னியை உள்வைத்துத் தசையைத் தள்ளி மூடிவிட்டு, எலுமிச்சம்பழத்தைக் கொண்டு எண்ணெய் ஒற்றடம் சூட்டுடன் இடவேண்டும்.

குளியல்

(215) வில் முதலான கருவிகளால் காயம் பட்டவருக்கு, உடம்பு உலர்ந்து போகுமானால் வேப்பம்பட்டைச் சுடுநீரில் ஊறவைத்து அந்நீரால் குளிப்பாட்டுதல் நன்று.

## துணைமருந்து

(176) எருக்கம்பால், கிராம்பு, திரிகடுகு, இந்துப்பு, கருஞ்சீரகப்பொடி, உள்ளிப்பூடு, கையாந்தகரையிலைச் சாறு, பிரமியிலைச் சாறு ஆகியன கொண்டு இயற்றப்பெறும் சூரணத்தை,

(1) நெய்யில் உட்கொள்ள பித்த பாண்டு தீரும்.

(2) எண்ணெய், சர்க்கரையில் உட்கொள்ள வெப்பு நீங்கும்.

(3) ஆவின்பாலில் உட்கொள்ள காசரோகம் போகும்.

(277-278) வங்கம், காரீயம் ஆகியவற்றைக் கொண்டு இயற்றிய செந்தூரத்தை உட்கொள்ளும் நிலையில்,

(1) சர்க்கரை, கற்கண்டு - இவற்றில் கொள்ள சலக்கழிச்சல் தீரும்.

(2) ஆமணக்கு நெய், பசு நெய், தேன் - இவற்றுடன் கொள்ள வயிறு கழிச்சல் நீங்கும்.

(3) இளநீரில் கொள்ள சலப்பிரமியமும் போகும்.

(4) சுக்குக் குடிநீரில் கொடுக்க வாதகுன்மம் போம்.

(5) சுக்குக் குடிநீர் - அதிக அளவு நீர்விட்டுக் காய்ச்சிக் குறுக்கி, அதில் கொடுக்க பித்தகுன்மம் தீரும்.

(6) கருப்புக் கட்டியில் கொடுக்க எரிகுன்மம் நீங்கும்.

(7) நொச்சியிலைச் சாற்றில் தர, வலிகுன்மம் ஓடும்.

(8) திப்பிலியும் தேனும் கூட்டிக்கொடுக்க சத்தி குன்மம் அழியும்.

(9) இஞ்சிச் சாற்றில் கொடுக்க, குன்ம வகைகள் அனைத்தையும் பொதுவாகப் போக்கக் கூடியது.

## பத்தியம்

(273) மாதத்திற் கொருமுறை பேதிக்கும், வாந்திக்கும் மருந்து கொள்ளுதல், மாதமொருமுறை மகளிரைக் கூடுதல், உணவுக்குப்பின் சிறுக நடத்தல், அதன்பின் பால் பருகுதல், வெந்நீர் குடித்தல், மீன் உண்ணாதிருத்தல் ஆகியன பொது நிலையில் நோய் வாராதிருக்க மேற்கொள்ளும் உணவாதி ஒழுக்க நெறிகளாகும்.

நோய் வந்துற்ற காலை இவ்வாறு உணவு முதலியவற்றில் ஒழுக்க நெறிகள் கடைப்பிடிக்கப்படும்போது, அவ்வொழுக்க நெறி பத்தியம் எனப்படும்.

பத்தியத்தில் கொள்ளுதற்குரியன

(415) ஆமை, உடும்பு, சிவல், காடை, போத்தி, நத்தைச்சூரி, முருங்கைப் பூவும் பிஞ்சும், புடலங்காய், முசுட்டையிலை, பொன்னாங்காணி, எண்ணெய் ஆகியன.

பத்தியத்தில் ஏலாதன

(412-413) கொள்ளுக்காடி, கொம்மட்டிக்காய், கோழி, பன்றி, செம்மறியாடு, முள்ளுள்ள பாகற்காய், பூசணிக்காய், கீரைக்கீரை, ஆரைக்கீரை, சேம்பு இவற்றை எவ்வளவு தின்றாலும் உண்ட மருந்து பலனற்றுப் போகும்.

மாங்காய், இளநீர், கத்தரிக்காய், மாப்பண்டம், திப்பிலி, கடுகு, சுக்கு, தேங்காய்நெய், பால், கிழங்கு, உப்பு, வெங்காயம், பெருங்காயம், மாங்காய், சுராபானம் ஆகியவற்றை அருந்தாதிருத்தலும், மைதுனம் மேற்கொள்ளாமையும் மருந்துக்குச் சமமானவை.

கழிச்சல் பத்தியம்

(414) மலமும் நீரும் கழிந்த மனிதர் முயல், உடும்பு, காடை, சேவல், கவுதாரி, நத்தை, வெள்ளாட்டின் உப்புக்கண்டம், முருங்கைக்காய், மீன் ஆகியன உட்கொண்டால் உயிருக்கே கேடு விளையும்.

பிணிக்குப் பத்தியம்

(107) எல்லாக் கறி வகைகளும், பால், நெய் முதலியனவும் நினைத்தபோதெல்லாம் அருந்துதல் குற்றமாகும். வாழைக்காய், முருங்கைக்காய், அத்திக்காய், பழைய மோர் ஆகியவற்றை உட்கொள்ளுதல் இப்பிணிக்கேற்ற பத்தியமாகும்.

உன்மாந்தைக்குப் பத்தியம்

(118) மீன் வகையுள் பருவிரால், சுறா, நெய்த்தோலி ஆகியனவும்; இறைச்சி வகையுள் காடை, கோழி முட்டை, முயல், உள்ளான் முதலியனவும்; மூலிகை வகையுள் முருங்கை, தூதுவளை, முள்ளி, பொன்னாங்காணி ஆகியனவும் பத்தியத்தில் கொள்ளுதற்குரியன.

(227) பித்தம், சுரம், விக்கம், வாயு மிகுதல், சிறுநீர் தடைப்படல், வாந்தி வருதல் ஆகியவற்றுக்கு வெந்நீரை மருந்தாகக் கொள்ள வாந்தி உண்டாகும். இந்நிலையில் பத்தியமாக, பசும்பால், கஞ்சி ஆகிய-வற்றையே உட்கொள்ள வேண்டும்.

(234) சுரநோயாளருக்கு மருந்துண்ணும்போது, புளிப்புச் சுவை, கைப்புச் சுவையுள்ள பண்டங்களை விலக்க வேண்டும்.

(271) பிரமியத்துக்கு வங்கச் செந்தூரம் உட்கொள்ளும்போது இறைச்சியை நினைவிலும் கருதக் கூடாது.

பீனிசத்திற்குப் பத்தியம்

(343) கோழி முட்டை, பசும்பால், ஆமணக்கு நெய், முருங்கை-யிலை, கத்திரிக்காய் கட்டு, துவரை ஆகியவற்றை உட்கொள்ள பீனிசம் நீங்கும்.

(411) நீரிழிவு நோய்க்குப் பால், நெய், மகளிர்க்கூட்டம், மீன், இறைச்சி ஆகிய ஐந்தும் கூடாதவை.

(444) பித்த, சிலேத்தும நீரிழிவுகளுக்கு, நெய் நீக்கிய மோரை, மிகப் பருகுதல், முசுட்டையிலை, ஆவிரை வேர் ஆகியவற்றை உட்கொள்ளுதல் ஆகியனவற்றை மேற்கொள்ள அவை நீங்கும்.

***

# V. நூல் - நடையும் நயமும்

## V. நூல் - நடையும் நயமும்

சித்தர் பாடல்கள் பொதுவாக எளிய நடையின; இனிமை பயப்பன. பண்டிதர்க்கு மட்டுமே உரிமையுடையதாக விளங்கிய தமிழ் இலக்கியத்தைப் பாமரர்க்கும் உரிமையாகும் வண்ணம் மாற்றிய பெருமை சித்தரைச் சாரும். அவ்வாறே கலையுணர்வை மட்டுமே இலக்கியங்களாகப் படைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், கணிதம், மருத்துவம், இரசாயனம், சோதிடம் முதலான அறிவியல் துறைகளையும் நூல்களாக்கி வழங்கியவர்கள் இச்சித்தரேயாவர். அவர்தம் படைப்புகள் அரிய கருத்துகளை எளிய நடையில் வெளிப்படுத்துவன. எனினும் ஆழமானவை. அவ்வத்துறையில் ஆழங்கால் பெறுதற்கு உதவுவன. சித்தர் இலக்கியத்திற்குரிய இத்தன்மைகளைத் தன்னகத்தே பெற்ற நூலாக குணவாகடம் விளங்குகிறது.

### பாடுமுறை

பழம்பெருமை வாய்ந்த நம் தமிழ் மருத்துவத்தை விளக்கும் இந்நூல், ஆசிரியர் கேட்பாரை முன்னிலைப்படுத்திக் கூறும் நடையில் அமைந்து விளங்குகிறது.

சான்று:

தொகுத்துநீ றறிய தாக (2:1)
இடம்பட வறிந்து சொல்லே (2:2)
கருத்திலே அறிந்து சொல்லே (23:4)
வாத குணமாம் வகைகண் டாயே (38:3)
மனதி லுறுதி கொள்வீரே (246:4)

இந்நோ யிதுபோக் கண்டீரே (279:4)

புறங்கண் டோடுங் கண்டீரே (377:4)

இட்ட மருந்து மிழந்தீரே (412:4)

## மகடூஉ முன்னிலை

முன்னிற்போரை விளித்துப் பாடுவதாக அமையும் நிலையில், பெண்ணை முன்னிலைப்படுத்தி விளித்துக் கூறுதல் ஓர் உத்தி முறை. இது மகடூஉ முன்னிலை எனப்படும். இம் 'மகடூஉ முன்னிலை' விளிகள் நூலின் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு பெண்ணை விளிக்கும் நிலையில் அவளுடைய சாயல், உறுப்பு நலன், முதலியவற்றை வருணிக்கும் பாங்கில் அம்முன்னிலை விளிகள் அமைந்துள்ளன. அன்றியும் பெண்ணைப் பொதுப்பட விளிக்கும் நிலையும் காணப்படுகிறது.

### சாயல்

தோகை நல்லீர் (65:3)

மடக் கொடியீர் (68:2)

மானே (112:3)

முண்டகம் மதிக்கும் மாதே (175:4)

மால்நறு மடந்தை மாதீர் (204:3)

மாலை விழிக் கொம்பனையாய் (421:4)

பூவினில் தரித்த மாதே (446:3)

### உறுப்பு நலன்

#### கூந்தல்

வண்புசேர் குழலி வானே (6:4)

கோலமாங் குழலி னாளே (75:4)
மருமொய்த் தகை வல்லீரே (86:3)
கார்செறி குழலி னாளே (101:3)
மாவார் குழலீர் (416: )
மைப்புறு குழல் மாதே (424: )

கண்

ஆளரி வேலுங் கோலும் அனங்கனையங் கணையும்வீர
வாளையும் வென்ற கண்ணாய்!

முலை

வார்கட்டு முலையாய் (30:4)
திரண்ட தனத்து மடந்தையரே (72:3)
குரும்பையா முலைநல் மாதே (422: )

இடை

அழகு செறியும் கொடியிடையே (108:3)

மொழி

குயிற்சொல் பயிலும் கொடியிடையே (50:4)
பண்ணார்க்கும் மென்மொழியாய் (450: )

அணி

பைந்தொடி (119:4)

பொது

மாதே (246: )

பெண்திரு மடநல் மாதே (424: )

பேச்சு வழக்கு

இந்நூற் பாடல்கள் யாவும் இலக்கண முறைமையான் அமைந்தவை. எனினும் சித்தர் பாடல்களுக்கே உரிய இயல்பால், பேச்சு நடையும், பேச்சு வழக்கும் ஆங்காங்கே அமைந்து விளங்குகின்றன.

சான்று:

முகமும் வாயும் குளிக்கலுமே (10:1)

மூச்சு நடக்கில் முட்டாறு (12:1)

தறுகா துடம்பு திமிருண்டாய் (18:1)

பல்லது கிட்டி (47:2)

பழுத்துள்ளே சீயுங் கட்டி (44:2)

ஒருத்தர் தமக்கும் நில்லாமல் (168:4)

முள்ளையுங் களைந்து நொந்து (174:3)

அசடாய்ப் புலால்மேல் நாறுவதே (199:4)

முறித்துச் சும்மா வகைசெய்து (212:2)

வன்மையாம் இராத்திரிக்கு (290:2)

பும்மி வரும் வாதங்கள் (337:4)

அரிக் காஞ்சு அஞ்சிரண்டாய் (339:1)

மசக்கி யிரண்டு படிதன்னீர் (370:4)

இத்தைச் சொல்லோம் (379:4)

மனலை வறந்து வெச்செல்லில் (381:1)

செறிந்த ரோமத் சிலுப்பேறில் (386:2)

பின்னைப் பிறவி நோக்காடு (397:3)

ஐயோ யுடலே நோகுதென்ற (410:3)

பிரமேகம் சாப்பி யக்ளார் (423:1)

பிரசாிக்க வேண்டிடும் கேட்டுக்கொள்வே (435:4)

பேச்சொலி

நூலில் பேச்சுவழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ள நிலையில், அவற்றுள் பல வழக்கிலுள்ள உச்சரிப்பு முறையிலேயே வழங்கப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| புறங்காலும் | – பிறங்காலும் | (8:2) |
| தொடர்ந்திடும் | – துடந்திடும் | (24:2) |
| வயிற்றை | – வயித்தை | (50:1) |
| வைத்தியம் | – பயித்தியம் | (80:2) |
| சிலேத்துமம் | – சிரேட்டுமம் | (228:3) |
| நாழி | – நாளி | (269:3) |
| புளிநடலை | – பிளிநடலை | (344:2) |
| உழக்கா | – உளக்காக | (352:2) |

எதுகையமைப்பு

சித்தர் பாடல்களில் எதுகை மோனைக்காக ஆளப்பட்டுள்ள சொற்கள் பல இடங்களில் ஓசையை மட்டுமே பொருளாகக் கொண்ட வெற்றுச் சொற்களாக விளங்கும்.[47] அத்தகைய வெற்று எதுகைச் சொற்கள் பல, நூலிக்கண் காணப்படுகின்றன.

மூக்கு - பேச்சு - காய்ச்சல் - மாச்சே (10)

உடம்பெலாம் - இடங்களே - முடங்கவே - இடங்கிட (17)

உடலிடை - குடலிடை - கடலிடை - நடலிடை (36)

நெஞ்சுடன் - பஞ்சுபோல் - அஞ்சவே - ஒஞ்சிடா (44)

வீங்கும் - தூங்கும் - வாங்கி - வெங்கி (64)

வெளிகா - நம்பாள் - மம்பார் - இப்போது (136)

வாட்டம் - கோட்டடம் - கெட்டம் - கட்டி (147)

போடே - தோடே - மாடே - பாடே (162)

கருப்பஞ்சாறு - பெருத்தமீஞ்சு - முருத்த முத்தம் - மிருத்து மேலம் (179

கொள்ளே - வெள்ளே - கள்ளே - தள்ளாது (183)

பிசின் - வசுவெப்பு - புகுமேல் - நகுவே (245)

தாக - கோக - சாக - மாக (385)

இலக்கிய வழக்கு

செய்யுள் நடையில் அமைந்துள்ள இந்நூலன் இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், முரண், முதலான இலக்கிய வழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

இரட்டைக்கிளவி

தனித்துப் பிரித்தால் பொருளின்றி, இரட்டையாக இணைந்த நிலையிலேயே பொருள் தருவது இரட்டைக்கிளவி எனப்படும்.

"இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா"

என்பார் நன்னூலார்.[48] இந்நூலில் பயின்று வந்துள்ள சில இரட்டைக் கிளவிகளாவன:

கிடுகிடென (66:2)

கிறுகிறுக்கும் (76:1)

வழுவழுத்து (83:1)

கிறுகிறுப்பு (129:3)

கரகரத்து (175:1)

பரபரத்து (200:2)

விறுவிறுக்கும் (318:3)

அடிக்கடி (323:3)

நடுநடுங்கி (409: )

வெருவெருத்து (410:2)

வழுவழுத்து (433:2)

ஒரு சொல் இரட்டித்து வருதலே இரட்டைக்கிளவியின் இயல்பு. எனினும், இந்நூல்கள் மூன்றாக இணைந்து அமைந்த நிலையிலும் இரட்டைக்கிளவி காணப்படுகிறது.

கிடுகிடுகிடென (397:3)

<u>அடுக்குத்தொடர்</u>

ஒரு சொல் அடுத்தடுத்துத் தொடர்ந்து அடுக்கி வருவது அடுக்குத்தொடராகும்.

இடையிடை (43:1)

அடுத்தடுத்து (47:1)

செப்பலாத் செப்பலாமே (47:4)

திரியத் திரிய (52:3)

அடுக்கடுக்க (66:2)

மாத மாத (273:4)

நாழி நாழி (303:2)

சரி சரி (306:3)

ஒடியோடி (378:4)

கழுக்கழுக (395:2)

ஒட்டிவிடு மோட்டிவிடும் (403:4)

ஆகாகா (411:2)

மீளே மீளே (414:4)

ஆரே யாரே; நீரே நீரே; பாரீர் பாரீ ; ஊரே ஊரே (444

பாரீர் பாரீர் பாரீரே (232:4)

முரண்
---

சொல்லும் பொருளும் ஒன்றோடொன்று முரண்படுமாறு அமைக்கும் முரண்-தொடைச் சொற்களும் நூலில் இடம்பெற்றுள்ளன.

சான்று:

வாழாக் கன்னி, கேளாச்சத்தம், காணாக்கண்,

மாளா மாளும் (408); பகலும் இரவும் (409)

இதுபோன்றே அந்தம் முதலாத் தொடுக்கும் அந்தாதித் தொடையும் ஒரோவழி இடம் பெற்று விளங்குகின்றது. (சான்று: 104-107)

வடசொற் கலப்பு
-----------

பொதுவாக, தமிழ் இலக்கியங்களுள் சங்க காலந் தொட்டே வட-சொற்கள் வந்து வழங்குகின்றன.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே"[49]

என்ற வடசொல் வரவிற்கு வரையறை வழங்குகிறது தொல்காப்பியம். இவ்வாறு வடசொற்கள் வந்து பயிலும் காலை, அவை: 1. தம் இயல்பு மாறாமல் வந்து வழங்குதல், 2. தமிழாக்கம் பெற்று வழங்குவன என்ற இரு நிலைகளில் அமையும்.

1. இயல்பு மாறாமல் வழங்குவன

சந்தோஷம் (71:3)
பாஷாணம் (161:1)
மாங்கிஷம் (265:3)
தோஷம் (298:4)
ராக்ஷஸம் (314:2)
விஷகரம் (367:4)
மனுஷராய் (407:1)

2. தமிழுக்கேற்ப ஆக்கம் பெற்றவை

இருசி (25:4)
கோட்டம் (236:2)
சலம் (249:2)
அசனம் (249:4)
நிதம்பம் (254:4)
குட்டங்கள் (274:4)
சீதம் (317:4)
சம்பிரம் (338:3)
அரவிந்தம் (350:1)
சரீரம் (352:3)

தாபம் (352:3)

பிரதாபம் (377:4)

பிராணயுபகாரி (431:1)

## ஓசை நயம்

பாடல்கள் ஓசை நயமுடன் அமைந்து செவிக்கு இன்பம் பயப்பனவாக உள்ளன.

ஓரரைக்கால் குளவிந்த மெள்ளரைக் கால் கருவேல்பிசின்
ஈரரைக்கால் மரமஞ்ச ளிருப தரைக்கா லாவரைவிதை
தேரரைக்கால் கடுக ரைக்கால் தெளிய வரைத்துத்
தேனில் விழுங்கிட
நீர ரைக்கால் பாயாது நெடுமாலானே நிச்சயமே" (449)

என்ற பாடலில் 'அரைக்கால்' என்ற அளவைப் பெயர் சொற்பொருட் பின்வரு நிலையணியாக முறையே ஓர், எள், ஈர், இருபது, தேர், நீர் முதலிய அடைகளோடு இணைந்து ஒலி நயத்தோடு விளங்குகின்றது.

இதே போன்ற ஓசை நயம் பெற்ற பாடலாக,

"ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தாள்பணியாள்"[50]

எனவரும் திருவெம்பாவைப் பாடல் அமைந்து இப்பாடலோடு ஒப்புமையுடையதாக விளங்குகிறது.

"ஆரே யாரே வருகின்றீ ரையும் பித்த மும்கடக்கி
நீரே நீரே யாகியுங்கேன் நெய்யற்ற மேரோ மிகப்பருகி
பாரீர் பாரீர் முகட்டையிலை பரிந்து பரிந்து யாவரையின்
னா ரே னா ரே கொள்கின்றால் தோற்றீர் நீரே தோற்றீரே"

என்ற பாடலில் அடுக்குத் தொடர்களும் ரகரத்தோடு கூடிய ஏகார இயைபுத் தொடையும் அமைந்து அழகுற ஓசை பெற்று விளங்குகின்றது.

"பாலாகா நெய்யும் பருகாகா பாவையர்தம்
மாலாக மீனிறைச்சி ஆகாகா — ஏலப்
பருகு மருந்தே பருகில் மடைபோல்
வருநீர ருக்கிவிடு மைந்து"

என்ற பாடலின்கண்ணும் 'ஆகா' என்ற சொல் மீண்டும் மீண்டும் பயின்று வந்து ஓசை நயத்தை வழங்குகின்றது.

இவ்வாறு ஒலிநயம் மிக்க சொல்லாட்சியோடு, ஒலிக்குறிப்புச் சொல்லாட்சிகளும் நூலில் அமைந்து அழகு பயக்கின்றன.

சான்று:

நறுக்கெனும் நெருஞ்சி (177:2)
ஐயோ உடலே நோகுதென்று (410:3)

## அணி நலன்

நூலுக்கு அழகு சேர்க்கும் உத்தி முறைகளுள் தலையாயது அணி. அணிகள் பலவகையின. அவற்றுள் உவமையணி, வேற்றுமையணி, பிறிதுமொழிதல் அணி, சொற்பொருட் பின் வருநிலையணி ஆகியன நூலுள் இடம்பெற்றுள்ளன.

வயிற்றிடத்தே குடல்வாதம் வந்துற்ற காலை, வாயுவானது ஓடி ஓடிக் கலக்கும். இதனை விளக்குமிடத்து,

'கடலிடைத் தரங்க மென்ன கலக்கிடும்' (36:3)

என்ற கடலின் அலை பொருத்தமுற உவமிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே குடல்வாதத்தால் வயிற்றில் வாயு இரைச்சல் எழுப்புவதை,

'குழலிடை யோசை போலக் குமுறிடுங் குடல்வா தங்கள்' (167:3)

என்று உவமித்துள்ளார் ஆசிரியர். மேலும்,

உற்றதோர் தென்னை மரம் போல் (258:3)
முள்குதைத்த புண் போல (397:3)
பொழிந்திடு மழை போல் (400: )
மூளையும் நிணமும் போல முதிர்ந்தசுக் கிலம் போல (419:1)
பொதுமகள் அன்பு போல (420:4)

என்றனைய உவமையணிகள் ஆங்காங்கே கையாளப் பெற்றுள்ளன.

வேற்றுமையணி

பெண்ணை முன்னிலைப்படுத்தி விளிக்கும் நிலையில்,

"ஒளிரி வேலுங் கோலும் அலங்கலுங் கணையும்வீர
வாளையும் வென்ற கண்ணாய்"

என்று பெண்ணின் கண்ணை, வேல், கோல், காமன், கூற்றுவன், வாள் ஆகிய ஒப்புமையுடைய பொருள்களைக் காட்டிலும் சிறப்புடையதாக உயர்த்திக் காட்டுவதன் வழி வேற்றுமையணி நூலுள் இடம்பெற்றுள்ளது.

பிறிதுமொழிதலணி

சிறுநீர் அடிக்கடி கழியும் நீரிழிவு நோய் நீங்கும் நிலையை நேரே கூறாது,

'காவிரி நீரும் வற்றிக் கடல்களும் சுவறு மன்றே' (446)

என்றவாறு பல பாடல்களில், ஆறு கடல்களாகிய பிறபொருட்களின்மீது வைத்துக் குறிப்பால் விளக்குமிடத்துப் பிறிதுமொழிதலணி பயின்றுள்ளது.

சொற் பொருட் பின்வரு நிலையணி

ஒரு சொல் ஒரு பாடலில் பல இடங்களில் ஒரே பொருள் நிலையில் பயின்று வருதலாகிய சொற்பொருட் பின்வரு நிலையணி நூலுள் சில பாடல்களில் பயின்றுள்ளது.

சான்றாக:

'ஓரரைக்கால் குளவித்தம் என்னரைக்கால் கருவேல்பிசின்' (499)

என்ற பாடலில் அரைக்கால் என்ற சொல்லும்,

'பாலாகா நெய்யும் பருகாகா'

என்ற பாடலில் ஆகா என்ற சொல்லும், வந்த பொருளிலேயே மீண்டும் மீண்டும் பயின்று வந்துள்ளமையைக் காணலாம். அவ்வாறே,

"மந்தமாம் பதழ தாகில் வாதத்துக் கதவா மெங்க
இந்தமாம் பதழ தாகி லிழகிடு பித்தத் துக்கு
அந்தமாம் பதழ தாகில் அமைந்தவ புண்ணைத் தீர்க்கும்
இந்தநோ யெண்ணெய் வைக்க இலைபது_ழெண்ண லாமே" (84)

என்ற பாடலுள் பதம் என்ற சொல்லும் சொற்பொருட் பின்வருநிலை யணியாக இடம்பெற்றுள்ளது.

## ஆய்வு முடிபு

தமிழின் முதல் அறிவியல் துறையாக விளங்கும் சித்த மருத்துவம், காலந்தோறும் பெற்ற வளர்ச்சி நிலையை நமக்கு இன்று அறிவிக்கும் காரணிகளில் தலையாயது சுவடிகளே. இத்தகு சீரிய சுவடிகளுள் சிறப்புடைய ஒன்று குணவாகடம். எவ்வகைத் தேர்வு முறைகளால் நோய் நாடி, நோய் நிலையாய்ந்து, அது தணிக்கும் வாய் நாடி, வளமான மருந்துகளை விளங்க உரைக்கின்ற நூல். எளிய நடையும் இனிய நயமும் பெற்றது. இத்தகைய அரிய சுவடிகள் பல பதிப்பிக்கப்பெற்று நூல்களாக மலருங்காலை, இனிவரும் தலைமுறை நோயில்லா நெறியில் வாழ்வாங்கு வாழும் என்பது திண்ணம்.

******

## மூல நூல்

# குணவாகடம்

# குணவாகடம்



1. ஆதியாங் கடவு ளானை அடியிணை போற்றி போற்றி
தீருறு வியாதி தன்னைத் தெளிவுட னறிய வேண்டி
கோதிலா நல்லோர்க் கேற்குங் குணமிகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே நெறியுடன் உரைத்தார் மேலோர்.

2. சொன்னதோர் குணங்கள் தன்னைத் தொகுத்துநீ ரறிவ தாகப்
பின்னையுங் குணவ னாகிப் பேசிய குணத்தின் பாதி
வன்மையா மறிகு ராகி மறுபடி குணங்கள் செய்யும்
இன்னமுங் குணங்கள் தன்னை இடம்பட வறிந்து சொல்லே.

3. ஏறியுங் குறைந்தும் நின்று இட்டதோர் குணங்கள் தன்னைக்
கூறிய குணம்பி ராயம் குறைவிடாச் சகம்வ ரட்சி
பாரிடுஞ் சுரங்கள் தன்னைப் பற்றிடுஞ் சுக்கி லத்தில்
வேரிடுங் குணங்க ளாலே விதித்துநீ யாய்ந்து சொல்லேன்.

4. நாடியிற் றெளிவி னாலும் நற்குறி குணத்தி னாலும்
நீடுயர் விழியி னாலும் நிலைபெறு முகத்தி னாலும்
கூடிய ரோகச் சேட்டை சொல்லிடில் நல்ல தென்று
தேடிய குருடன் கையில் சித்திரம் போன்ற தன்றே.

5. நாடியிற் றெளிவி னாலும் நற்குறி குணத்தி னாலும்
நீடுயர் (விழியி) னாலும் நிலைபெறு முகத்தி னாலும்
கூறிய வியாதி தன்னைக் கூறிடுங் குணபா டத்தால்
வேறிடுங் குணங்க ளாலே விதித்துநீ (யாய்ந்து) சொல்லே.

6. எண்பது வாதந் தன்னை யிருவகை பகுத்துக் காணில்
நாற்பெண வரைக்கு மேலே நாற்பது வாத மாகும்
பண்புசேர் வரைக்குங் கீழே பகுத்துநாற் பதுவே யாகும்
வண்புசேர் குழலி னாளே வாகடத் தியல்பு தானே.

(முத்தோடங்களும் சேருமிடம்)

7. வாதந்தான் காலிற் சேரும் வயிற்றிலே பித்தஞ் சேரும்
சேதமே செய்யு மையுஞ் சித்திரக் கண்டஞ் சேரும்
நாதனா ரருளிச் செய்தார் நன்றாகத் தரக பாரில்
வேதனூ ல் விதியி தென்று விரும்பியே விளம்பி னாரே.

(வயிற்று நீராம்பல் குணம்)

8. உடம்ப துலந்துள் ளிரு(ம)லுண்டாய் உதரம் வீங்கி நாவறண்டும்
தடங்கண் வெளுத்துப் புறங்காலுந் தடித்து வீங்கித் தாகமுமாய்
அடர்ந்தே மூச்சுத் தொடர்ந்தோடும் அனந்தல் மிகவு முண்டாகும்
மடந்தாய் சொன்னோம் நீராம்பல் வயிற்றுக் குணங்க ளிவை-
கண்டாய்.

வருண வாதம்

9. உதரஞ் சுரந்து மயக்கமுடன் வாந்தி யுள்மூச்சு முண்டாம்
அதரமுந் கருகி மேலும் அற்பமே கழுத்து நோவாந்
திதமிகு வருண வாதந் திருமுனி யருளிச் செய்தார்
பதமுற வேத னூ லின் படியெனப் பகர்ந்த தாமே.

10. மூச்சு வாங்கி நாவறண்டு முகமும் வாயுஞ் சுளிக்கவுமே
பேச்சு முட்டாய் வியர்வருவிப் பெருக்கு முழலை தவனமிரைக்
காய்ச்சல் குளிரு மற்புடனே கதித்துப் புறந்தா ளகைத்திடினும்
மாச்சே மரண முண்டென்று மாிய வாத மிதுவாமே.

பித்த பாண்டு குணம்

11. இருமலே யிளைப்பு நெஞ்சி லிடிப்பது மிகவு (மு)ண்டாய்
பெரு(க்)கவே நடக்கும் போதும் பேச்சுமுச் சொரிய தாகும்
வெருவுறக் கிறுகி றுத்து மேனியும் வெளுத்த தைக்கில்
பெருகிய பித்த பாண்டு வெனப்பல பேச லாமே.

காமாலையின் குணம்

12. முகமும் வீங்கிக் கண்வெளுத்து மூச்சு நடக்கி(ல்) முட்டாது
அகமுந் துடித்து நாவறண்டு அனுகுந் தாது கெட்டிருக்கும்
மிகவு மசனம் வேண்டாது மேனி வரண்டு வெளுப்பேறும்
செகமே யறியச் சொன்னோங்கா மலைசெய்யுங் (குணங்க) ளிவை-
கண்டாய்.

பித்த (குன்ம) குணம்

13. உண்டியை மறக்க லாக்கும் முட்டி /வட்ட/நெஞ் சொிக்க லாக்கும்
மண்டி (நின் றே... ... வயிற்)றையே வலிக்க லாக்கும்
பண்டு(முன் பழம லத்தில் பைத்தியம் சேர்த லாக்கும்
விண்டுதான் பித்த குன்ம மிது(வென) விளம்பி னாரே.

### வலி குன்ம குணம்

14. பண்டுமுன் வயிற்றைப் பற்றிப் பலப்பட வலிக்க லாக்கும்
கொண்டுநின் றாகா ரத்தைக் குமட்டியே யெடுக்க லாக்கும்
மண்டியே காயம் வற்றி மயங்கெட உலர்த லாக்கும்
வண்டுசேர் குழலி னாளே வலிகுன்மம் வரவு மாமே.

### எரி குன்ம குணம்

15. வயிற்றை யெரித்துக் குடல்புரட்டி வாய்நீர் சுழற்றித் தலைகனத்து
உயிர்ப்பை யழியக் கிறுகிறுத்து யோங்காரித் தேப்ப முள்ளிருக்கும்
மயிர்க்கால் வழியே வியரரும்பி வயிறு பொருமிக் கனன்றிடுகில்
வைத்தே யெரிக்குங் குன்மமென இமையோர் சொன்ன குறியாமே.

### பித்த குன்ம குணம்

16. தலையுங் கனத்து ஓங்காரந் தானே மிகவாய் வாயூறல்
நிலையுங் கெடவே கிறுகிறுத்து நின்றே வேர்க்கும் நெஞ்செரியும்
குலையுஞ் செரியும் பித்தகுணம் கொள்ளுங் குன்ம மிதுவென்று
கலையால் வல்ல தமிழ்வாணர் கண்டே பெருக்கப் பேசுவரே.

### வாதக் கரப்பான் குணம்

17. உடம்பெலாம் வெதும்பி நொந்து உலந்தரை சந்து கைகால்
இடங்களே சுரந்து வீங்கி யிருப்பிடம் தருகை யாலே
முடங்கவே வரண்டு தானும் முற்றியே வெடித்துப் புண்ணில்
இடங்கிட கரப்பான் வாத மென்றுதா னியம்ப லாமே.

18. தலையுங் கனத்துக் குரலரிந்து தருகா துடம்பு திமிருண்டாம்
உளையுங் காலும் வீக்கமுமா யுளையா திருக்கு முறுப்புளையும்
அலையுஞ் சரீர நோயிருந்து வலிமை குறைந்து வறண்டுவரும்
கொலையுஞ் செய்யுங் குணம்வாத கொடிய கரப்பா னெனலாமே.

19. சந்துதான் மொழிபொ ருத்துத் தானங்க ளுளைந்து வீங்கி
வந்துதான் காயம் புண்போல் வருந்தியே யிருந்து வாடும்
நொந்துதான் திரும்பொ வாது நோயுடன் வெதுப்புந் தோன்றும்
இந்தநோய் வரிலோ வாத கரப்பானென் றியம்ப லாமே.

20. கண்ணுந் தூங்கி நடுவுந்திக் கனத்துச் சுரந்து வெதுப்பமுடன்
அண்ணுந் தலையுங் கனத்திருக்கும் சற்றே யுடம்பு கிறுகிறுக்கும்
மண்ணில் பிறந்தோர் தங்களுடன் வந்தே வருந்தி மயங்காமல்
எண்ணில் வாதக் கரப்பானென் றதுவும் பேச லாமேதான்.

21. பித்தமேல் வெதுப்புத் தன்னால் பிறந்திடும் வறட்சி தன்னால்
மெத்தமேல் வீங்கித் தோன்று மிருந்திடு மூலத்திற் சூலை
ஒத்ததோ ருதிரக் குன்ம மேட்டியே குடல்வா தங்கள்
எத்ததோ ரனல்ந டுக்க மிடைவிடா துண்மை தானே.

வாய்ச் சூலையின் குணம்

22. காயம் வற்றிக் கடுப்புண்டாய் கைகா லுளைந்து கனத்துருண்டும்
நோயு மிருந்து நொந்துடம்பு நோக்குங் கெட்டுத் தாதிருக்கும்
சேயி னடவுந் தானாகித் திரங்கிக் கிழம்போ லாமென்னில்
வாயும் வற்றிச் சூலையென வகுத்துப் பேச வல்லீரே.

அத்திச் சூலையின் குணம்

23. அக்கினி வுள்ள சூலை யாவுடன் தென்பு காய்ச்சல்
மிக்ககா திரைச்சல் மந்தம் மிகுத்திடு முடல்கு ளிர்கள்
தக்கதோர் பித்த சோகை பாண்டுரு கபால குன்மம்
கைக்குமாம் பித்த வாதங் கருத்திலே கண்டு சொல்லே.

வாத கோபம்

24. வாதமே கதித்த போது வாய்வுமே லெழும்பி மீளும்
வாதமே யிரும லாகித் தொடர்ந்திடுஞ் சன்னி பாதம்
பேதமே செய்கி ராணி பெருவயி றுதர தோஷம்
போதவே வருமி தென்று பெருந்தவ முனிவர் சொன்னார்.

சேத்துப் பிரகோப குணம்

25. ஐயுமோ கித்த போது அறியவே பூர்வ வாசம்
நையுமா மாந்த யிலை நளிர்குளிர் சந்தி விக்கல்
செய்யுமே மூச்ச டைப்பன் தீதரு காய ரோகந்
தொய்யுமே யிளைப்புக் காசந் தோன்றுமென் றிருசி சொன்னார்.

வாதக்கரப்பான் குணம்

26. இருந்தெழுந் திருக்கும் போது இற்றுகை கால்சந்து சந்து
வருந்திடத் திமிர்த்து வீங்கி வரண்டிடில் வெடித்துப் புண்ணாய்த்
திருந்திய அங்கந் தானும் செயலறப் பொருமு மாகில்
வருந்துமிக் குணங்கள் கண்டால் வாதமாங் கரப்பான் தானே.

## மந்தார காசம்

27. துய்யதோர் நாசி தன்னில் தும்மலும் மிகவு முண்டாய்
நொய்யநீர் விளைந்து நெஞ்சு நொந்தடைந் தீளை வாங்கும்
நையுமந் தாரகாசத் தடைவிது தானே யென்ன
வையமா முனிவர் சொன்ன வன்மையைக் கண்டு சொல்லே.

## அபிகா சிலேத்தும குணம்

28. இருமலே யிளைப்பு முண்டாய் யீளையு மிகுந்து வாங்கி
மறுகிய வயிறு தானும் மந்தமே பற்றி நீக்கில்
உருவழிந் துடம்பு வற்றி யுறுதியே கெடுமே யாகில்
உருவியே யிருமல் தானு மபிகாசிடு சிலேத்தும மாமே.

## மகோதர குணம்

29. அங்கமு மடைக்க வீங்கி வுரமெலிந் தாக மாகி
அங்கிய வுதரந் தன்னில் வாயுவுஞ் சலமுங் கோத்துக்
கங்குல்சேர் நோயு மானால் கடியதோர் வாந்தி பண்ணும்
மங்கைதன் குலவு மாதே மகோதர மென்ன லாமே.

## வயிற்று நீராம்பல் குணம்

30. மார்பில்கீழ் வயிறு தானும் வகைபட வீக்க மாகும்
நேரொத்த காயம் வற்றி நிறமது வெளுத்து நாவும்
நீர்வற்றித் தண்ணீர் தேடும் நினைவற்றுப் பலவும் கேட்கும்
வார்கட்டு முலையாய் சொன்னோம் வயிற்றுநீ ராம்பல் தானே.

31. வீங்குஞ் சலமு மிக்கோற்கு மிருந்தே பொருமு முடம்பெங்கும்
வாங்கு முதகந் தனைத்தேடும் வாங்கித் துயர மிருந்திருக்குந்
ஞாங்குங் கண்ணு மேல்மூச்சு சுவையிற் புளியில தாகிக்கும்
மேங்கு மிதுவே பேராம்ப லிதுவே செய்யுங் குணமாமே.

(மரணக்குறி)

32. நெஞ்சுமே லுடம்பு வற்றி நிலைபெற நரம்பு தோன்றி
பஞ்சுபோல் நாவுங் கண்ணும் பாலேடமும் வெளுத்துக் காலுங்
கெஞ்சியே அவ்விடம் வீங்கிக் குறுகியே மலமுந் தீயில்
அஞ்சுவ தன்மை யென்று சொல்லுவா ருத்திரர் தாமே.

33. குணங்குறி யிருந்து தோன்றிக் குற்றமே குறைந்து நின்றால்
இயங்குமந் திரம ருந்து இவைகளால் மீள்வ துண்மை
குணங்களே குற்ற மேறிக் குறிகுணங் குறைந்து நின்றால்
பிணங்கிடாச் சீவ னென்று பிரிந்ததாய்ப் பேச லாமே.

கற்சூலைக் குணம்

34. உற்றதோர் கீழ்வ யிற்றி லுருண்டுதோன் வளையம் போலப்
பற்றியே வலித்துப் பின்னைப் பரந்ததால் பொருமு மாகில்
மற்றுள சூலை யென்று மனத்துளக் கதுவே பாடங்
கற்பெருஞ் சூலை யென்று கருதிநீ கண்டு சொல்லே.

உள்குத்து வாத குணம்

35. வேர்த்து விரைத்துப் பல்கிட்டி வெதும்பி நாவுந் தடுமாறுஞ்
சீற்ற மிருந்து கஞ்சிதண்ணீர் தேடுங் கொள்ள வொட்டாது
பார்த்து மனிதரி ருக்கும்போது பரியும் வாய்வு கீழ்நோக்கி
பேர்ப்ப காரத் துள்குத்தும் பேசிச் சொல்வர் பெரியோரே.

குடல்வாத குணம்

36. உடலிடை யோடி யிசிவு யுலந்தறை சந்து கால்கைக்
குடலிடைக்கப்பிட் டோடிக் குமுறிடுங் குடலில் தங்கும்
கடலிடைத் தரங்க மென்ன கலக்கிடும் நல்கி நிற்கும்
நடலிடைக்குடல்வா தத்தின் குணமென நவின்ற தாமே.

குடல் வாயுக் குணம்

37. குடலில் வலிக்குங் காலுளையும் குமுறி யிரையும் மந்திக்கும்
உடலி லடங்கி யோடிநிற்கு மொருகா லன்றிப் புரண்டிருக்கும்
கடலில் தரங்க மதுபோலக் கலக்க மூடே வாதைசெய்யும்
திடலில் பெருத்த வால்போலச் சிலைக்குங் குடலில் வாயுவிதே.

வாத குன்ம குணம்

38. ஈரலும் நெஞ்சும் பற்றி எரித்திடு முளையும் பக்கங்
கார்செறி கபாலந் தானுங் கனத்தெழும் புரட்டிச் சுற்றி
நேர்படக் கிறுகி றந்து நினைவாகக் குடல்வ லிக்கும்
வார்படு மானே வாத குன்மமாம் வகைகண் டாயே.

அக்கினி மந்தக் குணம்

39. உண்டியிற் பொருமலாலும் உடன்வினை வித்த லாலும்
கொண்டிடுங் கழிந்து தண்ணீர் கொதிப்புடன் வெதுப்ப லாகும்
மண்டியே காயம் வற்றி மயக்கிட உலர்த லாக்கும்
அண்டர்முன் வேதம் பேச மக்கினி மந்த மாமே.

## அந்தர வாயுக் குணம்



40. பத்தியங் கொண்ட போது பலப்பட மலமுந் தள்ளி
நித்தமும் புளித்தே பிட்டு நின்றுநீர் நெடுவ லாகில்
சத்தியுந் தழந்து காட்டித் தருவிடாத் தியானம் பேசிடல்
அத்தனை குணமுண் டாகி லந்தர வாயு வாமே.

## அலத்தராமை வாயுக் குணம்

41. மண்டியே வுதரந் தன்னில் மறைக்கு மூலாக் கினியை
கொண்டதோ ராகா ரத்தைக் குழப்பியே தளமை யாக்கும்
உண்டிடில் புளித் தெரித்தே உடனுடன் மலமுந் தள்ளும்
விண்டலத் தறாமை வாயு வாமென விளம்ப லாமே.

## பீலிகை (வாயுக்) குணம்

42. மலத்தை யிறுக்கி மந்திக்கும் வலுவா யுதரந் தனில்புரளும்
பலத்தைக் குறைத்து யீரலொடு பெருகக் கனத்துத் திரண்டேறும்
உலர்த்து மசவங் கொள்ளாது ஓங்காரித் தேப்ப முள்ளிருக்கும்
குலத்திற் பெரிய பீலிகையின் குணத்தைப் பேசுங் குறியாமே.

## காச நோயின் குணம்

43. இருமிய செயலு முண்டா யிடையிடை சுரமுந் தோன்றி
மருவிய மிடறுங் கன்றி யற்பமே வாந்தி யாகி
மருவிய அசனந் தானு மறுத்தலந் தானும் வற்றிக்
கருவியைக் குறைத்து வாடக் காசரோ கமென்ன லாமே.

## உளமாந்தைக் குணம்

44. நெஞ்சுடன் பருக்கும் பக்கம் நீள்வழிந் திருமி நொந்து
பஞ்சுபோல் சுரமுந் தோன்றிப்பழுத்துள்ளே சீயுங் கட்டி
அஞ்சவே யயியும் பித்தும் அசனமு மொறுத்து வந்தால்
ஒஞ்சிடா துண்மை சொன்னோ முளமாந்தை யென்ன லாமே.

## பீனிசக் குணம்

45. தலையும் வலித்து ஒருனாசிச் சளியும் விழுந்து ஒடுப்பட்டு
மலையு னாதெள் ளச்சென்றால் வரண்டே யிறுக்கித் திரண்டுவிழும்
உரையு மிகவும் நாற்றமுமாம் மூடே தண்ணீர் விழுந்திருக்கும்
பலமுஞ் சென்று மூக்கடைக்கில் பீனிச மென்பார் பெரியோரே.

## பீனிசம் கபால வரட்சியின் குணம்

46. தலையுங் கனத்து இறுகிச்சளி போலத் திரண்டு மூக்கில்விழும்
மலையு மொடுப்பட் டொருக்காயு மதிகப் படுநீர் மாறாது
நிலையுங் கெடவே பரிகாரம் நீதிப் படியே செய்துவாங்
தலையும் படியே பீனிசமுஞ் சொல்லுங் கபால வரட்சியுமே.

## புறவிச்சுக் குணம்

47. அடுத்தடுத் தெடுத்துக் குத்தி அதிகமாய் விரைத்து வேர்த்துப்
படுத்துநாத் தடிக்கில் பேசிப் பல்லது கிட்டி நெஞ்சம்
மடுக்கவே கட்டிச் சீறி யங்கமும் பிறகே வீழில்
திடுக்கிடில் புறவிச் சென்று செப்பலாஞ் செப்ப லாமே.

48. குத்து மருத்தடுத்துக் கொண்டேகி யேறிரும்
மெத்தவிரைந் தீனுடலம் வேர்க்குமே - பத்தியமே
சீறு மெதிர்த்தன்னும் சில்கென்று மலைப்பூட்டில்
ஏறும் புறவிச்சென் றும்.

முகவாத (சன்னி)க் குணம்

49. கன்னில் தலையிற் புருவத்தில் காதில் செவிட்டில் குத்துண்டாம்
பன்னிப் பதைக்கு முகந்தன்னைப் பக்கம் பற்றி யேறிடுக
எண்ணிச் சொல்வோ முகவாத மிடறுஞ் சன்னி யீதென்று
நண்ணிச் சொன்னோஞ் சிலர்வாழ நாடுங் குணங்க ளிவைகண்டாம்.

கபால குன்ம குணம்

50. வயிற்றை யமுத்தி மேல்நோக்கி-வாய்நீர் பெருத்துத் தலைகனத்து
உயிர்ப்பை யழித்துத் தலைக்குத்தாய் யோடி யடங்கு முடல்தன்னில்
அயர்க்கு மயக்கு முடல்தன்னி லதிகப் படவே வாழ்விக்கும்
குயிற்சொல் பயிலுங் கொடியிடையே கொதிக்குங் கபால குன்மமிதே.

கபால வியாதிக் குணம்

51. கண்டந் தன்னில் மேல்மூன்று கதிக்க மண்டை வறட்சிநன்னால்
துண்டம் புருவங் கூடுநுதலில் சுழியில் கன்னிற் குத்துண்டாம்
மண்டுந் துயர மிகவுண்டாம் வலைப்பால் கண்ணுந் தெரியாதாம்
மண்டை முழுதும் பரந்துகுத்தும் வருந்துங் கபால வியாதியுமே.

## கபால சன்னிக் குணம்

52. பெருத்து நரம்பு பிடரிதன்னைப் பேரப் பிரிய ஒண்ணாது
வருத்த மிருந்த தலைகாலும் மதிக்கக் குத்தித் திமிர்த்தனவும்
திருத்த மாக இடரடியில் திரியத் திரிய வொட்டாது
கருத்தைக் கெடுத்துத் திமிர்ப்பேறுங் கபால சன்னி யெனக்கருதே.

## இரத்த சூலைக் குணம்

53. திரண்டு புரண்டு கீழ்வயிற்றில் திடமாய் மாத விடைப்போதும்
உருண்டு குருதி மிருந்துவிழு மரையுந் துடையு முளைந்துவருந்
திரண்டு சிலநாள் சிக்கிநிற்குந் திடமாய்க் கருவை யழிப்பிக்கும்
உருண்ட இரத்தச் சூலையென உறுதி யிழுகல் டுரையீரே.

## கர்ப்ப ரோகக் குணம்

54. பொருமித் திரண்டு கீழ்வயிற்றில் புண்பட் டமுந்துத் செயல்கண்டு
மருவிப் பழகி நின்றாக்கால் மசக்கிச் செவ்வேயது மாறாது
உருவிப் பிழிதல் போல்மேனி உலர்ந்து திரங்கி ஒடுவுண்டாய்
கருவை யழிக்குங் கொடியிடைமேகருது கெர்ப்ப ரோகமிதே.

## உள்மூலக் குணம்

55. மலத்தை யிறுக்கி மந்திக்கும் வரண்டால் ரத்தம் மலத்தில்விழும்
மூலத்தில் வருவ துண்மையென உண்டே வயிறு உளைந்திருக்கும்
தலத்தில் காணத் துள்மூலம் தசையா துளைக்குந் தானத்தில்,
பலத்தைக் குறைக்கும் வியாதியெனப் பேசி யிருப்பார் பெரியோரே.

## சத்தி குன்மக் குணம்

56. மயங்கிடும் வெருக்கு மேனி வாயுவு மிகுந்தால் வற்றும்
செங்கெடாச் சத்தி பண்ணிச் செரித்திடா தெரித்து நெஞ்சு
பயங்கெட வுன்ன வொட்டாப் பயித்திய மிகுந்து தோன்றும்
தயங்கிய சத்தி குன்மந் தானெனுந் தடங்கண் மாதே.

## வாத குன்மக் குணம்

57. சந்ததா நுந்தி வற்றித் தன்னிழல் வற்றித் தோன்றும்
அந்தகா ரங்கள் தன்னா லதிகமாஞ் சரீர வாதை
வந்ததான் தோன்று நாளில் வகைபட வாத குன்மம்
அந்தமா முனிவர் சொன்ன யவாவுற வேத மாமே.

## வாயு கிராணிக் குணம்

58. பொருமல் விரைச்சல் செரியாமல் புளித்தே யேப்ப மிகவிடுதல்
நருவ லிரும லிராவிடுத லிறுகி மலமு முடன்கழிதல்
பெருகப் பேசும பானமிது பிறவா தோர்வலி புண்ணாகில்
வரிசைக் குரிய பலங்குறையும் வாயுக் கிராணி வகையாமே.

## வலிகுன்ம வாயுக் குணம்

59. மறந்திடு மன்னந் தன்னை வயிற்றினில் வலியுந் தோன்றுஞ்
சிறந்திடுங் கஞ்சி தண்ணீர் தேடுங் கொள்ளவொட் டாது
விரைந்திடாத் துயரந் தோன்று மிகுதல் தளரு மானால்
வரண்டிடு மிகுந்து தானும் வலிகுனம் வாயு மாமே.

மூலவாயு குணம்

60. வற்றி மலந்தீயு மந்திக்கு மேல்வெளுக்குஞ்
சற்று மிரைச்சல் தணியாது - முற்றுமது
மூலமாம் வாயுவென முன்னோ ருரைத்தபடிச்
சீலமாய்க் காண்போர் தெளிந்து.

கபால வலிக் குணம்

விருத்தம்

61. ஓடி உளைந்தே மருகிவரு மொருக்கால் விடாமல் மிகக்குத்தும்
வாடிக் காயம் வறண்டுவரும் வலுவாயிப் பதறு முளைவாகத்
தேடிப் புணர்ச்சி தனைச்செய்யாச் சிறுநீர் தெளிந்து கருகிவிழும்
நாடிக் கபால கவைப்புவலி நயந்தே நாளில் நல்குவதே.

வாத குணம்

62. ஓடிய வாத மாகி யுடல்தலை நெஞ்சு சந்து
தேடிய கால்கள் கைகள் திறமதாய் பலக்க வொண்ணா
வாடிடு மேனி தானும் வறண்டுமே நாவும் பல்லு(ம்)
ஒடிடு முடல்கள் தோறு முளைவுடன் குத்து முண்டே.

மகா சன்னி வாத குணம்

63. கையுங் காலு மொருபக்கம் கனக்கத் திமிர்த்துச் சாவாக்கி
மெய்யு மறவே மெலிந்துவரும் வெதும்பும் நாவுந் தடுமாறுஞ்
செய்யுங் குணத்தை நாடியறி செப்புமகா சன்னி வாதமென
உய்யும் படியே வகைகாண உலகோ ரறிய வுரைத்தோமே.

64. வீங்கும் வற்று மொருபக்கம் மேனி வரண்டு வெளுப்பிருங்கண்
தூங்குந் தலையுங் கனத்திருக்குந் துயர மிகுந்த தாயிருக்கும்
வாங்கிப் புசிக்க மாட்டாது வாயு வுடலில் விடம்போல
வேங்கிக் கொல்லும் விடபாக மிதுவே செய்யுங் குணமாமே.

## துடிப்பு வாத குணம்

### வெண்பா

65. ஓடுந் துடிக்கு முடலேற வும் பார்க்கும்
நீடுஞ் சுரந்துடலில் நின்றடங்கும் - தேடுந்
துடிப்புடைய வாதமெனத் தோகைநல் லீர்வந்து
தடுத்திடுமே நாள்தோறுந் தான்.

## புலிணடுக்கு வாத குணம்

66. நடுக்குஞ் சுழற்றித் திமிரரா வறட்சிவெற்பு
அடுக்கடுக்க அம்பாவை யாக்கு முடுக்கி
கிடுகிடெனக் கொண்டே செடியில்விழத் தள்ளும்
நடையிடாிப் புலிணடுக்கு வாதம்.

## மகா சன்னி குணம்

67. அம்மு மயக்கு மறிவை யறவழிக்கும்
விம்முஞ் சலம்போல விரைப்பிக்குஞ் - செம்மை
மறைக்குமகா சன்னியென வாகடநூ ல் பேசும்
முரைக்குமா முன்னோர் மொழி.

68. நடுக்குஞ் சுழற்சிசெய்யும் நாத்தடுக்கிப் பேசுங்
(கடுக்கு) முளையுமிரு கால்வாரா் – மடக்கொடியீர்
நடுக்குமிது வாதசன்னி நம்பியிது மீளாத
தடுத்திடுமே னாள்தோறுந் தான்.

69. எண்.18இல் கண்ட பாடலே மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

அக்கினி மந்த குணம்

70. வந்து மிருந்து பசியெழும்பும் வயறு மழற்றி மந்திக்குஞ்
சிந்தை தன்னில் நினைந்ததெல்லாஞ் செல்லுங் கொள்ள வொட்டாது
இந்தக் குணமே யிருந்ததென்னி லிதுவே அக்கினி மந்தமென
அந்தப் படியே முன்னோரு மருளிச் செய்த திதுவாமே.

மந்தாக்கினி வாயு குணம்

வெண்பா

71. நீண்டு(ம்) பசியிருந்து நின்ற வாயளவு
வேண்டி னைதத்தின்ன விரும்புமே – மீண்டுமது
சந்தோஷ மாகித் தயவாகி வாந்தி செய்யும்
மந்தாக் கினியென்னும் வாய்வு.

குண்டல (வாய்வுக்) குணம்

72. கண்டிக்கு முதரந் தன்னில் கதித்திடுங் கூப்பிட் டோடும்
விண்டிகை விரும்பித் தின்னில் மெலிபடு முருண்டு கற்போல்
தண்டித்துச் சிதறிப் பின்னைச் சிதைத்துடல் பரந்த டங்கிக்
கொண்டிப்போ குடலில் தங்குங் குண்டல வாய்வு மாமே.

## கர்ப்ப விப்புருதி குணம்

73. திரண்டு புழுக்கை யுருண்டுவிழுந் தீராச் செயலும் பரிந்துவிழும்
வறண்டு முடலம் வற்றிவரும் மயமுங் கெட்டுத் தாதுக்குஞ்
திரண்ட தனத்து மடந்தையரே தீராக் கர்ப்ப விப்புருதி
யுருண்ட புழுக்கை யுள்மூலம் முளையுங் கர்ப்ப ரோகமிதே.

## சுரச்சூலை குணம்

74. பக்கமாஞ் சூலை தோன்றில் பலபட உதரந் தன்னில்
ஒக்கவே சுரமுந் தோன்று முளைவுபோற் குளதே யென்னில்
மிக்கதோர் சூலை யென்று விதனமற் றிருப்ப தன்றித்
தக்கதோர் சுரத்தில் சூலை தானெனப் பேச லாமே.

## குன்ம சூலைக் குணம்

75. மேல்வய றதனில் வந்து மிடைபட வலிந்தெ ரித்துச்
சாலவே வாயி னீருறித் தலைகிடா தேப்ப முண்டாஞ்
சீலமாங் குளிரே மூன்று சிறுகவுள் வெதும்பு மென்னில்
கோலமாங் குழலி னாளே குன்மமாஞ் சூலை தானே.

## அக்கினி மந்த குணம்

76. மலமுங் கழியுங் கிறுகிறுக்கும் வறண்டால் வயிறு வலித்துளையும்
சலமு மிகுந்து கழிந்திருக்குஞ் சிறுக இரத்த மலத்தில்விழும்
பலமும் குறைந்து நயனமுகம் பேதப் படவே வெளுத்துவரு
மலையுங் குணங்க ளிதுகண்டா லக்கினி மந்த மிதுவாமே.

77. பொருமு மிரையுங் கழிந்திருக்கும் போதப் புறந்தா னதைதவந்து
மருவு மசனஞ் செய்யாது வறீன்டே யுடம்பு வற்றிவரும்
பருகுந் தண்ணீர் நாவறளும் பலகா லனந்தல் கனவுமிகும்
வெருவும் வாயுக் கிராணியென விரித்துப் பேச விளம்பினரே.

## சருவாங்கி குணம்

### வெண்பா

78. கடுக்கு முளையுங் கனத்து மிகநொந்து
படுத்து முழுதங்கம் பார்க்கு – மடுத்த
சருவாங்கி வாதமெனத் தாரணியோர் பேசு
மருவாக வம்புவிக்கெல் லாம்.

## பெருவயிறு குணம்

### விருத்தம்

79. கருவிய மந்தம் பற்றிக் காயமே யுடம்பு வற்றிப்
பெருகிய வுதரந் தானும் பெருகிடப் பொருமி விம்மி
மருவிய வுண்டி மாறி மலத்தையும் பரிப்ப தென்னில்
பெருகிய வுதர தோஉஷம் பெருவய றென்ன லாமே.

## வறட்சியிருமல் குணம்

80. புகைந்தே யிருமல் வறட்சியது போதத் தாது கிரந்தியெனத்
தகைந்தே கண்டிச் செருமுகிலோத் தறகா தானே பற்றியென
வகைந்தே மூச்சா மிளைப்பதுமாம் வறண்டா லிவையால் வருவதென
மிகுந்தோர் பேசும் வாகடத்தை வினவி யறிந்து விளம்பினரே.

81. மாதர் மயக்கை மருத்திட்டில் வந்தே யிருமல் புலால்நாறுஞ்
சேத மிருந்து பயித்தியமுஞ் சொரியா தேப்ப மிகவிடுதல்
வாதை மிகுமே கடிவிடத்தில் வந்து மிளை யிருமலதாய்
நீதிப் பயில்சேர் சிரத்தில்மிக நின்று மயக்கிக் கொண்டிடுமே.

## வாத பித்த (சிலேத்துமம்) பகைத்தால் வரும்படி

82. வாதமும் பித்த மையு மந்தித்துப் பகைக்கு மாகில
சேதமே செய்யுஞ் செய்யாச் செலுத்துனாட் செல்வே மீளாத்
தீறு வியாதி வெப்பு திருமுனி யருளிச் செய்த
தீவை உண்மை யென்று இமையவ ரருளி னாரே.

## தைல பதம் அறியும்படி

83. மந்தமாம் பதம தாகில் வழுவழுத் திரட்கிக் காணும்
அந்தமத் திமித்திப் பாக மதிலிடு மெழுகு போலாம்
வெந்திடு மந்தபாகம் விரிந்திடிந் திடிந்து ஞ ளாம்
இந்தநோ யென்னை வைக்க இவைபதம் மென்ன லாமே.

84. மந்தமாம் பதம தாகில் வாதத்துக் கதுவா மென்க
இந்தமாம் பதம தாகி லிழகிப் பித்தத் துக்கு
அந்தமாம் பதம தாகில் அமைத்துள புண்ணைத் தீர்க்கும்
யிந்தநோ யெவ்வெயி வைக்க இவைபத மென்ன லாமே.

85. திருவைப்போல் மேனி யாக்குந் தீறு புண்ணை யாற்று
மருவொற்ற வாத பித்தம் கபத்தையும் விரோசிப் பாகும்
இருவிக்கத் தட்டம் வீக்கம் முரைத்திடுச் சத்தி மந்தம்
மொருவித்து மொழியச் செய்யும் முறதியாங் குணங்கள் தானே.

கபால த்துக் குணம்

86. புருவச் சுழியில் குத்திநின்று போகம் புரியு மல்லாமல்
உருவக் குத்து மூச்சுதனி லோடி யடங்குஞ் சிரந்தனில்
மருமொழித் தளக வல்லீ 3ர மறுசொற் படிக்கு மிடமில்லை
பெருகக் கபால குத்தியென்று பேசப் பகர்வீர் பெரியோரே.

சத்தி கபால குணம்

வெண்பா

87. மெத்தநத் தூரத்திமிக மேதினியெல் லாஞ்சுழலுங்
குத்திக் கபாலமிகக் கொண்டதிருஞ் - சத்தி
யெடுக்குங் கிறுகிறுக்கு மிவ்வலியுந் தீ(ர்)ந்து
தடித்தடங்குஞ் சத்தி கபா லம்.

வாயுக் கிராணி குணம்

88. பொருமுங் கழியும் புளித்துநெஞ்சு நின்றெறியும்
இருமு மிரையு மியல்பாய் - வெருவப்
புறந்தாளு மூடே புடைத்தூம்பு வற்றி
வறண்டேறும் வாயுக்கிரா ணி.

உளமாந்தைக் குணம்

89. இருமிச் சுரமுந் தலைவலி(யு) மிரங்கா தன்னம் விழும்போல
பெருகக் குத்திக் குடைந்துளையும் பிகற்று மரிய வாய்வெருவும்
முருகச் செயலுங் கெட்டுமிக வுறக்க மறவே வீழ்ந்திருக்கும்
ஒருமைப் படவே வகுத்திசைக்கு முளமாந் தைக்குக் குணமாமே.

90. வடக்கே போன பிராய்வேரை வரைந்து வெட்டி யிழைத்தெடுத்து
நடத்து மாிசி தனில்பொாித்து நன்றாய்த் தவிடு யிடித்தருந்த
இடிக்கு மருந்து சூனியமென் றென்றி விழவே யிளிப்பாகும்
மடக்குஞ் சூனிய மில்லையாகில் வருந்தத் தவிடுக் கைப்பாமே.

91. பொக்கணம் பிச்சி மூலம் போதவே துவைத்துச் சாறு
தக்கவே கொண்டு நெய்யில் தான்மிகக்குழைத்த (ரு)ந்தில்
துக்கமே யெழுப்பி மெய்யில் துய(ரு)று ரோக மானால்
மிக்கவை மசக்குந் தானு மிகுத்தவஞ் சனையும் போமே.

## வலி குன்மம்

92. வந்தே உதரந் தனில்வலிக்கும் வயிறு கழியும் வாந்திக்கும்
நொந்தே மேனி வறண்டேறும் நோயு மிகுந்து தலைவலிக்குந்
தந்தால் மருந்து தனைமீறந் தருகாத் துயர மதுவுண்டாம்
வெந்தே விழுந்து போமளவும் விடாதே மிகுந்த வலிகுன்மம்.

## அசாத்திய குணம்

93. இடைதுடை மார்பின் கீழே யெதிரிடப் பற்றி யோடி
முடிகிடி லங்க மாகில் மூவாி லொருவ ரோடப்
பருகிடுந் தண்ணீர் போதப் பஞ்சிடுங் கண்ணும் வாயும்
வறளிடு மிதுவே கண்டால் மரணமென் றுரைக்க லாமே.

## கபால குன்ம குணம்

94. வற்றிய மலச லங்கள் மற்றுள விழிகள் நாசி
உற்றமை செவிகள் ளாக்கு உறுதியில் பாிசு பார்க்கில்
இத்தனை குணமுங் கெட்டு இருந்ததே இருக்கக் கண்டால்
வித்தகர் தன்முன் சென்று மீள்வதோ ருண்மை யாமே.

95. தலையுங் கனத்து வலித்தயர்ந்து தறகா தழற்றுந் திமிர்த்துடம்பு
மலையும் நடுக்குங் கிறுகிறுக்கும் அயரா துச்சி கன்னிவையும்
உளையக் குத்திப் பிடரிநரம்பு முளையு மனந்தல் வாயூறுங்
கலையிற் பாரி உடலடங்கிக் கதிக்குங் கபால குன்மமிதே.

போர் மாந்த குணம்

வெண்பா

96. பொருமுங் கழியும் புரண்டுவலி யுண்டா
மருவுமுலை யுண்ணா மயக்கும் - வெருவுமது
சத்திசெயுங் கண்குழியுந் தான்மயங்கி யே....
மெத்தியுறு போர்மாந்த மே.

பிளவை சிகிச்சை

97. ஆயுரு வேத முன்னோ ரடைவுடன் பேசி வைத்த
நோயிகு பிளவை தன்னை நொய்யதாய்த் தீர்க்க வேண்டி
வாய்மையாய் மருந்து கார மற்றுள பரிகா ரங்கள்
தூய்மையாற் தெளிந்து கண்டு சுகப்பட மருந்து சொல்வாம்.

98. பெரிய பிளவை முள்ளெலும்பில் பெருக்கப் பணைத்து நடுமுதுகில்
அரிவை யிதவு மாறாது யடங்கா துமுலை யதுவெடுக்கும்
அரிய பொன்னா வரையல்லி யதுவும் புன்னைக் காயளவு
உரிய பழமோர் தனிற்குடிக்க உமுலை தவள மோடிடுமே.

99. முதுகிடை மையத் தானம் முள்ளந்தண் டதிலே பற்றிப்
பதுமரங் காயே போலப் பிளவையும் பலகண் ணாகில்
மதியுறு மருந்தி னாலு மற்றுள கருவி யாலும்
விதியிது படியீ தென்று வேதமா முனிவர் சொன்னார்.

100. செப்புடன் குத்த மூச்சு சேர்ந்திடா துழலை சோபந்
தப்பிடா நாவ றட்சித் தருகிடாச் சலத்தின் வாதை
முப்புரக் கன்னே போன்று மறைமையால் வியாதி தானும்
இப்படிக் குணங்க ளெல்லா மிருவகைப் பிளவை தானே.

101. மார்பினி லீரல் தன்னில் மறுப்படா தண்டுங் கோல்போல்
நேர்படச் செம்மை யாகி நிற்பதே வாயு நெஞ்சில்
கார்செறி குழலி னாளே கருவியாக் கீறி காரம்
பேர்படக் கட்டப் பக்கப் பிளவையும் விட்டுப் போமே.

102. முதுகிற் புறத்தி லுறைபோல முள்ளந் தண்டு தனைத்தப்பி
இதுவே வருகில் மரணமில்லை எனவே கண்க ளடைபடுமென்று
அதிலே மேனி குளிர்சுரமுந் தவள முழலைக் கழிச்சலுடன்
இதுதான் பக்கப் பிளவைதனைக் கிதுதான் காரங் கீறியிடே.

103. காரந் தூிசு பாசாணம் கரியா தளவில் குறையாமல்
சேரப் பொடியா வெண்ணையுடன் திரும்ப வரைத்துச் சீலையுடன்
நாரத் தடவி யுள்சீலை யங்குந் தள்ளிப் புண்ணிலிடப்
பாரப் பிளவை கரைந்துருகிப் பாரிப் பவனம் பரிந்திடுமே.

தயிர் சோறுங் கட்ட

104. பரிந்திடும் புண்ணில் காரம் பகைத்துண்ணி லாம லாறப்
பரிந்திடு தயிருஞ் சோறும் பிசைந்துவை மூன்றா னாளில்
அரிந்துவைத் தமரக்கட்டி யவிழ்ந்துவெப் பாற்றிப் பின்னைச்
சிறந்திடு மெண்ணெய் பண்ணத் தெளிந்துநீ மருந்து செப்பே.

105. செப்பிய யெண்ணெய் வைக்கச் சிறந்தயா விரைவேர் னாழி
ஒப்புடன் தடரி பூலா ஒறொன் றதனிற் பாதி
எப்பெருஞ் சரக்கு நிற்க யிரண்டிரு பதக்கை யாகி
கைப்புவேம் பாடல் கட்டிக் காயமா மெண்ணெய் பண்ணே.

106. எண்ணெயுஞ் சீலை தானு மிடைவிடா பகைமைக் காகும்
நண்ணுமா வரைபி லையை நயக்கவெச் சோட்டில் கொண்டு
புண்ணின்மேல் வைத்துக் கட்டப் பொருந்துமாம் பிளவைப் புண்ணென்று.
உண்மையா யுரைக்க முன்னோ ருறுதியாய்க் கண்ட தாமே.

பத்தியம்

107. கண்டதோ கறிகாய் பால்நெய் கருத்ததி லுற்ற தெல்லாம்
கொண்டிடில் குற்ற மென்று கூறினார் முனிவர் முன்னோர்
விண்டலாத் தூ தூ ளங்காய் மேவிய முருங்கை யத்தி
பண்டுமுன் பழகு மோரும் பத்தியந் தயிரு மாமே.

பிளவையில் சாத்தியம் அசாத்தியம் அறியும்படி

108. உழலை தபனம் பரிதாப முளமுச் சுரங்கள் நாவரட்சி
குமறி வெருவல் குரைகண்ணால் கொள்ளா தனந்த லறமிகுதல்
அழகு சொரியும் கொடியிடை(யே) அம்மா வாசை யதுகண்டால்
அளவு மில்லா வாதையென அதுதான் மீள்வ (த)ரிதாமே.

109. எண்.94இல் உள்ள பாடலே இங்கு மீண்டும் வந்துள்ளது.

110. நெல்லியுடன் நிலப்பனையின் கிழங்கு தானும்
நெற்பொரியு மாவாரை நீண்ட வேரும்
சொல்லரிய வற்றாவின் வெண்ணெய் சேர்த்துத்
திதமாக வீக்கத்தின் மேலே பூசக்
கொல்லியதோர் பிளவைதனிற் காய்ச்சல் காயங்
குயைத்தேமு வருங்கவ்வால் விழுநீர்ப் பாய்ச்சல்
மெல்லியதாது முலைப்பாலுங் கட்டிக் கொள்ள
விதனமுடன் வலிதானும் விரவிப் போமே.

111. ஆவாரை யல்லி நெல்லி யதுவுடன் பூலா வேரும்
கோவினில் வெண்ணெய் தன்னில் குழைத்துவிக் கத்திற் பூச
வேய்மிகுந் தனல்போல் விக்கம் வேதிய வையகத் தீரத்
தாவிக் குழைத்துப் பூசிலொத்த தயிருங் கூட்டிக் கொள்ளலாமே.

112. வஞ்சிக் கொடியார் முலைப்பாலும் வராகிக் கிழங்கோ டாவெண்ணெய்
செஞ்சொல் படியே யரைத்தொன்றில் திரும்ப வழித்து யகல்வைத்து
வஞ்சப் பிளவை முகந்தன்னில் மானே [வானே] வழித்து வனிந்தப்பக்
கெஞ்சிச் சுரமோ டழல்விக்கங் கெட்டே பட்டுப் போய்விடுமே.

பிளவைக்கு உள்ளுக்குக் கொள்ள
------------------

வெண்பா
-----

113. மருசுமந்த மெல்கொடியும் வன்குறுவை நெல்மாவும்
மலர்சிறந்த ஆவிரையின் தாதுமா துளைவிலா
நீரே யொருத்துவரும் நில்லென்னும் பிட்டதனைப்
பூரே யெனக்கொள்ளும் போது.

114. சேயிரை யன்ப தொக்கத் தீயெழ வறுத்துத் தூள்செய்
தாவிரை வேர தன்னை யரைத்துமென் பொடிய தாக்கி
ஏவிசீர் பிளவைப் புண்ணி லிலங்குநெய் தன்னைப் பூசித்
தூவிட நீரும் வற்றிச் சுருதியா யுலரும் புண்ணே.

பிளவை(க் குணம் மு)ற்றும்.

## இரத்த மூல குணம்

115. தொப்பூழும் வலித்து நொந்து துளங்கிடா யிரத்தம் வீழ்ந்து
அப்பொழு துள்ளமூல மறியவே வெளியில் தள்ளும்
தப்பிடா மேனி வற்றித் தருகிடா தூ டே சென்று
இப்படி ரத்த மூல மென்றுதா னியம்ப லாமே.

## குவளை விப்புருதிக் குணம்

116. இடுப்புடன் முள்ளந் தண்டு இருபுறம் விலாக்கள் நெஞ்சு
நடுக்கிய குளிர்ச்சி வெப்பு நயக்கவே கொதித்துக் குத்தும்
அடுத்திடு முதர நோயு மயக்கமோ டிருமிச் சியும்
குடிக்கொள விருந்த தென்னில் குவளைவிப் புருதி யாமே.

117. இந்தநோய் நின்ற வாளி விரும்பிய செயலு முண்டாய்
வந்ததா னாளும் வற்றி மதித்திடுஞ் சேர்க்கு மாக்கும்
முந்தவே ஐயும் பித்த முடிகிடக் குளிர்ச்சி வெப்பும்
வந்துமூச் சிழை தானும் வற்றிடில் மரண மாமே.

## உளமாந்தைக்குப் பத்தியம்

118. மத்திய மச்ச மாகில் பருவிரால் சுரவு நெய்த்தோல்
சுத்தமாங் கிளத்தில் சொல்லில் தொடர்ந்தொரு மேவு காடை
முத்தவெண் கோழி முட்டை முருங்கைனு துவளை முள்ளி
முற்றிய பொன்னாங் காணி முயலுட னுள்ளான் கட்டே.

119. இந்தநோய் நின்ற வாளி விருத்திய கசரோ கமாம்
முந்தவே அய்யும் பித்த முடிகிடித் குளிர்ச்சி வெப்பு
வந்ததோர் குணங்கள் கண்டால் மயங்கிடா தேதான் நாளும்
பைந்தொடி யாவின் பாலுங் கீரையும் பருக லாமே.

## உளமாந்தைக்குக் குடி மருந்து

120. குன்றி முசுட்டை கொடிவேலி (வேலிப்)பருத்தி குன்றாமல்
நின்றோர் நிலத்தில் குமிழியிலை நீதி பயிலும் பீலியிலை
சென்றே பிடிக்குஞ் சிற்றமல்லி சேர வரைத்தா லின்பாலில்
அன்றே குடிக்கி லுளமாந்தை யகன்றே சீப்புண் ணாறிடுமே.

121. நிலக்குமிழ் தடாரி பூலா நிலத்தினில் நிம்பஞ் சம்பு
பலப்படி யஞ்சுங் கொள்ளப் பலசரக் கதனைக் கேண்மின்
நலப்படு கோஷ்ட முள்ளி நற்கடு நெல்லி தான்றி
குலப்படு மதுரம் பாடல் கூட்டிநீ யெண்ணெய் கொள்ளே.

## உளமாந்தைக்குக் களி வகை

### வெண்பா

122. குறிஞ்சி யிலையைக் குறுவைநெல்லின் மாவில்
செறிந்தகளி னெய்யுடன் தின்ன - அறிந்த
உளமாந்தை மூச்சி யுடம்பிலிது நோவுங்
களைதீர்ந்து கண்ணடைக்குங் காண்.

## உளமாந்தைக்குப் பிட்டு

123. வேங்கைமரத் தோலுடனே மென்குறுவை நெல்மாவை
ஆங்கதனைப் பிட்டாவ தாக்கியே - பாங்குடனே
னெய்தனில் தோய்த்தருந்த யென்னு முளமாந்தைப்
புண்ணிருமல் சீயொடுவும் போம்.

124. உப்பிலியு முருமுகந்த விடத்தே ரிலையும்
ஒப்ப முகமுகக்கை மூட்குமிழு மிப்படியே
கோவின (ப்) பாலில் குடிக்க விழுந்தோடும்
மேவுமுள மாந்தையிது வே.

உளமாந்தைக்குக் குண்டலாதி யேரண்டத் தைலம்

விருத்தம்

125. சித்தார் சீந்தில் சிவனிவேம்பு திருந்த நிலத்தில் குமிழ்வேருங்
கொத்தங் கோஷ்டம் வேம்பாடல் குலவு நறுஞ்சீ ரதிமதுரம்
மெத்த மிகு சீரகமும் வெந்தே யெண்ணெய் விழுங்கினக்கால்
(பத்தே) எட்டே நாளதனிற் பறந்தே (யே)ாடு முளமாந்தை.

அதிகமான குண்டலாதி ஏரண்டத் தைலம்

ஆசிரிய விருத்தம்

126. இயற்பெரிய சங்கினொடு இம்பூரல் சாரணை
வல்லியிப் படியாடா தோடை
இயல்புடைய தூதுவளை குக்களி கையாந்
தகரை குமிழின் வேருடனே
மயக்கறு வராகியொடு சித்தா மட்டி
மாகானி வலியதோர் புலியுடைவேர்
மருவுமுக் காவேளை சீதேவி ஓரிதழ்
நல்வினை முத்தமுத வல்லி
செயற்பெரிய செவ்வள்ளி கொத்த மல்லி
செய்சீர சேருங்கற் கடகமுடன்
எய்யதோ ரதிமதுரம் நெல்லிதிப் பிலிகருஞ்
சீரகம் செறிகுப்பை வேம்பாடல்
நயப்போடு வடித்தெண்ணெய் நக்கிலிலோர் கசரோகம்
நாறுமுள மாந்தை யுடனே
நெய்யிழை விப்புருதி முதலான ரோகமே
நைந்து நொந்தே தீருமே.

உளமாந்தை முற்றும்.



## பித்த குணம்

127. பித்தத்தில் வெதுப்புப் பற்றில் பெருத்திடுஞ் சத்தி குன்மம்
சித்தத்துள் வலித்தெ ரித்துத் தெளிவுறக் கழிச்ச லாகும்
மெத்தத்தி லீர லோடே மிகுந்துதா னெரித்த முற்றும்
கைத்தற்று நாக்குத் தானுங் கைத்திடிற் பித்த (மா)மே.

128. நெற்பொரியும் பசும்பயறு வில்வ முல்லை
நேரியச் சேலமுடன் சுக்கு நெல்லி
முற்படவே யிளநீர்காஞ் சிரண்டொன் றாக்கி
முற்றியபின் னெடுத்துவடித் தூ ற்றிக் கொள்ள
சொற்பெரிய சத்தி குன்மஞ் சுரத்திற் சத்தி
மயரமுடன் கிறுகிறுப்புள் ளுழலை மூச்சுப்
பற்றதுமென் றிமையவரு மிருடிதாமும்
பகர்ந்தனர்முன் னருந்தமிழின் படியைக் கண்டாம்.

## பித்தத்துக்கு எண்ணெய்

129. சந்தனத்தி லெண்டயெண் பலத்தளவு தானும்
வெந்துயிள நீரினில் தக்கயளவி வறுபாலில்
வெந்துதவு தவிற நின்றது கொளத் தறுகியே
தந்ததே விந்தகானி கருவராக நாகவல்லி
குருவே விலாமிச்ச மும்முதிரு கோஷ்டமும்
இந்தசொற் படியுள் ளெண்ணெய் வைத்திடுகில்
லெப்பெறு தோஷகர பித்தமும்
இன்றுவிட் டகலுமென்று வானவரு மிருஷியு
முன்னியன்ற தே.

130. நெஞ்சு மெரிந்துப் புளித்தேக்காய் நின்றே யுதரம் பொருமலுமாய்
தஞ்ச மறவே சத்தியுமாய் தறுகா தேப்ப மிகவுண்டாம்
மஞ்சப் பித்த வாயுவிது வதிகப் படவே வகைப்பதென்னில்
சஞ்சப் படமே சத்திரமங் காசெ செய்யுந் ருமமாமே.

131. தேங்காயிப் பாலி லிந்துப்புச் சிறக்கப் பலமே வொன்றுகொள்ள
வேங்கா வுள்ளி யதுவ வே யிரண்டு பலமே தான்கொண்டு
தூங்கிச் சார மிருகமுக்க சொன்ன தளவில் கள்ளிப்பால்
வேங்கா தெரித்து எண்ணெய் கொள்ள விலகுங் குன்ம மிதுகண்டாயே.

சத்தி குன்மத்துக்குக் குளிகை

வேறு

132. உள்ளியுஞ் சோம லுப்பு முரத்ததோ ரிங்கு சூதம்
வெள்ளிவெண் காரஞ் சுக்கு மிளகுதிப் பிலிகற் காந்தம்
கள்ளியின் பாலில் நொச்சிடக் கசக்கிய யிலைச்சா றுண்டை
கொள்ளவே குன்ம வாயு கொடிடி லகல்வ தாமே.

குதிரைவலி சூரணம்

133. எண்ணிச் சன்னி வாதத்துள் ளிதுவுங் குதிரை வலியெண்ணில்
கண்ணில் புருவங் கதிப்பதாங் கரமுங் காலும் ஒருபக்க
வெள்ளி நுரையு மிருந்துதள்ளும் மிகவே திருக வலியுண்டாம்
விண்ணைப் பார்த்து விழிநிற்கு மீளா திதுவுந் திண்ணமிதே.

குதிரை வலிக்கு அஞ்சனம்

134. சுக்கு மிகளு திப்பிலியுஞ் சோம லுப்பு வெள்ளுள்ளி
தக்க கொத்தாளந் திறப்பருப்புந் தறுகா வசம்பு மிவைகட்டி
ஒக்கத் தேசிப் பழச்சாற்றி லொன்றா யரைத்தச் சனவுண்டை
மெய்க்குங் குதிரை வலியுதமீளத் தேசிப் பழத்திலிடே.

## நசியம் விட மருந்து



135. பூவம் பழமு(ம்) பழவரப்பு புதிய மிளகோ டிந்துப்பும்
ஆவித் துடங்கு மகத்திற்பா லதுவோ டொக்கப் பொடிசெய்து
தாவ முலைப்பால் தனிற்கலக்கித் தப்பா திரண்டு நாசியில்விடப்
பாவக் கபால வலிதானும் பிசாசு மகன்று போமென்றே.

136. வெண்கா வுள்ளி நேர்வாள மிளகு சுக்கு திப்பிலியும்
நண்பான் கடுகுநற் சீரகமும் நன்மை யுள்ள வெந்தயமு
மண்பார் விளைந்த கெந்தகமும் வசம்பு வெளுத்தைப் பிசின்காரம்
இன்போ தோமந் துரிசுடனே ஒவைதான் கூட்டி மிகக்கொள்ளே.

137. கொள்ளே குதிரை வாலுருவி குறுத்த ஆடா தோடையுடன்
முள்ளே யுள்ள குருவட்டு முருங்கை மூலி அா துவளை
வெள்வேல் மிக்க சாரணையும் மீறா மல்கொடி வேலியுந்தான்
உள்ளே எரித்த வெப்பெண்ணெய் வுள்கொள்ள குதிரை வலிபோமே.

## வெடிசன்னிக் குளம்

138. க(ா)தில் குத்தித் திரண்டெழுந்து கதிக்கக் குத்தி வலியுண்டாம்
சேதப் படவே முகமதனைத் திருகி நாக்குத் தடுமாறும்
வேதப் படவே வெடிசன்னி விழுந்தே யிருக்குஞ் சிலேத்துமமும்
பேதப் படவே வியாதிதனைப் பிரித்துப் பருகப் பேசிரே.

## விரேசனம்

139. கடுக்காய் கருக்கித் தூ ளாக்கிக் கதித்த யிந்துப் புமாக
அடுத்த மிளகு திப்பிலியு மதுவும் வெச்சில் பொடியாக்கித்
தடுத்துச் சாத்திர வேர்க்கிழங்கு தண்ணீர் தனிலேகொண் டருந்துவீராய்
வெடிக்குஞ் சந்நிச் சிரெட்டும் விட்டே மலமுங் கழிந்திடுமே.

## வெடிசன்னிக்கு எண்ணெய் உட்கொள்ள

### ஆசிரிய விருத்தம்

140. உத்ததிப் பிலியுட னதிமதுர முள்ளி
உறுதியுள்ள செவ்வள்ளி வெதுத்தைப் பிசினோடே
மத்தமா தேவியுடன் தூதுவளை கறிகொள
வட்டத்துடன் பத்தியம் நிலக்குமிழ் மிளகு
முத்தநன் னாரிபால் முத்தமுட னாவிரையும்
உரிய தோர்நா யுருவி நிலவேம்பு
உத்திடும் வெண்ணெயது பத்திடும் வெடிசன்னி
ஒக்கவது துயர்தீரும் உற்றபசி மாறும்
இருபது நாள் கொள்ளவே.

141. உளையு முடம்பு தனிலெங்கு முளையா திருக்கு முறப்புளையும்
களையு மிகுந்து யிறமுற்றிக் கனக்க காந்த வானீரு
விளையும் வெப்புந் தாளுண்டாம் விடாதே திமிரந் தலைகனக்கும்
வளையும் புருவ நுதலாளே வளமாம் வாதக் குணமிதுவே.

### ஆசிரிய விருத்தம்

142.* குந்த மூர்த்தமொடு கொடிய வெள்ளறுகு
குலவு நிம்பமொடு கொள்கையும்
குலவெருக்கி னோடு இலைமுதல் கள்ளி
கொள்குலக் குறிஞ்சி மிகுசாரணை
முந்நொச்சி யாடா தோடை யீசுர
மூலி வீழியா தும்பையு
முற்று மாயிலொடு ஒத்ததா யின்னொரு
முள்ளிளா தனைமு ருங்கைவேர்
கந்த கத்தி னோடுயுங் குத்தமிரி
கரிய மஞ்ச ஆடலிஞ்சி
வெங்கார முள்ளி யொடுதார மோரீகமுங்
கார் செறிந் துலவுசாகமும்

இந்தவெள்ளி லெண்ணெ யெரியு நிம்ப வெண்ணெய்
யதில்மருந் துகளை வெந்ததால்
இதமாக வடிபூசு மேலினி லிராது
வாத மிதுவெண் ணுமே.

இரத்த நோய்

143. இரத்த மொருக்கால் தகையாம லிளவே யொடுப்போல் வீழ்ந்திருக்கும்
உரத்த வுடம்பு முறுதிகெடு முடலில் துயரம் மிகுந்திருக்குஞ்
சிரத்தில் கனப்பு முண்டாகும் திதமாயிச் சிக்கி விழுமிரத்தம்
சுரத்த யிரத்த ரோகமெனச் சொல்லும்நல்ல வல்லோரே.

கர்ப்ப சூலை

144. வஞ்சனைக் குறைதன் னாலும் மருந்தீடு தன்னி னாலும்
மொஞ்சிடில் காய வேட்கை யுறுதிசெய் துவீடிப் பாலும்
அஞ்சவே பிள்ளைப் பெற்ற யவதரித் திரத்தத் தாலும்
கெஞ்சவே கர்ப்ப சூலை கெடுக்குமே யிரத்த வேகம்.

145. வெளிச்சிப் பட்டை மரமஞ்சள் மிளகு கடுகு பெருங்காயம்
அழுத்த முடைய சதகுப்பை யதிலி லிவங்கஞ் சீதாரி
வழுத்த மொழியக் காராவின் மருவு சாதிக்கா யிஞ்சி
பழுத்த கிராம்பு வசுவாசி பருநேர்வாளஞ் சிலசரக்கே.

சூசிகா வாயு குணம்

146. பிள்ளைப் பெற்ற தாயார்க்குப் பெருத்த சுரமாய்த் தலைவலியும்
உள்ள முழலை தவனமிரை யுற்றே கழிச்ச லுடன்பொருமல்
மெள்ளத் தொடுத்த யுன்மூச்சு விழியிற் றெளிவு கெட்டிருக்கில்
துள்ளித் துடித்த சுவாசகாசந் துளக்கி யுயிரைப் பறித்திடுமே.

சுவாச காசத்துக்குச் சந்தனாதி யெண்ணெய் -

பத்து நாள் உட்கொள்ள

147. வாட்ட மிகுதி குன்றாத மண்ணில் மிகுந்த சந்தமுத்தம்
கோஷ்டம் நெல்லி அதிமதுரங் குலாவு மிலாமிச் சிருவேலி
கேட்டம் பெரிய தக்கோலம் சேர வரைத்து யிளநீரைக்
கட்டிக் கொள்ள வல்லீரே குளிருஞ் சந்த னாதியிதே.

148. சந்த கோட்ட மதிமதுரஞ் சாத்திர வேதி தக்கோலம்
முந்த கோரோ சிணைமுல்லை முத்து மிலாமிச் சிருவேலி
இந்த வகையே யரைத்துவிடை யிலந்தைக் கொட்டை யளவாக
அந்த யுழலைக் கிருமிளநீர் மிதக்குஞ் சந்த னாதியிதே
சுவாச காசத்துக்கு இருத்துவாதி யுண்டை பத்துநாள் கொள்ளவும்.

149. முத்தமொடு திப்பிலியோ டத்தமிரி சுக்குமுட
கடுகுரோ கணிகொள்சீ ரகமோ டேலம்
மொத்தயிரு வேலிமிகு வொத்தமிலா மிச்ச
மொததவு கோலமுட னோதுமில வங்கம்
கொத்தமல்லி யொத்தமது ரோசணைகள் கோட்டம்
கொண்டு யிளநீரி லிவைமண்டிட வரைத்தே
வொத்தபரி தாபசுர முட்டண மெடுத்தால்
லோடுபல காணமிருத்த வியாதியிது போமே.

இதுவும் சுவாச காசத்துக்கு உண்டை

150. கொத்தமல்லி யதிமதுர மேலமில வங்கம்
கோட்டமொடு செண்பக மலர்கோ ரோசனையும்
முத்தயிரி சத்திவொடு யொத்தயிரு வேலி
முற்றிய கரும்பிளநீர் முப்பழமமா டொக்க

வைத்ததொரு முந்திரிகை யுற்றபே ரீஞ்சு
வகையுடனி றுத்துயிதை யொன்றுபட (வ)ரைத்தே
வொத்தபரி தாபசுர முட்டண மெடுத்த
லோடுபல காணுமிறுத்து வியாதியிது (போ)மே.

151. எண்.47இல் கண்ட பாடலே இங்கு மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

152. புனவருக் கியவா தண்ணீர் புதியதென முலைப்பால் சுக்கு
கனறெழு சந்து கோட்டங் கடியதிப் பிலிகற் காந்தங்
கனறெழு கிப்பி லப்புத் திறமுட னரைத்துக் கட்டி
வனறிகற் குத்துக் கெல்லாம் மருந்திதே கொடுக்க நன்றே.

புறவீச்சுர காண்டத் தயிலம்

153. இரதங் கெந்தம் வெள்ளுள்ளி யியல்பா மிருசு செங்கொட்டை
சரச மறவே யாவெண்ணெய் தன்னோ டொக்க யனைத்தெடுத்து
உரமே குத்தும் புறவீச்சு வுடனே குத்தி யுரம்பண்ணில்
கரவா துடவே கலைசுட்டி கலையில் கொழுத்தித் தயிலமிடே.

154. இடவே தயிலங் காசிடைகொ ளிஞ்சிச் சாறு முலைப்பால்தேன்
உடனே வுள்ளுங் கொள்ளுவது யுரத்தால் வேம்பி னெண்ணெயுடன்
இடவே கலந்து தானங்க ளிறவும் பொறுத்தா லாகுமெனச்
சடமே போடா திருப்பதெனத் தறுகா திறவுந் தாக்கண்டீர்.

பிரமியத்துக்கு

155. புலித் துளிரை புதியபசுப் பாலில்
ஆலித் தரைத்துவரக் கோலில்-.....
செல்மறிப்பு தனைத்தீர்க்கு .... ....
மல்லாமல் கந்தனையு மாத்து.

156. எண்.79இல் கண்ட பாடலே இங்கு மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

## பெருவயி(ற்)றுக்கு எண்ணெய்

157. சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோம வுப்பு வெள்ளுள்ளி
தக்க கடுக்காய் பிளவுடனே சாத்திர வேரிக் கிழங்குநீர்
மிக்க தளவே வேப்பெண்ணெய் மீறாமல் கூ(ட்)டப் பொறுத்தருந்த
துக்க மறவே யறமலமுந் தோன்றித் துதர தோஷமுமே.

## விரேசனம்

158. சுக்கு மிளகு திப்பிலியுந் துய்ய கடுக்கா யிந்துப்பு
மிக்க கடுகு ரோகணியி திலக கள்ளுசே ரொவ்வொன்று
வொக்கச் சரிகொள் வேர்வாள(ம்) மொன்று படவே யெலுமிச்சன்
தக்கப் பழத்தால் மிகவுண்டை தரியா திடுக விரேசனமே.

159. இந்து கடுக்காய் மிளகுசுக்கு யிதுவுங் கடுகு ரோகணியும்
முந்த நிரையே களஞ்சுகொண்டு முதிருங் கரிய நேர்வாளம்
அந்தப் படியே யருகளஞ்சு யரிய தேசிப் பழச்சாற்றில்
இந்தப் படியே அரைத்துண்டை யிடவே சுண்டைக் காயளவே.

160. வெந்நீ ரதற்குப் பரிகார மிருந்த களியில் பால்கஞ்சி
சொன்னோந் தருகா வண்மையிது சுரமுங் குளிரும் பலமற்று
முன்னோர் சொன்ன மொழிகண்டு முயன்று கடவு ளடிபோற்றி
இவ்வோ ரப்படி செய்தாக்கா லிதுபோஞ் சருவ மெலாமே.

161. துரிசு வெள்ளைப் பாஷாணந் துய்ய கல்லுச் சுட்டபொடி
பெரியமேத்திய தோர்முள்பூ லாவிலைச் சாற தனை(ப்பாவி) செய்து
சரியந் தழலி லொவ்வொன்று நெய்யில் தப்பாதொக்கப் பொடியிட்டு
வரிபோல் முந்து புண்களிவை வெருவச் சீலை தனைப்போடே.

162. போடே காரம் நாள்மூன்று புண்ணிற் களவு கரைந்ததெனில்
தோடே தயிருஞ் சோறது(வு)ம் சிறக்க மூன்று நாள்கட்ட
மாடே யதுவில் சவ்வதுபோ லற்று விழுந்த புண்தேரில்
பாடே நீர வெண்ணீரால் பரிந்து கருவிப் புகைக்காட்டே

163. இரத மியஞ் சேங்கொட்டை யியல்பாஞ் சங்கு வெண்ணீறு
யுரமே செய்யும் மஞ்சனொடு வொக்கக் கொண்டு ஒவ்வொன்று
தரவே .... களஞ்சாக்கிச் சமனே செய்து புகைகாட்ட
விரிவாய் விடவே வெய்யபுண்ணும் மீறும் வாதப் பிரமியமே.

164.* வங்கத் தோடு வெள்ளுள்ளி யுமக்கிச் சாறுமர மஞ்சள்கடு
செங்கொட்டையு மங்கைவா ளிவைவிரதம் சங்கைப் படிவந்ததோர்
தம்பல் திருநீறு கார்போக ரிசிகலி கஞ்சீர் காந்தாரம்
வெங்கடுகு பாஷா ணம்மெத்த துரிசு..... துத்த மணம்
வெம்பா னிமிளை வெண்காரம் வீறாம் வசம்பும் பாளூட்டி
புகை காட்டவும்.

வேறு

165. கொண்டிடுங் குடலில் தங்குங் குறைந்தொரு விரையில் தோன்றும்
அன்றியே விரையி லொன்றை வலித்ததை யுடலுள் வாங்கும்
பண்டுதா னிடை பாதம் பற்றியே கழலே யென்று
அண்டரும் முனிவர் தாமு மறியவே யுரைக்க லுற்றார்.

166. வந்து பொருமு மண்டலத்தில் வலித்து மிகவே சுரந்தோன்றி
நொந்த விடம்புண் போலுழைந்து நோவி லுடனே தலைவலியும்
இந்தப் படியே யிவைதோன்று மிதுவே பக்கச் சூலையென
தொந்திப் புடனே வருமெனில் சொல்லுங் குணங்க ளிதுவாமே.

அண்ட வாதத்துக்குச் சூரணம்

167. கழல்மணி வெள்ளை யுள்ளி கடியதோர் முருக்கங் கொட்டை
அழலுடை சுக்குக் கொள்ளு மஞ்சிரவி டாசுக் கொளிறு
குழலிடை யோசை போலக் குமுறிடுங் குடல்வா தங்கள்
பழகிய சூலை குன்ம மபாயத்தில் கொள்ளு மன்றே.

168.* பெருங்காயம் வெள்ளுள்ளிப் பெருமிரிசு வேர்க்கொம்பு... ---
விருத்த முதிர்ந்த சாரணைவேர் வெட்டி யிடித்துக் காய்ச்சுகிலோ
திருத்த மாக மூன்றுமொன்றாய்ச் சொல்லக் காஞ்சு கொண்டிடுகில்
ஒருத்தர் தமக்கும் நில்லாம லோடும் பக்கத் சூலையிதே.

இனி எண்ணெய்

169. சாரணைக் கிழங்கிந் துப்புத் தழலிடை சுக்கு துள்ளி
சீறசித் தரத்து மூலி செம்பொனின் கார வாளம்
வீறதாய் வெந்தோ ரண்ட மெண்ணெயில் விழுங்கு வீரால்
கூறிய கள்ளிப் பாலுங் கட்டியுங் கொள்ள லாமே.

170.* சாரணை வேர்சித் திரமூலி நறுவி லிவேரித் துப்பு...
கூறு வாற்பல மொ(ல்வொ)ன்று கூட்டு முள்ளி பலமொன்று
வீறுடன் கார மென்கழஞ்சு விரைநேர் வான மாம்பதவாம்
பேறுள்ள கள்ளிப்பா லாமணக்கம் பெருகிய யெண்ணெய் இருநாழி.

காச ரோகத்துக் சூரணம்

171. விள்ளி லாழுந் துயராமிகும் வெதுத்து வற்றித் திமி(ர்)த்தெங்கும்
கண்ணிப் பார்க்கில் மஞ்சளித்து கனத்து முகமும் வெதுத்ததினால்
எவ்விற் கரும மொன்றுசெய்ய யிளைப்பு மிட்டுத் துயருண்டாம்
நவ்விற் பெரிய தாதுகெடும் நவிலுங் காய ரோகமிதே

172.* கையாந் தகரை யுப்பிலியுங் கடிய நொச்சியா டாதோடை
செய்ய வளரு மாமணக்குச் சிறக்க யிவையி னிலைச்சாறு
பொய்யா திறவும் நாழியாய் பொடியே செய்து ...
மெய்யாம் நாழிப் பொடிபோட விறுமிளச் சுவறவெயி யி(லி)ல்லையே.

மந்தார காச குணம்

173. கண்டமு முகமுங் காதுங் காயமும் பொருமு மாகில்
கொண்டமந் தார காசக் குறிகளின் குணங்கள் தாமே
முண்டாக மூக்குங் காலும் மோசித னரு மாகில்
மண்டியே யிருமல் தானும் வருத்திடில் காச மாமே.

மூக்குநீர்ப் பாய்ச்சல் குணம்

174. கண்டமும் முகமுந் தாடிக் கரகரத் தூர்வ தேபோல்
துண்டமுந் திவவும் பற்றித் தும்மியே தண்ணீர் வீழ்ந்தும்
மண்டையுங் கனத்து நொந்து வாதமும் பகைக்கு மானால்
முண்டகம் மதிக்கு மாதே மூக்குநீர் பாய்ச்ச லாமே.

175. வைத்தே எருக்கம் பால்சிறங்கை மணத்த கிராம்பு திரிகடுகு
மெத்த விலவி லுப்புடனே மேவு கருஞ்சீ ரகப்பொடியும்
நெய்த்த வுள்ளி சமனாக நிரையோ றொன்று முக்களஞ்சு
கைத்த கரைபி ரமியிலை கசக்கிலச் சாற்றி லரைத்துலர்த்தே.

176. உலர்த்திப் பொடிசெய் தொன்றுபட வோர்நா ளொன்று வெருகடிகொள்
பலத்த பித்த பாண்டுவெனில் பேணி நறுநெய் யதிற் கொள்ளும்
நலக்கரு வெப்புப் பாவையெனில் நன்றா வெண்ணெய் சீனியில்கொள்
கலக்குங் காய ரோகமெனில் காயும் பசுப்பா லதில்கொள்ளே.

## பித்த பாண்டு காமாலை வாத ரோகத்துக்கு மருந்து

177. நிலப்பனைக் கிழங்கு நல்ல நீர்வள்ளிக் கிழங்கின் சாறும்
நறுக்கெனும் நெருஞ்சில் வேரும் நாணல்நா துவளையின் பூவும்
முருங்கையின் வேரும் நல்ல முத்தவெள் ளரிக்காய்த் தண்ணீர்
நெருக்குஞ் சித்தாமுட்டி கீழாநெல்லி சிறுக் கீரை பாலை வேர்ச்சாறும்.

178.* காட்டு மல்லிகை யும்பூனைக் காலி யின்விரை யுஞ்சேர
நாட்ட மாயொவ் வொன்றொன்று நாற்பல மிடித்துப் பாலுங்
கூட்டுபின் பதக்குத் தண்ணீர் மருவாதி கொள்ள ...
ஈட்டிய மொந்தம் வாழைக் கிழங்கிரு நாழி தண்ணீர்.

179. கருப்பஞ் சாறு நாலுபடி கலத்த யிஞ்சி முந்திரிகை
பெருத்த யீஞ்சு லாமிச்சப் போரீ வேலி [பெரியதாமரை] யிமுல்லை
முருத்த முத்தம் நன்னாரி முஞசீ தேவி கடைச் சரக்கு
மிருத்து மேல மிலவங்க மினிய மதுரங் கோஷ்டமுடன்.

180. கற்கட கசிங்கி யிந்துப்புக் கசமோ தகம்வேர்க் கொம்புடனே
திப்பிலி சீரகங் கருஞ்சீரகந் திருகு கிராம்பு சாதிக்காய்
தற்பற வசுவாசி நாகப்பூ சாத்திர வேதிரி கடுகுநெல்லி
வற்க தோன்றி செண்பகப்பூ வரியதக் கோல காஞ்சிலிலை

181. மஞ்சிட்டி பச்சிலை கச்சோல கருவி யோரொன் றிருகளஞ்சு
மிஞ்சிட்ட பசுவின் பால்விட்டு விரைய அரைத்துக் கலக்கியதில்
கொஞ்சி வடித்து மேல்பூசிக் கொள்ளீ ருள்ளுங் கொடியபித்தம்
மிஞ்சிட்ட காமாலை பாண்டுவது மிகையாய் ரோகம் போயிவிடுமே.

## வாத ரோகத்துக்கு எண்ணெய்

182. எருக்கு குருந்து பெருமருந்து யிறுகுஞ் சூரை சிறுகுரும்பை
மருக்கொள் கரந்தை சிறுநிம்பம் வரிசேர் வட்டுத் தூதுவளை
பருத்திக் கொடுவே லாதண்டை பரிய முதிரை வேர்கொண்டு
நறுக்கி யோரொன் றிரண்டுபலம் நன்னீர் விட்டுக் காய்ந்துகொள்ளே.

183. கொள்ளே சுக்கு திப்பிலியுங் கொடிய மிளகு பெருங்காயம்
வெள்ளை வெங்கா யுள்ளியுடன் வெளிச்சைப் பிசின்சேர் வெந்தயமும்
கள்ளே தீர்க்கு மிந்துப்பு நற்சீ ரகமும் மோதகமும்
தள்ளா தொக்க நேர்வாளஞ் சரிகொள் கருஞ்சீ ரகங்கூட்டே.

184. கூட்டே யொன்று முக்களஞ்சு கொள்ளும் வோரொரன் றிரண்டுபலம்
நாட்டி வளவு நாழிதன்னால் நாலொன் றாகக் காஞ்சதண்ணீர்
தேட்டெடன் ஹெண்ணெய் நறுநெய்யும் செரிய யிரண்டு படியாகக்
கூட்டி யெரிக்கி லோரெண்ணெய் குறையும் வாத ரோகமிதே.

## பித்தத்துக்கு

185.* மெய்யே நடுக்குந் தலைவலிக்கும் மேனி வெதுங்குங் . . .
பொய்யே யுயருங் கிறுகிறுக்கும் போத நயன மஞ்சளிக்கும்
கைகால் திமி(ரி)த்துக் கனத்து.......முகமுஞ் சனிக்கெட்டு
மையார் மெய்யா வலைமூலும் மதிலாம் பித்த ரோகமிதே.

## பித்தத்துக்கு நெய்

186. பத்தகர்கள் தமக்குரிய பரவுபொறி பொன்னாங்காணி
பங்கிலுறை சீதேவியும்
பரியதோர் தாழை விழுதும் பரிய
பன்றிக்கு றும்பனையதும்

முத்தமொடு நன்னாரி முற்றிய விலாமிச்சு
மொய்குழலுக் கிருவேலியும்
மொசுமொசுக் கையாந் தகரையும் (கரு)ம்பிநீரும்
முந்திரிகை பேரீஞ்சதும்
மற்றிரு மிருத்த ஆவிரை பாங்கமும்
வல்லி நீர்வள்ளியும்
அரவிடத் தொருதவினி ரளவினை கொண்டதே
வளமாக ஆறவைத்து
இத்தனையு மொத்தளவி லெட்டிலே குத்தி
இருநாழி நெய்யதில்விட
இவ்வோர் சரக்கது .... ....
...ஞ்சரக் கதுவையியே.

187. கொட்டமொடு செண்பகங் கொத்தம(ல்)லி மதுரமுங்
குலவுநற் சீரக மோடு
கோலக் கிழியுமல் த...மாஞ்சியொடு... கோல
கொல்டிடுஞ் சதகுப்பையும்
துட்டக் கடுகுமொரு பச்சிலை கச்சோலஞ்
சுகமான செவ்வள்ளியுந்
தத்தரு நெல்லி முள்ளி யுள்ளதுங்
ஏா(யி)மையுள் சித்தேலமும்
மட்டையா மருக்குலவு மலையினிரு வேலியு
மாதேவர் முழுமாகி
மாசந்த னொடு வாசமளித் திறபமொன்
வனிதம்ப மேதுவுடனே
முட்டவ தித்தனையு முக்களஞ் சறவாய்
முயலிடுக நெய்யதுவினில்
முடுகாது பித்தகுல ரோகமது வாராது
முனிவரரு ளிச்செய்ததே.

188.* .... .... .... .... பண்டிதரே வகைகேளும்
திருத்த மாக நித்திரைதான் செய்யி லடக்கை கீழென்றும்
பெருத்த புணர்ச்சி தனைத்தள்ளு .... ளினும் பத்தியமும்
மிருத்த தடவே மண்டலமு மெய்துஞ் சியல்பாம் பின்னாளே.

189.* கொள்ளுக் காடி கொம்மட்டி .... பன்றி செம்மறியும்
பள்ளச் சேம்பு வல்லாரை பாலை சுரைக்காய் பூசணிக்காய்
துள்ளப் பொரித்த பாகற்காய் சுண்டை யவரை பெரும்பயறு
வெள்ளத் தனையுந் தின்பீரே லெல்லா மருந்து மிறந்தீரே.

## மூக்குநீர் பாய்ச்சல் குணம்

190. கண்டமேல் முழந்தாள் காது கரகரத் தூர்வ தேபோல்த்
துண்டமே தும்ம லுண்டாய் சொரிந்துதான் சலமும் வீழ்ந்து
மண்டையுங் கனத்து நொந்து வலியுமோ மிகவு மாகில்
பண்டுசேர் மூக்கு நீரின் பாய்ச்சலா மென்ன லாமே.

191. சாறடைக் கிழங்கிந் துப்புச் சரசமில் மிளகு சீனி
கூறிடு நறுநெய் தன்னில் கொண்டிடு முலைப்பா லொக்க
வீ(ற)தாய் நயியத் தட்டி விடுவது மூக்கில் நசியம்
சீறிடு மூக்கு நீரின் திவவுட னடைப்புப் போமே.

## மூக்குநீர்ப் பாய்ச்சலுக்கு எண்ணெய்

192.* சித்தா முட்டி சிறுக்கீரை சீந்தில் .... நிலவேம்பு
முத்த மோடு தூதுவளை தேட யமுக்குரா ஓரிதழ்
பத்து வோமம் சிறியவட்டு பத்தி னோடு நன்னாரி
யித்த னையும் பத்துபல மோரொன் றெனவே யுரையீரே.

193.* பத்து மருந்து வோரொன்று பலமா யிடித்துப் பாகுடனே
ஆறு படிதன் நீரில் கா(ய்)ச்சி
உற்றபால் நாழிவிடு நெய்யதுவும் முரியேனல் வெண்ணெயதுவு மொக்கக்கூட
மத்தகோட்ட மிலவங்கம் நற்சீரக மிந்துப்புள் ளிருமகவும் கருஞ்சீரகம்
குத்தத்திரி கடுகிவை கட்டியிரு களஞ்சு ணமாக வடித்துநக்க
ணமாய் விடுமே நீர்ப்பா(ய்)ச்சல்.

194. இக்கண மதனோ டொக்க இருமலு மிளைப்பு முண்டாய்ச்
சிக்கென நெஞ்சைக் கட்டிச் சீறிடு மிருதி பத்தி
மிக்கதோர் வயிறு தானு மிருந்ததால் பொருமு மாகில்
பக்கமந் தாரந் தன்னில் பற்றிய காச மாமே.

195. சுக்குடன் மிளகு திப்பிலி னுதளை வட்டுச் சீந்தில்
தக்கவோ றொன்று தானுஞ் சமனாகச் சாறு கொண்டு
ஒக்கமுன் னாழி தண்ணீ றொன்றதா யரைத்துக் காய்ச்சி
நக்கவே நறுநெய் தேனில் நன்றாகக் காசம் போம்மே.

196. சாரணைக் கிழங்கு தானுஞ் சாத்திர வேதிக் கிழங்குதானுஞ்
சீறள சீந்தில் வட்டும் வேருமை யாடா தோடை
மாறிய பிரமி னு து வளை மறிசலாங் கன்று
ஏறிய யமுக்கு ராவு மதுகளோர் பலங்கள் தானே.

197. கொள்ளறு நாழி தண்ணீர் குமுறவே கொதிக்க விட்டு
மெள்ளவே காஞ்ச னு றி வெந்துநா னாழி யாக்கி
யெள்ளதி வெண்ணெய் தானு மீதுடன் கூட்டி யொக்கத்
துள்ளவே முறாவிக் காய்ச்சச் சொல்லிய சரக்குக் கூட்டே.

198*. சொல்லிய சரக்குத் திப்பிலி மிளகிந் துப்பு ....
நல்ல சீர கமும்வோமம் நன்று கற்க டகசிங்கி
மெல்லிய காரம் வெள்ளுள்ளி மேவு கடுகு ரோகிணியுங் கூடச்
சொல்லமுக் களஞ்சு கொண்டு செலுத்திடிற் காசம் போமே.

199. வார்சொ லரிந்து வசங்காதே வறட்சிக் கரப்பான் வகைகேளீர்
ஒருத் சொரியும் பரபரத்து வுடம்பு மிகவே பதைப்புண்டாய்
தீரு மிருந்து பரந்தேறுந் திதமாய்ச் சாம்பல் பொருக்கேறும்
சாரு மொருவற் குண்டென்னி லசடாயிப் புலால்மேல் நாறுவதே.

இருக்கு மருந்து
---------

200. தண்ணீர் மிட்டான் கிழங்குதனிற் சாறு (மி)கவும் நாழியதும்
வண்மைக் குரிய வரிக்குமரி மடலிற் சோறும் நாழியதும்
உண்மைக் குரிய னா துவளை யுற்றே னாலு பலமொன்று
நண்ணிப் படியே கஉநாயத்தல் நன்றா வூறப் போடுவதே.

201. ஊறிப் பிரிந்து வடித்தெடுத்(து) ஒரஞ் சிரண்டாய்க் காய்ந்துபின்னை
ஆறிப் போகு மதிவெண்ணெ யடுக்க நாழி யூறிவிட்டு
கூறிப் பெரிய சிவந்தோற் கொடுவேல் கருஞ்சீ ரகம்போட
வேறக் கூட்ட வேண்டாமே யெட்டே களஞ்சு யிதுகொள்ளே.

வாதகுணம் அருக்கு மருந்து
---------------

202. உளையு முடம்பு தனிலெங்கு முளையா திருக்கு முறைப்புளையும்
களையு மிகுந்து வயிறழற்றிக் கலக்கக்காந்தி வாளீரும்
விளையும் வெதுப்புத் தாளுண்டாய் விடத்தே திமிறுந் தலைகனக்கும்
வளையும் புருவ நுதலாளே வளமா வாதக் குணமிதுவே.

203. வெள்ளா வுள்ளி யறுபலமும் மிருந்த திரிகடு கொருபலமும்
நல்பா மிந்துப் பொருபலமும் நல்குவ் கொடுவேல் நிலவாகை
மல்பூ வறிவ ரிக்குமரி வகைசேர் கஉ்ஷாய மதகண்டு
பல்சேர் கட்டி நறுநெய்யில் பதத்தி லொத்து நக்குவதே.

## வறட்சிக் கரப்பாத் ணம்

204. கால்தலை யுடம்ப தெங்குங் கலக்கவே சிரசி ரங்காயிச்
சேலது கட்டி வற்றிக் திரவுடல் சொறிவ தாகிச்
சாலவே காது வாசி மிடறுதான் தரத்த தாகில்
மால்நறு மடந்தை மாதீர் வறட்சிசெங் கரப்பா னாமே.

## இதக்கு மருந்து

205. புங்கம் கொட்டை பசுமஞ்சள் புதிய வெள்ளைப் பாஉஷாணம்
மங்குச் சொன்னோம் வேம்பாட லவுரிச் சாறு நல்லெண்ணெய்
பங்கப் படவே சொரியாமல் பதத்தில் வடித்து மேல்பூசித்
தங்கிப் பின்னோர் பெய்யதண்ணீர் தலைக்குளிக்கில் தறகாதே ....

206. தூ து மோரிதழ்த் தாமரை வேரது தூய நீலியிலபோ டெருக்கு வேர்க்
கோதி லாத கொடுவேலி வேரதுங் கொள்சமல் செவிதுகட்டிய தொக்கவே
காது பொங்கார் போகரிசி யுங்கரிய சீரகஞ் செந்தகங் கட்டியே
ஏது வாகவே யெள்ளெண்ணெய் தன்னிலே யிம்மருந்து வெரித்துக் கொடுப்பதே.

## சோபைக்கு

207. கீழ்க்காய் நெல்லி வேர்கழஞ்சு கிராபோற் கடுக்கா யிருகழஞ்சு
தான நிறைவ முரேகொள் சற்றே புளித்த மோருடனே
நானே முந்தா னெல்லவும் நம்பிப் படியே கொள்டுவரில்
ஆலவா துலகுள் டுமிந்ததுபோ லன்றே சோபை யகன்றிடுமே.

208. தேங்காய்ப் பாலில் அத்திப்பதின் சிறிய பிஞ்சது வைத்தவடித்து
அங்குந் திருக்கம் பொடிசெய்து மதவு மொக்கப் போட்டளவில்
அங்கந் தன்னிற் பிரமியத்தி லதனால் பக்கச் சூலையெனில்
பங்கப் படாதே யிம்மருந்து பரிந்து குடிக்கில் பற்றறுமே.

209. வெட்டுப் பட்ட புண்தனக்கு விரிந்து முன்னோ னுரைத்தபடி
வட்டப் படவே தேசிக்காய் வரைந்து பாதி யிரண்டாக்கிச்
சட்டி தனிலே எண்ணெய்விட்டுத் தழவி யறவே மிகக்காய்ச்சி
அட்ட மருகு மொத்திட்டு மதுக்குப் பின்னே யெண்ணெய்விடே.

210*. இடவே யெண்ணெ யதுதனக்கு யிலந்தைத் தருகாய் துடரிமுட்பூலா
படரு நிலத்துக் குமிழ்வட்டுப் பகத்தா வாரை வகன்..
கடவா தொக்கச் சிறுகடுக்காய் கரம்பை சூரி நாயுருவி
யடவே யிவையின் வேர்கொண்டே அதி(ல்)மே லிவைசேர் கடைச்சரக்கே.

வெட்டுப்பட்டப் புண்ணுக்கு எண்ணெய்
---

211. கோட்ட மதுரம் வெம்பாடல் கொடியின் சிவந்த செவ்வன்னி
யிட்டன் கரிய குந்திருக்க மியல்சேர் கைப்புச் சதகுப்பை
மேட்டில் வளரு மேல்முள்ளி மிகாம லிருந்த யிலவங்கம்
கட்டித் தா னி யுடன்செய்து கொள்வீ றெண்ணெய்ப் புண்ணுக்கு.

212. குத்துக் குடனே புள்சிலை குடைந்தே யிரத்தக் கன்றிதனை
முத்துப் போலே விழுநீரை முறிந்துச் சும்மா வகைசெய்து
சுத்தப் படவே குத்தலவாய் துடைத்துத் துவார ந் தனசத்தன்னிச்
சித்தத் துளக்கா தேசிக்காய் சிறந்த யெண்ணெய் சுடவொற்றே.

213. ஒற்றே யிட்ட முன்றாநா ளொருவுஞ் சலமும் புள்ளடியு
மற்றோ சிறியா தம்பலவேர் மணக்கு முத்தம் நன்னாரி
சித்தத் தேல மிலவங்கம் தின்னுங் கைப்பு வெம்பாடல்
வற்றோ மதுரந் தான்கொண்டு யுடதி வெண்ணெ யுடன்தன்னே.

214. நிம்ப நிலத்தைச் சொல்லுவது நிலத்திற் குமிழுந் துடரோடு
விம்பங் கச்சோலத் தருமிரத்தோடு மிக்க தேவி தம்பனையும்
கம்பிப் பிசினு மிசைத்தேகொள் கைப்பு மதுரம் வெம்பாடல்
அம்பு முதலாய் வெடியுள்ளடை யாது மிவையோறென்னெய் வைவே.

ஆயுதத்தால் பட்ட வாதக் கரப்பானுக்கு

215. வில்லா யுதங்கள் பட்டவரை மலங்கக் காய முடம்புலர்ந்தால்
சொல்லு நிம்ப மதிற்றோலும் கூடவே தண்ணீ ரதிலூ றி
மெல்ல விருத்தி வேச்சென்ன விடலே யிடித்துக் குளிப்பாட்ட
நல்ல தாகு மென்றுமுன்னோர் நயந்தே யுரைத்த படியாமே.

216. புண்ணும் வெளுத்து நீர்யிருந்து போதக்குத்தி வலியிருந்தால்
உண்மைப் படவே யொடுக்கொள்ளக் கொள்ளா திருக்கி வரத்செய்யுந்
தின்மைப் படவே செங்கலங்க விரத்த மாகில் தீராது
நன்னிச் சீறாய் சீவிழுந்து பின்னை நனைக்குஞ் செம்புண்ணே.

217. வீங்குங் குத்தி மிகவுளையும் விடாமல் திமிர்த்து வீக்கிறிற்கும்
மாங்கம் புண்ணில் சலம்வீழ்ந்தா லதுவுந் தினவுஞ் சொறிசெய்யில்
நீங்கிச் செய்வே தீராது நெடுநாட் படவே மசகிநிற்குந்
தேங்கச் சுட்டு பதைத்துவிடில் தீரும் வாதக் கரப்பானிதே.

218. நொந்துதான் கன்றி மிக்க நோவுடைப் புண்கள் தன்னில்
வந்துவல் லாயு தங்கள் வடவுறத் தைத்தி டத்திற்
சந்துதான் மொழிபொ ருந்த தசைவுதா னங்க ளாகி
வந்துதான் தொடுக்குஞ் சேதி வாதனாங் கரப்பா னாமே.

219. கொன்றை னா து நிலவேம்பு குமிழ்வேர் கடுக்கா யாவிரைவேர்
சென்று வலங்காச் சூரியநுஞ் சிவனார் வேம்புங் கலயிரிசும்
ஒன்று முத்த மாகாளி யுறுசேர் வட்டு நாயுருவி
நன்றே கொள்ளு முட்கூரை நன்று ா ரியந்துடா கட்டே.

220. கட்டே யுள்ளி மிளகுமஞ்சள் குலவு மதுரம் வேம்பாடல்
நாட்டிற் பயிலும் வெண்கோட்டம் நல்குஞ் சென்ன கரைப்பழமும்
ஆட்டங் காணுஞ் சாதிக்கா யதுகொள் கடுக்காய் தான்றிநெல்லி
கூட்டித் தா ள்செய் விதியையிட்டுக் கொண்டே ண்ணெய் கொதித்திடுமே.

221. குறிஞ்சா விலையாம் புங்கிலையாங் கொடிய கழற்சி யிலைதானாம்
அறிஞ்சே வராலிக் கடலாஞ்சி யதுவும் புளியந் தெங்கிலையாஞ்
செறிந்த தாணி பாவட்டைச் சேரும் பெரிய பூனையிலை
படர்ந்த பருத்தி யிலைதானும் பாங்காம் வாதகரப் பானுக்கே.

222. உள்ளி மிளகு சீரகமும் முற்றக் கடுக்காய் திப்பிலியுந்
தள்ளுஞ் சுக்கு மோதகமுஞ் சசியி னுப்புக் கிராம்பூவுங்
கொள்ளுங் கற்கங் கடுகுரோ கணியுங் கூட்டுத் தா துகவிழாழி
கள்ளாச் செய்யுக்கரு சீரகங் க ஞ்சே ரொன்று தான்றியே.

223.* பதமாந் தா து தனைவேரி ரண்டு பலநெய் நாழிவேப் பஞ்சாறுதான்
சிறங்கை யொக்க விடவே.. .... கலக்கி யதிற்கரைத்து
விதமாய் வரவே யதைக்காய்ச்சி இந்தப் பதத்தில் வடிப்பீராய்
கதமா மீளை முதலான காசந் தீருங் காணுவே.

224. திரண்டுகீழ் வயிற்றில் தோன்றிச் சிதறிடக் கட்டிப் பட்டு
புரண்டுதா னுதர மென்னும் பிள்ளைதா னெனவே யூறும்
மருண்டுதா னாக்க தாகத் தன்னுடன் வலியுந் தோன்றும்
உருண்டிடும் கர்ப்பக் குன்ம தானென்று மொழிய லாமே.

### வேறு

225. பித்தஞ் சுழற்றிக் கிறுகிறுத்துப் பெருக்கக் கண்டு துயராகில்
ஒத்த சுத்தி யுடனிட்டு யுகாந்திப் பாகிச் சுழியிட்டுச்
சித்தந் துலங்கா தினனீரில் சிறிய பயறுஞ் சீரகமும்
இத்தைப் பசுப்பால் நெற்பொரியு மிகவே காஞ்சு கொள்ளுகவே.

226.* மிக்க மிளகு நேர்வாள மீறாமல் கட்டி யொருமுன்றாம்
தக்க தளவே தேசிக்காய் தன்சா றதனில் வெந்து..
ஒக்கக் கட்டி யரைத்துண்டை யுருட்டிச் சூரைக் காயளவு
நக்கத் தேசிப் பழச்சாற்றில் நன்றாய்ச் சுழற்றும் பித்தமதே.

227. பித்தமும் முதலாய்ச் சுரம்விக்கம் பெருத்த வாயுச் சலமறிப்பு
சுத்தப் படவே விரோசிப்பாஞ் சுகமாம் முட்டுக் களைத்தீர்க்கும்
மெத்தச் சுடவே வெந்நீர்கொள் விரோசிப் பாகுஞ் சத்திசெய்யும்
மெத்தப் பூரே யெனுமிடத்தில் விடந்த பசுப்பால் கஞ்சிகொள்ளே.

### கண்டக் கரப்பான் குணம்

228. போதச் சுரமே வரண்டுமிகப் பொருந்து மிக்கை விருவதெனில்
மோதப் பற்றி சொரிந்திருமி மூக்கால் நீரும் விழவேண்டும்
சேதப் படவே பித்தமிகச் செய்யுங் குணங்கள் சிலேத்துமமாய்
காதுடத் தினவாய் மிடாச்சொறி யிங்கண்ட கரப்பா னெனலாமே.

## கண்டக் கரப்பானெண்ணெய்

229. தூது மோரிதழ்த் தாமரையுந் தூய்ய முத்தம் நன்னாரி
ஒதுஞ் சாறணை திரிகடுகு யுயர்ந்த கருஞ்சீரகம் வசம்புள்ளி
காதுங் கையாந் தகரையுடன் கசக்கும் வேப்பந் தோல்தண்ணீர்
போத வெண்ணெய் தனிற்கூட்டிப் பொருந்த வெரிந்து நக்குவதே.

## சுரக்குலையின் குணம்

230. சுரமுட னுதரந் தன்னில் தோன்றிடுந் திரட்சி யாக
உரமிகப் புரண்டு வாயினீ ரூரலே நெஞ்செ ரிந்து
வரமிகு வாந்தி யன்ன மறந்திடுங் குணங்கள் கண்டால்
சுரமிகுங் குலை யென்று சொல்வதோ ருண்மை தானே.

231. உண்டியை யொறுத்து வாயினீ ரூறும் நெஞ்செ ரிந்துப்பற்றி
மண்டிய சுரத்தோ டொக்க வயிற்றினில் திரண்டு தோன்றுந்
தண்டியே புரண்ட வெப்புந் தனியவே யமைத்த டங்கும்
அண்டர்தம் வேதம் பேசு மதிசுரக்குலை யாமே.

232. பங்கம் பாளை வேர்க்கொம்பு பரிந்த முத்தக் காசுடனே
அங்கஞ் செ(ா)ரியு மதுங்வேரு மடவே காய்ச்சிப் பருகிடில்
பொங்குஞ் செரியுஞ் சுரக்குலை போல்வ தென்ன நேரெட்டும்
பங்கப் படாதே யிவைதீரும் பாரீர் பாரீர் பாரீரே.

233. வெள்ளுள்ளிச் சாறு நாழி விரவிய இஞ்சிச் சாறுநாழி
மொள்ளிய தண்ணீர் மீட்டா னுரைசெய்யா கன்னி நெல்லி
உள்ளதோர் சாறு நாழி யுரைக்கிலா விம்பால் நாழி
மெள்ளவே கஷாய முற மேவிடு மருந்து தானே.

234. தானதே கொடுவேல் முல்லை சாரணை வீழி முத்தம்
ஆனமான் யாதன்டை சித்தா மனக்கென் னெயிலை யெரிந்து
தானதே யொன்று புளித்தல் கைப்புத்த விழ்ந்துதான் கொள்வீராகில்
ஆனதோர் சுரமாந் சூலை யடைவுடன் தீரு மன்றோ.

235. தலையும் வலித்து உடம்புலந்து தாது கெட்டுத் துயருண்டாம்
மலமுந் தோன்றுங் கண்போல மனமு மடித்து மந்தமுமாய்
நிலையுங் கெட்டு மறப்புண்டாய் நினையா தனேகங் கனப்புண்டாய்
உலையும் வறட்சிப் பித்தமென யுரைக்க முனிவோர் சொன்னாரே.

வறட்சிப் பித்தத்துக்கு நெய்

236. சீதேவி யார்பூட்டில் சாறுதான் குறுணி
சிறந்த பால்நாழி நெய்யிரு நாழிவிட்டு
மாதே சதகுப்பை கொத்தமல்லி அதிமதுரம்
வன்கோட்டம் செண்பகப்பூ சந்தனமே லஞ்சிரகம்
கோதிலா கற்கண்டொன் (று) ஐங்கழஞ்சு கொண்டு
அரைத்துக் கரைத்து நெய்ப்பதத்தில் வடித்து
தீதிலா வாரத்துத் தலைவார்த்துக் கட்டசீ
தாகாது வறட்சிபித்த மந்தமிவை தீரும்.

கற்சூலையின் குணம்

237. மாலே யுதிரந் தனிலிரண்டு வளையம் போலத் திரண்டெழுந்து
வாலா நாபி யதனிக்கீழே யந்தப் படியும் கிடந்துநொந்து
நூலே யடிக்கில் முதுகுதனை நொந்து பற்றி நோவுண்டாங்
காலே பற்றில் கற்சூலை யென்று கருத்திற் காண்பீரே.

238. கவிளை யாயில் கொடுவேலி நற்கடுக்காய்
தீவிளா வேர்க்கொம்பு திப்பிலிநல் மஞ்சளோடு
மேவுபல முள்ளவற்கு மிகமிகையே கழஞ்சுகொள்ளத்
தாவுபலம் கெட்டவற்கு யரைக்கழஞ்சு /கஷாயந்/தான்போடே.

239. கொன்றை கொடுவே லாயில் கூவிளை சாரணை கடுக்காய்
குன்றி சுக்குத் திப்பிலியுங் கர்மினு கடுகு ரோகணி(யும்)
மன்றி வரும்பேநர் வாளம் வளருள்ளி யிந்துப்பும்
ஒன்ற வைதான் முப்பலமாங் கடைச்சரக்கு மிருகளஞ்சே.

## வெண்பா

240. இருகழஞ்சு கட்டி யிதமா யரைத்து
மருவியசித் தாமணக் கெண்ணெய் - திறமாக
நாழி யுரிவிட்டு நலமாய் வடித்துநக்க
பூழிவரும் கற்சூலை போம்.

241. போமே நன்மஞ்சள் புடமிட்டு மென்பொடியாய்
ஆமே யதையருந்த யன்றேதா னதிமேவுங்
கற்சூலை தீருங் கருத்தில் சுகையூறாம்
மெச்சுதாயிச் சொன்ன விதம்.

## புறவீச்சுக் குணம்

242. பிடரே வலித்து நோய்மிகுந்து பேரப் பிரிய வொண்ணாது
உடலே மயக்கித் தலைகளத்து யுடனே யடுத்துத் திமிருண்டாம்
விடமே காந்தத் ததுபோல மிகுமே யிரவில் நாள்தோறும்
இடரே பண்ணும் பிடரிவலி யிதுவும் புறவீச் செனலாமே.

## புறவீச்சு வாதத்துக்கு எண்ணெய்

243. நத்தைச் சூரி நாயுருவி நல்ல சாரணை கொடுவேலி
சுத்த வீழி யாதன்டை சொல்லும் வெள்வே லெருக்குடனே
முத்தத் தூதுவளை புங்கங்கொட்டை முல்லை வில்வம் சீசுரமூலி
பித்தைச் சேவுக வள்ளாரி யினிய வோரிதழ் தாமரையே.

244. அரையவ முத்த மஞ்சளுள்ளி யதுவே வசம்பு வேர்க்கொம்பு
கரையா மிளகு திப்பிலியுங் கடுகு கோட்டம் வெண்காரம்
விரையாக் கெந்தக நேர்வாளம் வெண்கோட்டம் மேவு யதிமதுரம்
புரையார் பூமிச் சர்க்கரையும் புதிய நெல்லி வெகுத்தைப்பிசின்

245. பிசினோ ரொன்று களஞ்சுகொண்டு பின்ன வெண்ணெய் நறுநெய்யும்
வசுவேப் பெண்ணெய் சித்தாமணக்கு மருவிய வெண்ணெய் யிவைவடித்து
பூசுமேல் தன்னி லரைச்சாமப் பொழுது பூத விடுவேதில்
நசுவே யதன் பட்டையது நன்றா யூறி விடுவதுவே.

246. வேது பிடித்து முன்னுருந்து வியிய யுள்ளி ரண்டினுமாய்
மோது மொவ்வொன் றொருபலமாய் முன்ன மெண்ணெய் தனிற்போடு
பேத மில்லை மறந்துதான் பெரியோர் பொருமின் குற்றமதை
மாதே யிதனை வழுவாமல் மனதி லுறுதி கொள்வீரே.

வயிற்றுக் கடுப்புக் குணம்

247. இடுப்புக் கடுத்து வயிறுளைந்து யிழுக்குஞ் சீதந் தான்மிகுந்து
முடுக்குந் துயர மதிகமுமாய் முன்ன மலமே கழிந்தடங்கும்
அடுத்தோ ரன்னந் தனைத்தேடா யந்வே யங்க மெலிந்துவரும்
தொடுக்கும் வயிற்றுக் கடுப்பிதென்று கொள்ளோஞ் செய்யுந் துயர்களிடே.

248. பனிச்சை துத்தி மலைதாங்கி பகரும் வறட்பூ லாமுத்த
முனித்த சுக்கோ டதிவிடையம் முதிர்ந்த நற்சீரக மோகமும்
தனித்த கைப்பிஞ்சி குந்திருக்கம் தானே களஞ்சு கொண்டுநெய்யில்
வனித்து வேக வைத்துருக்க மாதே வயிற்றுக் கடுப்பறுமே.

249. *கருப்போடு யிரத்தஞ் சீதம் கருதாம மந்தி ருக்கும்
அடுக்கும பாவன் கீழ்வயறு யதுதன் னுடனே சலங்---
கடுக்குஞ் சுழற்றித் தலைக்கனப்பு நயன மதுதான் மஞ்சனித்துக்
கொடுக்க மசனமு காந்திக்கில் குடல்சேர் வரட்சிக் கொதிப்பாமே.

குடல்சேர் வரட்சிக் கருப்புக்கு நெய்

250. முத்தக் காசு மலைதாங்கி முதிர்ந்த துத்தி நிலப்பனைவேர்
கைத்த காசுக் கட்டிநெல்லி கருவகுந் திருக்கஞ் சீரகமுஞ்
சுத்து மிருமே சாதிக்காய் தலங்கு மிலவம்பிசி னதிவிடயம்
வைத்தே யெரித்து நெய்கொள்ள மயங்கும் பித்தக் கொதிப்பறுமே.

கபால கரப்பான் குணம்

251. காது திமிவாங் கண்திமிவாங் கண்டந் திமிவாங் கரகரத்து
மோதும் கன்னில் மெழுகுள்ளும் மூக்குத் திமமே நீர்பாயும்
மோது முழுக்கால் நனைப்பதனா லொன்றைக் குறைத்துச் சிரம்வரனில்
சேத மிகவே தலையிடித்து திரும் கபால கரப்பானிதே.

கபால கரப்பானுக்கு எண்ணெய்

252.* நன்னார் முத்தந் தூதுவளை நயக்கும் பொன்னார் சீதேவி
கொன்னோ மிதமோர் தாமரையும் தூய சிவனார் நிலவேம்பு
வல்னோ நெத்து யூரல்கும்பை மலைதாங்கி வட்டுக் (கெ)காக்கைவேர்
மின்னோர் கருத்சு கொண்டு யீந்தே கடையில் சரக்குமிடே.

253.* சுக்கு மிளகு திப்பிலியுந் தூய கடுக்கா யிந்துப்புத்
தக்க கருஞ்சீர் வசம்புன்னி சரிசெல் லகரம் பழ..
மிக்க கடுகு ரோகணியும் வெருத்தைப் பிசினோ டதிமதுரம்
மொக்கக் கட்டி வெண்ணெயுட னோடுன் கபால கரப்பனிதே.

254. கேர்ப்புரை வழிய தாக குறித்ததாய்க் கனத்துத் தோன்றில்
நீர்புக வாயுக் கோத்து நிரம்பியே முளைத்தேங் காய்போல்
ஏற்கவே சல்வு முற்றி யிறுகியே யுதிர நாளில்
நீர்ப்பொசிந் திருப்ப தென்று நிகம்பச் சூலை தானே.

255. பிள்ளை பெற்ற விடந்தன்னில் பெருக்க யோனி தனில்வாயு
யுள்ளே யடங்கிச் செலிரத்த மொதுங்கிப் புரைபட் டிருப்பதென்னில்
தள்ளிச் சலமே போகாமல் தடைபட் டிடலி லுடைபட்டு
மெள்ளக் கனத்துப் புறமோடு மிகுத்த நிகம்பச்சூலையிதே.

நிகம்பச்சூலைக்குப் புகை

256. பாம்புக் கண்டங் குங்கிலியம் பருக்கை யில்லாமல் பொடிசெய்து
சாம்பல் போக்கித் தனையெடுத்துச் சட்டியி லிட்டோ ரண்டைதனை
தூம்ப வுரல்கொண் டதைக்கவித்துச் சுகமா யானை யதிலிருத்தித்
தேம்பல் பொடியை யதில்தூவி திடமாய்ப் புகைக்க வலிவிடுமே.

நிகம்பச்சூலைக்கு எண்ணெய்

257. முடக்கொத்தான் சாறுயுரி நல்லெண் ணெயுரியே
முசியாத வேர்க்கொம்பு வசம்புள்ளி பெருங்காயந்
திடுக்க(க்) கடுகுடனே யிந்துப்புச் சீனசாலை
சீதாரி தேவதாரஞ் சதகுப்பை யோரொன்று
அடுக்கிட் டரைகழஞ்சு யரைத்து யதில்கலக்கி
யடைவாக வெந்திறக்கி யான்திமுங் கொள்ள
நடுக்கிட்டு மிகவலித்து வருநிகம்பச்சூலை
நிச்சயமாய்த் தீருமென்று நிகழ்த்தினார் நம்முனியே.

258. வற்றிமேல் வெளுத்துப் பித்தம் மயங்கிடுஞ் சோபை யாக்கும்
பற்றியே தலைநோ வுண்டாம் பகலிர வில்லாமக் காயும்
உன்னதோர் தென்(னை)மரத்தி லொல்லியா லுளமே வற்று
முற்றுமே யனலே மூணு முழுதமுள் காய்ச்ச லாமே.

259. ஆவின் பாலுட னின்புறு சீனியும்
மேவு சாத்திர வேதியு மாகவே
நாவி நாற்பது நாளது தாள்குடி
பாவு முள்சுர மோடிப் பறங்குமே.

பித்தத்துக்கு நெய்

260. பொன்னாங் காணி முசுமுசுக்கை புரிய தாளி பழம்பாசி
நன்னிற பூலா விலைச்சாறும் நல்லசித் தாமட்டி சீதேவி
முன்வார் தாழை விழுதுச்சாறு முந்தப் பசுப்பா லிவைநீரு
மன்னார் கோட்ட மதிமதுரம் வருநதி சீரகம் நெல்லியுடன்.

261. உடன்கொத் தமல்லி செண்பகப்பூ யுடனா கப்பூ மாஞ்சியுடன்
விடந்த தேற்றான் கொட்டைசந்து மிகநன் னாரி முத்தக்காசு
படந்த யிலாமிச் சிறுவேலி பரிவாய் முக்களஞ் சோறொன்று
யடந்த நெய்பல சீனியுட னளாவிக் கொள்ளு மது(வா)மே.

பிரமியக் குணம்

வெண்பா

262. மாதருட மையலில் மாமிகுதி தனிடிப்பாய்
சேத முறவருநோய் தேடியே - யாதரவாய்
வந்துநொந்து மென்ன வளரும் பிரமியங்கள்
சிந்தைதனிற் காண்பார் தெளிந்து.

263. வந்து மிருந்து வளரும் பிரமியத்தில்
முந்தயிறு வாத முனைக்குமே - பிந்தவே
அண்டமெனுங் குலை யதுவே பவுத்திரமும்
உண்ட தென வே யுரை.

264. நீரை யொறுக்கும் நிறுத்து மடைபடுத்தும்
பாரமிருந் தோடூத்தைப் பற்றுவிக்கும் – சேரவே
கூடும் புணர்ச்சிமிகக் கூடாது தாதுகெடும்
வாதப் பிரமியந்தான் வந்து.

265. காயுங் குளிருங் கனத்துத் தலைவலித்து
தோயுமிக வுள்ளெரிந்துத் தோன்றுமே – காயம்
வறட்சி யில்விழுமே மாங்கிடூமும் வற்றிப்
பிரணப் பிரமியுமா மே.

266. மாத மொருநாள் வருமோடிக் கல்லடைக்குஞ்
சேத மறமிருதி செய்விக்கும் – வாதம்
வருமே பவுத்திரமும் வன்பக்க சூலைக்குமே
சலப்பிரமி யந்தான் ....

சலப்பிரமியக் குணம்
---

267. நீருங் கருத்துச் சலமுடைந்து நின்றே யெரிந்துச் சலம்விழ்ந்து
சேரு மிரத்தந் தாலுண்டாம் தினமாய் பரனில் விழுந்து நிற்கும்
பாருங் காயம் நாளொன்றில் பாழாய் வற்றும் உடம்பெருகும்
வாரநா(ன்) சென்றால் மரணந்தான் மயக்குஞ் சலத்திற் பிரமியமே.

268. பொன்னாங் காணி சீதேவி புதுநில வேம்பு சிறுக்கீரை
மன்னோ ரிகழ்கீழ்க் காய்நெல்லி வரித்த(க்) காளி தொய்யலுடன்
முன்னோர் ெ(ச)ப்பு நெருஞ்சி னெய்தல் முழுநீர் பூலா முசுமுசுக்கை
கின்னார் வராகி குளிர்பதவு மியல்சித்த(ா)முட்டி சித்த(ா)மல்லி.

269. பெரிய மல்லி நிலக்குமிழ் முல்லையு
மபின்னகி னாரி யிலாமிச்ச முத்தமும்
புரிய வேலி நரிப்பயறு பேராமுட்டி
தண்ணீர் விட்டான் சாறதும்
புரிய தாவிசியால் நாழியிரா நீருமொக்க
நாழி தாயிரத் தண்ணீர் நாழியே
வரிய சந்தனஞ் கோட்ட மிலவங்கம்
புரிய சீரகம் நெல்லிதக் கோலமே

270.* கோலஞ் சாத்திர வேலி கிளியூரல்
கொடிய மாஞ்சிசதகுப்பை பச்சிலை
ஏல மிக்க கச்சோலஞ் சாதிக்காயி
யிருகி ராம்பு யிருவேலி சந்தனம்
வால மான வசுவாசி தன்னுடன்
வகையி லொன்று யிருகழஞ் சாகவே
வேலங் கூட்டி யேயிதை வடித்து
நெய்யிது .... .... நல்லதே.

271. நல்ல சீனியும் நெய்யுஞ் சரிநக்க
நன்ற தாயிப் பிரமிய முள்ளதும்
அல்ல தாகில் சலஞ்சிக்கி நிற்குமே
யதுவுடன் வங்க சிந்தூ ரங் கூட்டிக்கொ(ண்)ள
மெள்ள வேயிரை மண்டல மிப்படி
வியன்கொள வேட்கை யொடு கறுப்பதும்
நல்ல தாயிப்பின் பத்திய மாங்கிடூம்
நினைவினுங் கொள்ள வொண்ணாது காணுமே.

272. ஆயுறு வேதஞ் சொன்ன யதன்படி வியாதி யுள்ள
நோய்குறி குணமுங் கண்டு துன்னிய மருந்து செய்வார்
தீயவை வந்து சூட்டும் தெளிவிலாப் பரிகா ரத்தால்
மாயவே மருந்து தானு மறுபடி வியாதி தாமே.

273. மாத மாத விரேசன வாந்தியும்
மாதர் தங்கள் மனம்புகு மட்டிலே
போத வுண்டு யுறுநடை கொள்வதும்
பூர ணப்பட பாலே பருகுவாம்
வேதமுஞ் சொல்லும் வெந்நீர் குடிப்பது
மீனுண் ணாம லிருப்பது முண்டெனில்
வாத பித்தந் தனிலே வதைத்திடும்
மானி டற்கு மறலியு மில்லையே.

274. பெருமான் சிறுமான் கற்பம் நொச்சித் தயிலத்தில் கொள்வது
நிம்ப நொச்சி யிரண்டன்வேர் நோகக் குத்தித் தயிலதமாம்
நம்பும் பெருமான் வரவித்தும் நஞ்சோ சிறுமான் வரவித்தும்
தம்மில் குழப்பிக் காசெடைகொள தறைசேர் வாத வாயுவிடும்
செம்மைப் படநோய் குட்டங்கள் தீராப் பாங்கி யதுபோமே.

275. ஊதே வெற்றி லையின்தின்ன யுள்ளவு கடுப்பு குத்தப்போம்
மீதேற் பிறவும் பூசவிக்கஞ் சூலை பெரியவாத பித்தசேத்துமஞ்
சேதஞ் செய்யுங் குணமெட்டுந் தீரா வாயுச் சலக்கழிச்சல்
பாதம் பற்றும் பெருவாதம் பரந்த வீக்கம் பறங்கியிடைச்
சீத முடனே வேற்போடச் செய்யு மிரத பற்பமுமே.

தாம்பிர பற்பத்திலுடைய குணம்

வேறு

276. தாம்பிர பற்பந் தன்னைத் தறுகிடா தருந்து வீரால்
ஆம்பல வாயுச் சூலை யதனுடன் திரண்ட வாயு
மேம்படு சத்தி விக்கல் மீள்வது யுண்மை யென்ன
தேன்பல பற்ப மேத்துந் தெய்வமா முனிவர் சொன்னார்.

277. வங்கஞ் கடிது காரிய மதித்த செந்தூ ரம்மருந்தி
அங்கஞ் சலமே மிகக்கழியி லதுக்குச் சர்க்கரை கற்கண்டாம்
அங்கம் வயறு கழிச்சலெனி லாமணக் கெப்பசு நெய்தேனாம்
தெங்கிள நீர தனிற்கொடுக்கத் தீருஞ் சலத்திற் பிரமியமே.

278. வாதகுன்ம மாகில்கழஞ்சு வேர்க்கொம்பு தட்டி
யொருயகப்பைத் தண்ணீரை யரையகப்பை யாக்கி
ஏதமுடன் மஞ்சாடி யிரண்டுதனி லிடுக
இதமுடைய பித்த குன்மஞ்சே ரொரிகுன்மம்
வாதுசெரி யுங்கருப்புக் கட்டியினி லிடுக
வலிகுன்மம் நொச்சியிலைச் சாறுதனி லிடுக
சேதமுள்ள சத்திகுன்மந் திப்பிலிதேனி லிடுக
செழுவியயிஞ் சிச்சாறு பொதுவெனச் செப்புவாரே.

காந்த பற்பம்

279. விக்கஞ் சலங்கள் வெகுகழிச்சல் மிகுத்த மீளை காமாலை
போக்கும் வாயு வாதத்தைப் பொல்லாப் பித்த பாண்டுருவன்
காக்குங் கிரிகை பெருவயிறு கானா மூல வாயுவையுந்
தாக்குங் காந்தசெந் தூரந்தன்னா லின்னோ யிதுபோங் கண்டீரே.

இரத பற்பம்

280.* இரதம்ப் பாக .... மீரைந்து கழஞ்சு கொண்டு
சரசமற் றாவின் பால் தானோ டரைத்துக் கட்டி
உரவிய தாகச் சுக்கு வுவர்த்திடு பாணிச் சீனி
தரவிது கொள்ள வெண்ணில் தானது படைத்துக் கொள்வே.

281. கொள்ளுமனை யோகக் கொண்டுதான் பொயித்த தொத்த
வெள்ளிடைக் காத்து வெயிலிடை தனில்மெதப் பால்
மெள்ளவே யகல வைத்துமென் வலிமையே யானால்
உள்ளதீ யிளுறுதி யாளா லொன்றே ....

282. நன்றதற் பானை பாதி நயந்ததா மனலை யிட்டுச்
சென்றதற் பாணி தன்னைச் சிறக்கவே யதனுள் வைத்து
ஒன்றவே திரம் பானை யூற்றிட மனலை விட்டுச்
சென்றிடைச் செம்மிப் போட்டால் சீலைகள் செய்து கொள்ளே.

283. கொள்ளவே யடுப்பில் வைத்துக் குறைந்திடத் தனலே யிட்டு
துள்ள வான் மூன்று சாம துடக்கற வெந்திட் டாத்தி
மெள்ளவே மருந்தெ டுத்து மீளவும் பொடித்தகத்து
கொள்ளவே யிடாமல் கட்டிக் கொண்டுதான் வைப்ப தாமே.

284. வைத்ததோர் பற்பந் தன்னை வரைந்திடா தொருமா விட்டால்
ஒத்ததோர் வாத பித்த முறுதியாந் தபனந் தீரும்
மெத்தவாசு வாசமிடா பித்தஞ் சுவாச காசஞ்
சுத்ததோ சற்று ஞ் சுரவாதஞ் சுகப்பட மருந்து செயியே.

285. அரப்பொடி ஐங்கழஞ்சு அவ்வெடை காந்தங் கட்டி
மருவிய கெந்த மஞ்சு மருவூத மிரண்டும் கட்டி
ஒருவிய குமரிச் சாற்றா லரைத்துட னொக்கக் கட்டி
வெருவிடாச் சட்டி யிட்டு வெந்திடா வாலு சாமம்.

286. வெந்தவம் மருந்து தன்னில் மென்பனத் தெடையெ டுத்து
வந்தவம் மிளகித் துப்பும் மருவுதிப் பிலியே சுக்கு
முந்திய வோமம் நற்சீ ரமுது கடுகொக்கக் கொண்டு
வந்தவம் மருந்தி னோடே யடைவுடன் கட்டிக் கொள்ளே.

287. கொள்ளிர் குமரி பற்பத்தைக் குலவு வெருகி னடியளவு
உள்ளே நின்ற வயிற்றுவலி யுதரத் தெரியு மொருன்மம்
பின்ளைப் பிலிகை பெருவயிறு பொரியறாமை பித்த பாண்டுருயம்மை
முள்ளக் கிறாணி யித்தனையு முடிந்து தழல்போ லோடிடுமே.

## வாதக் கரப்பானுக்கு

288. எருக்கம் பாலோ டரிதார மிறலி மருந்து கொடுவேலி
திருக்க மான வெள்ளுள்ளி தெள்ளிய வசம்பு சென்னகரம்
பெருக்க வோரொன் றொருகளஞ்சு பேணி யுரைக்க விலைக்கள்ளி
பருக்க வாட்டி யிலைச்சாற்றால் பற்றா தரைத்துக் கொள்ளுவதே.

289. கொள்ளும் நறுநெய் நல்லெண்ணெய் கட்டுஞ் சிற்றா மணக்கெண்ணெய்
நன்னே தீர்க்கும் நின்பெண்ணெய் நலங்கோ வேச்சோ டிருமஞ்சள்
துள்ளா தொக்கப் பொடிசெய்து தூவிக் காய்ச்சி யெண்ணெயுடன்
உள்ளே கொள்ளா திருமேலே யுனைக்கும் வாதக்கரப் பானுக்கே.

290. எண்ணெய் வேச்செனப் பிடித்து வீக்கத்தி லிறக வாகும்
வண்மையா மிராத்தி ரிக்கு வகைபட எருக்கி லையைப்
பன்னிரண் டிலையை வாட்டிப் பதத்துடன் கட்டு வீரா
வெளினும் வாதக்கரப்பான் தானு மிறந்திடும் வீக்கமன்றே.

291.* கடியதோ ரெண்ணெய் வேறு காயமும் வரத்துக் காம..
வடியுடை மதுர பானம் வாதபித் தத்துக் காகும்
கொடியதோர் கைப்பு காரம் கொள்வது கறப்ப தாகும்
படியதே வேறு மென்று பகர்ந்தன ரிருடி தானே.

## வாத குன்ம குணம்

### வேறு

292. மேல்வயிறு தனில்தனரி யிளைப்பு முண்டாம்
மிக்கவிரு பாகமது நனைந்து பின்னுஞ்
சாலவது கீழ்வயிறு தனில டங்கி
சத்திவாதத் தொன்றதுபோல் தானுண் டாகும்
ஆலவிட மிருந்ததுபோல் கண்கள் தானு
மதுமிகவும் வெருப்பிட்டுத் துயரஞ் சற்றே
சீலமுடன் குணங்கள்தனைத் தெளிந்து வாத
குன்மமெனச் செப்புஞ் செய்ய லாமே.

293. இளநீ ரிஞ்சிச் சாறுன்னி யிதுவுந் திரிகடு கிந்துப்பு
வளவு கொண்டு யரைத்துவழித் தழலக் காய்ச்சி யிரண்டொன்றாய்
கொளவே வாத குன்மமறுங் கொள்ளே யேழு நாளளவும்
மௌவே மீறி நின்றதெனில் மிசைந்தே வெண்ணெய் கட்டுவதே.

## வாத குன்மத்துக்கு எண்ணெய்

294*. கட்டு முள்ளி யறுபலமுங் கொடுவேல் மருசு நிலவாகை
ஒட்டும் விழிச் சாரணையு மோரொரன் றொருபலம் பாரீர்
தேட்டம் பரிய திரிகடுகு தெழியுஞ் சோம துப்பதுவுங்
காட்டுங் கள்ளிப் பாலுடனே கலந்தா தன்னட வெண்ணெய்கொள்ளே.

## ஒரு புண்ணுக்கு

295. அரத்தம் பூவிலை வெம்பாட வதிக மதுரஞ் செஞ்சாந்து
உரத்த புளியங் கொட்டைத்தோ லுவகைப் புடனே வெண்கோட்ட
இரத்த சாத்திர வேலியிலை யோர்நிறை கொண்டெண் ணெய்விடில்
உரத்த தியா லுறபித்த மொடுவும் புண்ணு முலர்ந்திடுமே.

296. காலையில் பத்துப் பித்தங் கடும்பகல் கபமே பத்து
மாலையில் பத்து வாதம் வயங்கியே பத்து மையா
மேலிடு மொத்த கூத்தில் மிகுந்திடும் பித்தம் பத்தங்
காலமே விடியப் பத்துங் கதித்ததோர் வாத மாமே.

கொம்மட்டிக் குழம்பு

297. அலகையதின் கொம்மட்டிக் காய்ச்சாறு நாழியதினளவே
தம்பாத்தின் சாறு
குலவுசெறி நொச்சியிலைச் சாறுநாழி கொள்ளலிவை
வெள்ளுள்ளி யிஞ்சிச்சாறுஞ்
சலமறவே காஞ்சுவற்றி நாழியாக்கித் தன்னோடு
சாதிலிங்கஞ் சூதங்காயம்
நவமுடைய வெண்காரஞ் சோமனுப்பு நற்கடுகு
மோகமும் நயந்துகொள்ளே.

298. கொள்ளுவதும் வெந்தய மிளகுமஞ்சள் குலவுசெரி
நேர்வாளங் காந்தமோரொன்று
உள்ளபடி நிறைமூன்று கழஞ்சுகொண்டு யுடனரைத் தொன்றுபடத்
துழாவிக் காய்ச்சி
மெள்ளவரு பழம்புளிபோல் பதந்தானானால் மீறாமல்
தனிளங்காயு ருட்டி
உள்ளபடி குன்மமெட்டு வாயு வர்க்க முதரமிகு தோஷமுத
ஊருகிப்போமே.

299. காலகத் திருடி கானிற் கலந்துபால் கலிங்கத் தூட்டி
ஊசி யோடுபற்றி யுளம்படச் செலுத்துஞ் சிலை
தானலி மூன்று வாளுந் தடையறச் செலுத்திற் கார
மானதோர் தயிருஞ் சோறு மதின்பின்னாற் கட்டு மன்றே.

## காரச் சீலை போடவும்

300.* கட்டியே வெப்பை யாற்றிக் கதித்தொடு வடக்கி யெண்ணெய்
திட்டென வெப்ப தாகத் திருந்ததோர் பஞ்ச மூலம்
இட்டதி லைப்பு பாடல் விருகழஞ்சு கட்டி ....
ஒட்டியே யொருகவுக் கெண்ணெ யுறவிடப் போக்கும் புண்ணே.

301. உள்ளி யிஞ்சி யிந்துப்பு யுற்ற சிவந்தி சிவதையுடன்
கொள்ளு நிலவாகை வேரதுவுங் குலவு மிளகு திப்பிலியும்
உள்ளோ ராதண்டை யெண்ணெயுட னுறவே முடக்கொத் தானிலைகொள்
தள்ளா தொக்கக் கழற்கொடியுஞ் சாரணை வேருங் கொடுவேலி.

302. காட்டு நொச்சி நிலவாகை கடிய கொன்றைக் கழலுடனே
ஒட்ட தண்டை வுவாய்முருங்கை யுற்ற சிவதை செம்முள்ளி
கோட்டா மணக்கெண் ணெயுட(ே)ன கொடிய வுள்ளி யிந்துப்பு
வேட்டம் பெரிய கள்ளிப்பால் மிகவே கட்டுங் குன்மம்போம்.

303. வெள்ளுள்ளி யிஞ்சி நெல்லி விரலிய சாற்றில் வாரித்
தெள்ளிய யிளநீர்ப் பாலும் சேரிவை நாழி வாழி
கொள்ளிவை திடமாய் வெந்து கொதித்திடு வாழி யானால்
மெள்ளவே நறுநெய் வாழி விடுவது மிகவும் நன்றே.

304. நன்றதே கோட்ட வேலம் நலங்குவெண் கார மிந்து
சென்று மனத்த நற்சீர திப்பிலி கொத்த மல்லி
மென்றிடு கிராம் பூவாசி மிக்கசெங் கொட்டை கட்டி
யொன்றவே வெந்து நெய்தா னுண்ணவே குன்மம் போமே.

305. போமதே வெய்ய மாந்தம் பொருமிய பித்த குன்மம்
தாமதே யெரிக்குங் குன்மந் தடைபடா சத்தி குன்மம்
வாமதாம் வருண வாதம் மறுகிடா வலிக்குங் குன்மந்
தாமதப் படாமல் தீருந் தகுதியா நெய்யி தாமே.

306.* திரிபுர மெரித்தான் சாறுந் திருடியின் சாறுசற்றே
திரிபுரை சன்னிச் சாறுங் கேடிலா முருக்கஞ் சாறு
சரிசரி சாற்றில் வாரித் தண்ணீருங் கூட்டிக் காய்ச்சி
யுரியொடு வாழி யானா லுறவிடா மணக்கெண்ணெய் ....

307.* எண்ணெய்நெய் யிரண்டு நாழி யிருவுடன் கடுக்கா யுள்ளி
நண்ணிய சோம லுப்பு நல்லிஞ்சி நேர்வாளமு ....
மண்ணுறை வெண்கார லிங்கம் மதித்தெழு கடுகு ரோகணி
தண்ணளி வசம்போ டொக்கத் தான்பெருங் காயங் கூட்டே.

308. கூட்டிடு திப்பி லியுங் குலவிய காந்தங் கெந்த
வாட்டிய வீழி வேரும் வகையுடன் கூட்டிக் கொள்க
நாட்டமாய் வேக வைத்து நலம்பெற வடித்து நக்க
தோட்டிய வாத குன்மம் கொலைந்திடு முண்மை காணே.

309. கடுக்காய் காற்பல மிந்துப் போர்பலம்
அடுக்கும் மெள்ளுள்ளி யதுவே காற்பலம்
நடுக்கு மிஞ்சி முப்பல மாக
விடைக்கு வேர்வாள முப்பது வீதிவேர்
கொடைக்கொரு பலஞ்சி வதையோர் பலமே.

310. சாரணை கொடுவேலி வீழி சம்பீர வுகாயி லங்கை
வீறுள கொன்றை பாலை விராவிய முருங்கை வாகை
பாறிட வொக்கக் கூட்டிப் பலப்படி யோரொன் றாக
ஆறது நாழி தண்ணீ ரதுவிடா தொக்கக் காய்ச்சே.

311. காய்ச்சியே கோது தள்ளிக் கலந்திடு நாறுநெய் நாழி
மூச்சுள்ள வுள்ளி சுக்கு முதிர்ந்ததிப் பிலிவெண் காரம்
ஆச்சிடு மிளகிந் துப்பு வாரிய சிவதை காயங்
காய்ச்சிய நெய்தன்னி லொக்க கள்ளிப்பால் கலந்து கொள்ளே.

312*. இதிலுள்ளி யிரண்டுபல மிந்தப்பு யிரண்டுபலஞ் சிவதை ஒருபலம்
கள்ளிப்பால் முப்பலங் கட்டவும்.

313. உரத்த கபாலந் தலைவலியு முச்சி கருத்தா யொருத்தலைநோய்
சிரத்தில் சேர்ந்து வலியுவில் செய்யும் மருந்து வகைகேளாய்
உரத்த மருந்து நறுநெய்யி லொன்று படவே கரைத்தரசம்
பரத்த ஜண்டந் தன்னில்விடப் பற்றுங் கபால வலிபோமே.

314. கருத்தறு சன்னி தன்னைக் கருத்தினா லறிய வேண்டில்
உரத்தராக் கிடந்தை நோக வுரைத்து நா வதனிலூட்ட
திருத்தமாய்க் கருமை கண்டால் தீதறு சன்னி யாகும்
பெருத்திட வெளுப்ப தாகில் பிணைய தல்லா தாமே.

315. இலவம்பிசி னதிவிடையங் காசுக்கட்டி
யிசைந்தகிராம் பூவுடனே சாதிக்காயுங்
குலசேறி குந்திருக்கக் குடசப்பாலை
குரோசாணி மோகமும் பிசினுங்கட்டிச்
செலவுவறட் சேவு கல்லித் ததுவு மொக்கச்
செறிய வசுவாசி யதுசெறியக்கொண்டு
உலவுபடு கழிச்சலுக்குச் சுக்குச்சுட்ட
வுறுபொடியி லதனிலொக்க வுண்ணத்தீரும்.

316. பனிச்சையது தத்தி வேருங் கட்டி
பகர்ந்தபெரு மைத்தயிரால் வா(ர்)த்த ரைத்து
தனிச்சையுடன் தன்னையிகக் கொள்ளத் தானுந்
சா(ர்)ந்தவயிற் றுக்கடுப்புத் தானே தீரும்
முனிச்சைநெல்லி வெந்தயமும் வறுத்துக் கொண்டு
முன்படியா யத்தயிரில் கொள்வீ ராகில்
நினைத்தவயிற் றுக்கடுப்பு வெக்கை தீரும்
நிச்சயமாய்க் கொடுப்பதுவும் நினைவு தானே.

விரேசனத்துக்கு

317. நோயிருந் துதரந் தன்னில் நொந்துமெய் வருந்த மாகில்
தூயநேர் வாள மிந்து சுக்குடன் மிளகுங் கட்டிக்
காய்தன்னிச் சம்பீ ரத்தின் கனிபிழிந் தரைத்த வுண்டை
வாயுவை மலக்க மத்தை மலஞ்சல முடைக்கு மன்றே.

கர்ப்ப விப்புருதிக் குணம்

318. பொருமு மிரத்தந் தனைமரிக்கும் போத மிகவே வலியுண்டாங்
குருதி கழியில் வலிதீருங் கொள்ளுங் கர்ப்பந் தனையழிக்கும்
வருடி யிடுப்புக் கடையுளைக்கும் மலத்தை மிகவும் விறவிறக்கும்
பெருகப் பிணிக்க மாமதில் பேசுங் கர்ப்ப விப்புருதி.

இதுக்கு மருந்து

319. கடுக்காய் மஞ்ச ளிந்துப்புக் கடுகோ டுள்ளி வெண்காரம்
அடுத்த வீழி யாமணக்கு மதுவும் நிலவாகை யிவ்வேருந்
தொடுத்த மூன்று பலமாக்கித் துளங்கா தெரித்தா மணக்கெண்ணெய்
கொடுக்கக் கர்ப்ப வாயுவிடுங் கட்டுங் கள்ளிப் பால்களஞ்சே.

320. பொருமு மிரைபு வெக்செரிக்கும் புளித்தேப் பிட்டுத் துயரமுமாய்
கருகிக் கழிந்து கன்றுங்குக் காந்தந் தொப்பு ளதிலடங்கும்
வெருவித் தேடா தன்னத்தை மிகவே பேசில் கழிந்திருக்கும்
உருவிப் பிழிதல் போல்மேனி யுலர்த்தும் வாயுக் கிரானியிதே.

ஆசிரிய விருத்தம்

321. ஓமமொடு கடுநெல்லி தான்றி மிளகிட யுற்றதோர் சுக்குத்திப்பிலி
ஒன்றபட மதுவுமுக் கழஞ்சாக வொருகழஞ்சு கழற்ப ருப்புத்

தேன்மருவு கையாந் தகரையிற் சாறதந் திகழ்நாழி யதினா றவும்
திரும்பவதில் நேர்வாளம் போட்டுமச் சாற்றினில் சீர்பெற வுரைத்த-
ஷன்டை
வாமமது வாகவே நிழலி ல(ர்)த்தியதை வகைபெறக் கொண்டுவருகில்
வாயுவதில் வந்திடுந் தீராக் கிரானியும் வளம்வெறத் தீருமெனவே
தோமமுத லாகவரு திறலுடைய தவமுனிவர் சொல்லின நாவிஷ்படியே
தோராது மெய்பெண் ணியிதுவை நம்பியே சொல்வதிது உண்மைதானே.

322. பித்தத்தில் வெதுப்புக் கொள்ளில் பெருத்திடுஞ் சுழற்சி தானும்
மெத்தத் துறவு வாந்தி வீக்கமுங் கழிச்ச லாகுஞ்
சித்தத்துள் வலித்தெ ரித்துச் சுரமுட னவேகங் கண்டாங்
கைத்த பித்தம் வந்து காந்தமே பட்ட காயம்.

323. நெஞ்சுநீ டெரிந்து வாந்தி நிலையாகக் குத்தக் குத்தி
பஞ்சுபோல் நாவுங் கண்ணும பாலமும் வெளுத்துக் காலும்
அஞ்சவே வீக்க முட்டு மடிக்கடி குளிர்ர யாகுங்
கெஞ்சிட மலமுந் தீயுங் கெடுத்திடு முயிரைப் போக்கும்.

வயிற்றுக் கடுப்புக்கு

324. நற்சீ ரகத்தை வெச்சோட்டில் நலங்கா திருந்தப் புடமிட்டும்
உள்ளே யிடித்துத் தூ ள்செய்து யுறவே சீனி யேமுக்கொன்று
நற்றா மணக்கு நறுநெய்யில் உருந்தே யளவி வெந்திடுகில்
முற்றா வயிற்றுக் கடுப்பதுவு முடிந்தே போகு முண்மையிதே.

325. பழந்தேங் காய்துருவிச் சீனியுடன் பருகப்
பற்றிவிடு மேவயிறு ளைவின்புண் தீராதாகில்
உளந்தெங்கும் பழத்தின்சா றுடனே சீனி
யுடன் பருக மிகவும்நன் றுண்ணாதே போகில்
கிளந்தெங்கும் நெல்லியதின் பழச்சாறுஞ் சீனி
கிடைக்குமாகில் அருந்தாநன்று கிடையா தாகில்
வளந்தேறு வெந்தய முலர்ந்தநெல்லி யுடனே
வறுத்ததனைப் பொடிசெய்து ண்தயிரி லுண்ணே.

326. இருனிலத்தினில் ராசவி ரேசன மாஞ்செயிய
திருகுகள்ளி வேர்ப்பட்டை பசுவின்பாலி லவித்துலர்த்தி
பரிவுடனே காற்கழஞ்சு பாக்குடனே தின்ன
வெருவது தான்கழியு மீறுமே யாகில்
மேவபசுப் பால்சோறுண் வெண்கந்தம் பூசே.

வேறு

---

327. கன்னங் காது வாங்கண்டங் கனத்துத் திரண்டு கிரந்திகட்டி
அன்னந் தன்னைக் கொள்ளாம லதிகப் படுத்தி சிலேற்றுமமுஞ்
சொன்ன கடுங்காயிப் புடனேதுயிய கருஞ்சீ ரகந்னா துவளை
இன்னம் முத்த நன்னாரி யிவையோ டென்னெ யெரித்துநக்கே.

328. முள்ளி லவம்பட் டையுடன் முலைப்பா லாமணக் கெண்ணெய்
கொள்ளக் குழப்பி திரட்சிதனில் குழையப் பூச வல்லீராய்
மெள்ளக் குவிக்கும் வீக்கத்தை விரையத் துறந்து வினையகற்றும்
தன்னிச் செயலை யறப்படுத்துந் தறுகா தனலுங் குளிர்ந்திடுமே.

329. முள்ளிலவம் வேரது நாவல் [முட்பூலா] வெட்பூலா
முத்தமொடு நன்னாரி முல்லைநல்ல சீந்தில்
தென்னியசெந் தாமரைசிந் தாமுட்டி சீதேவி
சிறுக்கீரை யுடன்நல்ல வராகியுட னேதான்
கொன்றுவது யிருவேலி பொன்னாங் காணி
குலவு மிலாமிச்ச மோடுகுழி யாம்பல்
மெள்ளவதி லிளநீர்பால் விட்டுக் காஞ்சு
மீளவது முன்னொன்றாய் வெந்து தென்றால்.

330. ஒன்றதிலே நெய்நாழி யிசைய விட்டு
இயல்புடைய சீனிபெ ரிஞ்சு முந்திரிகை
குன்றவிடும் வெண்கோட்ட மேலங் கோலங்
குலமாஞ்சி நாகப்பூ பச்சிலைகச் சோல
மன்றல்வரு சந்துடனே கெனிதவெண் மருவு
கிரிபூறல் பட்டை வங்கங் கூட்டே

நன்றதுசெண் பகமொட்டு மதரம் நெல்லி
விதைசொல்லு குப்பை நகரம் பழம்
மென்றநற் சீரகம் வெந்தே தான்வடித்து
மியல்பாக யாவர்க்கும் பிரமியந்தான் தீரும்.

வாதத்துக்கு

331. வாத மடக்கி காத்தோட்டி மரவா தன்டை மாவிலங்கை
சீதம் இடறிஞ் சாரணையுஞ் சிறந்த முருங்கை யுகாய்நொச்சி
போத வலந்த கொடிவேலி புங்கு நிம்பம் பொற்கொன்றை
சேதப் படாம வொவ்வொன்று திரிசேர் பலமாங் கொள்ளுகவே.

332. கொண்டே வடித்துக் கஷாயத்தித் கொதித்து வெந்து யஞ்சிரண்டாய்
உண்டே றென்னெ யுடனுதவு மூறு நறுநெய் நல்லெண்ணெய்
பண்டே சொன்ன வேப்பெண்ணெய் பழத்தித் புங்கம் பழஞாறு
கண்டே யொக்க வெண்ணெயுடன் கதிக்க வரைத்துக் காய்ச்சுகவே.

333. காய்ச்சீர் கவனா சாதிலிங்கம் கதித்த ஜாதி செந்தகமும்
பேச்சா லுயர்ந்த வரிதாரம் பெரிய குரும்பை குளவிந்த
மூச்சே யுற்ற பெருங்காய முதிர்ந்த வெளித்தைப் பிசின்காரம்
மோச்சம் பெரிய யுள்ளிக்கு லுவாய்வசமோ தகங் கூட்டே.

334. கூட்டுங் கடுகு திப்பிலியுங் கொடிய வசம்பு வாலுளுவை
மாட்டருங் காணும் பிசினோடு மரத்தை சாதிக் காய்கடுக்காய்
காட்டில் பயில கார்பாகரிசி கரிய மிளகு செங்கொட்டை
கூட்டி பொரித்து எண்ணெயிடக் குறைந்து வாத மிறந்திடுமே.

335. எருக்கு குருந்து வீழிசங்கு பிரிய தூதளை வன்னெற்றச்
செருக்குஞ் சிவனார் கொடுவேலி சிறிய வட்டு மென்ளறுகு
பெருக்கும முக்கிரா கருஞ்சூரை பெருகு மிஞ்சிக் கொன்றைகழல்
வருக்குங் குறிஞ்சிக் காம்பைக் கன்னி வரியவிஷ்ணுகிரந்தி பெருமைமுல்லை.

336. அகப்பையொடு முத்தர சாவாரை நன்னாரி
யரிபசா ரணையிவை யொருநிறையாகக் கொண்டு
செப்பிழுள்ளி வசம்புவேர்க் கொம்புவெருத் தைப்பிசிறுத்
சென்னகரஞ் சாதிக்காய் செவ்வள்ளிபூ லாவெருக்கந்
திப்பிலிகெந் தகமிறகு செய்யவரி தாரத்
சீனக்கார மடுக்குமஞ்சள் சீதாரி தானிக்காய்
வைப்பவசு வாசிபெரு குங்குரும்பை யகில்வங்கம்
பெருங்காயம் சதகுப்பை வருநேர்வா ளங்கார்போகி.

337. இம்மருந்து சரிகொண்டு விதமுடனே யரைத்து
வெம்மையிலா மனக்கெண்ணெய் வேப்பெண்ணெய் நல்லெண்ணெய்
தம்முடனே வெந்திறக்கித் தான்வடித்துப் பூச
பம்மிவரு வாதங்கள் பறந்தோடி யகன்றிடுமே.

(பீனிசத்திற்கு)

338. சீந்தில் வட்டுத் தூதுவளை சிவனார் வேம்பு நிலவேம்பு
போந்த பன்றிக் குறும்பனையும் பொன்னாங் காணி நிலக்குமிழ்வேர்
சேந்த செவ்வி யரவிந்தஞ் சித்தா மல்லி பேராமல்லி
யாந்த முத்தக் காசஒக்க யதின்மேல் பால்விட் டூறவதே.

339. ஊறிக் காஞ்சு யஞ்சிரண்டா யூற வெந்து பிழிந்துவடித்
தாறிப் போகு முன்னேதா ழைந்து நறுநெய் நாழியுரி
கூறிட் டளவே நல்லெண்ணெய் குறையா தளவே வொக்கவிட்டு
வேதிட் டிடித்த வேப்பந்தோல் ஈரஞ்சாறு முரிகூட்டே.

340. கட்டே சுக்கு மிளகுதிப்பிலி கோட்ட மேல மதிமதூரம்
மோட்டு வசம்பு வெள்குள்ளி மோதுங்கத் கடுக சிங்கியுடன்
வாட்டன் குன்றா மலைவிருவேல் மதித்த கிராம்பு வசுவாசி
காட்டிற் பயிலும் கிளியூரல் கண்டில் வெண்ணெ யதுகொள்வே.

341. கொள்ளே கோல மோகமுங் குலவு பச்சிலை கச்சோலம்
நல்லே காரிய சீரகமும் நற்சீ ரகமுங் கொத்தமல்லி
தன்னா தொக்க குக்கிலொடு சடாமாஞ் சரத்தை ரோகணியும்
உள்ளே கொண்டு வெந்தருந்த யுடனே போகும் பீனிசமே.

இருக்கு நசியம்
---------

342. இரதங் கெந்தஞ் சாதிலிங்க மினிய தாரஞ் சங்குமுறு
வருகுந் திருக்கம் பாஉஷாணம் வருவீர் நாழிப் படிவிட்டு
சரச மதுவே திரியாக்கி தறுகா நறுநெய்ய திரிகொளுத்தி
விரசம் பெறவே வாசிதனில் விடவே பீனிசம் வேறறுமே.

பீனிசத்திற்குப் பத்தியம்
---------------

343. பத்தியங் கோழி முட்டை பசுப்பால்
முத்தநெய் முருங்கை யிலை
மற்றும் நிகரில் கத்தரிக்காய் கூட்டும்
பத்துமே துவரைதாலும் பண்பான பீனிசம்போமே.

344. நாயலுக்கி வடவேரை யிழைத்த ரைத்து
நலம்பெறவே யிளநீரில் கொடுக்க நன்றா
மாயாத புளிநடலைக் கிழங்கு தன்னை
மாவுடனே மோர்க்குழாய் வையா துன்னில்
ஓயாம லொடுப்பாயுங் கர்ப்ப ரோக
முதிரமதிற் கிருமிசெய வுள்ள நோவுந்
னா யதாயிக் கழிந்துருகிப் போம தெனிறு
தொல்லுலகில் மாமுனிவர் சொன்ன தாமே.

(மூலக் கிராணியின் குணம்)
----------------

345. கீழ்வயிறு மிரைந்திருப்புங் கடுத்து வளைத்துக்
கெஞ்சிடவே குருதிவிழும் பவனி யின்றோம்

தாளரைக்கு கீழ்மிகவுஞ் சலிகே டாகுந்
தருமலங்கள் கழிந்து சற்றே வலியுந்தோன்றும்
நாள்வழியே யுடம்புவற்றும் வெருப்பு முண்டா
நாவரகுஞ் சோபமுடன் துயர முண்டாங்
கோளிருகான் மூலமுறு கிறாணி யென்றே
கேவலமாய் முன்னுரைக்கக் கேட்ட தாமே.

346. தலைபிடரி முதுகு கைகால் சதமிலா விலாக்கள் நெஞ்சு
குலவுபுண்போல நோவு குத்திரும லேகொள்ளுந் .... ....
துலைபடு கழிச்சல் நாக்குந் துண்டமு முடம்பு புண்ணாம்
உலைவுட னலைவு மிக்கா வதுவிடாக் காய்ச்ச லன்றே.

சன்னிவாத குணத்தின் குணம்

347. உண்டியை யொறுக்க வாக்க முளத்திற்கே டுளதே யாக்கும்
பண்டுமுன் பயித்தி யம்போல் பல(ப்)பல பிதற்றிப் பேசும்
தொண்டைதான் சுழற்றிச் சற்றே துணக்கமுந் திகைக்கும் புத்தி
மண்டியே யிருக்கும் வாத சன்னியின் வகைய தாமே.

348. வாதமும் பித்த மையும் வந்திடுந் தோஉடந் தன்னால்
வாதமுஞ் சன்னி வாதம் நிற்குமோ கட்டுந் தன்னும்
வாதமுஞ் சுரமும் போத மைந்தனா ரருளி னாலும்
வாதமா மருந்தி னாலும் வருந்திய மருந்து செய்யே.

349. எண்.4இல் கண்ட பாடலே மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

(நோய் தோன்றுங் காரணம்)

350. தன்னைத்தான் பேணா தாலுஞ் சரீரத்தின் தண்டிப் பாலும்
அன்னத்தைப் பொறுத்து னாளில் லடவிலிம் முழுகா தாலும்
பின்ற்ற விகாரத் தாலும் பெருத்ததோ ரண்டி னாலுந்
தன்மத்தை யிகந்த வாலும் சலிப்புடன் வியாதி தோன்றும்.

351. கடுக்காய் நெல்லி தான்றிக்காய் கமலத் தண்டு தேவதார
அடுக்கு முத்த மிலாமிச்சஞ் சந்தங் கடுகு ரோகணியுந்
தொடுக்கும் பேயின் புடோல்தண்டு துவரம் பெரிய வேப்பலகு
படுக்கும் பங்கம் பாளையின்வேர் பருக வேப்பா லரிசிகொள்ளே.

352. கொள்ளே கள்ளுஞ் சோறொன்று கொண்டு நறுக்கி யிருநாழி
அள்ளே தண்ணீ ருழிக்காக யடவே காய்ச்சி யருந்திடுகில்
உள்ளே நின்ற சன்னிவாத முழலை கழிச்சல் தாபமிவை
விள்ளா தொருவற் றிகுணமாம் மீதுஞ் சன்னி வாதமிதே.

353. மீளும் பாலை வேர்சந்து மிரிசஞ் சுக்கு கொத்தமல்லி
கேளும் நெல்லி வேர்பலரு கிள்ளோ றொன்று கழுஞ்சுகொண்டு
நாளி யுரிக்கு இருநாழி நன்னீர் வார்த்து வுள்காய்ச்சித்
தாளும் கழஞ்சு சர்க்கரையுந் தனியா நெய்தேன் கூட்டுவதே.

சன்னி சுரத்துக்குக் கஷாயம்

354. ஆடா தோடை வேரிலையு மதிலீ ராறு கழஞ்சுகொண்டு
வாடா திருந்த பூசணியின் வளருந் தண்டு மீராறு
மேடா திருந்து மீராழி மீரெட் டொன்றாய்க் காய்ச்சியதில்
கோடா திருந்த மிளகுபொடி கூட்டிக் கழுஞ்சு கொடுப்பீரே.

355. நன்னாரி கடுநெல்லி தான்றி நல்குந் தேவ தாரஞ்சந்து
தின்னாப் பேயின் புடோல்தண்டு சுக்குத்தேறன் கனிகொள் பேரீஞ்சு
சின்னா தென்னா திருவேலி திகமோ றொன்று கழுஞ்சுகொண்டு
உள்வே ரவே யிருநாழி யுழக்காய்க் காய்ச்சி யுண்ணீரே.

சன்னி சமத்துக்குக் குளிகை

356. வெண்கா ரிதந் திரிகடுகு மிருந்த யிந்து கெந்தகமும்
நண்பா யோரொன் றொருகழஞ்சு நல்குநேர் வாள மிருகழஞ்சு
உண்பார் கடுகு ரோகணியு முறவே கழஞ்சு நாலாக்கி
வண்பார் முலைப்பால் வார்த்தரையும் வளக்சேர் வாலு சாமமிதே.

357. அரைத்து வரைத்து வழித்துணர்ந்து வகையோ வுண்டைப் பிரமாணம்
அருந்த யிஞ்சிச் சாற்றிலிடு யதுவுங் குணங்கொண் டிருந்ததெனில்
திருந்தக் கொடுத்து பத்தியமுந் திடமுங் கவிடா(ல்) கூசாமல்
இருந்தப் படியே சன்னிவாத சுரத்துக் குண்டை யிதுவென்றே.

358. இடவே சன்னி வாதசுர மிதுக்குக் குளிகை வகைகேளாம்
தொடவே வாறும் புளியமரஞ் சொல்வீ றொன்று களஞ்சுகொண்டு
புரமே செரியும் பூசணிப்பூ பொருந்த மிரத முசறுமுட்டை
இடவே களஞ்சு வோரொன்று யிதுவு மிரதங் கால்கொள்ளே.

359. கொள்ளே நிறையே கொண்டிட்டுக் குழற வரைக்கி விலைச்சாறு
வெள்ளேசர் மரத்து வெற்றிலையை விழுனீர் பிழிந்து வுலரவரைத்
துள்ளே கொள்ள யுருந்தளவு வுண்டை குளிகை செய்தவிதை
நல்லோ ரருந்த முலைப்பாலில் நல்குஞ் சன்னிச் சுரம்போமே.

360. கருவே விலையில் பிடிமூன்று கடிய பிரமி பிடிமூன்று
வரிசேர் கற்றாமுள் மடல்சுருகு வரவே மூன்று பிடியதுவுஞ்
சரிசேர் கனிப்பாக் கெழுகழஞ்சுக்குத் தண்ணீர் கடுக்கா யுடனறுக்கி
இருநாழி யுரியை யுழக்காக யியல்பா காய்ச்சிக் கொள்ளுவதே.

361. கொள்ளே துளசி யுடன்கஞ்சாங் கோரை யாதிரணமுடனே
உள்ளே கொள்ளும் பேரமட்டி யொதுங்கித் திரியும் பேய்ப்புடோல்
கள்ளே யிருந்த சாரணைவேர் கடிய முருங்கை யிலைக்காம்பு
தள்ளா தொக்க வேர்மருந்து சரியா யிரண்டு பிடிகட்டே.

362. கட்டே நறுக்கிப் பதின்கழுஞ்சு கொள்ளுங் கடுக்காய் குறையாமல்
தேட்டம் பெரிய களிப்பாக்கு திசமே கொள்ளுஞ் சுக்காறு
மோட்டம் பெரிய யிந்துப்பு யொருபாக் களவு குறையாமல்
நாட்ட மிளகு சீரகமும் நல்காய் தேசிக் காயளவே.

363. அளவே யிரண்டு காயளவு யதுவும் பொட்டண மதுகட்டி
உளதே மற்ற மருந்தொக்க வொன்று படவே நறுக்கிவிட்டுக்
கொளவே யாறு படிதண்ணீர் கொண்டு கழுஞ்சு நாழியுரி
அளவே யிறக்கில் வடித்ததனை யடவே மூன்று நாள்கொள்ளே.

364. பொன்னாங் காணி பேய்ப்புடோல் யொரு முத்தம் பற்படகம்
முன்னோர் முதிய சீந்திலது முழுதும் படியே கொண்டோக
நல்லோ சுக்கு வதனாலு நறுக்கிக் கருக்கி னீர்நாழி
இல்லோ காஞ்ச துரியாக்கி யிரண்டு கழுஞ்சு தேள்கட்டே.

குளிருண்டை
------

365. வெண்பா உருாவமது கழுஞ்சுதுத்த இரத மிரண்டு கழுஞ்சதொக்க
நண்பார் துரிச தரைக்கழுஞ்சு நண்பா யிலைசேர் நிறையொக்கப்
பனிசேர் பற்றிக் குழிக்கல்லில் படிசேர் வெற்றிலைச் சாறதனால்
வலிசே ரரைத்து யிலகளவு மதிக்க வுண்டை தனையுருட்டே.

366. உருட்ட வுண்டை தனையரைக்கி லு(வை)தய முச்சி முதலாகத்
திரட்டிக் கிடவே போலரைத்துத் திரமா யுருட்டி நிழலுலர்த்தி
தரட்டிக் குளிர்தான் வாய்பார்த்து தவுமி ரண்டு நாழிகைமுன்
இரட்டி விடிந்து வருமளவி லிடவோ ருண்டை பகப்பாலே.

367. ஒருவிடங் குளிருங் காயு மொருவிட முடம்பு தன்னில்
இருபுறத் தோடும் போது யதிகமாய்க் காய்ஞ்சி ருக்கும்
பெருகிடப் பிடியே டென்னும் பின்னையோ வன்னச் சொல்லா
வெருவுறப் பற்றி யேறும் விடஷ சுர மெனின லாமே.

368. உடம்பிற் றோடும் போது சிக்கெனக் காய்ந்து யதுவோ ரிடங்களிலதி
விடம் பற்ற மடங்கா யதுவுண் டாகுமிக்க கால் குளிர்ந்து
நடஞ் செய்யுங் காலொன்று காய்கை தான் குளிரும் நாடறிய
விடமென தாலந் தங்கக் கனக்கும் விடஷசுர மெனின லாமே.

369. சுக்குக் கடுக்காய் நிலவேம்பு துவர்க்கும் வேப்பந் தோல்சீந்தில்
கைக்கும் புடோலங் கொடியதுவுங் கதியா தோறொன் றிருகழஞ்சு
ஒக்க நீரு மிருநாழி யுழக்காய்க் காய்ஞ்சு குடிப்பீராய்
திக்குக் கெட்டு விடஷசுரந் தீரும் படியைப் பாரீரே.

370. ஆடா தோடை யிலைசீந்தி லதுவும் நிம்பம் பேய்ப்புடோல்
தேடா நின்ற வேப்பிறகுச் சேரும் வெப்பா லரிசியிவை
வாடா தோறொன் றிருகழஞ்சு மசக்கி யிரண்டு படிதண்ணீர்
ஒடே காய்ஞ்ச குழக்காக்கி யோடக் கஞ்சு குழம்புகொள்ளே.

371. வெப்பா லரிசி பேய்ப்புடோல் மிகுந்த மதுரந் திப்பிலியும்
நட்பால் முத்தஞ் சித்த(ா)மட்டி நடிக்குஞ் சிறகாஞ் சொறியது(வு)ம்
வெட்பால் சிறிய பற்படக மிகுந்த நிலத்தின் வேம்புகற்பன்
கொள்பா ரிடத்துக் கசப்புல்லுங் கொன்றைப் பழமுங் கூட்டுவதே.

372. *கட்டுங் கடுகு ரோகணியுங் கொள்ள மிலைதா னோரொன்று
.... .... .... .... .... ....
காட்டுங் களஞ்சே கால்கொண்டு கலங்க நறுக்கி யிருநாழி
கட்டி னீர்வார்த் துழக்காக்கிக் கொதிக்கக் காய்ச்சிக் குடிப்பீரே.

373. கந்தகம் பச்சை நாபி கேடிலா மிளகு சூதம்
வெந்தனேர் வாளந் தன்னை விடதமது தள்ளிக் கட்டிப்
புந்தியிற் பொருந்து மம்பாற் பூசணிப் பழமுங் கட்டி
இந்துவ்வடை யுகுந்து போலொன் றிடவிட சுரமும் போமே.

இஞ்சிச் சாற்றில் இடவும்.

*சத்தி சுரத்துக்குக் குடிநீர்*

---

374. நெற்பொரியு மிகவறுத்துப் பயறு தாறு
நேரியபற் படாகமுடன் பூச ணிப்பூ
குற்றமறங் கூவிளவே ரொன்று கொள்ள
கட்டியதோ ரிருகழஞ்சு கொண்டு தட்டி
முற்றினநீர் தனிற்கா(வி)ஞ்சு கொடுக்க நன்றா
மிருந்துழலை மிகுத்திருந் தாலதி மதுரஞ்
சற்றுமது கூசாம லொக்கக் கூட்டில்
தறகாது சத்திசுரந் தானும் போமே.

375. நெற்பொரியும் பசுப்பாலும் வில்லை வேரும்
நெருங்கியச் ரெல்லாமுடன் சுக்கு நெல்லி
முற்படவே யிளநீர்காஞ் சிறன்டொன் றாக்கி
முற்றியபின் னெடுத்ததனை யூற்றிக் கொள்ள
பொற்றெரிய யுழலைசத்தி வெதுப்பு முற்றி
தோர்த் தன் னீர்மேற் தாபந் தானும்
பற்றறுமென் றிப்படியே யருளி முன்னோர்
பகர்ந்தனரற முறவேதப் படியீ தென்றே.

376. நாவல் பட்டை மாந்துளிரும் நயந்து மணக்கும் பூலாவேர்
காவல் கயிலை யால்விழுதுங் கதிக்க வோரொன்று முக்கழஞ்சு
மேவற் படியே யிருநாழி னீர்வார்த் துழக்க தாியாக்கி
தேவத் தேற மிருகழஞ்சு தேனோ டருந்தத் தீர்ந்திடுமே.

377. தீர்ந்தே சத்தி வெதுப்புவிடுந் திடமாய் வயிறு கழிச்சல்விடும்
நேர்ந்தே தாக மூர்ச்சையிவை நொடிக்குள் தீரும் நில்லாது
சாந்த மாகு மிதனாலே தப்பா துண்மை சொன்னபடி
போந்த வெதுப்புப் பிரதாபம் புறங்கண் டோடுங் கண்டீரே.

378. நீடு மாத்தழை நெற்பொாி சர்க்கரை
தேடு திப்பிலி தேனில் குழைத்துண்ணப்
பீடு செய்யும் பெருத்ததோர் சத்தியும்
ஓடி யோடி வொழிப்பது முண்மையே.

## தண்ணீருழலைக்கு

379. முத்தக் காசு மாவீர்க்கு முதிர்ந்த யிருவே லிலாமிச்சு
சத்தப் படவே பற்படகம் சாந்த சந்த மேலுமுடன்
சித்தத் திலங்கு நெற்பொாியும் சிறிய பயறு [ ஞ்சீரகம் ] கொத்தமல்லி
இத்தைச் சொன்னோ மதிப்படியே யதுவு நாழி நீாிலிட.

380. அதுவு நாழி நீாிலிட்டு யறவே நாழி யுாியாக்கி
இதுவே மூன்று வாளைக்கு வியங்குப் பகுத்த சந்தனமும்
முதிய புறமு மிராக்கிடீடமு முதிரா தளவில் சிறிதரைத்துக்
கருதனீர் கரைத்துப் பருகி(வி)டில் கலைந்தே யோடு முழலையிதே.

381. மணலை வறுத்து வெச்செனில் மணக்க விளநீ ரதிரா ற்றிக்
குணமே கொள்ளு மெலுமிச்சங் கொடிப முத்தின் சாறவிட்டு
திணமே சீனி முந்திரிகை தேன்பே ரீஞ்சு யதிமதுர
மணமே பெரிய தனங்கோட்ட மதிக்குஞ் சீர கங்கொள்ளே.

382. கொள்ளே மருவுஞ் செண்பகமுங் குளிருஞ் சாத்திர வேதியது
முள்ளே மதிக்கு மிருவேலி வுறவுங் கடிய தக்கோலந்
துள்ளப் போந்த நெற்பொரியுஞ் சுக்கு மாதளம் பழச்சாறுங்
கொள்ளி ருள்ளே பரிதாபங் குமுறுஞ் சுரமு மலைந்திடுமே.

383. உழலை தபனம் பரிதாப முளத்து முதிர்ந்த தாங்கிழிந்து
அழலே மிகுந்து நாவரண்டு யதிக மாக வேசுரமுங்
கழறு முடம்பு தலையோடு காலே வீங்கு மிகவழற்றும்
பழகத் தப்ப விட்டருந்தும் பகர்ந்த நிலவிங் படியிதுவே.

384. செய்ய கோட்டம் நெல்லிமதுரஞ் சிறிய யிலாமிச் சிருவேலி
பொய்யா முத்தஞ் சந்தனமும் போத யிளநீர் நெற்பொரியும்
மெய்யே பாதி வே(க்)கா(யீ)ச்சி யீறா திருந்து கொண்டிடுகில்
ஐயா யுண்மை யிறுவனலி லாக்கிக் கழிச்ச லடைபடுமே.

## அபத்திய தோஷ குணம்

385. தாகத் தாலு மிகவுடலஞ் சங்கா வரண்ட படியாலுங்
கோகத் திடவே வியாதியினால் கொள்ளுங் கைப்ப துண்டாலுஞ்
சாகங் கைப்ப துண்டாலுந் தள்ளும் வருவி சாலத்து
மாக வாயுக் கோபித்தே யனேகம் வியாதி யுண்டாமே.

வாத சுரக் குணம்

386. வாத சுரத்தின் குணங்களாய் வந்து குளிர்தல் பயப்படுதல்
சீத மிருந்து நடுக் கேறில் செறிந்த ரோமஞ் சிலிர்ப்பேறில்
சேதங் கண்டு தலைநோவு திருந்து தொப்பூழ்த் தலங் கடுத்தல்
பாத முளைந்து நீர்குடியா பலகால் வெதுப்பு விடர்த்ததுவே.

387. விடாதே கால்கை கீழ்முதுகு மிக்க விரண்டு விலாப்புறமுந்
தொடாதே நோவாங் குறடழுவுந் தொடுக்கில் புண்போல் நோவுண்டாம்
அடாதே மிகவு மருண்டுருண்டு மனந்தல் மிகவு மாயிருக்குந்
தொடாதே சோறு பதார்த்தமறு மிவைகா வாத சுரமாமே.

இதுக்கு இரண்டுநாள் பட்டினி இருக்கவும்.

388. கூடிய சுரத்தை நோக்கிக் குடிநீர்க ளிடுவை யாகில்
ஆறிரண் டதனிற் பின்பு வன்றினாட் களவு தன்னி
ஏறிய நாள்கள் தன்னி யிறங்கிய நானா ராய்ந்து
ஊறவைத் ததுவை செய்ய வுறுதிக ளொத்துக் கொள்ளே.

இதுக்குக் கஷாயம்

389. வட்டுக் கண்டங் கத்திரிவேர் மதிக்கும் பெரிய பேர(ா)மல்லி
மட்டிற் சிறிய சித்த(ா)மல்லி மணக்க வேரோரி முக்கமுஞ்சு
தட்டி நறுக்கி வேர்க்கொம்பு தானே யதவு முக்கமுஞ்சு
வெட்டிச் சீவி நாழிவிட்டே தண்ணீர் காய்ச்சுகவே.

390. காய்ச்சித் தண்ணீர் நாலொன்றாய்க் கலக்கி வடித்து வதிலுமக்கு
பாய்ச்சிப் பருத்த வரியதைப் பரிய மணல்போல் பொடிசெய்து
காய்ச்சிக் கொடுக்க வாதசுர மங்கமுறு மயக்கந் தெளிவிக்கும்
போச்சுச் சுரமும் போந்ததெனப் புகழும் படியைப் பாரீரே.

391. கண்டங் காரி சிறுவழுதலை கதிக்கும் பங்கம் பாளையின்வேர்
உண்டங் கினிய (ய)திமதுர முறைசேர் வெப்பா லரிசியதுங்
கொண்டங் கோரொன் றிருகழஞ்சு கட்டி வறுக்கி னாழி
மொண்டங் களவே நீர்க்காய்ச்சி முறித்து நாழி யிராக்கே.

392. ஆக்கே நாழி தண்ணி லளவா யுழக்குப் பருவரிசி
போக்காய்ப் பொரித்துப் பொட்டணத்திற் பொருந்திடவே காஞ்சு கொள்ள
வாக்காய்த் தண்ணீர்த் தாபமற மலத்தின் கட்டை விடுவிக்கும்
நோக்காய் நின்ற சுரதபனம் நோய்தான் போகுங் கண்டாயே.

393. சுக்கு கொத்த மல்லியுடன் துளசிகா நின்ற சேவகன்வேர்
ஒக்கக் கொண்டோ ரொவ்வொன்று யுறவே யிரண்டு கழஞ்சுகொள்ளத்
தக்க படியே யிருநாழி தண்ணீர் காய்ச்சி நாலொன்றாய்
துக்க மறவே சுரத்துக்குச் சொல்லுந் தண்ணீ ரதுவாமே.

394. ஆமே யேழு நாளளவும் மசனங் கொடாமல் பட்டினியாய்
தாமே யிருந்து முன்சொன்ன தண்ணீ ரதுவுங் கஞ்சியதும்
போமெழு னான்தா னதுகழித்துப் பொருந்து மசனங் கொடுப்பதுவும்
ஆமே பின்பு குடிநீருக் கென்னும் வாத சுரமாமே.

395. ஆமாம் வாத சுரந்தனக்கு யமிர்தம் சிறுகாஞ் சொறிமுத்தம்
வேமாஞ் சுக்குக் கொவ்வொன்று மிகாமல் கழஞ்சுக முஞ்சுகொண்டு
தாமா மிரண்டு நாழிதண்ணீர் தறகா துழக்காய் காய்ஞ்சருந்தப்
போமாம் வாத சுரமென்று பொன்னே முனிவர் புகன்றாரே.

பிரமியத் தூணம்/லிங்க சூலை
------------------

396. *பிரமிய மெடுத்து யனேக னாள்சென்று பெருகவே யுதரத் தின்வாயு
நிறைய வந்தடை ..ந்து சலமது சிறுத்து நெடுநாள் சென்றடு மாகில்
மறிபடு னீரும் வட்டுவைச் சுருக்கி வாயது திறக்குமாப் போல
மறிபடும் பின்னைப் பிரிதுட னடைக்கு மாயிது லிங்கமாஞ் சூலை.

397. சூலையே மிகக்கிளக்கி யெழும்பித் தோன்றிடும் லிங்கத்தின் கடுப்புச்
சாலவே முள்ளுதைத்த புண்போலச் சற்றுளே கருக்கெனக் குறியின்
மேலெல்லா மயர்ந்து கிடுகிடு கிடெனமிகு பின்னைப் பிறவி நோக்காது
போலவே மூக்குஞ் சலத்துடன் மலம்போல் பொதுவறப் பொருமியே
விழுமாம்.

398. விரும்போ தனேக வேதனை கெட்டு மிகும்படி முன்னம் போலிருக்கும்
எழும்பிடும் பின்னே எனவும் பின்னர் பற்றி யேறவுமனெனாள் சென்று
படிகப் படிபோல வேதனை செய்யும் பரிவரப் பின்னையு மெடுக்கும்
விழும்படி யின்னம் பலனுஞ் செய்யு மிகுத்ததோ லிங்கச் சூலையுமே.

கல்லெரிப்பின் குணம்

------------

399. உவர்த்தரை தண்ணீர் தன்னை நாடோறு மோய்விலா திறைத்திடக்-
கறுவாய்
மவுத்தது திரண்டுயுப்பது விளையும் வலிமையாய் நீர்த்தலந் தன்னில்
நிவ(ர்)த்தியங் கலையி லுட்டினம் பாய்ந்து நீரதுவற்றியே கல்லாயி
பத்தமா மனோயி தென்றிடும் பழைய வாயுருவேதத்தின் மொழியே.

400. மொழிந்திடும் பழைய பிரமியந் தன்னில் முடுகிடுங் கடுப்பொடு வாதம்
வழிந்தபின் னதுவே பவுத்திர மிக்க வன்மையா மிகுமிடச் சூலை
சுழிந்திடும் வரட்சி மாங்கிடூத் தட்பரத் தொகுத்திடும் வெகுசலக்
கழிச்சல்
பொழிந்திடு மழைபோ லெடுத்திடு மதனைப் போக்கிடும் வகையினைப்
புரிவாம்.

401. உரைத்த காரிய மிரதமுங் கட்டி வொன்றுறச் செந்தூரங் கொள்ள
நிரைத்தடங் கண்முஞ் சங்க செந்தூரம் நெறிபட வளமையாற் கொள்ள
வரைத்ததோர் தண்டிற் கற்பூரம் புழுகு வளம்படச் சலாகையில் செலுத்தி
நுரைத்தநெல் வெண்ணெய் குளுமையாய் வைத்து நுகர்ந்ததர போற்றவே
விடுக.

402. நல்லேல மதிமதுர நற்சீர கம்வீறு
கல்நார் மகிழ்நெல்லி களப்பழுத்திப் பருப்புவிளா
உல்லாச முந்திரிகை ஆறெயியே தான்கட்டி
நல்லாய் தொன்றுக்கே நாலதென்பற சீனி.

403. கட்டியொரு மண்டலமுன் கொள்வீரே யாகில்
சேட்டுமமும் வாதமொடு பித்தமிவை தீரும்
நாட்டிலுள்ள யுட்டிணமுஞ் சூலைகளும் நன்றாம்
ஓட்டிவிடு மோட்டிவிடு முண்மையிது வுண்மை.

அதிசாரத்துக்குக் கசாயம்

வேறு

404. சுக்குமுத் தக்காக பேராமுட்டி துலங்கிய பங்கம் பாளை
தக்கவறட் சுண்டியுடன் புளியம்பட்டை தகுமிலந்தைப் பட்டைக்காட்டாத்திப்பூவும்
மிக்கபெரு மரப்பட்டை குடசப்பாலை மேவுநீ ரிருநாழி யுழக்கால்க்-காய்ச்சி
ஒக்கவதி விடையமொடு காசுக்கட்டி உகந்தபோ ததிசார மோடிப்போமே.

405. மாதுமை பாகன் சொன்ன மாமறை முதலை யாய்ந்து
தீதுகள் வாரா வண்ணம் திருவுளத் துதித்த சோதி
ஆதியா முனியு ரைத்த ஆயுரு வேதந் தன்னில்
தேர்ந்திவை தமிழி னாலே திறம்பட உரைக்க லுற்றான்.

406. கோதையர் கலவி போதக் கொழுத்தமீ னிறைச்சி தானும்
மேதையின் பாலும் நெய்யும் விரும்பியே யுண்பை யாகில்
சோகைசேர் பாண்டு ரோகஞ் சுக்கிலப் பிரமே கங்கள்
மாதசேர் நீரிழிவு தானே வுண்டென நினைந்து கொள்ளே.

407. மண்டலந் தன்னி லுள்ள மனிதராய்ப் பெண்ணு ளோர்க்கும்
கொண்டதோர் பிரமே கந்தான் கொள்ளுமுன் நெடுக்கு நோய்கள்
கண்டிடும் உடல்கள் கைகால் கழன்றுனின் றெரிந்து காந்தி
உண்டனீர் சுவறிக் காட்டி உடைத்துனீர் பாயு மென்றே.

408. கேளாய் போக மனுதினமும் முன்னு மடசில பலமதனை
கேளாக் குற்றம் பலதோஷங் கொடுமைக் குருக்கள் பிதாமாதா
வாழாக் கன்னி கற்பழிந்து வரம்பு கடந்து மாறாக்கிக்
கேளாச் சத்தங் காணாக்கண் கேட்டுக் கண்டவர் போல்பேசி
உள்ளா வுடலி லுள்ளுடைந்து யுளுத்த மரம்போலுடல் கன்றுமாளா
மாறும் வியாதி யினால் வலியா சலநோய் நீடிடுமே.

409. முகமே காந்தி நெஞ்சுலர்ந்து முரிந் துடலம் நடுநடுங்கி
நகமே பரிந்து சீர்கெகிழ்ந்து நஞ்சுண்ட டவர்போல் மிகச்சோர்ந்து
பகலு மிரவு முறங்கியுடல் பருத்துக் காட்டி மெலிந்துமன்று
மிகவே தவன முண்டாகி வேண்டா தன்னம் வேண்டாமே.

410. மெய்யே வேர்த்து வுடல்நாறி விழியே பலகால் மிகமூடி
கைகா லெரிந்து நாவுலர்ந்து கமல முகமும் வெளுவெளுத்த
ஐயோ யுட(ே)ல நோகுதென்று ஆய்ந்து கிடக்குங் களாக்காணா
பொய்யே யல்லத் தவனமுண்டாம் பொருந்தா தன்மை பொருந்தாதே.

வெண்பா
-----

411.** பாலாகா நெய்யும் பருகாகா பாவையர்தம்
மாலாகா மீனிறைச்சி ஆகாகா - ஏலப்
பருகு மருந்தே பருகில் மடைபோல்
வருநீர ருக்கிவிடு மாமைந்து.

412. கொள்ளுக் காடி கொம்மட்டிக்காய் கோழி பன்றிசெம் மறியாடு
முள்ளுப் பொரிய பாகற்காய் முழுதும் நல்ல பூசணிக்காய்
கிள்ளுக் கீரை யரைக்கீரை கிடங்கிற் படருஞ் சேம்புடனே
எள்ளத் தனையுந் தின்பீரா யிட்ட மருந்து மிறந்திரே.

413. மாங்கா யிளநீர் வழுதலங்காய் மாப்பண்டம் பிலி கடுகுசுக்கு
தேங்காய் நெய்பால் கிழங்குப்பு திகழ்வெங் காயம் பெருங்காயம்
மாங்காய் திருந்து மைதுனமும் நேசம் பயிலுஞ் சுராபானம்
ஆங்கே யிவைசற் றெள்ளளவும் அருந்தா திருக்கில் மருந்தாமே.

414. மானார் குழலீர் கறிகேளீர் மலனீர் கழிந்த மனிதருக்கு
கானில் வாழு முயலுடும்பு காடை சேவல் கவுதாரி[நத்தை]
லுனே பெருத்த வெள்ளாட்டுட னுப்புக் கண்ட முருங்கைக்காய்
மீனே மீனே தின்பீராய் வீணே யிறந்தீ ரும்முயிரே.

415. ஆமை உடும்பு சிவல்காடை அரிய போத்தி நத்தைச்சுரைப்
பூமொய்த் திருக்கு முருங்கையிலைப் பூவும் பிஞ்சும் புடலங்காய்
தீமை யில்லா முசுட்டையிலை செடிந்த பொன்னாங் காணியெண்ணெய்
தாமே யிதனைக் கறிகூட்டத் தப்பா திலவுஞ் சத்தியமே.

416. உட்டின ரோகத் தாலு முறம்பெரும் பசியி னாலுங்
கட்டவிழ் கோதை மாதர் கலவிமுட் டான்மை யினாலும்
தொட்டதோர் வாத பித்தந் துலங்கிய சிலேத்துமத் தாலும்
முட்டறா நாலு மாறு மும்மூன்று மொன்ற தாமே.

417. உந்தியில் வாத பித்த சிலேத்துமம் மூன்றி னாலும்
வந்தியா யிழையு நீரும் பத்திரு வகையு மூன்று
அந்தமில் வாத னாலு மருத்திடும் பித்த மாறும்
வந்தசிலேத் துமத்தால் பத்து மனாதியாய் வகுத்த வாறே.

418. பையர வல்குல் மாதே பாருளோர் கழிந்த னீரில்
கையிலே ஙல்லெய் வாங்கி கழிந்தனீர் தன்னிற் குத்த
மையுறு மேனியுற்று வட்டஞ்செய் திருக்கு மாகில்
ஐயுற நீரதாகு மல்லதாய் பித்த மாமே.

419. மூளையும் நிலமும் போல முதிர்ந்தசுக் கிலமும் போல
நீளிய நரம்பு போல நீரிலே தோன்று மாகில்
ஆளரி வேலுங் கோலு மனங்கனையங்கனையும் வீர
வாளையும் வென்ற கண்ணாய் வாதமும் நான்கு தாமே.

420. உதிரமுங் கடுப்பு மூல ருடனுடன் புளிப்புச் சாலச்
சதிரமுந் துடலம் நொந்து தலைசுழன் றிருக்குஞ் சால
முதிரவே கிறுகி றுத்து மூலித மாகிப் பித்தம்
பொதுமக ளன்பு போலப் போவது வருவ தாமே.

421. நீலநிற மஞ்சள்நிறம் தீர்த்த புளியினிறஞ்
சாலமிகுஞ் சாம்பல் சதிராய் கரைத்தநிறம்
கோலமிகு மாட்டிறைச்சி கழுவுநிற மித்தனையு
மாலைவிழிக் கொம்பனையாய் பித்த மருத்தனரே.

422. அரும்புன லருவி னீரு மடற்கரும் பதனிற் சாறும்
விரும்பிய தயிர்பால் னீரும் விரவுடன் சேர்த்த பாகும்
திருந்திய தேனிற் பாகுஞ் சிறந்தயிங் வாறுநல்ல
குரும்பையா முலைநல் மாதே சிலேத்துமத்தின் கூறுங் காணே.

## வாதம் நாலுக்கும் குணம்

423. பெண்திரு மடநல் மாதே பிரமேகச் சாப்பி யன்னார்
பண்தரு கோமுத் திரம்போல் புலாலது நாறுங் கண்டாய்
வெண்பல குணமி றைச்சி கழுவியனீர் நிறமே போல
நண்தரு வடுப்பிற் கத்தம் நல்விரைக் கேற்ற லாமே.

424. மைப்புறு குழல்மாதே மானிலத் துள்ளோர்க் கிந்த
அப்பிர மேகமானா லதுசெயுங் குணங்கள் கேளாய்
ஒப்புறு நெய்யி னாற்ற மீச்சமு மதுவே யாகும்
வெப்புறு காச்சற் கற்கம் விளக்கினி லெரியுங் காணே.

425. மதுமைப் பிரமேக மானால் வந்திடுங் குணங்கள் கேளாய்
அதுவுமத் தண்ணீர் தானும் புலாலது போலே நாறும்
வெது(மை)யாய்க் காய்ச்சுங் கற்கம் விளக்கது வெவ்வே யாகும்
முதுமையாய் முனிவர் சொன்ன நூ லிது மொழியும் பாரே.

426. அசனிய பிரமேக மா(ன)லதுசெயுங் குணங்கள் கேளாய்
கசமது மூண்டு நாறுங் காய்ச்சினால் விளையுங் கண்டாய்
விடாமுள்ள பிரமேக னாலுங் கொண்டவர் மரிப்பார் திண்ணம்
விசைபடு மாதர்க் கானால் மிகவிது பொறாது காணே.

427. ப(ா)வத்தா லெடுக்கு மிவைநாலும் பனைநுங் கதுபோல் நிற்படிக்கும்
ஏவற்கு மீள வரிதாகு மிட்ட மருந்துக் கோராது
க(ா)வற்கு மதுதான் பின்னெடுக்குங் களைக்கு மிருமல் கூறிவரும்
மேவற்கும் பணத்தை யழியாதே யிட்ட மருந்து மாறாதே.

428. மறிந்தனீர் புளித்து நாறி மலமுமப் படியே நாறி
அறிந்துகொள் அதனை நீயும் மலப்பிர மேக மென்று
பரிந்துதான் போய்வி டாதே பரிகாரஞ் செய்யத் தீரும்
அறிந்துதான் சாயப்பிர மேக மதுவகை கூற லுற்றேன்.

429. சுண்ணாம்பு கரைத்த நாற்றஞ் சுடலையில் சாம்பல் நாற்றம்
ஒண்ணாக விதனை யந்த நீரிலே கரைத்த மேனி
விண்ணாத நாவில்வா தத்தால் நாற்றமு மதுவே யாகும்
பண்ணான மந்திட் டானம் பிரமேகம் பரிவுடன் கூறலுற்றேன்.

430.* பித்த மாறும் வருமாறும் பித்த ரோகத் தால்வந்த
.... பிரமேக மாயிந்த நாற்ற மிரசமிது வேயாகும்
.... .... .... .... .... ....
.... மற்ற மாம்பல் பிரமேக வகையது கூறலுற்றேன்.

431. பிராலயுப காரியந்தப் பிரமேகந் தனைப்பார்த்தால்
தராணிதன் செவ்வள்ளி கொடிகாய்ச்சின நீரேபோலப்
பிராணிதன் ந(ா)வில்வார்த்தால் நாற்றமு மதுவேயாகும்
சுரோணிதப் பிரமே கத்தின் சூட்சமம் கூறலுற்றேன்.

432. வரியது தாிசு மேனி வந்தந்தப் பிரமே கந்தான்
அரியதோர் நிலந் தாறு மதுவழி நீரின் மேனி
பெரியவ ருரைத்(த) (யி)ந்த பித்தநீர் தாது மாறும்
அரியதோர் ராயுறு வேதத் தடலிது காணுமானே.

433. தாலத்தில் நாரிந்த நற்றரைரயி னால்விழுந் தாற்போலக்
காலத்தால் வழுவ ழுத்தத் திணங்கியே புலாலும் நாற்றம்
ஞாலத்தில் விழுந்த நீறு மதித்துள்ள தோர்குண முண்டாம்
நீலப்பிர மேகம் நீரில் நிலையிது கூறலுற்றேன்.

434. சிலேத்தும மதனால் வந்த தீரைந்து மினிநான் சொல்வேன்
சிலேத்துமந் தன்னில் வந்த வுந்தாசுரப் பிரமே கந்தான்
சுலோற்பும் பச்சிலை வெள்ளைக் கீரைநீர் மினி நாற்றமாகும்
மிலாற்பு மற்றில் கஉநாய வாலிற் பிரமேகமென்னுமது வகை கூறலுற்றேன்.

435. கழியுநீர் வெண்ணு ரையாம் கடுத்தங்கே கழியுங் கண்டாய்
நழியதாய் நைந்தி ராதே நாமிது வறிந்து சொன்னோம்
இழிகிய னீரின் கூர்மை யினிச்சொல்வேன் நானைப் பிரமேகம்
வெளியிலே வுலாவப் பிரசரிக்க வேண்டிருங் கண்டு கொள்ளே.

436. சற்றுச் சற்றாக வழுந்து கடுத்திடும் லிங்கந் தன்னி
லற்றட னெங்கும் பார்த்தாலு வரவிடு மொன்றுமால்
அற்றமிது (தனைக்)காய்ச்சிப் பார்த்தால் இழைவது மிதுவே யென்ன
மற்றுள சீ(ய)க்காய் பிரமேக வகையிது கூறலுற்றேன்.

437. இறையுறீ ராச முண்டாயத் திங்குநா வுலர்த்திப் பின்னே
மறையவே காய்ச்சிப் பார்த்தால் வெந்தசியக் காய்போல் நாளும்
நெறியிது வறிந்து சொன்னேன் நீர்க்கற் றின்னங் கேளாய்
அறிவினால் வளப்பிர மேக மதுவழி கூற லுற்றேன்.

438. வந்ததோர் பிரமே கந்தான் வலிமையா வெளிமை போலு
முந்துறீ ருப்பச் சற்றிப் பாகது கரைத்த நீர்போல்
விந்தநற் பிரமே கத்தி னியல்பிது கண்டு பின்னு
மந்தரப் பிரமே கத்தி னடைவிது கூற லுற்றேன்.

439. நின்றநீர் வெளுத்த நீராய் கழிவது மஞ்சி போல
சென்றது கண்டக் காலுந் திடனதை வறிந்து கொண்டு
நின்றபரி காரஞ் செய்ய நிச்சய மிதுதா னென்று
நன்றெனச் சாயப்பிர மேகத்தின் நலங்குணங் கூற லுற்றேன்.

440. கட்டுண்ட கனைநீர் போலக் கரும்பினிற் சாறு போலத்
தட்டுண்ட கரை நீர்போல் தப்பாத கர்மை கண்டாய்
மட்டுண்ட வயித்தி யர்க்கு வகையிது வறிந்து சொன்னேன்
முட்டுண்ட விட்டாப்பிர மேக மொழியினிற் கூற லுற்றேன்.

441. இழிந்தநீர் த(ன்)னைப் பார்த்தா லிரும்பன்னீர் தயிர்நிறம் போல
கழிந்தநீர் கர்மை கண்டு கடுகனப் பரிகாரஞ் செய்ய
ஒழிந்ததான் போமத தென்று வோதிய ஆயுரு வேத
மொழிந்தபெண் பிரமே கத்தை முயற்சியாய்க் கேளும் நீயே.

442. மெருகவே யிறக்கு நீரின் பின்சலம் பொருமி வீழ்ந்து
பெருகவே யுடலைப் பற்றி யதசுறுக் கென்ன வாங்கு
முருகமழ் கோதை நல்லா யுந்திசுக் கிலப்பிர மேகம்
பெருகிய நூ லி னாலே பேணியே யுரைக்க லுற்றேன்.

443. இந்திரிய நீரே போல லிங்கத்தின் மூக்குப் போல
நன்தலை முளை போல நலியாமல் பிற்பட் டோடும்
மந்தவா தத்தி னாலு மதுநீக்க வாய்பித்த மாறும்
இந்தச்சி லேத்து மத்தில் பத்துமிது திறமறிந்து சொல்வேன்.

444. ஆறே யாறே வருகின்றீ ரையியும் பித்த முங்கடக்கி
நீரே நீரே யாகிலுங்கேள் நெய்யற்ற மே[ா]ரே [மோரே] மிகப்பருகி
பாரீர் பாரீர் முசட்டையிலை பரிந்து பரிந்து யாவரையின்
னூ ரே னூ ரேகொள் கின்றால் தோற்றீர் நீரே தோற்றீரே.

445. ஆவ ரைந்துளிர் கல்மதங். கொன்றைவேர்
நீவி ரைந்து குடிபுளி மோருடன்
வானி ரைந்து வரும்புனக் காவேரி
தான்வ ரைந்தும் வரினுந் தடுக்குமே.

446. ஆவிரை கொன்றை நல்வ வழகிய பூக மத்தி
மேவிய மருதந் தோலும் விரைந்துட னொக்கக் கூட்டி
பூவிிற் தரித்த மாதே புதியதோர் தேனி லுண்ண
காவிரி நீரும் வற்றிக் கடல்களுக் கவறு மன்றே.

447.* *காந்தமொடு திரிபல வீசன் கருதிய முத்தக் காசு
மஞ்சிட்டிக் கிட்ட மாதர் பகரும் நிம்மை சுக்கு
மிகமாரி சிவங்கொடு திரிபலை யேந்துமுலை யாய்கை யாந்தகரைச்
தேனுடனே யருந்துகொள்டா லானாணை நீரிழிவு அகன்று போமே.

448. தகரங் கோட்டஞ் சிறுதேக்கு சாதிக் காய்பொன் னாவிரைவேர்
நிகரக்கொண் டிதனைப் பொடிசெய்து நிகுதி யொருமண் டலங்கொள்ளில்
மகரஞ் செறியுங் கடலதுபோல் வருநீ ரெல்லாம் பருகுமென
நகரந் தோறும் பகையாதே நன்னீ ரழிவால் நல்கீரே.

449. ஒர ரைக்கால் குளவிந்தம் மென்ன ரைக்கால் கருவேல்பிசின்
னீர ரைக்கால் மரமஞ்ச ளிருவ தரைக்கா லாவரைவிதை
தேர ரைக்கால் கடுகரைக்கால் தெளிய வரைத்துத்தேனில் விழுங்கிட
நீர ரைக்கால் பாயாது நெடுமா லானே நிச்சயமே.

450. பிண்ணாக்குப் பொடிசெய்திட் டாவிரையிலங் கொழுந்துடனே நெருஞ்சில்-
வேரும்
விலியோக்கி வெயில்தனிலே விரித்துலர்த்தி வேறுவைத்து மிகவும் நன்றாய்
பண்ணார்க்கும் மென்மொழியாய் பாடலுள்ள தேன்கலந்து பரிந்து கையால்
அண்ணாக்கி ஒண்ணாக்கி விடுவீராகிலானாணை நீரிழிவு அகன்று போமே.

451. கருத்த யீய ம்பதின்க ழுஞ்சு கருகி யுருகி வருமக த்தில்
செறுத்த யிரத மீரிரண்டு தெளியும் படிக்குத வார்த்திதனை
இறுத்து மோரி லேயரைத்து யிருபத்தோ ருண்டை தனையுருட்டி
நிறுத்த பழமோர் தனிற்குடிக்க நிறைநீ ரிழிவு நின்றிடுமே.

452. காரீயம் பத்திரதங் காந்தமோ டிங்குலிகம்
ஒரொன் றிரண்டுவொரு சமனாகக் கட்டிமோர்
நீரைவிட் டரைத்துமுற்று முண்டையிது சேர்க்கப்
பாரீர் கடலேழும் பண்புறவே வற்றிடுமே.

453. தேற்றவிதை கல்மதம் வெள்வேலங் கருவேலஞ்
செய்யவிளாம் பிசின்பத்தோ டிரண்டாங்
கறனீர் முள்விதை யுடனே குரோசிடி
கிடைச்சாங் குலவியா யாவின்விதை

சரஞ்சா மரிதார மரைபொடி பத்தாங்கிட்ட
    மங்காந்த மெங்கழஞ்சா மிவையாவிரத்
சாற்றா லரைத்துண்டை தேனோ டருந்தச்
    சலக்கழிச்ச லன்றிச் சலதிகரும்வற்றித்
தீருவது திட்டெனவே வேத நூ லஞ்
    செப்பினது தீர்ந்து செய்யே.

454. படிவுள மாகமும் பன்மை சூதமுங்
கடுபடு மிரும்பொடு கலந்த காந்தமும்
பொடிசெய்து தேனதில் பொருந்திக் கொள்வீராய்
அடைபடு மந்தனி ரம்மை யானையே.

455. ஆவிரை கடல முிஞ்சி லடுத்தபொன் முசுட்டை தானு
மேவியே வளருங் கொன்றை விளங்கிய பூவி லல்லி
பூவினில் தரித்த மாதே புதியதோர் தேனி லுண்ண
காவிரி நீரும் வற்றிக் கடல்களுஞ் சுவறு மன்றே.

456. தோற்றப் போமே நீரிழிவு சொல்வே னதற்கு வகைகேளாய்
நூ ற்றிங் கஞ்சா விரைப்பொடியும் நோக்குஞ் சாதிக் காய்பாதி
ரேற்று மிலந்தைத் தம்பலமு மிருப தின்கஞ் சித்துடனே
போற்றுஞ் சந்தன மிதிற்பாதி புகழ்சேர் சூடன் முக்களஞ்ச
நாற்றத் தழிய கத்தூ ரி நன்றா மிருகஞ் சொன்றேகால்
தூற்கப் பொடிசெய் தொக்கக்கொண்டு யடுக்கு மிடத்தில் தான்வைத்து
வீற்றிக் கொருவிடி பறம்பெடுத்து விடியற் கால மிகவருந்தி
பார்த்து மோருடன் தெற்றாங்கொட்டை பற்ற வரைத்துப் பருகிலோ
மாற்று வகையாம லழியுமிது வல்லோர் செய்யும் மருந்திதுவே.

457. சலமு மோரிலைத் தாமரையுந் தாவுங் குழித்தா மரைவித்தும்
அலச முள்ளநல்ல பிண்ணாக்கும் நத்தை யிறைச்சி துவரைவிரை
மூல மான திவையைந்து முறுக வுலர்த்திப் பொடிசெய்து
மூலம் பிணி திற்சேர்த்து மோரில் குடிக்க வல்லீரே.

## குடிநீர்

458. கொன்றை சீந்தில் கருங்காலி குலவு மத்தி மருதுவிளா
மன்று லாவிய தெங்கிளம்பூ மருவு கட்டுக் கொடிப்பூலா
கன்று செறிமுத்தக் காசுசெங் கிழுவை கடலழிஞ்சி யதுவுடனே
வென்றி திரிபலை தேற்றான்கொட்டை மேவு பூவரசு டன்கட்டே.

459. கட்டீ ரிச்சங்குருத் தோரொன்று குறையா முப்பல மாவிலைரவேர்
நாட்டீர் முப்பது பலத்துடனே நார முப்பது படிகட்டி
வெட்டத் துடனே மிகக்காய்ச்சி மேவ யிருபது படிவருத்தி
தேட்டத் துடனே கால்மிறுத்து தீர யாற்றிக் குடித்திடுமே.

460. குடித்தால் தவன முடனமுற்றி கொடிய நீரிழி வானதுவும்
மடுத்த யிளைப்பு மெய்சோர்த லடங்கா முறிப்பு டன்மயக்கங்
கடுத்து விழுந்தமெய் நீர்வேர்வை கடியு றக்கங் கொடியகனாத்
தொடுத்தே மூன்று நாள்குடித்தால் தோற்றோ மென்று போய்விடுமே.

461. போமே நீரிழி வானதுக்குப் புரக்குஞ் சாதிக் காய்காந்த
மாமே சாதிப்பத் திரியுமபின் சாதி லிங்கஞ் குரோசானி
வேமே காசுக் கட்டியுடன் மேவுங் கிராம்பு சரிசரியாய்
தாமே குடிநீ ருடன்கட்டில் தப்பா தழியும் நீரிழிவே.

## ஆவாரைப் பஞ்சகம்

462. தென்னிளம்பூ ஆவாரை பஞ்ச மூலி
சிறக்கவே யொன்றுபலஞ் சாதி லிங்கம்
மன்னியசீர் கெருடபச்சை காந்தங் கல்நார்
மருவியசாத் திரவேதி கல்ம தந்தான்
நன்னுதலீ ரோரொன்ற நாற்க முஞ்சு
நல்லெருமை மோருமது நாழி கட்டி
முன்னுரைத்த மருந்தையெல்லா மொன்றாய் வெந்து
முத்தப்புன்னைக் காயள வுரைத்துக் கட்டே.

463. கட்டியபின் னிழலுலர்த்தி வோரோன் றைக்குத்
குறையாம வெருமைமோ ருடன்கு டித்தால்
நாட்டமற்ற நாவறட்சி சலக்க ழிச்சல்
மற்றுமுள்ள தவனமுடல் சோர்தல் நிற்கும்
நாட்டிலுள்ள வெல்லோர்க்கும் போற்றி செய்ய
நாரணனும் நான்முகனுந் தேடிக் காணாக்
கோட்டிளமா முலைபங்க னெங்கோ னந்தக்
கொன்றைமுடி வேதியனார் கூறி னாரே.

464. சாதிலிங்கங் குரோசானி யோமங் காந்தச்
சாதிக்காய் வசுவாசி சாகுக் கட்டி
சோதிலங்கு மக்கரா காரஞ் சுற்று
முற்று லங்கவே நாற்க ழுஞ்சு
நீதிலங்கு மத்தன்விதை வங்க பற்பம்
நிகரிலாச் சூதபற்பம் களஞ்சோ றொன்று
மாதுலங்கு அப்பிரகச் செந்தூ ரந்தான்
வகைப்படியே யிருகழஞ்சு வகுத்துச் சொன்னோம்.

465. சொன்னபடி ..வினிபன் னிருகழஞ்சு துலங்க
வனைத்துங் கூட்டிப் பொடிநீர் தன்னில்
மன்னுசிறு மஞ்சாடி யளவ தாக
வாருடனே யருந்திடுகில் மாதே நீகேள்
முன்னவினை யாலெழுந்த பிரமே கந்தான்
மூவெழு வகையுடனே தீருந் தன்மை
மன்னுதிறக் கவிராய ராயன் தந்த
மருவியசஞ் சீவிதன்னில் மருந்து தானே.

******

குறிப்புகள்

## குறிப்புகள்

1. Dr. P. Kutumbiah, Ancient Indian Medicine, p. iv.
2. Sir John Marshall (Edi.), Mohenjo-daro and Indus Valley Civilization, p. 29.
3. Dr. C.K. Sampth, Evolution and Development of Siddha Medicine, Heritage of Tamils - Siddha Medicine, p. 7.
4. தொல். சொல். நூ.341.
5. தொல். பொருள். செய். நூ.183.
6. மேற்படி, நூ.108.
7. டாக்டர் இளையதம்பி. பாலசுந்தரம், தமிழ் இலக்கியத்தில் மருத்துவ சிந்தனைகள், ப.17.
8. நற். 136:2-3.
9. பாலைக்கலி 16:19-20.
10. புறநா. 180:4-6.
11. பதிற். 5:2:2-4.
12. புறநா. 91:7-11.
13. திருக்குறள், பா.950.
14. சிலப். 1:5:44; டாக்டர் தே. ஆண்டியப்பன், இரா. குமாரசுவாமி, சித்த மருத்துவம், ப.35.
15. க. வெங்கடேசன், ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம், ப.100.
16. டாக்டர் இரா. மாணிக்கவாசகம், நம் நாட்டுச் சித்தர்கள், ப.43.
17. கலைக்களஞ்சியம், பக்.643-645.
18. டாக்டர்க.க. உத்தமராயன், தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், ப.316.
19. மேற்படி, பக்.2-3.
20. டி.வி. சாம்பசிவம்பிள்ளை அகராதி, தொகுதி-III, ப.2122.

21. டாக்டர் ம. சண்முகவேலு, சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.91.

22. சித்தர் காயகற்பம், ப.3, பா.7.

23. டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை, சித்த மருத்துவ அமுது, ப.40.

24. டாக்டர் வே.இரா. மாதவன், நூலாய்வு, கண் மருத்துவம், ப.69.

25. சித்தர் காயகற்பம், ப.3, பா.6.

26. டாக்டர் தே. ஆண்டியப்பன், இரா. குமாரசுவாமி, சித்த மருத்துவம், ப.46.

27. V.R. Madhavan (Edi.), Siddha Medical Manuscripts in Tamil, p. 22.

28. அகத்தியர் இரண்டாயிரம், ப.204, பா.47.

29. மேற்படி, ப.202, பா.9.

30. வாழ்வியற் களஞ்சியம், பக்.41-43.

31. கலைக்களஞ்சியம், பக்.8-9.

32. டி.வி. சாம்பசிவம்பிள்ளை அகராதி, தொகுதி- V, ப.3806.

33. த.கோவேந்தன் (பதி.), பண்டைய மருத்துவமும் பயன்தரும் மூலிகைகளும், ப.52.

34. மேற்படி, ப.52.

35. மேற்படி, ப.53.

36. 'கோப்புரை வழியதாக', குறள். 254.
அகத்தியர் இரண்டாயிரம், ப.35, பா.317.

37. அகத்தியர் இரண்டாயிரம், ப.1, பா.4-5.

38. த. கோவேந்தன், மூ.கு.நூ., ப.34.

39. மேற்படி, ப.55.

40. மேற்படி, ப.56.

41. தொல். சொல். நூ.341.

42. திருக்குறள், பா.941.

43. டாக்டர் க.சு. உத்தமராயன், சித்தமருத்துவாங்கச் சுருக்கம், பக்.282-287.

44. திருக்குறள், பா.948.

45. டாக்டர் மு. சௌரிராசன், சரபேந்திரர் சித்தமருத்துவச் சுடர், ப.47.

46. சண்முகவேலு, டாக்டர். ம., சித்தமருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு, ப.123.

47. டாக்டர் இரா. நிர்மலாதேவி, கருவூரார் பலதிரட்டு, ப.17.

48. நன்னூல், நூ.48.

49. தொல். சொல். நூ.395.

50. திருவாசகம், பா.169.

***

# துணைநூற் பட்டியல்

## துணைநூற்பட்டியல்

### இலக்கியங்கள்


1. அகத்தியர் இரண்டாயிரம் - வெங்கடராஜன், டாக்டர். எஸ்., (பதிப்.), தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு, 1970.

2. கண் மருத்துவம் - மாதவன், டாக்டர். வே.இரா., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1982.

3. கருவூரார் பலதிரட்டு - நிர்மலாதேவி, டாக்டர், இரா., (பதிப்.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1982.

4. கலித்தொகை - நியூசெஞ்சுரி புக் உறவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981.

5. சித்தர் காயகற்பம் (மூலமும் உரையும்) - ஆயுர்வேத சித்த மைய ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி, 1981.

6. சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும் - சாமிநாதையர், டாக்டர். உ.வே., (பதிப்.), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், நிழற்படப்பதிப்பு, 1985.

7. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதினெழாம் பதிப்பு, 1979.

8. திருவாசகம் - கந்தசாமிப்பிள்ளை, நீ., (பதிப்.), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், இரண்டாம் பதிப்பு, 1984.

9. நற்றிணை - நியூசெஞ்சுரி புக் உறவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981.

10. பதிற்றுப்பத்து - நியூசெஞ்சுரி புக் உறவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981.

11. புறநானூறு - நியூசெஞ்சுரி புக் உறவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981.

இலக்கணம்

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணர் உரை - சுந்தரமூர்த்தி, கு., (பதிப்.), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், இரண்டாம் பதிப்பு, 1973.

